Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 102 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஆகஸ்ட் 01 2025

# கனத்த நினைவு சுமந்த நாள்

## சிறீலங்கா இனவெறியாட்ட தமிழினப் படுகொலைகளில் ஒன்று 14.08.2006

முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுலம் பகுதியில் உள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் மீது 14.08.2006 இல் சிறீலங்கா யுத்த விமானங்கள் திட்டமிட்டு மேற்கொண்ட கோரக் குண்டுத் தாக்குதலில் 52 மாணவிகள் உட்பட 62 பேர் கொல்லப்பட்ட நாள்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



## விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**இந்த
உலகில் அநீதியும்
அடிமைத்தனமும்
இருக்கும் வரை
சுதந்திரத்தை இழந்து
வாழும் மக்கள்
இருக்கும் வரை
விடுதலைப் போராட்டங்களும்
இருக்கத்தான் செய்யும்.
இது தவிர்க்க முடியாத
வரலாற்று நியதி.**

## சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca



அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

# வீரம் விளைந்த வல்வை பெற்றெடுத்த அருந்தவப் புதல்வன்

# மேஜர் கிண்ணி




'எதுக்கும் பக்கத்து வீமன் முகாமில் போய் என்ன நடக்குது என்று கேட்டுக்கொண்டு வாறேன்'…!

என்று சொன்னபடியே புறப்பட்டுப் போனான். எமது முகாம் கோட்டையில் இருந்து சற்றுத் தூரத்தில் ஒதுக்குப்புறமாக இருந்ததாலும் தொடர்புச் சாதனங்கள் இல்லாததாலும் என்ன நடைபெறுகின்றதென அறியமுடியாமல் இருந்தது.

பின்னேரமாகியும் கிண்ணி முகாம் திரும்பவில்லை. கோட்டையில் அதிகரித்தவண்ணம் உள்ள சத்தங்கள் எனக்குக் கிண்ணியின் இடத்தை உணர்த்தின. குளிக்கும் இடத்தைப் போய்ப் பார்த்தேன். கிண்ணி குப்பியை விட்டுவிட்டுப் போயிருந்தது தெரியவந்தது. குப்பியை எடுத்துக்கொண்டு கோட்டையை நோக்கிப் போனேன் போகும் வழியெல்லாம் மக்கள் தத்தமது மூட்டை முடிச்சுக்களுடன் குடும்பம் குடும்பமாக யாழ். நகரத்தைவிட்டு அகன்று கொண்டிருந்தனர். 'அவ்ரோ'வும் உலங்கு வானூர்தியும் மேலே சுற்றிக்கொண்டிருந்தன "கோட்டைக்கு ஆமி வந்துவிட்டான். ரவுணுக்கும் வரப்போகின்றான்" என்றெல்லாம் சனங்கள் பரபரப்பாகக் கதைத்தபடியே, அகன்று சென்றுகொண்டிருந்தார்கள். கோட்டை இராணுவ நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் முகாமான நீகன் முகாமுக்குப் போய் "கிண்ணி வந்ததோ" என்று கேட்டேன் அவர்களுக்கு எதுவும் தெரியவில்லை .

"முன்னுக்கு ஆள் நிற்குதோ இல்லையோ என்று கேட்டுச் சொல்லுங்கள்" என்று திரும்பவும் கேட்டேன். தொடர்பு எடுத்துக் கேட்டுவிட்டு "கிண்ணியண்ணை பொலிஸ் ஸ்ரேசடியில் நிற்கிறார்" என்று வோக்கி வைத்திருந்த போராளி கூறினான். குப்பியை எப்படிக் கொண்டு போவது என்று யோசித்துக்கொண்டிருந்தபோது, "இந்த நேட்டோ ரவுண்சுகளையும் இன்ரமீடியம் ரவுண்சுகளையும் பொலிஸ் ஸ்ரேசனடியில் கொண்டுபோய்க் கொடுத்துவிடு" என்று, பொறுப்பாளர் போராளி ஒருவருக்குக் கூறுவது தெரிந்தது. இரண்டு பெரிய பொதிகள்.

"ஒன்றை மட்டுந்தான் தூக்கலாம் மற்றதைக் தூக்குவதற்கு இன்னொரு ஆள் தேவை" என்றுஅந்தப் போராளி பதிலளித்தான்.

"நான் கொண்டுவாறன்" என்று கூறியபடியே பையொன்றைத் தோள்மீது அடித்துக் கொண்டு, இருவரும் புறப்பட்டோம். அசோகா ஹொட்டேலுக்குப் போய், அதன்கீழுள் ள சாக்கடை வழியே பொலிஸ் ஸ்ரேசனடிக்குப் போனபோது, அங்கு முன் காவல்நிலையில் படு 'பிசி'யாகக் கிண்ணி நிற்பதைக் கன்டேன் என்ன சொல்லாமற் கொள்ளாமல் வந்துவிட்டீர்கள்' என்று கேட்டேன்.

"ஆமி இறங்கிட்டான் என்னென்று இனி நிற்கிறது, அதுதான் வந் திட்டன்" என்றான் கிண்ணி.

இதேபோலத்தான் இன்னுமொரு முறை. அப்போது ஒரு தவறிற்கான தண்டனை காரணமாக முகாம் ஒன்றினுள் கிண்ணி முடங்கி இருந்தான். பலாலியில், ஆனையிறவில், தீவுப்பகுதியிற் சண்டை . என்ற செய்தி அடிபட்டது. போகமுடியவில்லையே எனத் துடிதுடித்துப் போனான். தச்சன்காட்டுச் சந்திக் காவலரண்களை அன்று இரவு எமது போராளிகள் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சண்டையின் போக்கைப்பற்றி வோக்கியிலே கேட்டுக்கொண்டிருந்த கிண்ணி, எமது தரப்பில் இழப்புக்கள் அதிகமாக இருந்ததை அறிந்ததால் உடனே எம்16 இனைக் கட்டிக் கொண்டு, போர்க்களத்திற்குப் புறப்பட்டுவிட்டான்.

இவன் அங்குப் போனபோது வீரச்சாவடைந்த போராளிகளை முன்னுக்கு இருந்து பின்னுக்கு எடுத்துக்கொண்டிருந்தார்கள். ஓரிடத்திற் காயப்பட்ட நிறையப்பேர் கிடந்தனர். அவர்களை வைத்தியசாலைக்கு அனுப்ப வழியில்லாமல் இருந்தது.

அம்புலன்ஸ் எங்கே? அம்புலன்ஸ் எங்கே? என்று எல்லோரும் தேடிக்கொண்டிருந்தார்கள் அம்புலன்ஸ் சாரதி அம்புலன்சைச் செலுத்திக்கொண்டு வந்தார். அவர் வெளிச்சத்தைப் போட்டுக் கொண்டுவந்ததால் அதைநோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்து, எறிகணைகளையும் போட்டனர். இதனால் அச்சாரதி அம்புலன்சை இடைநடுவில் விட்டுவிட்டு ஓடிவிட்டார். அவர் ஒரு குடிமகன். வாகனமோட்டுவதற்காக அழைக்கப்பட்டிருந்தார். காயமடைந்தவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார்கள். கிண்ணி பார்த்தான் அந்த நேரத்தில் அதுதான் முக்கியம் என்று பட்டது. துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியிலேயே மெதுமெதுவாக அம்புலன்சைக் கொண்டு வந்து 4, 5 பேராகப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுபோய் இறக்கினான். இவ்வாறாகக் காயமடைந்த முழுப்போராளிகளையும் பின்னாலுள்ள முதலுதவி இடத்திற்கும் பின்பு மருத்துவமனைக்குமாக இரவு முழுவதும் ஓடித்திரிந்தான் மறுநாட் பின்னேரம் நான் கிண்ணியின் இடத்திற்குப் போனேன்.

"நேற்று நான் சண்டைக்குப் போனனான் தெரியுமா" என்று கிண்ணி சொன்னான் நான் திடுக்கிட்டேன் . ஏனெனில், அந்த முகாமைவிட்டு கிண்ணியை அனுமதி இல்லாமல் வெளியேற வேண்டாம் என்ற உத்தரவு இருந்தது. நான் பேசாமல் இருப்பதைக் கண்ட கிண்ணி, "சண்டைக்குப் போனதற்காக யாரும் தண்டனை தந்தால், நான் சந்தோசமாக ஏற்றுக் கொள்வேன்" என்று கூறியவன் சிரித்தான். பின்பு, "அங்கே நான் போகேக்கை சண்டை முடிஞ்சுபோயிட்டுது. பார்த்தாற் காயப்பட்ட பொடியள் நிறையப்பேர் இருந்தார்கள். பிறகென்னை, அம்புலன்ஸ் எடுத்து ட்ரைவர் வேலை பார்த்தேன்" என்றான் மனநிறைவுடன்.

இதுதான் கிண்ணி, எங்குச் சண்டை நடக்கிறதோ அங்குப் போகத் துடிப்பவன். "அடிக்கவேண்டும், ஆயுதங்கள் எடுக்க வேண்டும்" இதுதான் அவனது வெறி. அவன் எத்தனை தரம் போரிற் காயப்பட்டான் என்று எண்ணிச்சொல்வது கடினம். இடது பக்கம் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரைக்கும் இவன் காயப்படாத இடமில்லை. கிண்ணி 'சேட்'டைக் கழற்றினால், அவனது வீரத்தழும்புகளை எண்ணிமுடிக்க அரை நாள் தேவை.

முதன்முதல் கிண்ணியை நான் சந்தித்தது இன்னும் எனக்குப் பசுமையாக நினைவில் நிற்கின்றது. இந்திய இரணுவச் சிறையில் 17 மாதங்களைக் கழித்துவிட்டு அப்போதுதான் விடுதலையாகியிருந்தேன்.

ஒருவருடனும் கதைக்காது, முகாமின் ஒதுக்குப்புறத் தோட்ட மூலையொன்றில் அமர்ந்து யோசித்துக்கொண்டிருந்தேன் "அண்ணை சுகமாயிருக்கிறியளோ" என்று கேட்டவண்ணம் வந்தவரைப் பார்த்தேன். மெல்லிய, கறுத்து நெடுத்த உருவம். வலது கையிற் சிறிய பையொன்று இருந்தது. கண்கள் துறுதுறுவென்று என்னை ஆழம் பார்த்தன. உதட்டில் நட்புணர்வுடன் ஒரு சிரிப்பு, மேல் இழுத்த தலை. சாரமும் சேட்டும் அணிந்திருந்தவர் தோழமையுடன் எனக்குப் பக்கத்தில் வந்தமர்ந்தார்.

"என்னைத் தெரியல்லையோ?" என்று கேட்க, நான் திரும்பவும் பார்த்துவிட்டு, "எங்கோ பார்த்தமுகம் மாதிரி இருக்கிறது, சரியாகத் தெரியவில்லை ." என்று இழுத்தேன். "நான் ஈசுவின் தம்பி கிண்ணி" என்றான்.

"ஈசுவின் தம்பியோ?" நானும் ஈசு என்கின்ற கிண்ணியின் மூன்றாவது தமையனும் ஒன்றாகப் படித்தவர்கள். கிண்ணியின் வீட்டுக்கு இயக்கத்திற்கு வருவதற்கு முன்பு எத்தனையோ தடவைகள் நான் போயிருக்கிறேன். அப்போது கிண்ணி சிறிய பையனாக இருந்தவன். நான் சரியாகக் கவனிக்க வில்லை. ஆறு வருடங்களின் பின்பு பார்க்கும்போது, நிறைய வித்தியாசங்கள்.

"என்ன செய்யிறியள்" என்று கேட்டேன்.

சும்மாதான் இருக்கிறேன்' என்றான் கிண்ணி. கிண்ணி இயக்கத்தில் இருப்பது எனக்குத் தெரியாது. முல்லைத்தீவு நகரில் நடந்த சண்டையில் இந்திய இராணுவத்தின் 60 எம்எம் எறிகணையினாற் காயப்பட்டு, சாகும் தறுவாயில் வல்வெட்டித் துறைக்கு வந்ததோ, பொக்ரர் அன் கிண்ணியைக் காட்பாற்றி இந்தியாவுக்கு அழைத்துச்சென்று அவனுக்கு மறு உயிர் கொடுத்ததோ எனக்குத் தெரியாது.

"ஏதாவது படிச்சுக்கொண்டிருக்கிறியளோ அல்லது தொழில்




பார்க்கிறியளே” என்று நான் விடாது கேட்டேன். “இடைக்கிடை இந்தியா பிஸ்னஸ் செய்கிறனான்” என, யாரும் நம்பும்படி யாகவே கிண்ணி கூறினான். இந்தியாவிற் கிண்ணி அறுவைச் சிகிச்சை முடித்துக்கொண்டு அப்போதுதான் நாடு திரும்பியதும் எனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

சில நாட்களின்பின் தீவகப் பகுதிக்கு அரசியல் வேலை செய் வதற்காக நான் அனுப்பப்பட்டேன். அப்போது ஜேம்ஸ் தீவகப் பொறுப்பாளராகப் பொறுப்பெடுப்பதற்காகச் சென்றார். அவருடன் நானும் வானில் போனபோது, அந்த வானை ஓட்டிக்கொண்டு போனது கிண்ணி. நான் கிண்ணியை ஆச்சரியமாகப் பார் த்தேன். கிண்ணி என்னைப் புரிந்துகொண்டவனாகச் சிரித் தான் .

“ஜேம்ஸ் அண்ணை ! கஸ்ரோ அண்ணைக்கு நான் இயக்கம் என்று தெரியாது .” என்றான்.

ஜேம்சும் சிரித்துவிட்டு.

“கிண்ணிதான் தீவில் எனக்கடுத்த பொறுப்பாளர், அதாவது பிரதித் தளபதி” என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார். அதற் குப் பிறகுதான் கிண்ணியின் வரலாற்றை அறிந்துகொண் டேன்.

சாதாரண போராளியாக ஆரம்பித்து, சண்டைகளில் தனது திற மையைக் காட்டி படிப்படியாக வளர்ந்தவன் இவன். இயல் பாகவே கிண்ணி ஓர் ஆவேசமான போராளி. மேஜர் பசிலனின் வளர்ப்பிற் சண்டையில் இவன் ஒரு பாயும் புலியாக மாறியதில் ஆச்சரியமில்லை. காட்டுக்குள் இருந்தபோது தலைவரின் பாச றையில் இவன் நிறையக் கற்றுக்கொண்டான். காடு இவனை அனுபவம் வாய்ந்த ஒரு போராளியாக்கியது. இவனது ஆரம்பச் செயற்பாடுகள் அரசியல் வேலையாகவே இருந்தன. மேஜர் ஜேம்ஸ் 83, 84 ஆண்டுக் காலப்பகுதிகளில் வடமராட்சிப் பகுதி யில் அரசியல் வேலைத் திட்டங்களைச் செய்துகொண்டிருக் கின்றபோது அவனுக்குத் துணையாக நின்றவன் கிண்ணி. கிண்ணியை இயக்க வேலைகளிற் படிட்டபடியாக ஈடுபட வைத்து, பின்பு முழுநேரப் போராளியாக்கிய பெருமை மேஜர் ஜேம்சுக்கே சேரும்.

வீரம் விளைந்த வல்வை மாநகர் பெற்றெடுத்த அருந்தவப் புதல் வன் கிண்ணி. கந்தசாமித்துரை தம்பதிகளின் நான்காவது மகனாகப் பிறந்த இவன், சிறுவயதிலேயே கல்வியிற் கெட்டிக் காரனாக விளங்கினான். காட்லிக் கல்லூரியில் உயர் வகுப்பிற் கணிதம் படித்துத் தனது திறமையினை வெளிப்படுத்தினான். இவனது சிறுபிராயத்திலேயே தகப்பனார் இறந்ததால் வீட்டில் குடும்பநிலை கஸ்ரமாகியது. குடும்பநிலையை உணர்ந்து கிண்ணி செயற்பட்டான். தனது படிப்புக்கு மத்தியிலும் சிறுசிறு வேலைகள் செய்துவந்தான். கோழிகளை வளர்த்து அதன் மூலம் வீட்டைக் கவனிக்கும் பணியினையும் செய்தான்.

இவனது இரண்டாவது அண்ணன் 1983ம் ஆண்டில் விடு தலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டதைத் தொடர்ந்து குடும்பப்பாரம் இவனை அழுத்தியதால், ஆரம்பத் தில் வீட்டிலிருந்த வண்ணமே இயக்கவேலைகளில் ஈடுபட் டான். மேஜர் ஜேம்ஸ் பயிற்சிக்காகப் போனதைத் தொடர்ந்து, கிண்ணி வடமராட்சியில் இயங்கி வந்த எமது இயக்கச் சவர்க் காரத் தொழிற்சாலையிற் பணியாற்றினான்.

அங்குச் சிறப்பாக செயற்பட்டதால் வன்னிப்பகுதியில் சவர்க் காரத் தொழிற்சாலையினை ஆரம்பிப்பதற்காகச் சிறிது காலம் வன்னியில் நின்றான். அதன்பின்பு கொமாண்டோ பயிற்சி யினை முடித்துக்கொண்டு,

சிறிதுகாலம் வல்வை இராணுவ முகாமினைச் சுற்றியுள்ள காவலரண்களில் காவல் புரிந்தான். இயக்க வேலைகளில் ஈடு படும் இயந்திரப் படகுகளைக் கவனிப்பதற்காக வடமராட்சி கிழக் குப் பகுதியில் ‘ஒப்பரேசன் லிபரேசன்’ வரையும் கடமையாற் றினான். தீவகத்திற்குக் கிண்ணி  தளபதி தீவகத்தின் தளபதி யாகக் கிண்ணி பொறுப்பெடுத்தவேளை, நான் அளவெட்டியில் முகாமொன்றில் இருந்தேன். ஆனால், அடிக்கடி கிண்ணியைப் போய்ப்பார்த்துவிட்டு வருவேன். பொறுப்பெடுத்ததிலிருந்து, ஏதா வது தாக்குதல் செய்யவேண்டும் என்று கிண்ணி துடித்துக் கொண்டிருந்தான். கிண்ணி வேவுபார்க்க அனுப்பிய இரு போராளிகளை ஒருநாள் இராணுவம் சுட்டுக்கொன்றது. எப்படி யும் இதற்குப் பதிலடி கொடுக்கவேண்டுமென்று கிண்ணி ஆவேசமாக அலைந்து திரிந்தான். நான் ஒருமுறை போன போது, “ஊர்காவற்றுறை வரைபடத்தை ஒழுங்கை ஒழுங்கை யாகக் கீறித்தாருங்கள்” என்று கேட்டான்.

“உங்களுக்கில்லாததோ. நாளைக்குக் கொண்டுவாறன்” எனப் பதிலளித்தேன். மறுநாளே தாக்குதல் திட்டம் தயாராகிவிட்டது. பானு அண்ணை தனது குழுவினரை அனுப்பியிருந்ததோடு, தானும் நேரே வந்திருந்தார். “கிண்ணி நானும் வாறன்” என்று கூறினேன்.

“ஜேம்ஸ் அண்ணையும் வீரமரணமடைஞ்சிட்டார். நானும் நீங்களுந்தான் மிஞ்சியிருக்கிறம். நான் இறங்குகிறன். நீங்கள் வெளியில் நின்றுகொள்ளுங்கோ” என்றான்.

“இப்படித்தான் முதலும் சொன்னீர்கள்” என்று சொல்லி ஒரு மாதிரி கிண்ணியிடமும் பானு அண்ணையிடமும் அனுமதி பெற்றுச் சென்றேன், இராணுவத்தின் ரோந்துப் பிரிவொன்று முகாமை விட்டு முன்னுக்கு ஒரு கிலோ மீற்றர்வரையும் வந்து கிளியர் பண்ணுவார்கள். இது தினமும் அதிகாலையில் நடப் பதால், இராணுவம் வரும் பாதைக்கு இரவே நாம் சென்று கிளைமோர்களை ஒழுங்குபடுத்தி வைத்து, இராணுவத்தை வரவேற்கத் தயாரானோம். ஒழுங்கையொன்று கடையொன் றிற்கு எதிராக இரண்டாகப் பிரிந்தது. அக்கடையினுட் கிண்ணி யும் நானும் ஏனைய 6 போராளிகளும் இருந்தோம். கடைக்கு முன்பக்கத்தைத்தவிர வேறு வாசல்கள் எதுவுமில்லை. ஒழுங்கை கடைக்கு நேர் செங்குத்தாக வந்து, 3 அடி தூரத்தில் இரண்டாகப் பிரிந்து செல்கிறது. விடியப்போகின்றது. சகல தடயங்களையும் அழித்துவிட்டு, எட்டுப் பேரும் கடைக்குள்

**சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்கவேண்டும். செயலால்தான் நாங்கள் செல்வாக்குப்பெற்றோம்; செயல்தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகிறது.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

இருந்தோம், ஒழுங்கை பிரிந்த பின்னர் இருமருங்கிலும் வேறு குழுக்களும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தன. நாங்கள் இருந்த கடைக்குட் பெரும் இடநெருக்கடி. பழைய தட்டுமுட்டுச் சாமான்களை ஒருவாறு ஓரமாக ஒதுக்கிவிட்டு நெருங்கி இருந்தோம், மேலேநிமிர்ந்து பார்த்தால், பெரிய குளவிக்கூடு ஒன்று எப்போது விழும் என்று பயமுறுத்திக்கொண்டிருந்தது.

நூற்றுக்கணக்கான பெரிய குளவிகள் கொட்டுவோம் என்று பயமுறுத்தினை.

“அண்ணை இதுகள் விஷக் குளவிகள், நான்கு ஐந்து ஒன்றாகக் கடித்ததென்றால் ஆளை முடித்துப்போடும்” என்று போராளியொருவன் எம்மைப் பயப்படுத்தினான். எல்லோரும் குளவிகளைப் பார்ப்பதும் விடியுதா எனப் பார்ப்பதுமாக இருந்தோம்.

“இப்படித்தான் நெடுங்கேணித் தாக்குதலையும் திட்டமிட்டு அடிச்சனான். இதுகும் சரிவரும் என்றான் கிண்ணி. எல்லோரும் ஆமியையும் குளவியையும் மாறிமாறிப் பார்த்து பதட்டத்துடன் இருந்ததைக்கண்ட கிண்ணி, நெடுங்கேணித் தாக்குதலைப் பற்றி விபரிக்கலானான் . “ஒரு கட்டத்தில் எமது போராளிகளில் ஒருவனை நோக்கி எல்.எம்.ஜி. க்காரன் சுட்டுக்கொண்டிருந்தான். அவனை உயிருடன்விட்டால் எல்லோரையும் முடித்துவிடுவான் என்று விளங்கிவிட்டது. இதனால் நான் பாய்ந்தேன்” என்று நிறுத்தினான் கிண்ணி, எல்லோரும் கதைகேட்கும் ஆவலில், “பிறகு என்ன நடந்தது சொல்லுங்கோ” என்றார்கள்.

துப்பாக்கியைத் தோளிற் கொளுவிக்கொண்டு, குண்டின் கிளிப்பைக் கழட்டியபடியே கத்திக்கொண்டு எதிரியின் நிலைக்குட் பாய்ந்தேன். அடித்துக்கொண்டிருந்த எல்.எம்.ஜி. இன் பரலில் இறுக்கிப் பிடித்து அதனை என்பக்கம் திரும்பவிடாமல் தடுத்தேன்” “கை சுட்டிருக்குமே” ஒரு போராளி இடையில் அவசரப்பட்டுப் புகுந்தான்.

“கை கொதிச்சுப்போச்சு. அப்படிச் செய்யாமல்விட்டால் என்னைச் சுட்டுப்போடுவான். அதனால் விடவேயில்லை. சண்டை முடிந்த பின்பு பார்த்தால் கையெல்லாம் கொப்பளம் போட்டிருந்தது” என்றான் கின்னி .

“பிறகு?” ஆவலை அடக்கமுடியாமல் நான் கேட்டேன்.

“எல்லோரும் சீக்கியர். பெரிய தடியன்கள். காலுக்குள் இருந்த இரு சீக்கியர்களும் எல்.எம்.ஜி. வைத்திருந்த சீக்கியனும் நினைத்திருந்தால் என்னைச் சுலபமாக அடித்துவிழுத்தியிருக்கலாம். ஆனால், கிளிப்பைக் கழற்றிய குண்டைக் கண்டும் நான் பலத்த குரலிற் கத்தி வெருட்டியதைக் கண்டும் பயந்துவிட்டார்கள்” என்ற கிண்ணி, “கொஞ்சம் பொறு” என்றுசொல்லிக் கதவிடுக்கால் மெல்லப் பார்த்தான்.

“வாறாங்கள்” எல்லோரும் அடங்கினோம். எனது நெஞ்சு துடிக்கிற சத்தம் பலமாகக் கேட்கின்றது.

சில வினாடிகளின்பின் நான் மெதுவாக எட்டிப்பார்த்தபோது, நாங்கள் இருக்கின்ற இடத்தில் இருந்து 5 அடி தள்ளி, ஒழுங்கையால் ஒரு எல்.எம்.ஜி. க்காரன் திரும்பிச் சென்று கொண்டிருந்தான். 6 வீரன் எம்மைக் கடந்தவுடன் கிண்ணி கிளைமோரை வெடிக்கவைத்தான். வெடித்தவுடன் கிண்ணி பாய்ந்தான். குளவியின் பயத்தாலே நானும் கிண்ணியுடன் சேர்ந்து பாய்ந்தேன். நல்ல வேளை நாங்கள் இருவரும் முதலிற் பாய்ந்தது. வெடித்தவுடன் குளவிக் கூடு பிய்ந்து கொட்டுப்பட்டு எங்களுடன் இருந்த ஏனைய அறுவரையும் குளவிகள் கலைத்துக் கலைத்துக் கொட்டினை என்று பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது. 5 நிமிடங்களிற் சண்டை முடிவடைந்துவிட்டது. கிண்ணி பாய்ந்துசென்று கொல்லப்பட்ட இரு இராணுவத்தினரை இழுத்துவந்தான். ஆயுதங்கள் எம்மாற் கைப்பற்றப்பட்டன. இராணுவத்தினர் நால்வர் கொல்லப்பட்டு 6 பேர் காயமடைந்தனர். இரு ஆயுதங்களும் தொலைத்தொடர்புச் சாதனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

கிண்ணி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி, சில நாட்களாகக் கிண்ணியை எனது முகாம் பக்கம் காணவில்லை. யாழ்ப்பாணத்திற்குள் நின்றால் சுற்றிச்சுற்றி எப்படியும் என்னிடம் வருவான். நிச்சயம் ஏதாவது ஓர் இராணுவ முகாமின் காவலரண்களை மேளப்பமிட்டவாறு இருப்பான் என்பது எனக்குத் தெரியும். வன்னியில் இருந்து வந்த போராளிகள் சில கிண்ணி அங்கு நிற்பதாகக் கூறினர். மிக விரைவில் தாக்குதல் ஒன்றைப் பத்திரிகையிற் பார்க்கலாம் என்று எதிர்பார்த்தேன். அதேபோல, “தட்டுவன்கொட்டியில் 35 காவலரண்கள் அழிப்பு, 15 இராணுவம் பலி ” என்று ‘புலிகளின் குரல்’ தெரிவித்தது . சில நாட்களின்பின் கிண்ணி எனது முகாமிற்கு வந்தபோது, “நல்ல அடியொன்று அடிச்சிருக்கிறியள்” என்றேன்.

மெல்ல மறுத்து, “நான் அங்குப் போகேல்லை” என்றான் ஒரு சிரிப்புடன்.

பிறகு ஒரு மாதிரி, “நாங்கள் எதிர்பார்த்துப் போதுகூட, ஆனால், அவங்கள் ஓடிட்டாங்கள்” என்றான்.
“போன வருசம் தட்டுவன்கொட்டியில் அடிபட்டனீங்கள் தானே! அந்த இடமோ இம்முறையும்” என்றுகேட்டேன் “அதுக்குக் கிட்டத்தான் ” என்று பதிலளித்தான்.

சென்ற வருடமும் ஆனையிறவுச் சண்டைக்கு முன்பு தட்டுவன் கொட்டியில் அமைந்துள்ள எமது காவலரண்களைக் கைப்பற்றி பரந்தனுக்கு வர இராணுவம் முற்பட்டது. அது முக்கியத்துவம் வாய்ந்ததொருசண்டை. அந்த இடத்தில் தடுக்காதுவிட்டால் இராணுவம் பரந்தன் வரையும் வரும் ஆபத்து இருந்தது.

அந்தச் சண்டையிற் கிண்ணி தனது முத்திரையைப் பதித்தான். அதிகாலையிலிருந்து இரவுவரை வெட்டவெளியில் இராணுவத்துடன் சமர்புரிந்து, அவர்களுக்குப் பலத்த இழப்புக்களை ஏற்படுத்தி, முகாமிற்கு அடித்துக் கலைத்தவன் இவன். “எண்டாலும் காரைநகர் அடி மாதிரி வராது” என்றான் கிண்ணி. உண்மை யில் அது ஓர் அற்புதமான அடி. காரைநகர்ப் பாலத்தில் தங்களுக்கு அடிவரும் என்று இராணுவம் கனவுகூடக் காண வில்லை . கிண்ணி ‘சாள்ஸில் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவின்’ விசேட தளபதியாகப் பொறுப்பெடுத்த சில வாரங்களிற்குள், அதனைச் செய்துகாட்டினான். எந்தத் தாக்குதல் என்றாலும் வேவு நடவடிக்கையில் இறுதிவரை ஈடுபட்டு, தனக்குத் திருப்தி ஏற்பட்ட பின்னரே தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவான். காரை நகரில் நடந்த சுவையான சம்பவம் ஒன்றைக் கிண்ணி கூறினான்.




திடீர் அதிரடித் தாக்குதல்மூலம் இராணுவத்தை உடைத் தெறிந்துவிட்டு எதிரியின் காவலரண்களைக்கைப்பற்றி ஆயதங்களை எடுத்தபின், தனது போராளிகளைத் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தான். ஒரு மூலையிற் சாக்கொன்று குவியலாகக் கிடந்தது. போகும் அவசரத்தில் அதனைக் காலால் உதைத்துத் தள்ளியினான். உள்ளுக்குள்ளிருந்த ஏதோ பொருளொன்று காலிற்பட்டு காலை வலிக்கச்செய்தது. திறந்து பார்த்தால் அதற்குள் 60எம்.எம். மோட்டாரும் எறிகணைகளும் காணப்பட்டன (அந்தக் காலகட்டத்தில் 60எம்.எம். மோட்டார் எமக்கொரு வரப் பிரசாதமான ஆயதமாக இருக்கக்கூடியளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது).

ஜீலை மாதம் 10ஆம் திகதி. தோழன் ஒருவன் பதறியபடியே வந்தான். முகமெல்லாம் இருண்டு, கறுத்து, சோகம் அப்பிக் காணப்பட்டது. என்னிடம் வந்தவன் எதுவும் பேசாது தள்ளாடிய படியே கதிரையில் அமர்ந்துகொண்டான். ஏதாவது கேட்டால் அழுதுவிடுவான் போல இருந்தது.

“என்னை ஒரு மாதிரி இருக்கிறியள் ” என, நிலவிய மௌனத்தை உடைத்தவாறே கேட்டேன்.

“கிண்ணியெல்லே.” மேலே கூறமுடியாது முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டான். உடனே எனக்கு விளங்கிவிட்டது. சில நிமிட நேரங்களிற்கு என்ன நடந்ததென்று ஜீரணிக்க முடியவில்லை .

“மச்சான், மச்சான் என்று கூப்பிட்டு நெருக்கமாகவும் - அன்பாகவும் பழகிற தளபதி அவன்” என்று சொல்லி, அந்தத் தோழன் கண்கலங்கினான்.

“ஏன் டொக்டர் அன்ரியின் இடத்திற்குக் கொண்டுபோனால் அவனைக் காப்பாற்றியிருக்கலாமே?”

ஏதோ ஆற்றாமையினாற் கேட்டேன்.

இரண்டு நாளைக்கு முதல்தான் சிறுகாயப்பட்டு அன்ரியிடத்துக்குப் போனவன். “அடுத்தமுறை உங்கட இடத்துக்கு வரமாட்டன் என்று அன்ரியிடம் சொன்னவனாம். சொன்னதுபோல.”

நான் காயப்பட்டு வீழ்ந்தபோது ஓடியோடி வந்து என்னைப் பார்த்தவன் என்னைக் கவனிக்கத் தனது தாயையும் சகோதரனையும் அனுப்பியவன் நான் யோசிக்கக்கூடாதென்று வீடியோ விளையாட்டுக் கருவியையும் றேடியோவையும் தந்தவன்; களச்செய்திகளை உடனுக்குடன் வந்து கலகலப்பாகச் செல்பவன், இன்று இயக்கச்சிப் போர்முனையில். அவன் மௌனமாகிப் போனான் .மேஜர் ஜேம்சினைட்பற்றி நான் சிறு குறிப்பு ஒன்றை ஈழநாதத்தில் எழுதியிருந்தேன். இதனைப் படித்த கிண்ணி எப்படியும் என்னைத் தேடிவருவான் என்பது எனக்குத் தெரியும். எதிர்பார்த்தபடியே அன்று இரவு கிண்ணி வந்தான்.

“எனக்குத் தெரியும், நீங்கள்தான் இதை எழுதியிருப்பியவள்” என்றான்.

“உங்களை நம்பித்தான் நான் முன்னுக்குப் போறன்” என்றான்.

“ஏன்” என்று விளங்காதவனாகக் கேட்டேன்.

“நான் செத்தால் நீங்கள்தான் என்னைப்பற்றி எழுதவேணும்” என்றான் குழந்தைத்தனமாக போராட்ட வாழ்விற் சாவைப்பற்றி போராளிகள் சாதாரணமாகக் கதைப்பார்கள். சொனியும் கிண்ணியும் நானும் இறுதிக் காலகட்டத்தில் நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். அப்போது மூவரும் இருந்து கதைக் கும் போது, சொனிதான் ஓரளவு காலம் உயிருடன் இருப்பான் என நாம் நம்பினோம். இதனால் எங்கள் புகைப் படங்கள் போன்றவற்றைச் சொனியிடம் கொடுத்து வைத்திருந்தோம். முதலில் கிண்ணியும், இரண்டாவதாக நானும் மாவீரர் பட்டியலில் சேருவோம் என்று நம்பியிருந்தோம். ஆனால், நடந்ததோ வேறு. சென்ற வருட சண்டையிற் சொனி இந்தமுறை கிண்ணி இடைநடுவில் நான்.

“உங்களுக்குத்தானே என்னைப்பற்றித் தெரியும்” என்றான் கிண்ணி. இவ்வளவு விரைவாகக் கிண்ணியைப்பற்றி நான் எழுதவேண்டிவரும் என்று நினைக்கவில்லை.

இப்படி நாங்கள் கதைத்த சில நாட்களின் பின்பு, “நான் செத்த பிறகு இதை உடைத்துப் பாருங்கோ” என்று, என்னிடம் கடித உறையொன்றைக் கொண்டுவந்து தந்தான். அக்கடித உறை உடைக்காதவாறு செலோ ரேப்பால் சுற்றப் பட்டிருந்தது:

அதற்கு மேல் பொலித்தீனாற் சீல் பண்ணைப்பட்டிருந்தது. தரும் போது அதைப்பற்றிப் பெரிதாக நான் எதுவும் நினைக்கவில்லை. கிண்ணி வீரமரணமடைந்தபின் அதனை உடைத்த போது, அதில் ஒரு வரலாறு இருந்தது - இந்திய இராணுவம் இந்த மண்ணைவிட்டு அவசரமாக ஓடியதன் பின்னணிகளுள் ஒன்று இருந்தது. விடுதலைப் புலிகளின் ஓர்மமும் துணிச்சலும் திட்டமிடும் தந்திரோபாயமும் வெளிப்பட்டது நெடுங்கேணிப் பாடசாலையில் இந்திய இராணுவத்திற்குக் கொடுத்த அடியைப்பற்றி, கிண்ணி அதில் எழுதியிருந்தான் அவன் ஒரு சிறந்த சண்டைக்காரன் மாத்திரமல்ல, சிறந்த போர்க்காரன் என்பதையும் நிரூபித்திருந்தான் கிண்ணியின் தமையன் முரளி வன்னியிலிருந்து வரும்போதெல்லாம், பல போராளிகளை அழைத்துத் தனது வீட்டிற்கு அறிமுகப்படுத்துவதை வழக்கமாகக் கொணடிருந்தான்.

“நான் வராவிட்டாலும் எங்கட பெடியள் வீட்டுக்கு வருவாங்கள் அவர்களையும் உன்ர பிள்ளைகளாய்ப்பார்” என்று முரளி தனது தாயாருக்கு அடிக்கடி கூறியிருந்தான். முரளி எப்படிக் கூறியிருந்தானோ அப்படியே கிண்ணியயும் தப்பாது கூறியிருந்தான். அந்தத் தாயும் போராளிகளில் தனது பிள்ளை, மாற்றான் பிள்ளை என்று வேறுபாடு பார்ப்பதில்லை. இந்திய இராணுவக் காலகட்டத்தின் போது, ஏராளமான போராளிகளுக்கு அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றிய வீடு அது. உணவும் ஆதரவும் வழங்கிப் பராமரித்த வாசல் அது. இன்று அந்தத் தாயின் பிள்ளைகளிற் கிண்ணியும் முரளியும் திரும்பிவராத இடத்திற்குப் போய்விட்டார்கள். மற்றப் பிள்ளைகள் வருமென்று அந்தத் தாய் காத்திருக்கிறாள்.

நினைவுப்பகிர்வு :வீ .மணிவன்ன்ணன் (கஸ்ரோ)
அனைத்துலக தொடர்பகம் பொறுப்பாளர்
தமிழீழ விடுதலை புலிகள்
வெளியீடு :மேஜர் கிண்ணி நூலிலிருந்து (சில பகுதிகள் இவை)

# திருகோணமலையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவு ஊர்தி மீது தாக்குதல்: பாதிக்கப்பட்டதரப்பை விசாரணைக்கு அழைத்துள்ள CID!

15.07.2025

திருகோணமலையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படம் தாங்கி வந்த ஊர்தியை தாக்கிய சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பை சேர்ந்த இளைஞனை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

திருகோணமலை தம்பலகாமம் பகுதியை சேர்ந்த சமூக செயற்பாட்டாளரான கனேசலிங்கம் சிந்துஜன் (வயது 35) என்பவரையே இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு அழைத்துள்ளனர்

கடந்த 2023 ஆம் ஆண்டு ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி திருகோணமலை நகருக்கு வருகை தரும் பொழுது அதன் மீது சந்தாபுரம் என்ற இடத்தில் வைத்து பெரும்பான்மை இனத்தவர்கள் தாக்குதல் மேற்கொண்டனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைக்கு வருமாறு குறித்த நபருக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அழைப்பாணை வழங்கியுள்ளனர்

ஊர்தி தாக்கப்பட்ட விவகாரத்தில் பொலிஸ் விசாரணைகள் முறையற்ற விதத்தில் இடம்பெற்றிருந்ததாக பல்வேறுபட்ட தரப்பினரும் குற்றம் சாட்டியிருந்த நிலையில், பாதிக்கப்பட்ட தரப்பினரை மீண்டும் விசாரணைகளுக்கு அழைத்து அவர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.


SRI LANKA POLICE
MESSAGE FORM
Date 2025/07/13 | Time of Receipt 10.45 | From Station CTID Colombo | To Station CTID Trincomalee
From OIC | To OIC | 20
2025-07-15
1000

# யுத்தம் முடிவடைந்து 16 வருடங்களான பின்னரும் தங்கள் நிலங்களிற்கு திரும்ப முடியாத நிலையில் தமிழ் மக்களை அரசாங்கம் வைத்திருப்பத பெரும் குற்றம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

15.07.2025

போர் முடிந்து பதினாறு வருடங்களான பின்னரும் அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற போலியான சட்டவிரோதமான கட்டமைப்புகளை தொடர்ந்தும் தக்கவைத்து பாதிக்கப்பட்ட சாதாரண தமிழ் மக்கள் தங்களின் சொந்த காணி நிலைக்கு திரும்பி போகமுடியாத நிலைக்கு இந்த அரசும் இதற்கு முதல் இருந்த அரசுகளும் , வைத்திருப்பது உண்மையில் ஏற்றுக் கொள்ள முடியாத பாரிய குற்றம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாணம் வலிகாமத்தில் அதிஉயர் பாதுகாப்பு வலயம் என தெரிவித்து படையினர் கைப்பற்றிய காணிகளில் இன்னமும் விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்ககோரி ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் இன்று இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அதிஉயர் பாதுகாப்பு வலயம் என தெரிவித்து தனியார் காணிகள் எத்தனையோ ஏக்கர் கணக்கில் பிடிக்கப்பட்டுள்ளது. யாழ்குடாநாட்டை பொறுத்தவரை அதன் 30 வீதமான நிலப்பரப்பு அதி உயர் பாதுகாப்பு வலயம் என தெரிவித்து சட்டவிரோதமாக சட்ட ஏற்பாடுகள் எதுவுமின்றி கைப்பற்றிவைத்துள்ளது.

அரசாங்கம் கைப்பற்றி வைத்திருப்பதற்கான சட்ட ஒழுங்குகள் எதுவுமின்றி தொடர்ந்தும் அந்த நிலங்களை வைத்திருக்கின்றது.

சமாதான முயற்சிகளின் போது இந்த விவகாரம் பெரிய பிரச்சினையாக வெடித்த போது சிறீலங்கா அரசாங்கம் நம்பியார் என்ற இந்திய இராணுவ அதிகாரியின் ஏற்பாட்டில் - அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் மாற்றங்களை செய்வதற்கு அவருடைய ஆலோசனைகளை பெற்று அதன்படி செயற்படப் போவதாக அறிவித்திருந்தது.

நம்பியாருடைய அறிக்கையை எடுத்துபார்த்தால் - அது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இருக்கின்ற வரைக்கும் அல்லது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஆட்டிலறி தாக்குதலை மேற்கொள்வதற்கான திறன் இருக்கின்ற வரைக்கும், உயர் பாதுகாப்பு வலயங்களில் பெரிய அளவில் மாற்றங்களை செய்ய முடியாது என தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இல்லாமல் போனால் அல்லது இந்த ஆட்டிலறி காரணமாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் இல்லாமல் போனால் அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் அனைத்தையும் அகற்றலாம் என்றும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

இன்றைக்கு போர் முடிந்து 16, 17 வருடங்களாகின்றது ஆனால் இன்றைக்கும் அந்த அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற போலியான சட்டவிரோதமான கட்டமைப்புகளை தொடர்ந்தும் தக்கவைத்து பாதிக்கப்பட்ட சாதாரண தமிழ் மக்களிற்கு தங்களின் சொந்த காணி நிலைக்கு திரும்பி போகமுடியாத நிலைக்கு இந்த அரசும் இதற்கு முதல் இருந்த அரசும், வைத்திருப்பது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாத பாரிய குற்றம்.

எங்களை பொறுத்தவரையிலே தெற்கிலே அவ்வாறான ஒரு மோசமான செயற்பாடு நடைபெற்றதாகயிருந்தால்,இண்டைக்கு அந்த அரசாங்கம் அடித்துரத்தப்பட்டிருக்கும்.

தொடர்ந்தும் வடகிழக்கிலே எந்த விதமான நியாயமும் இல்லாமல் அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பொது மக்களின் காணிகளை பறித்து வைத்திருப்பது முற்றிலும் தவறான ஒரு செயல்.

“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கடற்படையால் கட்டுப்படுத்த முடியவில்லையெனில், பொறுப்பை மீனவர்களிடம் ஒப்படையுங்கள்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

15.07.2025

தற்போது வடபகுதி கடற்பரப்பில் அதிகரித்துள்ள இந்திய மீனவர்களின் அத்துமீறலையும், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளையும் கடற்படையால் கட்டுப்படுத்த முடியவில்லையெனில், முதல்வன் திரைப்பட பாணியில் அந்தப் பொறுப்புக்களை ஒரு மாதகாலத்திற்கு வடபகுதி மீனவர்களிடம் ஒப்படைக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

மன்னார் - முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பேசப்பட்டது.

இந்நிலையில் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைப்படகுகள் எமது வடபகுதி கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து எமது மீனவர்களது வாழ்வாதாரங்களைச் சூறையாடிச்செல்கின்றன.

இந்நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையினைத் தடுக்கவேண்டிய கடற்படையினரும், ஆட்சியாளர்களும் தொடர்ச்சியாக காரணங்களை மாத்திரம் சொல்கின்ற நிலையே காணப்படுகிறது.

இந்த அரசாங்கம் இந்த விடயத்தில் கூடிய கரிசனையுடன் செயற்பட்டு இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு கடற்படையினர் இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறலைத் தடுப்பதற்கு டோரா படகுகள் வேண்டுமென காரணங்களை இங்கு கூறிக்கொண்டிருக்கமுடியாது.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள்நுழைந்து சட்டவிரோத வேலைகளில் ஈடுபடும் இந்திய இழுவைப்படகுகளுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்திய மீனவர்களுடைய இத்தகைய அத்துமீறிய செயற்பாடுகளுக்கு இந்திய அரசும், இலங்கை அரசும் ஆதரவளிப்பதாகவே எம்மால் பார்க்கமுடிகிறது. இந்த விடயத்தில் கடற்படையினர் மீது மீனவ மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இவ்வாறாக இந்திய மீனவர்கள், எமது மீனவ மக்களின் வாழ்வாதாரங்களைச் சூறையாடி எமது மக்களை வறுமைக்கு உட்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவேண்டிய முழுப்பொறுப்பும் கடற்படையினருக்கு இருக்கின்றது. எமது மக்களைக் காப்பாற்ற முடியவில்லை எனில் எமது பகுதிகளில் படையினர் எதற்கு இருக்கின்றனர்.

படையினரால் இந்த அத்துமீறல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் எமது மக்களிடம் அந்தப் பொறுப்பினை வழங்குங்கள்.

கடற்படையினர் முள்ளிக்குளம் கிராமத்தையும் முற்றாக அபகரித்து வைத்துக்கொண்டு, அந்த கிராமத்திற்குரிய மக்கள் மீள் குடியேறுவதற்கு தடையாக இருக்கின்றனர். எமது மக்களுடைய வீடுகளையும் கடற்படையினர் அடாத்தாக கைப்பற்றி வைத்திருக்கின்றனர்.

கடற்படையினரால் இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் முதல்வன் திரைப்படத்தில் ஒருநாள் முதலமைச்சரைப் போன்று இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பையும், சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பையும் எமது மீனவ மக்களிடம் ஒரு மாதத்திற்கு ஒப்படையுங்கள்.

எமது மீனவர்கள் இந்த அத்துமீறிய இந்திய மீனவர்களின் செயற்பாட்டையும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவார்கள் என்றார்.

# வலிகாமம் வடக்கில் சிறீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளரால் கொழும்பில் போராட்டம்

15.07.2025

வலிகாமம் வடக்கில் அரசபடையினரால் சுமார் 35 வருடகாலமாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது பூர்வீக நிலங்களை மீளக்கையளிக்குமாறுகோரி நேற்றைய நாள் கொழும்பில் விசேட கவனயீர்ப்புப்போராட்டமொன்றை முன்னெடுத்த அந்நிலங்களின் உரிமையாளர்கள், ஜனநாயகத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதாக வாக்குறுதியளித்து ஆட்சிபீடமேறிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, முன்னைய அரசாங்களின் கொள்கைகளையே தொடர்ந்து பின்பற்றுவாராயின், அது மக்கள் வழங்கிய ஆணைக்கு முற்றிலும் முரணானதாகும் எனச் சுட்டிக்காட்டினர்.

யாழ் வலிகாமம் வடக்கில் அரசபடையினரால் கையகப்படுத்தப்பட்ட தமது பாரம்பரிய நிலங்களை விடுவிக்குமாறுகோரி அந்நிலங்களின் உரிமையாளரால் கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு அருகாமையில் இன்று செவ்வாய்க்கிழமை (15) காலை 9.30 - 10.30 மணி வரை அமைதியான முறையில் கவனயீர்ப்புப்போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

'எமது பூர்வீக நிலத்தை எம்மிடம் மீளக்கையளியுங்கள்' எனும் கோஷத்துடன் மேற்கொள்ளப்பட்ட இக்கவனயீர்ப்புப்போராட்டத்தில் வலிகாமம் வடக்கில் அரசபடையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களின் உரிமையாளர்களுடன் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கலந்துகொண்டிருந்தார்.

போராட்டத்தில் ஈடுபட்ட நில உரிமையாளர்கள் '1999 இல் வழிபடச் சென்றபோது இருந்த பலாலி புனித செபஸ்தியார் ஆலயம் இப்போது எங்கே?', 'எமது நிலங்களே எமது வாழ்க்கை', 'ஒன்றாய் எழுவோம்', 'எமது பூர்விக நிலத்தை மீள எம்மிடம் ஒப்படையுங்கள்', 'எமது வாழ்வாதாரத்தை சூறையாடாதீர்கள்', 'ஜனாதிபதி அவர்களே! நீதிக்கான எம் கண்ணீரை நீங்கள் இன்னமும் பார்க்கவில்லையா?' எனும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

அத்தோடு இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எழுதப்பட்ட பகிரங்க கோரிக்கைக் கடிதம் இதன்போது வழங்கப்பட்டது. அக்கடிதத்தில் 'தெல்லிப்பழை பிரதேச செயலகப்பிரிவின் வலிகாமம் வடக்கு பகுதி மக்கள் அனைவரும் போரின் விளைவாக 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர். 2009 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு, 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், எமது பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டதுடன் நாம் மீண்டும் எமது நிலங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. அதன்விளைவாக நாம் இடைத்தங்கல் முகாம்களிலும், எமது உறவினர்களின் வீடுகளிலுமே வசித்தோம். அதனைத்தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், காணி கையகப்படுத்தல் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின்கீழ் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக எமக்குச் சொந்தமான பரந்துபட்டளவிலான காணிகளைக் கையகப்படுத்தியது. அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் எமது பூர்வீகக் காணிகள், வாழ்வாதார வளங்கள், விவசாயக் காணிகள், மீன்பிடி பகுதிகள், மத வணக்கஸ்த்தலங்கள் என்பன உள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் ஜனநாயகத்தையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதாக வாக்குறுதியளித்து ஆட்சிபீடமேறிய உங்களது அரசாங்கம், காணி உள்ளிட்ட விடயங்களில் முன்னைய அரசாங்கங்களின் கொள்கைகளையே பின்பற்றுவது மக்கள் வழங்கிய ஆணையைப் புறக்கணிக்கும் செயலாகும். எனவே இதுகுறித்து உடனடியாக அவதானம் செலுத்தி, எமது பாரம்பரிய நிலங்களை விடுவிப்பதற்கு நடவ஢ககை எடுங்கள்' எனக் கோரப்பட்டுள்ளது.

# செம்மணி மனிதப் புதைகுழியில் குற்றவியல் சம்பவம் நடந்ததற்கான தடயங்கள்

### சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன்

16.07.2025

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட செம்மணி மனித புதைகுழி அகழ்வு பணிகளை எதிர்வரும் 21 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழி அகழ்வு வழக்கு செவ்வாய்க் கிழமை (15) யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு தொடர்பான விடயங்களை காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்

தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் இரண்டாம் கட்ட செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கையும் சட்ட வைத்திய அதிகாரி பிரணவனின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பான சுருக்கமான விவரங்கள் மன்றுக்கு சமர்ப்பிக்கப் பட்டது. இதன்போது மூன்று விடயங்களை கோடிட்டு காட்டி யுள்ளனர்.

மனித புதைகுழியில் குற்றவியல் சம்பவம் நடந்ததற்கான தடயங்கள் இருப்பதாக தாங்கள் கருதுவதாக நிபுணர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

வழமையான சடலங்கள் தகனம் செய்யப்பட்ட தோற்றுவாய்கள் அங்கே காணப்படவில்லை என்ற விடயமும் மூன்றாவது இது சம்பந்தமாக மேலதிகமான ஆய்வுகள் தேவை என்ற விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எஸ் 25 ,எஸ் 48 , எஸ் 56 என அடையாளப்படுத்தப்பட்ட சிறு வர்களது என நம்பப்படும் எலும்புக்கூடுகள் தொடர்பான ஆய் வின் முடிவுகள் மிக முக்கியமானதாக காணப்பட்டது. உடுப்பு உடைகள், எலும்பியல் சம்பந்தமான விடயங்களில் ஒருமித்த தன்மை இருந்ததாக கூறப்பட்டது.

அதிலும் குறிப்பாக நான்கு தொடக்கம் 5 உத்தேச வயதை கொண்ட சிறுமியின் உடைய எலும்புக்கூடாக இருக்கலாம் என்ற சந்தேகத்தினை பேராசிரியர் வெளியிட்டு இருந்தார்.

அதனை தொடர்ந்து சட்டத்தரணிகள், பாராளுமன்ற உறுப் பினர் சிறீதரன் ஆகியோர் தமது பிரசன்னம் இந்த மனிதப் புதை குழி அகழ்வு பிரதேசத்தில் கட்டாயம் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கோரிக்கையை மன்ற பரிசீலனைக்கு எடுத்தது.

அடுத்த அகழ்வு பணிகளை 21 ஆம் திகதி ஆரம்பிப்பதாக சட்ட வைத்திய அதிகாரி மன்றுக்கு அறிவித்திருக்கிறார். ஆகவே 21ம் திகதி அகழ்வு பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் - என்றார்.

குறித்த செம்மணி புதைகுழி அகழ்வு வழக்கு ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்படவுள்ளது.

# செம்மணியில் பொம்மையுடன் மீட்கப்பட்ட எலும்புக்கூடு 4-5 வயது மதிக்கத்தக்க சிறுமியினுடையது

### சட்ட வைத்திய அதிகாரி செ. பிரணவன்

16.07.2025

செம்மணி மனித புதைகுழியில் நீல நிற புத்தகப்பை மற்றும் பொம்மையுடன் மீட்கப்பட்ட எலும்புக் கூட்டு தொகுதி 4 - 5 வயது மதிக்க தக்க சிறுமியினுடையது என சட்ட வைத்திய அதிகாரி செ. பிரணவன் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

செம்மணி புதைகுழி தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்றைய நாள் செவ்வாய்க்கிழமை யாழ் . நீதவான் நீதிமன் றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

கடந்த வழக்கு தவணையில் போது, செம்மணி மனித புதைகுழி யில் மீட்கப்பட்ட எலும்பு கூட்டு தொகுதிகள் தொடர்பிலான அறிக் கைகளை சட்ட வைத்திய அதிகாரி, மற்றும் தொல்லியல் பேரா சிரியர் ராஜ் சோமதேவ ஆகியோரை சமர்ப்பிக்குமாறு மன்று கட்டளையிட்டு இருந்தனர்.

அதன் அடிப்படையில் இருவரும் தமது அறிக்கைகளை மன்றில் சமர்ப்பித்து, தமது அவதானிப்புக்கள் தொடர்பிலும் மன்றில் கூறினார். அதன் போதே சட்ட வைத்திய அதிகாரி அவ்வாறு தெரிவித்தார்

நீல நிறப் புத்தகப்பை, பொம்மை போன்றவற்றோடு அடை யாளம் காணப்பட்ட எஸ் - 25 என அடையாளமிடப்பட்ட என்புத் தொகுதி சிறுமியின் என்புத் தொகுதி எனவும், உத்தேசமாக 4 - 5 வயதுடையதாக இருக்கும்.

அத்துடன் எஸ் - 48, எஸ் - 56 என அடையாளமிடப்பட்ட சிறு வர்களினுடைய என்புத் தொகுதிகள் எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதிகள், புத்தகப் பையோடு அடையாளம் காணப் பட்ட சிறுமியினுடைய என்புத் தொகுதியோடு உடைகள் மற்றும் என்பியல் சம்பந்தமாக ஒருமித்த தன்மைகள் காணப்படுகிறது என சட்ட வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அதனை அடுத்து, புத்தகப்பையோடு அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டது போன்ற என்பு ஆய்வை சிறுவர்களினுடையது என நம்பப்படும் குறித்த இரண்டு என்புத் தொகுதிகள் மீதும் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சட்ட வைத்திய அதிகாரிக்கு மன்று கட் டளையிட்டது.

செம்மணியில் குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன, அதேவேளை செம்மணி மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட குறித்த பகுதியில் குற்றவியல் சம்பவங்கள் இடம்

பெற்றமைக்கான தடயங்கள் உள்ளன.

மேலும் வழமையாக உடல்கள் நல்லடக்கம் செய்யப்படுவது போன்று புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட என்புத் தொகுதிகள் காணப்படவில்லை.

எனவே இது சம்பந்தமான மேலதிகமான ஆய்வுகள் தேவை என தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா மன்றில் தெரி வித்து தனது அறிக்கையை மன்றில் சமர்ப்பித்தார்.

# கிளிநொச்சி நகரில் 40 வீதத்திற்கும் அதிகமான காணிகளை படையினர் தொடர்ந்தும் ஆக்கிரமித்துள்ளனர்

### பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

16.07.2025

கிளிநொச்சி நகரில் 40 வீதத்திற்கும் அதிகமான காணிகளை படையினர் தொடர்ந்தும் ஆக்கிரமித்து வைத்துள்ளதாகவும் அவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் வலியுறுத் தியுள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இன்று (16) கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட காலமாக மக்கள் பயன்படுத்திய காணிகள் படையினர் மற்றும் வனவள திணைக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

குறிப்பாக ஆனைவிழுந்தான் குளத்தின் கீழான வயல் காணிகள், பள்ளிக்குடா பகுதியில் உள்ள காணிகள் படை யினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. யுத்தம் நிறைவுபெற்று இத்தனை வருடங்கள் கடந்துள்ள போதிலும் இராணுவம் இவ்வாறு காணிகளை ஆக்கிரமித்து வைத்திருப்பதனை ஏற் றுக்கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்திற்கு செல் லும் பாதை உள்ளிட்ட பெருந்தொகையான காணிகளை இரா ணுவத்தினர் வைத்துள்ளதாகவும் இதனால் அபிவிருத்தியோ அல்லது நல்லிணக்கமோ ஏற்படாது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்த கடற் தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், குறித்த காணிகள் தொடர்பில் இராணுவ தரப்பிலிருந்து விளக்க கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்தநிலையில் பாதுகாப்பு செயலாளருடனும், இராணுவ உயரதிகாரிகளுட னும் மீண்டும் கலந்துரையாடி குறித்த பாடசாலை காணியை விடுவிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**பயிற்சி - தந்திரம் - துணிவு இந்த மூன்றும் ஒரு படையணிக்கு அமையப் பெறுமாயின் வெற்றி நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# “காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு” மன்னாரில் கையொப்பம் சேகரிப்பு

16.07.2025

மன்னார் பஜார் பகுதியில் ‘சம உரிமைகளை வெல்வோம் இன வாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவோம்’ எனும் தொனிப் பொருளில் வடிவமைக்கப்பட்ட எதிர்ப்புப் பதாதையில் பொது மக்கள் இன்று புதன்கிழமை (16) காலை கையொப்பமிட்டனர்.

இந்த கையொப்பம் சேகரிக்கும் நிகழ்வினை சம உரிமை இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது “காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு”, “இன்னொரு அடக்குமுறைச் சட்டங்கள் வேண்டாம்”, “பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக இரத்து செய்”, “அனைத்து தேசிய இனங்களுக்கு சம உரிமைகளை உறுதி செய்யும் அரசியல் அமைப்பிற்காக போராடுவோம்” உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, பொதுமக்கள் இந்த எதிர்ப்புப் பதாதையில் கையொப்பம் இட்டனர்.

இதில் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்து, தமது கையொப்பத்தை பதிவு செய்தனர்.

# ஒரு சிறுமிக்காக நீதி கோரமுடியவில்லை நாம் என்ன நிலையில் இருக்கிறோம்?

## சட்டத்தரணி பெனிஸ்லஸ் துஷான்

16.07.2025

நாம் ஒரு சிறுமிக்காக துன்பப்படவில்லை என்றால், எம்மால் ஒரு சிறுமிக்காக நீதி கோரமுடியவில்லை என்றால், நாம் உண்மையில் எந்த நிலையில் இருக்கிறோம்? கடந்தகாலம் எம்மைத் துரத்துவதாக இதனைக் கருதமுடியாது. மாறாக நிகழ்காலத்தில் உண்மையை வெளிப்படுத்துமாறு கோரப்படுவதாகவே இதனைக் கருதவேண்டும் என சட்டத்தரணி பெனிஸ்லஸ் துஷான் சுட்டிக்காட்டியுள்ளார்.

செம்மணி மனிதப்புதைகுழியில் நீலநிறப்புத்தகப்பை மற்றும் சிறுவர்களின் விளையாட்டு பொம்மை என்பவற்றுடன் கண்டறியப்பட்ட என்புத்தொகுதி 4 - 5 வயதுடைய சிறுமியினுடையதாக இருக்கலாம் என சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் செவ்வாய்க்கிழமை (15) யாழ் நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்து பொதுமக்கள் மத்தியில் தொடர்ந்து வெளிச்சம் பாய்ச்சிவரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரும், சட்டத்தரணியுமான பெனிஸ்லஸ் துஷான் இதுகுறித்து அவரது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது:

செம்மணி மனிதப்புதைகுழியில் நீலநிறப்புத்தகப்பை மற்றும் விளையாட்டு பொம்மை என்பவற்றுடன் கண்டறியப்பட்ட என்புத்தொகுதி 4 - 5 வயதுக்கு உட்பட்ட ஒரு சிறுமிக்குச் சொந்தமானது என சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் செவ்வாய்க்கிழமை யாழ் நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்திருக்கிறார்.

நான்கு அல்லது ஐந்து வயதைத் தாண்டாத சிறுமியொருவர் படுகொலை செய்யப்பட்டு, மனிதப்புதைகுழியில் புதைக்கப்பட்டு, அச்சிறுமியைப் பாதுகாக்கவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருப்பவர்கள் அதுபற்றி மறந்துபோயிருக்கும் நாட்டிலேயே நாம் வாழ்கிறோம். இப்போது, தசாப்தங்கள் கடந்து, அந்த நிலம் தனது அமைதியை முடிவுக்குக்கொண்டுவந்திருக்கிறது. உண்மையை நீண்டகாலத்துக்குப் புதைத்து வைத்திருக்கமுடியாது.

அவ்வாறிருந்தும் நாம் அதற்கான நீதியையும், கௌரவத்தையும், பொறுப்புக்கூறலையும் கோருகையில் பிறிதொரு எதிர்க்குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதனைப் பார்க்கிறோம். துரோகிகள் என்றும், அமைதியை குழப்புபவர்கள் என்றும், நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் வேளையில் ஸ்திரமற்றதன்மையைத் தோற்றுவிப்பவர்கள் என்றும் அக்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இருப்பினும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு நபருக்கு 6.9 மில்லியன் மக்கள் வாக்களித்ததன் விளைவாகவே தற்போது சுட்டிக்காட்டும் இந்த பொருளாதார நெருக்கடி உருவானது என்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். அங்கு வாக்குகள் அச்சத்தின் நிமித்தம் அளிக்கப்பட்டவையே தவிர, தூரநோக்கு சிந்தனையின் அடிப்படையில் அளிக்கப்பட்டவை அல்ல. அந்நபருக்கு வாக் களிப்பதென மேற்கொள்ளப்பட்ட தெரிவு எமது பொருளா தாரத்தை

வங்குரோத்து நிலைக்கு இட்டுச்சென்றதுடன் மாத்திர மன்றி, நாட்டின் நேர்மை மற்றும் மனசாட்சி என்பவற்றையும் சீர்குலைத்தது.

நாம் ஒரு சிறுமிக்காக துன்பப்படவில்லை என்றால், எம்மால் ஒரு சிறுமிக்காக நீதி கோரமுடியவில்லை என்றால், நாம் உண்மையில் எந்த நிலையில் இருக்கிறோம்?

கடந்தகாலம் எம்மைத் துரத்துவதாக இதனைக் கருதமுடியாது. மாறாக நிகழ்காலத்தில் உண்மையை வெளிப்படுத்துமாறு கோரப்படுவதாகவே இதனைக் கருதவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு முன்னர் அரசு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்

## மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மக்காஸ் அடிகளார்

16.07.2025

மக்கள் தமது வளங்களையும், உரிமைகளையும் பாதுகாப்பதற்கு பாரிய போராட்டத்தை முன்னெடுப்பதற்கு முன் மக்கள் கேட்கின்ற அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் விடையத்தில் அரசு தலையிடா விட்டால் அரசுக்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலை உருவாகும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மக்காஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் இன்று புதன்கிழமை (16) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வளங்களை அபகரிக்கும் நோக்கத்துடன், கணிய மணல் அகழ்வு தொடர்பாக பல நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் மக்கள் எதிர்ப்புக்கு மத்தியில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஏற்கனவே மன்னாரில் நிறுவப்பட்ட 30 காற்றாலைகளை தொடர்ந்து மேலும் 05 காற்றாலைகள் மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பல நிறுவனங்கள் இலங்கை மின்சார சபையின் அனுசரணையுடன் முன்னெடுத்து வருகின்றனர்.

அச் செயல் மன்னார் தீவு மக்களை மிகவும் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது.

எனவே அவர்களுக்கு நாங்கள் மேலும் ஒரு வார கால அவகாசத்தை வழங்குகின்றோம். குறித்த வேலைத்திட்டத்தை உடனடியாக நிறுத்தி வேறு இடத்திற்கு காற்றாலை திட்டத்தை மாற்று மாறு கேட்டுக் கொள்கிறோம். நிலங்களை பாதுகாக்கும் உரிமை வாழிடங்களில் வாழ்கின்ற மக்களுக்கு உள்ளது.

அது அவர்களின் பிறப்புரிமை. எனவே அந்த நிலங்களை உங்களால் ஒருபோதும் பறித்து எடுக்க முடியாது.

எனவே இத்திட்டத்தை நிறுத்தாவிட்டால் நாங்கள் அத்திட்டத்தை நிறுத்த நடவடிக்கை மேற்கொண்டால் உங்களுக்கு பல

கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும். எனவே உங்களை பாதுகாத்துக் கொள்ள உடனடியாக மேலதிகமாக அமைக்கப்பட்டு வரும் 5 காற்றாலை திட்டத்தை உடனடியாக நிறுத்தி மக்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார். மேலும் பல்வேறு விடையங்கள் குறித்தும் குறித்த ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தார்.

# திருகோணமலை மூதூர் – பெரியவெளி அகதிமுகாம் படுகொலையின் 39வது ஆண்டு நினைவேந்தல்

17.07.2025

மூதூர் பெரியவெளி பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாமில் பாதுகாப்புத்தேடி தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் 44 பேர் ஆயுத தாரிகளினால் சுட்டும், வெட்டியும், எரித்தும் படு கொலை செய்யப்பட்ட பெரியவெளி அகதி முகாம் படுகொலை யின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு புதன்கிழமை (16) இடம்பெற்றது. படுகொலை செய்யப்பட்ட உறவுகளினாலும், பொதுமக்களினாலும் படுகொலை செய்யப்பட்டவர்களை புதைத்த இடத்தில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு உயி ரிழந்தவர்களுக்கு மலர்தூவி விளக்கேற்றி வணக்கம் செலுத் தப்பட்டது.

படுகொலைச் சம்பவம் இடம்பெற்று 39 வருடங்கள் பூர்த்தி யாகின்ற நிலையிலும் தமக்கான நீதி இதுவரை கிடைக்கப்பெற வில்லை எனவும் தற்போது இருக்கின்ற புதிய அரசின் ஆட் சியிலாவது தமக்கான நீதி கிடைக்கப்பெற வேண்டும் என பாதிக்கப்பட்ட உறவுகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு A15 பிரதான வீதியின் மல்லிகைத்தீவு சந்தியில் இருந்து 500 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பெரியவெளி பாடசாலை அகதிமுகாமில் பாரதிபுரம், மல்லிகைத்தீவு, மணற்சேனை, பெரியவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாடசாலை கட்டிடத்திலும் அவ் வளாகத்தினுள் ஓலைக் கொட் டில்கள் அமைத்தும் தங்கி இருந்தனர். 1986ம் ஆண்டு யூலை மாதம் 16ம் திகதி அதிகாலை 03:00 மணியளவில் மணற் சேனை, பெரியவெளி ஆகிய கிராமங்களில் இருந்த மக்கள் 300 இற்கும் மேற்பட்ட ஆயுததாரிகளினால் சுற்றி வளைக்கப் பட்டு சுட்டும் வெட்டியும் எரித்தும் படுகொலை செய்யப்பட்டிருந் தார்கள். இப் படுகொலை சம்பவத்தில் 02 பெண்கள் உட்பட 44 அப்பாவிப் பொதுமக்கள் பரிதாபகரமாக உயிரிழந்தார்கள்.

கிராமத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் வீடுகளில் தங்கி யிருந்த 25 ஆண்கள் மற்றும் 2 பெண்களை படுகொலை செய்ததுடன் பெருவெளி அகதி முகாமில் தஞ்சம் அடைந்திருந்த மக்களை சுற்றிவளைத்து அங்கிருந்த 17 ஆண்களை ஒன்று திரட்டி ஓர் இடத்தில் முழந்தாழிட வைத்து குடும்பத்தினர் கண் எதிரே சுட்டுக் கொன்றனர். பின்னர் குறித்த சடலங்கள் கட்டை பறிச்சான் GPS இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட் டிருந்தன.

அத்துடன் குறித்த தினத்தில் அங்கிருந்த 11 பேர் கைது செய் யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்கள் இவர்களில் 8 பேர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டதோடு 3 பேர் சிறையில் அடைக்கப்பட்டு சில வருடங்களின் பின் விடுதலை செய்யப்பட் டிருந்தனர். முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர் களது 17 பேரின் சடலங்களும் கட்டைபறிச்சான் GPS இராணுவ முகாமில் வைத்து பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த படுகொலைச் சம்பவத்தில் பின்வரும் நபர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்:

01. இராசையா செல்லத்துரை - பாரதிபுரம்
02. ஆரியத்தம்பி சிவசுப்ரமணியம் - பாரதிபுரம்
03. சித்திராவி கனகய்யா - பாரதிபுரம்
04. முத்துக்குமார் விநாயகமூர்த்தி - பாரதிபுரம்
05. இராசையா குமாரதுரை - பாரதிபுரம்
06. வேலுப்பிள்ளை ஆறுமுகம் - மல்லிகைத்தீவு
07. கோணாமலை இராசநாயகம் - மல்லிகைத்தீவு
08. கதிரவேல் நாகேந்திரம் - மல்லிகைத்தீவு
09. கோணாமலை வீரக்குட்டி - மல்லிகைத்தீவு
10. கதிர்காமத்தம்பி வைரக்குட்டி - மல்லிகைத்தீவு
11. வெற்றிவேல் குணசிங்கம் - மல்லிகைத்தீவு
12. சித்திரவேல் குணசிங்கம் - மல்லிகைத்தீவு
13. சித்திரவேல் ஜெகன் - மல்லிகைத்தீவு
14. சித்திரவேல் பத்தக்குட்டி - மல்லிகைத்தீவு
15. ஆலப்பிள்ளை - மல்லிகைத்தீவு
16. செல்லையா சுந்தரலிங்கம் - மல்லிகைத்தீவு
17. பொன்னையா - மல்லிகைத்தீவு
18. மாரிமுத்து சிறிகந்தராசா - மல்லிகைத்தீவு
19. வைரமுத்து வைரக்கட்டயன் - மல்லிகைத்தீவு
20. மாரிமுத்து யோகராசா - மல்லிகைத்தீவு
21. சி. மகேந்திரன் - மணற்சேனை
22. வீரக்குட்டி மயில்வாகனம் - மணற்சேனை
23. செல்லையா சித்திரவேல் - மணற்சேனை
24. வடிவேல் நவரெட்ணராசா - மணற்சேனை
25. இராசகுலம் - மணற்சேனை
26. வைரமுத்து குணசேகரம் - மணற்சேனை
27. அழகுதுரை சத்தியசீலன் - மணற்சேனை
28. செல்லத்தம்பி தர்மராசா - மணற்சேனை
29. கந்தவனம் கமலம் - மணற்சேனை
30. சிவசுப்ரமணியம் யோகதாஸ் - மணற்சேனை
31. பத்தக்குட்டி கனகநாயகம் - மணற்சேனை
32. மகேந்திரன் - மணற்சேனை
33. சின்னத்துரை குணநாயகம் - பெரியவெளி
34. கந்தையா தங்கராசா - பெரியவெளி
35. காளிக்குட்டி அருளம்பலம் - பெரியவெளி
36. பசுபதி மோகனதாஸ் - பெரியவெளி
37. சேதுநாதன் கோணாமலை - பெரியவெளி
38. தம்பிமுத்து தங்கராசா - பெரியவெளி
39. தியாகராசா வடிவேல் - பெரியவெளி
40. நாகராசா சரஸ்வதி - பெரியவெளி
41. பத்தக்குட்டி மகாலிங்கம் - பெரியவெளி
42. பத்தக்குட்டி யோகராசா - பெரியவெளி
43. பிரான்சிஸ் மார்டின் - இருதயபுரம்
44. அரசரெட்டினம் ஆலப்பிள்ளை - புன்னையடி, ஈச்சிலம்பற்று.

**தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# தமிழருக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைக்கு தாமதமற்ற சர்வதேச நீதி வேண்டும்!

## யாழ். வலி. கிழக்கு பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம்

17.07.2025

இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை எனவும் அவ் இனப்படுகொலைக்கு இலங்கை அரசு காரணம் என்ற நிலையில், இலங்கையின் உள்நாட்டு விசாரணைகளில் முற்றிலும் எமது மக்களும் நாமும் நம்பிக்கை இழந்துள்ளோம். இவ் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் இரண்டாவது அமர்வு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இவ் அமர்வில் தவிசாளர் தியாகராஜா நிரோஸினால் இத் தீர்மானம் முன்வைக்கப்பட்டபோது, அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் உறுப்பினர்களின் வரவேற்பினைப் பெற்று தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தினை முன்வைத்து தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களால் வரலாற்று ரீதியில் நாம் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். எம் மீதான இனப்படுகொலை அரச கொள்கையாக இடம்பெற்றுள்ளது. எமது பூர்வீக தாயகமான வடக்குக் கிழக்கில் நிலங்கள் திட்டமிடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. பௌத்த சிங்கள பேரினவாத விஸ்தரிப்பு முயற்சியாக எமது மொழி உரிமை மறுக்கப்பட்டது.

தமிழ் மக்கள் என்ற காரணத்திற்காக சொந்த மண்ணிலேயே அரச ஒத்துழைப்போடும் அனுசரனையோடும் ஏவுதலோடும் வன்செயல்கள் வாயிலாகவும் இராணுவ நடவடிக்கைகள் வாயிலாகவும் சுதந்திரத்திற்குப் பின் தமிழர்கள் கொன்றழிக்கப்பட்டனர். தமிழர்களைக் கொன்றால் குற்றமில்லை என்ற ஆட்சியாளர்களின் உத்தியோகப்பற்றற்ற ஆதரவு அரசினால் அளிக்கப்பட்டது. தமிழ் மக்கள் மீது முடுக்கிவிடப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு தண்டனைகளில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறல் இடம்பெறவில்லை.

தமிழ் பெண்கள் அரச படைகளால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொன்று புதைக்கப்பட்டனர். இதற்கு செம்மணி தக்க சான்று. இன்றும் மீட்கப்படும் புதைகுழிகள் மீது சர்வதேச விசாரணை அமையுமாயின் பல உண்மைகளை அவை வெளிப்படுத்தும். தமிழ் இனமாகப் பிறந்தார்கள் என்ற அடிப்படையில் எமது கல்வி உரிமை வரலாற்றில் மறுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற சர்வதேசத்தினால் காட்டுமுராண்டிச் சட்டம் என இனங்காணப்பட்ட சட்டங்கள் வாயிலாக ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பல தசாப்தங்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இன்றும் அரசியல் கைதிகளாக மீதமுள்ளவர்கள் விடுதலைக்காக ஏங்குகின்றனர். அரச படைகளால் பலாத்காரமாகக் கொண்டு செல்லப்பட்டவர்கள் விடுவிக்கப்படவில்லை. அவர்களது விடுதலையை கோரி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் தெருக்களில் வருடக் கணக்கில் போராடிக்கொண்டு இருக்கின்றனர். சிறுவர்கள் பாடசாலை வளாகங்களுக்குள் வைத்தே அரச படைகளால் குண்டுகள் வீசப்பட்டு வீசி படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவமயமாக்கத்தினுடாக பௌத்த சிங்கள பேரினவாதம் காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் பூர்வீக தாயகத்தில் விஸ்தரிக்கப்பட்டு வந்துள்ளது. தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வித சட்ட ரீதியான அணுகுமுறைகளும் இன்றி இராணுவ அதிகாரம் கொண்டு கையகப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இன்றும் பல நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. தமிழ் மக்களின் வரலாற்றுத் தாயகம் திட்டமிட்ட அரச தாபனங்கள் ஊடாக கபளீகரம் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் போர்க்காலத்திலும் போருக்குப் பின்னும் பல மனிதப் புதைகுழிகள் அடையாளப்படுத்தப்பட்டு ஏராளமான எழும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு உள்நாட்டில் நீதி கிடைக்கவில்லை. இறுதி யுத்தத்திலும் ஏனைய யுத்தத்திலும் போர்த் தர்மங்களையும் உலக நியதிகளையும் மனித உரிமைகளையும் மீறி அரசு செயற்பட்டுள்ளது. வகைதொகையின்றி

இலட்சக்கணக்கில் மக்களை படுகொலை செய்துள்ளது.

உள்நாட்டில் உண்மைகளை கண்டறிந்து நீதியை வழங்க போதிய பொறிமுறைகளும் ஏற்புடைமையும் இன்றைய அரசிடமும் கிடையாது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கங்களும் தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை அடக்குவதையும் நீதியை வழங்குவதாக சர்வதேசத்திடம் பொய்யான உத்தரவாதங்களை வழங்கி தமிழருக்கான நீதியை காலந்தாழ்த்தும் உத்திகளிலேயே அரசு கவனம் செலுத்துகின்றது. காலந்தாழ்த்துதல் ஊடாக எமது நீதிக்கேரிக்கை மற்றும் மனிதாபிமானப் பிரச்சினை, இனப்பிரச்சினைத்தீர்வு ஆகியவற்றை நீர்த்துப்போகச் செய்யும். தந்திரோபாயத்தினை இலங்கை கொண்டுள்ளது.

எமது இனம், மொழி, பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், வரலாறு, அடையாளம் அனைத்தும் திட்டமிடப்பட்டு உள்நாட்டில் அழிக்கப்பட்டுள்ளது. எனவே நாம் எம் மீது இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி ஒன்றே தீர்வைப் பெற்றுத்தரும் என்பதை அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் ஆணைக்குரிய இவ் உயரிய மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் ஆட்சி மன்றில் தீர்மானமாக எடுக்கின்றோம் என்றார்.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்: சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் மக்கள் போராட்டம்

17.07.2025

செம்மணி மனிதப் புதைகுழி விடயத்திற்கும் அங்கு இடம்பெற்ற படுகொலைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கொழும்பில் இன்று எதிர்ப்பு போராட்டம் ஒன்று கொழும்பு புகையிரத நிலையத்திற்கு முன்பாக நீதிக்கான மக்கள் சக்தி அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த இவ் ஆர்ப்பாட்டத்தில் சிவில் அமைப்பு உறுப்பினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இப் போராட்டத்தில் ஈழத் தமிழர்களுக்கு இளைக்கப்பட்ட அநீதிகளுக்கெதிராகவும் செம்மணி மற்றும், பாலச்சந்திரன், இசைப்பிரியா போன்றவர்களின் படுகொலை தொடர்பிலும் நீதிக்காகக் குரல் கொடுத்து வரும் இளம் சிங்கள சட்டத்தரணி தனுக்க ரணஞ்சக உள்ளிட்ட பல சிங்கள செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டிருந்தமையும் விஷேட அம்சமாகும்.

இதே வேளை, செம்மணி சிந்துபாத்தி மனிதப் புதைகுழியில் 24 நாட்கள் நடைபெற்ற முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளில், மொத்தமாக 65 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் எதிர்வரும் 21 ஆம் திகதி அகழ்வு பணிகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“படுகொலைக்கு எதிராக எழுச்சி கொள்வோம்“ எனும் தொனிப் பொருளில் நீதிக்கான மக்கள் சக்தி அமைப்பினரால் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன், சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல், சிவில் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துக்கொண்டு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

# காணி உரிமைக்கான மக்கள் இயக்கத் தலைவருக்கு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக் காவல்துறையினர் விசாரணைக்கு அழைப்பு!

17.07.2025

சமூக செயற்பாட்டாளரும், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ் மாவட்டத்தலைவரும், காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தலைவருமான இரத்தினசிங்கம் முரளிதரனை இம் மாதம் 20 திகதி அன்று காலை 9:00 மணிக்கு பரந்தனிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு தொலைபேசியூடாக அழைப்பு விடுத்துள்ளது.

மேலும் இதற்கான எழுத்து மூலமான அழைப்பை மருதங்கேணி பொலிசார் வழங்குவார்கள் என அறிவித்துள்ளதாக தெரிவித்தார்.

இவர் சமூக செயற்பாட்டாளராக , காணி உரிமை, மீனவர்கள் உரிமை, உட்பட பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில் தற்போது கொழும்பில் காணி உரிமை தெடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கும் வேளையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

# ரணில் காலத்திலும் வவுனியாவில் சிங்களவருக்கு காணி

17.07.2025

கடந்த ஆண்டில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் வவுனியாவின் வெடிவைத்த கல் கிராமத்தை சிங்கள குடியேற்றவாசிகளிற்கு தாரை வார்த்தமை அம்பலமாகியுள்ளது.

அப்போதைய வெடிவைத்தகல் கிராம அலுவலர் மற்றும் அப்போதைய உதவிப்பிரதேச செயலாளரும் தற்போதைய பிரதேச செயலாளருமாகிய கலாஞ்சலி என்பவராலும் திரிவைச்சகுளம் தமிழர் நிலம் அந்தர்வெவ எனும் சிங்களப் பெயரில் கமக்கார அமைப்பு உருவாக்கப்பட்டு 23 சிங்களக்குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை அம்பலமாகியுள்ளது.

ஐந்தும் ஐந்துக்கும் குறைவான ஏக்கர் அளவில் மொத்தமாக 83 ஏக்கர் வயற்காணிக்கான உரம் வழங்குவதற்காக சிங்கள குடியேற்றவாசிகளது பெயர் பட்டியலில் கையொப்பமிடப்பட்டு சிபார்சு செய்யப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே செம்மணி படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு புகையிரத நிலையத்திற்கு முன்பாக போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.



# செம்மணி படுகொலை: வடக்கு மற்றும் கிழக்கில் இனப்படுகொலை நடந்தது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும்

### அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரான அருட்தந்தை மா.சக்திவெல்

17.07.2025

செம்மணியில் 400 இற்கும் அதிகமானோரை கொன்று புதைத்தோம் என்று கிரிசாந்தி குமாரசாமி படுகொலையின் பிரதான குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ வழங்கிய வாக்குமூலத்தை அன்றைய ஜனாதிபதி சந்திரிக்காவும், இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் மூடிமறைத்தார்கள். தமிழர்கள் என்பதற்காகவே இவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களின் படுகொலைக்க நீதி கோராத இந்த அரசாங்கம் எவ்வாறு தமிழர்களுக்கு நீதி கோரும். வடக்கு மற்றும் கிழக்கில் இனப்படுகொலை நடந்தது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரான அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

நீதிக்கான மக்கள் சக்தி அமைப்பினர் கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக வியாழக்கிழமை (17) 'செம்மணி சமூக படுகொலைக்கு எதிராக எழுச்சிக்கொள்வோம்' என்பதை வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை இராணுவம் 1990ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வடக்கு மாகாணத்தை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்ட வந்தது. இக்காலப்பகுதியில் கிரிசாந்தி குமாரசாமி என்ற பாடசாலை மாணவி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வன்முறைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்படுகிறார். கொலை செய்யப்பட்ட தனது பிள்ளையை டேி அவரது தாயாரும், சகோதரரும், பக்கத்து வீட்டு ஒரு சகோதரரும் செல்கின்றார்கள். அவர்களும் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்த சம்பவம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இச்சம்பவத்தின் பிரதான சாட்சியாளரான சோமரத்ன ராஜபக்ஷ என்னும் இராணுவ சிப்பாய் 'செம்மணி பகுதியில் 400 இற்கும் அதிகமானோரை கொன்று புதைத்தோம்' என்று வாக்கு மூலமளித்துள்ளார். 400 இற்கும் அதிகமானனோர் பலவந்த மான முறையில் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டள்ளார்கள்.

சோமரத்ன ராஜபக்ஷ என்பவர் தெற்கை சேர்ந்த சிங்களவர். இந்த சாட்சியத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க மற்றும் இந்நாள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் மூடிமறைத்தார்கள்.

செம்மணி பகுதியில் கடந்த மாதம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, பின்னர் அகழ்வு பிணிகள் மேற்கொள்ளப்பட்டன. இது வரையில் 60 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுப்பிடிக்கப்படும் மனித எலும்புக்கூடுகளில் பால்குடி குழந்தைகளினதும், சிறுவர்களினதும், எழும்புகூடுகள் காணப்

படுகின்றன. எலும்புகூடுகளுடன் பாடசாலை புத்தகப்பை, கைப்பொம்மை, ஆகியன கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. இவர்களை பயங்கரவாதிகளாக்கியது யார், இவர்களை நாட்டுக்கு எதிரானவர்கள் என்று சித்தரித்தவர்கள் யார், தமிழர்கள் என்பதற்காக கொல்லப்பட்டார்களே தவிர பயங்கரவாதிகள் என்பதற் காக வல்ல, இதற்காகவே நாங்கள் நீதி கோருகிறோம்.

இழைக்கப்பட்ட அநீதிக்கு எந்த அரசாங்கங்களும் நீதியை வழங்காது என்பதை அறிவோம். முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சமாதான புறாவாக சித்தரிக்கப்பட்டார். ஆனால் அவர் யுத்தத்தை முன்னின்று நடத்தி கொலை செய்தார். மஹிந்த ராஜபக்ஷ இனப்படுகொலை செய்தார். ரணில், கோட்டபய, ஆகியோரும் இனபடுகொலையாளிகளே செம்மணி இனப்படுகொலையின் சாட்சியாக உள்ளது. இனப்படுகொலை 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கம் நீதியை பெற்றுக்கொடுக்காது ஏனெனில் இவர்கள் இராணுவத்துக்கு பயந்தவர்கள். அவர்களின் பாதுகாப்பில் வாழ்கிறார்கள்.

மாத்தளை பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களின் மனித புதைகுழி கண்டுப்பிடிக்கப்பட்டது. நாங்கள் இதற்கு நீதி கோரினோம். ஆனால் மக்கள் விடுதலை முன்னணி இதற்கு நீதி கோரவில்லை. தமது உறுப்பினர்களுக்கு நீதி கோராதவர்கள் தமிழ் மக்களுக்கு நீதி கோருவார்களா, வடக்கு மற்றும் கிழக்கில் இனப்படுகொலை நடந்தது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.தமிழர்கள் என்பதற்காகவே இந்த கொலைகள் இடம்பெற்றன. நீதி கிடைக்க வேண்டுமாயின் சுயநிர்ணய உரிமை ஏற்கப்பட வேண்டும். அப்போது தான் நீதி கிடைக்கும் என்றார்.

# யாழ். தையிட்டி விகாரை வளாகத்தினுள் மீண்டுமொரு சட்டவிரோதக் கட்டடம் நிர்மாணிக்கும் பணி

18.07.2025

சட்டவிரோத தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதியில் மேலுமொரு சட்ட விரோதக் கட்டடம் அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், அது தொடர்பில் வலி.வடக்கு பிரதேச சபையினரால் விகாரதிபதியிடம் விளக்கம் கோரபபடவுள்ளதாக தவிசாளர் தெரிவித்துள்ளார்.

வலி. வடக்கு பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் வியாழக கிழமை (17) மாலை இடம்பெற்றது.

அதன் போது சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரை தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

கூட்டம் நிறைவு பெற்ற பின்னர் தவிசாளர் தலைமையில் சில உறுப்பினர்கள் தையிட்டி விகாரைக்கு சென்று இருந்தனர்.

அதன் போது விகாரை வளாகத்தினுள், கட்டட ஒன்று அமைப்பதற்கான அத்திவார கிடங்கு போன்றதொரு கிடங்கு காணப்பட்டுள்ளது.

விகாரை வளாகத்தினுள் புதிய கட்டடம் அமைப்பதற்கு விகாரதிபதியினால் சபையில் அனுமதி கோரப்படாத நிலையில், புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா எனும் சந்தேகம் அங்கு சென்ற உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டு இருந்தது.

பிரதேச சபையின் தவிசாளர் சென்ற சமயம் அங்கே மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் மற்றும் அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோர் அப்பகுதியில் நிற்பதும் அவதானிக்கப்பட்டதாகவும் இந்த சட்ட விரோதக் கட்டிடம் தனியாரின் காணிக்குள் வருவதனால் அந்த நிலத்தின் உரிமையாளர் ஊடாக நீதிமன்றை நாடவுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

இந்நிலையில், புதிய கட்டடங்கள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா? என்பது தொடர்பில் விகாரதிபதியிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன் தெரிவித்தார்.

# யாழ். செம்மணி படுகொலைக்கு விசாரணை கோரி மட்டு மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றம்

18.07.2025

செம்மணி படுகொலைக்கு கண்டனமும் சர்வதேச நீதியான விசாரணை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என கோரி மட்டக்களப்பு மாநகரசபை அமர்வில் தமிழரசு கட்சி உறுப்பினர் துரைசிங்கம் மதன் கொண்டு வந்த பிரேரணையினை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் உட்பட 34 உறுப்பினர்களும் ஏக மனதாக ஆதரவு வழங்கி நிறைவேற்றப்பட்டுள்ளது.

மட்டு மாநகர சபையின் இரண்டாவது சபை அமர்வு மாநகர சபை முதல்வர் சிவம் பாககியநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது தமிழரசு கட்சியின் உறுப்பினர் துரைசிங்கம் மதன் யாழ் செம்மணி புதைகுழி தொடர்பில் இடம்பெற்ற படுகொலைக்கு கண்டனம் தெரிவித்தும் அதற்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என கோரி பிரேரணை ஒன்றை கொண்டுவந்து உரையாற்றினார்.

இதன்போது அவர் சகோதரி கிசாந்தினி படுகொலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செம்மணி படுகொலை தமிழ் மக்களை திட்டமிட்டு படுகொலை செய்யும் ஒரு அங்கமாக பார்க்கின்றேன்.

சோமரத்தின ராஜபக்ஷ என்ற சிங்கள இராணுவத்தைச் சேர்ந்தவர் சர்வதேச மன்னிப்பு சபையின் அழுத்தத்தின் காரணமாக கைது செய்யப்பட்ட அவர் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் செம்மணி படுகொலை தெரியவந்து புதைகுழி தோண்டப்பட்டது ஆனால் இடைப்பட்ட காலத்தில் அது நிறுத்தி வைக்கப்பட்டது.

அந்த நேரத்தில் புதைக்கப்பட்ட சடலங்களின் எச்சங்களை தோண்டி எடுத்து எரிக்கப்பட்டபோது அங்கு புகை மண்டலம் வந்தது என பொதுமக்கள் தெரிவித்ததையடுத்து மீண்டும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அழுத்தம் காரணமாக தோண்டப்பட்டு இதுவரை சிறுவர்கள் உட்பட 65 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது.

இராணுவத்தைச் சேர்ந்த சோமரத்தின ராஜபக்ஷவின் உயர் அதிகாரிகளின் பணிப்புக்கு அமைய 400 க்கு மேற்பட்ட எங்கள் உறவுகளை அழித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்த படுகொலைகளைப் பற்றி ஆராயப் போனால் மட்டக்களப்பிலே சத்துருக்கொண்டான், மிருசுவில் படுகொலை என ஏகப்பட்ட படுகொலைகள் இடம்பெற்றுள்ளது.

விசாரணை சர்வதேச கண்கானிப்புடன் இந்த மிருசுவில் படுகொலையில் சுனில் ரத்நாயனக்கா என்ற இராணுவ வீரர் 8 பேரை கொலை செய்து 9 வது நபரை கொலை செய்ய முற்பட்டபோது அவர் தப்பி ஒடி வெளிக் கொண்டுவந்ததில் அந்த இராணுவ வீரர் கைது செய்யப்பட்டு 5 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கிய அவரை முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பொது மன்னிப்பில் விடுதலை செய்தார்.

எனவே எமது இனத்தை திட்டமிட்டு அழிக்கும் எவரையும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

எனவே இந்த தமிழ் மக்கள் மீதான படுகொலை தொடர்பில் எதிர்கால இளம் சமூதாயம் அறிந்து கொள்ள வேண்டும்

இதனடிப்படையில் தற்போதைய அநுர அரசாங்கம் இந்த செம்மணி படுகொலை தொடர்பான விசாரணையை முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை இந்த விசாரணை சர்வதேச கண்கானிப்புடன் இடம்பெறவேண்டும் என்பதுடன் இந்த படுகொலைக்கு கண்டனம் தெரிவிப்பதாக பிரேரனையை முன்வைத்து உரையாற்றினார்.

இதனை தொடர்ந்து பல உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து உரையாற்றியதுடன் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் 11 பேர் உட்பட 34 உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததையடுத்து இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

**சுதந்திரம்தான் மனித வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுக்கின்றது; முழுமையைக் கொடுக்கின்றது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெல் அழிவுக் கொடுப்பனவுகளை வழங்கமுடியாதெனில் முல்லைத்தீவிலிருந்து வெளியேறுக: கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையை கடுமையாக எச்சரித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

19.07.2025

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெல் அழிவுக்கொடுப்பனவுகளை வழங்காவிட்டால் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபைக்கெதிராக போராட்டம் மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் எச்சரித்துள்ளார்.

அத்தோடு குறித்த கொடுப்பனவுகளை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கத்தவறினால் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபை முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து உடனடியாக வெளியேறவேண்டுமெனவும் மிகக் கடுமையாக எச்சரித்தார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் 18.07.2025 நேற்று இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற நெல் அழிவுகளுக்கான கொடுப்பனவுகள் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையால் இதுவரை வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு எச்சரித்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் மிகக்கடுமையான இந்த எச்சரிப்பையடுத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒருவாரத்திற்குள் நெல் அழிவுகளுக்கான கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் விகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் தொடர்ந்து வன்னிப் பகுதியிலுள்ள அனைத்து அபிவிருத்தி ஒருங்கிணைக்குழுக் கூட்டங்களிலும் கலந்துகொள்கின்றோம். அந்தவகையில் மன்னாரில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையால் நெல் அழிவிற்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில், இந்த புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெல்அழிவிற்கான கொடுப்னவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

இவ்வாறு நெல் அழிவிற்கான கொடுப்பனவுகள் உரிய பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை வழங்கப்படாமைக்கான காரணம் என்ன. கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையினர் இவ்வாறான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களுக்கு வருகைதந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கொடுப்பனவுகள் உடனடியாக வழங்கப்படுமென்கின்ற பொய்களை இங்கே கூறிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் தொடர்ந்தும் இங்கு வந்து இவ்வாறு பொய்களைக் கூறிக்கொண்டிருக்கமுடியாது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒருவாரத்திற்குள் நெல் அழிவிற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும். அவ்வாறு வழங்கத்தவறினால் விவசாயிகளுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும்.

எமது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கமுடியவில்லையெனில் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபை முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வெளியேறவேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குரிய கொடுப்பனவுகள் ஒருவாரத்திற்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென இதன்போது கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபை உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிக்கக்கோரி கையெழுத்துப் போராட்டம்

19.07.2025

பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிக்கக்கோரி நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவரும் அடையாள கையெழுத்து போராட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

சம உரிமை இயக்கம் என்ற அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டம் யாழ் மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக சனிக்கிழமை (19) முன்னெடுக்கப்பட்டது.

இன்னொரு அடக்குமுறை சட்டம் வேண்டாம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய், காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் இப்போதவது நீதி வழங்கு, அனைத்து தேசிய இனத்தவருக்கும் சம உரிமைகளை உறுதிசெய்யும் புதிய அரசியலமைப்புக்காக போராடுவோம் போன்றவற்றை வலியுறுத்தியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



www.sangathamil.ca

# திருமலை சம்பூர் கடற்கரையோரப் பகுதியில் மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு

20.07.2025

திருகோணமலை, சம்பூர் கடற்கரை ஓரமாக நிலக்கீழ் கண்ணி வெடி அகழும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மனித எச்சங்கள் வெளிவந்ததை அடுத்து குறித்த கண்ணிவெடி அகழும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

கடந்த வியாழக்கிழமை (17) மூதூர் - சம்பூர் கடற்கரையோர பகுதியில் நிலக்கீழ் கண்ணிவெடி அகழும் பணி ஆரம்பிக்கப்பட் டிருந்தது. சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரை யோர பகுதியில் கடந்த ஒரு வாரகாலமாக எம்.ஏ.ஜி எனப்படு கின்ற கண்ணிவெடி அகழும் நிறுவனம் தங்களுக்குரிய தள பாடம் மற்றும் பொருட்களுடன் முகாமிட்டிருந்ததோடு வியாழக் கிழமை (17) கண்ணிவெடி அகழும் பணியை ஆரம்பித்திருப் பதாகவும் தெரிய வருகின்றது.

இந்நிலையிலேயே இன்று ஞாயிற்றுக்கிழமை (20) குறித்த பகுதியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து நீதி மன்ற கட்டளையை பெறுவதற்காக குறித்த பணி நிறுத்தப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பூர் படுகொலையின் நினைவாக அமைக்கப்பட்ட தூபியை அண்மித்த பகுதியில் அகழ்வுப் பணி மேற்கொண்ட போதே மனித எமனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத் தக்கதாகும்.

www.sangathamil.ca

# ஆரையம்பதி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த மூன்று வயது சிறுவனின் இழப்புக்கு நீதிகோரும் தாய்

20.07.2025

கடந்த மாதம் 30ம் திகதி ஆரையம்பதி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த மூன்று வயது சிறுவனின் இழப்புக்கு நீதி கோரும் குறித்த சிறுவனின் தாயாரின் ஊடக சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை (20) மாலை மட்டு ஊடக அமையத்தில் நடைபெற்றது.

இதன் போது குறித்த தாயார் தன்னுடைய விபத்தில் உயிரிழந்த மகனுக்கு சரியானதொரு விசாரணை முன்னெடுக்கப்பட்டு இந்த விபத்துக்கான நீதி கிடைக்க வேண்டும் எனவும் தனக்கு இந்த இழப்புக்கான பண இழப்பீடுகள் வேண்டாம் எனவும் சரியான நீதி கிடைக்க வேண்டும் எனவும் இதன் போது வலியுறுத்தினார்.

பொலிசார் இந்த விபத்திற்கு சரியான விசாரணை முன்னெடுக்கவில்லை எனவும் இந்த விபத்தை ஏற்படுத்திய நபரும் குறித்த வாகனமும் இன்று வெளியில் இருப்பதாகவும் பொலிஸார் தங்களது வாக்குமூலத்தையும் பதிவு சரியான முறையில் செய்யவில்லை எனவும் நீதியான விசாரணை முன்னெடுக்கவில்லை எனவும் பக்க சார்பாக செயற்பட்டதாகவும் குறித்த தாயார் தெரிவித்தார்.

விபத்து இடம்பெற்ற சிசிடிவி காணொளிகள் இதன் போது வெளியிடப்பட்டதுடன் பொலிசார் இந்த சிசிரிவி காணொளிகளை கூட பார்வையிட்டு சரியான விசாரணைகளை முன்னெடுக்கவில்லை எனவும் இதன் போது குற்றம் சுமத்தினார்.

குறித்த விபத்தான தாயின் கவனக்குறைவினால் இடம்பெற்றதாகவும் தாங்கள் சரியான முறையில் வாகனத்தை செலுத்தி வந்ததாகவும் கூறி குறித்த விபத்துக்கு காரணம் உயிரிழந்த சிறுவனின் தாயார் தான் என சித்தரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தனது பிள்ளையின் உயிருக்கு பேருந்து உரிமையாளர் 50 ஆயிரம் ரூபாயும் பேருந்து சாரதி ஒரு லட்சம் ரூபாயும் தங்களுக்கு இழப்பீடாக வழங்கியதாகவும் அதை அவர் ஏற்க மறுத்ததாகவும் தனக்கு சரியான நீதி வேண்டும் எனவும் இதன் போது தெரிவித்தார்.

தனது மகன் பேருந்தின் பின்பக்கம் அடிபட்டு விபத்துக்குள்ளானதாகவும் ஆனால் விசாரணையின் போது பேருந்து முன் பக்கம் விபத்துக்குள்ளானதாகவும் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்ததாகவும் இறந்த சிறுவனின் உடல் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு கொண்டு வருவதற்கு முன்னரே சாரதியை பிணையில் விடுவித்ததாகவும் பேரூந்தையும் விடுவித்ததாகவும் குறித்த தாயார் இதன் போது தெரிவித்தார்.

பொலிசார் உயிரிழந்த சிறுவனின் தாயாரின் வாக்குமூலத்தை கூட சரியான முறையில் பெறவில்லை எனவும் நீதியான விசாரணையை முன்னெடுக்கவில்லை எனவும் சிசிரிவி காணொளிகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை எனவும் இதன் போது குற்றச்சாட்டினர்.

உயிரிழந்த சிறுவனுக்கு சிறந்த விசாரணையை முன்னெடுத்து நீதியை நிலைநாட்டி தர வேண்டுமென இதன் போது கண்ணீர் மல்க ஊடகங்களிடம் வேண்டிக்கொண்டார்.

# கல்முனையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு கோரி கையெழுத்துப் போராட்டம்

20.07.2025

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துசெய்யுமாறு கோரி நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவரும் அடையாள கையெழுத்துப் போராட்டம் இன்று கல்முனையில் இடம்பெற்றது.

சம உரிமை இயக்கம் அமைப்பின் ஏற்பாட்டில் கல்முனை மாநகர அம்மன் கோவில் பகுதியில் இன்று காலை கையெழுத்துப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துசெய்தல் காணாமல் ஆக்கப் பட்டோர் விவகாரம் அனைத்து இனத்தவர்களுக்கும் சம உரிமை போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷாங்களை எழுப்பியவாறு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

# வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் புதிய நிர்வாகம்

21.07.2025

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் புதிய நிர்வாகம் ஞாயிற்றுக்கிழமை (20) தெரிவு செய்யப்பட்டது.

இதன்படி வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவராக யோகராசா கனகரஞ்சினியும் செயலாளராக சிவானந்தன் ஜெனிற்றாவும் உப தலைவராக வல்லிபுரம் அமலநாயகியும் உப செயலாளராக செபஸ்டியாம் தேவியும் பொருளாளராக கதிர்காமநாதன் கோகிலவாணியும் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாக தெரிவுக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள், எமது சங்கம் 2017ம் ஆண்டு உருவாக்கப்பட்டு இன்று வரை நேர்த்தியாக வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இயங்கி வருகிறது.

இரண்டு வருட காலமாக தனி நபர்கள் பிரச்சனைகளால் ஒருவர் பிரிந்து சென்று அதனை மழுங்கடிக்கும் நோக்கோடு செயற்படுகிறார். அமைப்பு எப்பொழுதும் அமைப்பாக தான் இருக்கும். வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் என்பது அமைப்பாகவே இருக்கும். அதில் இருக்கும் நபர்கள் மாறிச் செல்லலாம். அதன் அமைப்புக்காக உருவாக்கப்பட்ட சின்னத்தையோ கடிதத் தலைப்பையோ தனி

நபர்கள் உரிமை கோரமுடியாது என்றனர்.

www.sangathamil.ca

# சிறீலங்கா இராணுவக் கண்காணிப்பின் கீழ் யாழ். பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயில்

20.07.2025

பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சூழ கடுமையான இராணுவ கண்காணிப்பின் கீழ் உள்ளதாகவும், நேர மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமையால் , ஆலயத்திற்கு சுதந்திர மாக சென்று வழிபட முடியவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்

அதேவேளை கோவிலுக்கு செல்வதற்கு அனுமதி வழங்கி இன்னமும் உத்தியோகபூர்வ கடிதம் வழங்கப்படாமையால் , எந்நேரமும் ஆலயத்திற்கு செல்வதனை இராணுவத்தினர் தடை விதிக்கலாம் என்ற அச்சம் தமக்கு உள்ளதாகவும் தெரிவித்தனர் .

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு தினம் காலை 06 மணி முதல் மாலை 06 மணி வரையில் தற்காலிக பாதை ஊடாக சென்று வழிபாடுகளை மேற்கொள்ள இரா ணுவத்தினர் கடந்த வியாழக்கிழமை முதல் அனுமதி வழங் கியுள்ளனர்.

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு 35 வருடங் களின் பின்னர், கட்டுப்பாடுகள் இன்றி வழிபட கடந்த 27ஆம் திகதி அனுமதித்த இராணுவத்தினர் மீண்டும் 28ஆம் திகதி பாதுகாப்பு காரணங்கள் என கூறி ஆலயத்திற்கு செல்ல அனுமதி மறுத்திருந்தனர். இந்நிலையிலே வியாழக்கிழமை முதல் ஆலயத்திற்கு செல்ல அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்நிலையைத்தில் ஆலயத்திற்கு மக்கள் சென்று வழிபட அனு மதிக்கப்பட்டுள்ள நிலையில், இராணுவத்தினரால் உத்தியோக பூர்வ கடிதம் இதுவரை வழங்கப்படவில்லை. உத்தியோகபூர்வ கடிதம் கிடைக்காதமையால் எந்நேரமும் பாதுகாப்பு காரணம்

என கூறி ஆலயத்திற்கு செல்ல இராணுவத்தினர் தடை விதிக் கலாம் என்ற அச்சம் அப்பகுதி மக்களிடம் காணப்படுகிறது

அத்துடன் அடுத்து வரும் வாரங்களின் ஆலய திருவிழா காலம் என்பதனால், ஆலய சூழலை துப்பரவு செய்து திருவிழா ஏற்பாடுகளை செய்து வருகின்ற போதிலும், "எப்போது மீண்டும்

இராணுவத்தினர் தடை விதிப்பார்களோ" என்ற அச்சத் துடனையே துப்பரவு பணிகளை முன்னெடுத்து வருகிறோம்.

அத்துடன் ஆலயத்திற்கு நேர கட்டுப்பாட்டுடன் அனுமதிப் பதனால், திருவிழாவை சிறப்பாக செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது எனவே நேர கட்டுப்பாட்டை முற்றாக தளர்த்தி சுதந்திரமாக இராஜ இராஜேஸ்வரி அம்மனை வழிபட இரா ணுவத்தினர் அனுமதிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மீண்டும் அகழ்வுப் பணி ஆரம்பம்...!

21.07.2025

இடைநிறுத்தப்பட்ட யாழ்.செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் இன்று மீள ஆரம்பம்

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அபிவிருத்திப் பணிகளின் போது மனித என்பு எச்சங்கள் அடையாளம் காணப் பட்ட நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்த ரவுக்கமைய கடந்த மே மாதம் 15ஆம் திகதி முதல் முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின.

அந்தப் பகுதியில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மே மாதம் 17ஆம் திகதி அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

பின்னர் யூன் மாதம் 2 ஆம் திகதி திகதி அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பமாகி யூன் மாதம் 7ஆம் திகதியோடு முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வந்தன.

மொத்தமாக 9 நாள்கள் இடம்பெற்ற செம்மணி மனிதப் புதை குழியின் முதலாம் கட்ட அகழ்வுப் பணியில் 19 என்புத் தொகு திகள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளை 45 நாள்கள் மேற்கொள்வது எனவும், 15 நாள் களுக்கு ஒருமுறை சிறிய இடைநிறுத்தல்களுடன் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வது எனவும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட முதல் 15 நாள்களுக்கான அகழ்வுப் பணிகள் கடந்த யூன் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் யூலை மாதம் 10 ஆம் திகதி வரை என 15 நாள்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

முதலாம் கட்ட அகழ்வு மற்றும் இரண்டாம் கட்டத்தின் முதல் 15 நாள்கள் இடம்பெற்ற அகழ்வு என மொத்தமாக 24 நாள்கள் இடம்பெற்ற செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் இருந்து இதுவரை 65 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், பாடசாலை புத்தகப்பை, சிறுமிகளின் ஆடைகள், பாதணிகள், காற்சங்கிலிகள், சிறிய பிளாஸ்டிக் வளையல்கள், பிளாஸ்டிக் பூமாலை உட்பட பல்வேறு சான்றுப் பொருள்களும்

மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் இன்று காலை மீள ஆரம்பிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# செம்மணி புதைகுழி மீட்புகள் தொடர்பில் கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையிலான குழுவினரின் அறிக்கையை இணைத்து ஆய்வு செய்ய வேண்டும்

### இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன்

21.07.2025

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காணாமலாக்கப்படல்கள் தொடர் பில் கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையிலான குழுவினரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ள விபரங் களை தற்போது செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழியில் கண்டறியப்படும் மனித எச்சங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய் வதன் ஊடாக பல்வேறு உண்மைகளை வெளிக்கொணர முடியும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காணாமலாக்கப்படல் சம்ப வங்கள் தொடர்பில் ஆராய்வதற்கென கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில் கே.எச்.கமிலஸ் பெர்னாண்டோ, ஜெமிலா இஸ்மாயில் மற்றும் எம்.சி.எம்.இக்பால் ஆகிய உறுப் பினர்களுடன் கூடியதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி ஆணைக் குழுவிடம் கையளிக்கப்பட்டது.

1990 - 1998 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பகுதி களில் பதிவான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் மற்றும் அப்பகுதிகளின் வீட்டு உரிமையாளர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமை என்பன தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நியமிக்கப்பட்ட இக்குழுவின் அறிக்கையில், 1990 - 1998 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காணாமலாக்கப்பட்டோரின் பெயர், வயது, காணாமலாக்கப்பட்ட ஆண்டு, இறுதியாகச் சென்றிருந்த இடம், நேரடி சாட்சி, முறைப்பாடு அளித்தவர் விபரம் உள்ளிட்ட அவசியமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே இதுபற்றிச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், அவ்வறிக் கையில் உள்ள விபரங்களையும் தற்போது செம்மணி சித்து பாத்தி மனிதப்புதைகுழியில் கண்டறியப்படும் மனித எச்சங்கள் பற்றிய விபரங்களையும் ஒன்றிணைத்து ஆராய்வதன் ஊடாக

இம்மனித எச்சங்களுக்குச் சொந்தமான நபர்கள் தொடர்பான பல்வேறு உண்மைகளை வெளிக்கொணரமுடியும் என நம் பிக்கை வெளியிட்டார்.

www.sangathamil.ca

# யாழ். மாவட்டத்தில் காணி விடுவிப்புகள் குறித்து எழுந்தமானமாக தகவல்களை கூறக்கூடாது

## மனிதவுரிமை செயற்பாட்டாளர் ஜட்சன்

21.07.2025

யாழ். மாவட்டத்தில் காணி விடுவிப்புக்கள் தொடர்பிலும், இன்னமும் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பிலும் மாவட்ட செயலாளர் எழுந்தமானமாக தகவல்களை கூறக் கூடாது என மனிதவுரிமை செயற்பாட்டாளர் ஜட்சன் தெரிவித்துள்ளார்.

வலி. வடக்கில் இராணுவத்தினரின் பிடியில் உள்ள காணிகளின் உரிமையாளர்களின் பிரதிநிதிகள் யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் திங்கட்கிழமை (21) நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் 2800 ஏக்கர் காணியே விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாக மாவட்ட செயலர் கூறுகின்றார். ஆனால் 2808 ஏக்கர் என பிரதேச செயலக தகவல்கள் கூறுகின்றன.

ஆனால் 2013ஆம் ஆண்டு வெளியான வர்த்த மானியில் 6317 ஏக்கர் காணிகள் இராணுவத்தினர் வசமுள்ளதாகவும் , அவற்றை இராணுவ தேவைகளுக்காக சுவீகரிக்க உள்ள தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பின்னரான கால பகுதியில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் கட்டம் கட்டமாக பல பகுதிகளில் உள்ள காணிகள், வீதிகள், ஆலயங்கள் என்பவற்றை மீள மக்களிடம் கையளித்து வந்துள்ளன.

அந்த காணிகள் மக்களிடம் மீள கையளிக்கப்பட்ட இருந்தாலும் 2013ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய அது இராணுவ தேவைக்காக சுவீகரிக்கப்பட வேண்டிய காணியாகவே காணப்படுகிறது.

எனவே 2013ஆம் ஆண்டு வெளியான வர்த்த மானியை உடனடியாக இரத்து செய்ய இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு அந்த வர்த்தமானியை இரத்து செய்தால் மாத்திரமே தற்போது மக்கள் மீள் குடியேறியுள்ள காணிகளில் அவர்கள் நின்மதியாக வாழ முடியும்.

அதேவேளை, மக்களின் காணிகளில் இதுவரை காலமும் இராணுவத்தினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு பெரும் பணம் ஈட்டியுள்ளனர்.

அவர்கள் தனியார் காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்பதுடன், காணிக்கான குத்தகை பணத்தினையும் வழங்க வேண்டும் என்றார்.

அதேவேளை குறித்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட மயிலிட்டி மீள் குடியேற்ற சங்க தலைவர் யோசப் அல்பேர்ட் அலோசியஸ் தெரிவிக்கையில்,

வலி. வடக்கு பிரதேசம் எங்கே இருக்கிறது. அங்கு வாழும் மக்களின் பிரச்சனை என்ன என்பது தொடர்பில் எதுவும் அறியாதவர்களாக ஜனாதிபதி செயலகத்தில் உள்ளவர்கள் இருப்பது எமக்கு மன வருத்தத்தை தந்துள்ளது.

இராணுவத்தின் பிடியில் உள்ள எமது காணிகளை விடுவிக்க

கோரி கடந்த 21ஆம் திகதி காணிகளை இழந்த மக்கள் நாம் ஜனாதிபதி செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டோம்.

அதனை தொடர்ந்து ஜனதிபதி செயலகத்தில் மகஜரை கையளிக்க சென்ற போது, அங்கிருந்தவர்களுக்கு எமது பிரச்சனைகள் தொடர்பில் எதுவும் தெரியாது.

இதுவரை காலமும் எமது காணிகளை விடுவிக்க கோரி நாம் பல்வேறு வழிகளில் பல போராட்டங்களை முன்னெடுத்த போதிலும் அது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தினர் அறியாமல் இருப்பது எமக்கு கவலையளிக்கிறது என்றார்.

# விவசாயக் காணியை வழங்குமாறு கோரி வவுனியா செட்டிக்குளம் கமநல சேவை நிலையத்திற்கு முன் மக்கள் ஆர்ப்பாட்டம்

21.07.2025

வவுனியா செட்டிக்குளம் கமநல சேவை நிலையத்திற்கு முன்பாக திங்கட்கிழமை (21) மெனிக்பாம் மக்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டமானது தமக்கு அருவித்தோட்டம் பகுதியில் வழங்குவதாக கூறிய ஒரு ஏக்கர் விவசாய காணியினை வழங்க வேண்டும் என தெரிவித்தே முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது ஆர்ப்பாட்டகாரர்கள், “அரச அதிகாரிகளே ஏழைகளின் ஒருவேளை உணவை நிம்மதியாக உண்ணவிடு, மெனிக்பாமில் வசிக்கும் மக்களுக்கு வயல் காணி ஒரு ஏக்கர் வீதம் வழங்கு” போன்ற பதாகைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள்,

தாங்கள் 2004 ஆம் ஆண்டு சிதம்பரபுரம் முகாமில் இருந்து மெனிக்பாமிற்கு 1/2 ஏக்கர் மேட்டுக்காணி மற்றும் 01 ஏக்கர் வயல் காணி தருவாதாக தெரிவித்து குடியேற்றம் செய்தனர். ஆனால் தற்போது வரை எங்களிற்கு வயல் காணி தரப்படவில்லை.

மேலும் கூலி வேலையினை மேற்கொண்டே எமது வாழ்வாதாரம் போகின்றது. அத்தோடு கடந்த காலத்தில் கிராம சேவையாளரிடம் சென்றும் வயல் காணி தொடர்பாக நாங்கள் பதிவு செய்திருந்தோம். அதன் மூலமாக ஒரு சிலருக்கு வழங்கப்பட்டது. ஆனால் 20 வருடமாகியும் எங்களிற்கு கிடைக்கவில்லை.

அத்தோடு அருவித்தோட்டம் கமக்கார அமைப்பை சேர்ந்தவர்கள் பல ஏக்கரில் வயல் காணிகளை பெற்று வயல் செய்கின்றனர். ஆனால் எங்களிற்கு எந்த வயற் காரணிகளும் கிடைக்கவில்லை எனவே எங்களிற்கு தருவதாக தெரிவித்த வயற்காணியினை தரவேண்டும் என தெரிவித்தனர்.

இது தொடர்பாக கமக்கார அமைப்பை சேர்ந்தவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் 2004ம் ஆண்டில் இருந்து அருவித்தோட்டம் பகுதியில் பயிர் செய்து வந்திருந்தோம். 2005,2006,2007 காலப்பகுதியில் காணியினுள் இராணுவம் எங்களை நுழைய விடாமல் எங்களை வற்புறுத்தி இராணுவத்தகற்கு வழங்க கோரியிருந்தனர்.

மேலும் குறித்த காணிகள் படித்த வாலிபர் திட்டத்தின் கீழ் 13 ஏக்கர் அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகளாகும். மேலும் இக்காணி உறுத்தினை நீக்கி வேறு ஒருவருக்கு வழங்க முடியாத நிலையும் இருந்தது.

இந்நிலையில் குறித்த காணிக்குரியவர் இல்லாத நிலையில் காணி இல்லாதவர்களிற்கு கூட குறித்த காணிகளை துப்பரவு செய்து பயிர்ச் செய்கை நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு பிரதேச செயலகம் மற்றும் கமநல சேவை நிலையத்தாலும் வழங்கப்பட்டது.

குறிப்பாக 2010ம் ஆண்டு மகிந்த ராஜபக்ச காலத்தில் எந்த வொரு நிலமும் பாவனையின்றி இருக்க முடியாது என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது.

மேலும் காணி இல்லாதவர்களிற்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்பட்ட போது மூவர் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் போது இருவர்

அவற்றினை கைவிட்டு செல்லும் நிலை காணப்பட்டதுடன், கைவிடப்பட்ட பகுதிகள் காடுகளாக காணப்பட்டமையால் காட்டு விலங்குகளின் தாக்கம் பெருமளவு ஏற்பட்டது.

இதன்போது பிரதேச செயலகத்தால் குறித்த பகுதியினை அருகில் உள்ளவர்கள் துப்பரவு செய்து பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டதுடன், உரியவர்கள் வரும் போது நட்ட ஈட்டினை பெற்றுக்கொண்டு வழங்க வேண்டும் என பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் கமக்கார அமைப்பை சேர்ந்தவர்கள் 10 ஏக்கர் பதினைந்து ஏக்கர் என விவசாயம் செய்வதாக கூறினர். இது தவறான கருத்தாகும் ஏனெனில் குறித்த காணிகளிற்கு உரியவர்கள் குத்தகைக்கே வழங்கியுள்ளனர். மேலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிற்கு காணி அடையாளப் படுத்தப்பட்டு காணியினை துப்பரவு செய்து எடுக்கவில்லை என தெரிவித்தார்.

# தற்போதைய ஜனாதிபதியும் இனப்படுகொலையாளியே அவரின் கட்சியும் இனப்படுகொலை கட்சியாக செயல்பட்டதே வரலாறு

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்

21.07.2025

தற்போதைய ஜனாதிபதியும் இனப்படு கொலையாளியே. அவரின் கட்சியும் இனப்படுகொலை கட்சியாக செயல்பட்டதே வரலாறு என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று (21.07.2025) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர் தமிழ் இனப்படுகொலைக்கான தருணம் பார்த்திருந்து அதனை வழிநடத்த அரசியல் வாதிகளை நேரடியாக களத்தில் இறக்கியதோடு பௌத்த துறவிகளையும், குண்டர்களையும், அடிமட்ட சிங்கள மக்களையும் ஏவி தமிழர்களின் அவலக் குரலும் அவர்களின் சாம்பலிலும் மகிழ்ந்த கருப்பு யூலை 83 ஐ தொடர்ந்து 42 ஆண்டுகளாக பல்வேறு வடிவங்களில் இனப்படுகொலை நிகழ்த்திக் கொண்டிருக்கையிலும் "இனப்படுகொலை நிகழவில்லை" என கூறுவதோடு "சமூக புதைகுழிகளை தோண்ட தேவை இல்லை" எனக் கூறுவதும் இனப்படுகொலையில் நீட்சியின் கோரம் மட்டுமல்ல நீதி, நியாயம், உண்மை, பௌத்த தர்மம் என்பவற்றை சமூக புதைகுழிக்குள் தள்ளியதன் வெளிப்பாடு எனவும் கூறலாம்.

ஜெ.ஆர். ஜெயவர்த்தன தலைமையில் 6/5 பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கையால் பாதிக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கம் அரசாங்கத்துக்கு எதிராக 1980 இல் நடத்திய வேலை நிறுத்த போராட்டத்தினை அராஜகமாக அடக்கி ஒடுக்கி அது மீண்டும் எழுச்சி கொள்ளாதிருக்க இன அழிப்பு நாடகத்தினை 1983 யூலையில் நிறைவேற்றியதோடு தமிழ் இளைஞர் கையில் ஆயுதத்தையும் திணித்து சிங்கள தொழிலாளர் வர்க்கத்தையும் கிராமிய சிங்கள இளைஞர்களையும் தமிழர்களுக்கு எதிராகத் திருப்பி நாட்டை அழிவிற்குள் தள்ளினர்.

வடக்கு கிழக்கு தமிழர் தேசத்திற்கு வெளியே தமிழர்களின் பொருளாதாரத்தை அழித்து தீட்டு கொளுத்தியவர்கள் பச்சிளம் பாலகர்கள், வாலிபர்கள் வயது முதிர்ந்தோர் கண்ணில் கண்டோரை தாக்கியும் 3000 க்கும் அதிகமானோரை வெட்டியும், குத்தியும் தீக்குள் தள்ளியும் இனப்படுகொலை செய்து வெறியாட்டம் நடத்தினர். இதற்கு அரசு வளங்களும் படையினரும் பாவிக்கப்பட்டமை அனைவரும் அறிந்ததே.

இதனைத் தொடர்ந்து தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு எங்கும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இதுவே நடந்தது. இனப்படுகொலையின் உச்சம் 2009ல் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த போதும் அதில் திருப்தி கொள்ளாத சிங்களப் பேரினவாதம் தொடர்ந்தும் பல்வேறு வடிவங்களில் இன அழிப்பு இனப்படுகொலை என்பவற்றை தொடர்ந்து கொண்டே இருப்பதை நாம் அவதானிக்கின்றோம். ஒரு தடவை புத்த பெருமான் தம்மிடம் வந்த ஒரு தாயிடம் "மரணம் நிகழாத வீட்டில் இருந்து ஒருபிடி எள் கொண்டு வாருங்கள்" என்றார். அது போன்று சர்வதேச சமூகமும் ஐ.நா மனித உரிமை ஆணையாளரிமும் கேட்கின்றோம் இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் கூறுங்கள் "தமிழர் தாயகத்தில் இனப்படுகொலை நிகழாத கிராமத்திலிருந்தும், அதனால் பாதிக்கப்படாத குடும்பங்களில் இருந்தும், கண்ணீர் சிந்தாத மக்களிடமிருந்தும் ஒரு பிடி நெல் கொண்டு வருமாறு கூறுங்கள்." அவர்களால் அதனை செய்ய முடியாது காரணம் தற்போதைய ஜனாதிபதியும் இனப்படுகொலையாளியே. அவரின் கட்சியும் இனப்படுகொலை கட்சியாக செயல்பட்டதே வரலாறு.

தமிழர்களைப் பொறுத்தவரை நாட்டில் 1983 ஆம் ஆண்டு யூலை மட்டுமல்ல கறுப்பு. இந்த நாட்டின் சுதந்திரம், அரசியல் யாப்பு, பயங்கரவா தடை சட்டம், அரசியல் யாப்பின் 13 ம் திருத்தம் எனபவற்றோடு ஆட்சியில் அமரும் அத்தனை அரசாங்கங்களும் பேரினவாத கடும் கருப்பே. இவர்களிடமிருந்து தமிழர்களுக்கு எந்த நீதியும் கிட்டப் போவதில்லை.

ஆதலால் 1983 கறுப்பு ஜீலையின் 42 ஆம் நினைவாண்டில் சர்வதேச வல்லரசுகளே, ஐ.நா மன்றமே, ஐ.நா மனித உரிமை பேரவையே உங்கள் அரசியல் காக குற்றவாளிகள் கூண்டில் இருக்கும் இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கான நீதியை கையளிக்காது சுதந்திர தேசமாய் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அரசு இனப்படுகொலை புரிந்துள்ளது என்பதை ஏற்றுக் கொண்டு இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துவதோடு தமிழர்களுக்கான அரசியல் நீதிக்கு வழி விடுமாறும் கோரிக்கை விடுக்கின்றோம்.

# தமிழர் இறையாண்மையை மீட்டுத் தந்தால் அமெரிக்க அதிபருக்கான நோபல் பரிசுக்காக 50 இலட்சம் கையெழுத்துக்களை திரட்டுவோம்!

## தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்

21.07.2025

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தமிழர் இறையாண்மையை மீட்டுத் தந்தால், 50 இலட்சம் கையெழுத்துக்களை திரட்டி நோபல் அமைதிப் பரிசுக்கு அவரைப் பரிந்துரை செய்வோம் என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் சங்கத்தினரால் இன்று (21) முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர், அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

1948 முதல் அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட்சியாளர்களால் எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் பாகுபாடு, நில அபகரிப்புகள், காணாமல் ஆக்குதல், கொலைகள் என்ற வரையறைக்குள் மாத்திரமே செயற்பட்டன.

அந்த வகையில் பல உலகத் தலைவர்கள் வந்து போய்விட்டார்கள். ஆனால், இன்று ஒரே ஒரு தலைவருக்கு மட்டுமே செயற்பட தைரியமும் தெளிவும் உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பேசும்போது உலகம் அதை கேட்கிறது. சிலர் மரியாதைக்காகவும், மற்றவர்கள் பயத்திற்காகவும் அதனை கேட்கின்றனர். ஆனால், அவர் காரியங்களைச் செய்து முடிக்கிறார்.

ஜனாதிபதி டிரம்பிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தால் தமிழர்களுக்கு நீதியை மீட்டெடுக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

தமிழ் இறையாண்மையை மீட்டெடுக்க அவர் எங்களுடன் நின்றால், உலகெங்கிலும் உள்ள தமிழ் தாய்மார்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர், நோபல் அமைதிப் பரிசுக்கு அவரைப் பரிந்துரைக்கும் வண்ணம் ஐந்து மில்லியன் கையெழுத்துக்களை சேகரிப்போம் என உறுதியளிக்கிறோம். உலகம் ஒருபோதும் எதிர்பார்க்காத அமைதித் தூதராக டிரம்ப் மாறட்டும் என்றனர்.

# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இதுவரை 72 எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு!

21.07.2025

வடக்கில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட, இலங்கையில் நான்காவது பெரிய மனித புதைகுழி வளாகத்தில் பத்து நாட்கள் இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் அகழ்வுப்பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

10 நாள் இடைவேளைக்குப் பின்னர் அகழ்வாய்வின் முதல் நாளில் மேலும் ஏழு எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக, பாதிக்கப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன், அகழ்வாய்வுத் தளத்தில் வைத்து திங்கட்கிழமை ( 21 ) ஊடகங்களிடம் தெரிவித்தார்.

“அகழ்வில் முதலாவது ‘சைட் வன்’ புதைகுழியில் நான்கு மண்டையோட்டுத் தொகுதிகள் பகுதியளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேவேளை இரண்டாவது புதைகுழியில் 3 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டு மொத்தமாக 7 அடையாளம் காணப்பட்டுள்ளன.”

யாழ்ப்பாண பொலிசாரினால் நடத்தப்பட்ட நீதித்துறை நடவடிக்கைகள் குற்றவியல் விசாரணை பிரிவுக்கு (CID) மாற்றப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி தெரிவித்தார்.

யூலை 10 ஆம் திகதி அகழ்வாய்வுக் குழுவினருக்கு ஓய்வு அளிக்க தற்காலிகமாக பணிகள் நிறுத்தப்பட்டபோது, 15 நாட்களாக தொடர்ந்த இரண்டாம் கட்ட அகழ்வுப் பணியில், செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனித புதைகுழியிலிருந்து 65

மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தன.

இதற்கமைய, குற்றப் பிரதேசமாக அறிவிக்கப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழி வளாகத்தில் இருந்து இதுவரை 72 பேரின் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி உள்ளிட்ட புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

“மனிதப் புதைகுழிகளில் இருந்து எலும்புக்கூடுகளை தோண்டி எடுக்கவும், சாட்சிகளைப் பாதுகாக்கவும், பயனுள்ள விசாரணைகளை நடத்தவும், இறந்தவர்களை அடையாளம் காணவும் போதுமான நிதி ஒத்துழைப்பு, நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்பத்தை வழங்கவும்” அரசாங்கத்திற்கு பரிந்துரைக்குமாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா. குழுவிற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்ட அண்மைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செம்மணி அகழ்வுப் பணிக்காக 11.7 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள விடயத்தை வெளிப்படுத்திய நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார “பணம் ஒரு பிரச்சினை அல்ல” என இந்தியாவின் தி இந்து ஊடகத்திடம் தெரிவித்திருந்தார்.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனித புதைகுழியில் மேலும் பல எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்படலாம் என ஆய்வாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ள நிலையில், ஆகஸ்ட் 6 ஆம் திகதி அகழ்வாய்வுத்தளத்தில் வழக்கு விசாரணையை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**நாம் தர்மத்திற்காக – தன்மானத்திற்காக – சுதந்திரத்திற்காக ஆயுதமேந்தி வருகின்றோம். எமது இலட்சியப் பயணமும், அதற்காக நாம் புரிந்துவரும் உன்னத தியாகங்களும் மக்களுக்குப் புரியும். ஆதனால்தான் அவர்கள் எம்மை அரவணைத்துக்கொள்கின்றார்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# 1983 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறை படுகொலைக்கான புதைக்குழி எங்கே? விசாரணை நடத்த வலிறுத்தல்!

## ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

22.07.2025

1983 ஆம் ஆண்டு இதே மாதம் வெலிக்கடை சிறையில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பிலும் அரசு விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் அவர்கள் புதைக்கப்பட்ட புதைக்குழி எங்கேயுள்ளதெனவும் அரசு கண்டுபிடிக்க வேண்டும் என ஜனநாயகத்தமிழ் தேசிய கூட்டணியின் உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்ற வேலையாட்களின் வரவு செலவுத்திட்ட நிவாரணப்படி திருத்த சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதன திருத்த சட்டமூலம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இந்த மாதம் வெலிக்கடை சிறையில் எம்மவர்கள் படுகொலை செய்யப்பட்ட மாதம். தமிழினத்தின் விடுதலைக்காக, உரிமைக்காக முதலில் ஆயுதம் எடுத்து போராடிய தலைவர் தங்கதுரை, குட்டிமணி போன்றோர் பருத்தித்துறை மணற்காட்டு கடற்கரையில் 1981 சித்திரை மாதம் 5 ஆம் திகதி இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டார்கள். 1983 யூலை மாதம் 25, 27 ஆம் திகதிகளில் தமிழ் அரசியல் கைதிகள், பொதுமக்கள் என 53 பேர் கொடூரமாக சிங்கள காடையர்களினால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்தப்படுகொலைக்கு பொலிஸ். சிறை அதிகரிக்க எல்லோரும் உடந்தையாக இருந்தார்கள். குட்டிமணி உட்பட பலரின் கண்கள் பிடுங்கப்பட்டன. இரண்டு நாட்களாகி இந்த படுகொலைகள் இடம்பெற்ற சூழலில் தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, ஜெகன், நடேசதாசன், தேவன், சிவபாதம், ஸ்ரீ குமார், மரியாம்பிள்ளை, குமார், குமாரகுலசிங்கம் மற்றும் டொக்டர் ராஜசுந்தரம் உட்பட 53 பேர் படுகொலை செய்யப்பட்டனர் .

எனவே 1983 ஆம் ஆண்டு இதே மாதம் வெலிக்கடை சிறையில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பிலும்

அரசு விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் அவர்கள் புதைக்கப்பட்ட புதைக்குழி எங்கேயுள்ளதெனவும் அரசு கண்டுபிடிக்க வேண்டும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக் குதலை அரசு விசாரிப்பதுபோன்று இந்த வெலிக்கடை படுகொலைகளையும் விசாரணை செய்ய வேண்டும் என்றார்.

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி விடுதலை விருட்சத்திற்கான நீர் சேகரிக்கும் பவனி ஆரம்பம்!

22.07.2025

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையில் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் நடப்படவுள்ள விடுதலை விருட்சத்திற்கான நீர் சேகரிக்கும் வாகன பவனி யாழ்ப்பாணம் திருநெல்வேலியல் இருந்து ஆரம்பமாகியுள்ளது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் அரசியல்

கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையிலான அணி திரள் நிகழ்வு எதிர்வரும் 24ஆம் 25 ஆம் திகதிகளில் நல்லூர் கேணல் கிட்டுப் பூங்காவில் நடைபெறவுள்ளது.

அந்த நிகழ்வின் முக்கிய அங்கமாக விடுதலை விருட்சம் நடப்பட உள்ள நிலையில் குறித்த விடுதலை விருட்சத்திற்கான நீர் சேகரிப்பு தாயக பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தன்னார்வலர்கள் மற்றும் பொது அமைப்புகள் உங்கள் பிரதேசங் களில் விடுதலை விருட்சத்திற்கான நீரினை சேகரித்து கேணல் கிட்டு பூங்காவில் இடம்பெறும் விடுதலை நிகழ்வில் கையளிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தங்கள் பிரதேசத்துக்கு வரும் நீர் சேகரிக்கும் வாகனத்திலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை முன்னிறுத்தி ஒரு குவளை நீரை நீங்களும் வழங்க முடியும் என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர் தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். வட்டுக்கோட்டை சிறீலங்கா காவல்துறையினரின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போரட்டம்!

22.07.2025

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை சிறீலங்கா காவல்துறையினரின் செயற் பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிக் கோரியும் மூளாய் பகுதி மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்துக்கு முன்பாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில் வட்டுக்கோட்டை மூளாய் பகுதியில் இடம்பெற்ற மோதலில் இருவர் காயமடைந்ததுடன் அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது. இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்

பட்டுள்ளது.

அத்துடன் மூளாய் பகுதியில் இடம்பெற்ற மோதல் தொடர்பான விசாரணைகளுக்கு இரண்டு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர். அத்துடன், மோதலுடன், தொடர்புடைய பலர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், மதுபானசாலையில் ஏற்பட்ட தகராறு காரணமாக தங்களது பகுதியைச் சேர்ந்த இருவர் காயமடைந்துள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட மூளாய் பகுதி மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இந்த விடயத்தில் பொலிசார் உரிய முறையில் செயற்படவில்லை என்றும் இதனையடுத்து பதற்றமான சூழல் ஏற்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

www.sangathamil.ca

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் இன்று 8 எலும்புக்கூடுகள் இதுவரை 80 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு!

22.07.2025

யாழ். அரியாலை செம்மணி சிந்துப்பாத்தி பகுதியில் அடையாளங்காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழியிலிருந்து செவ்வாய்க் கிழமை (22) 8 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கையின் 2 ஆம் கட்டத்தின் 17ஆவது நாள் அகழ்வு இன்று இடம்பெற்றது.

அந்தவகையில், இன்று மேலும் 8 மனித எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன.

எச்சங்களில், 6 முதல் 7 வரை சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்படுள்ளன .

குழந்தைகள் அருந்தும் பால் போத்தல் என சந்தேகிக்கப்படும் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்றைய கண்டுபிடிப்புகளுடன், இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மொத்த எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது, இவற்றில் 65 எலும்புக்கூடுகள் ஏற்கனவே முழுமையாக தோண்டி எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் சி.ஐ.டியினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஊடகவியலாளர்

22.07.2025

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான தங்கராஜா காண்டீபன் சி.ஐ.டி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்று, (22.07.2025) காலை யாழ்ப்பாணத்தில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் தேசிய கடற்தொழில் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட தலைவரும், காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவருமான இரத்தினசிங்கம் முரளிதரன் பரந்தனில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# காணியை விட்டு வெளியேறுமாறு தையிட்டி விகாரதிபதிக்கு கடிதம்

## வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன்

22.07.2025

ஆக்கிரமிக்கப்பட்ட காணியில் இருந்து உடனடியாக வெளியேறுமாறும், தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தையிட்டி விகாரையின் விகாரதிபதிக்கு வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

தையிட்டியில் உள்ள தனது காணியில் அடாத்தாக சட்ட விரோத கட்டடம் ஒன்றினை அமைத்து வருவதாக எமக்கு ஒருவர் முறைப்பாடு அளித்துள்ளார்.

எனவே முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ள காணியில், தங் களுக்கு சட்ட ரீதியான உரித்து காணப்பட்டால், அவற்றுக்கான ஆவணங் களை பிரதேச சபையில் சமர்ப்பிக்கவும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் உடனடி யாக அக்காணியில் இருந்து வெளி யேற வேண்டும். தவறின் தங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என தையிட்டி விகாராதிபதி ஜிந்தோட்ட நந்தரமா தேரோவிற்கு தவிசாளர் சோ. சுகிர்தன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

Valikamam North Pradeshiya Sabha - Kankesanthurai

சட்ட விரோத கட்டடம் அமைப்பது தொடர்பான முறைப்பாடு

# திருகோணமலை சம்பூரில் மனித எச்சங்கள்: எதிர்வரும் 30ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவு

23.07.2025

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், சம்பூர் பகுதியில் காணப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக எதிர்வரும் 30ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகரிக்கும், தொல்பொருளியல் திணைக்களத்திற்கும் நீதிபதி உத்தர விட்டுள்ளார்.

குறித்த பகுதிக்கு இன்று புதன்கிழமை (23) விஜயம் மேற் கொண்டுகள ஆய்வை மேற்கொண்டிருந்த நீதிபதி குறித்த இடத்தை பார்வையிட்டதுடன், அங்கு வருகை தந்திருந்த திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடியதோடு சட்ட வைத்திய அதிகரிக்கு குறித்த இடத்தில் அகழ்வுப்பணியை முன்னெடுப்பது தொடர்பாக மிதிவெடி அகற்றும் நிறுவனத்துடன் கலந்துரையாடி அறிக்கை சமர்ப்பிக்குமாறும், தொல்லியல் திணைக்களத்திடம் குறித்த இடத்தில் மயானம் இருந்ததா என்பது தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பான அறிக்கை யினை சமர்ப்பிக்குமாறும் குறித்த அறிக்கைகளை இரு தரப் பினரும் எதிர்வரும் 30 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்கு மாறு மூதூர் நீதிமன்ற நீதிபதி எச்.எம். தஸ்னீம் பௌசான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இடத்திற்கு அரச பகுப்பாய்வு திணைக்களம், சட்ட வைத் திய அதிகாரி, தொல்பொருள் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் காணாமல் போனோர் அலுவலகம், குற்றவியல் தடய காட்சிகள் அலு வலகம் (SOCO) ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் இன்றைய தினம் (23) வருகை தந்து சம்பவ இடத்தை பார்வை யிட்டிருந்தனர்.

சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோர பகுதியில் MAG என்ற மிதிவெடி அகற்றும் நிறுவனம் மிதிவெடி அகற்றுவதற்கான அகழ்வுப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த ஞாயிற்றுக்கிழமை (20) குறித்த பகுதியில் இருந்து சிதைந்த மனித மண்டை ஓடு மற்றும் எலும்புப்பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன.

இதன் பின்னர் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மூதூர் நீதி மன்ற பதில் நீதிபதி எம்.எம்.நஸ்லீம் குறித்த இடத்தை பார்வை யிட்டதோடு குறித்த பணியை 23ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறும் குறித்த பகுதியை நீதிமன்றின் முன்னிலையில் அரச பகுப்பாய்வு திணைக்களம், சட்ட வைத் திய அதிகாரி, தொல்பொருள் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் காணாமல் போனோர் அலுவலகம், குற்றவியல் தடய காட்சிகள் அலுவலகம் (SOCO) ஆகிய திணைக்களங்களின் பிரசன்னத் துடன் புதன்கிழமை (23) அகழ்வதற்கும் உத்தரவிட்டுள்

ளதுடன் பொலிசாரை குறித்த பகுதியில் பாதுகாப்புக் கடமைக ளுக்காக ஈடுபடுத்துமாறும் பொலிசாருக்கு நீதிபதி அறிவுறுத் தியிருந்தார்.

அந்தவகையில் குறித்த பகுதிக்கு இன்றைய தினம் குறித்த திணைக்களங்களின் அதிகாரிகள் பிரசன்னமாகியிருந்தனர். அத்துடன் குறித்த பகுதியானது தொடர்ந்தும் பொலிசாரின் பாதுகாப்பின்கீழ் இருந்து வருகின்றது அப்பகுதிக்குள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. எதிர்வரும் 30ஆம் திகதி கிடைக்கப்பெறுகின்ற இரு தரப்பினரதும் அறிக்கைகளை ஆராந்தபின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படும் என தெரிய வருகின்றது.

**எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# கறுப்பு யூலைக்கு பொறுப்புக்கூறலை மடைமாற்றும் ஜே.வி.பி.யின் செயற்பாடே சகோதரத்துவ தினம்

## யாழ். வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

23.07.2025

தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட படுகொலைகள் நடைபெற்றன என்ற உண்மையையும் அநீதிகளுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்ற கடப்பாட்டினையும் மூடி மறைக்கும் செயலாகவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடிப்படையான ஜே.வி.பியின் உத்தியோகபூர்வ இளைஞர் அமைப்பான சோசலிச இளைஞர் சங்கம் சகோதரத்துவ நாளாக கறுப்பு யூலை நிகழ்வுகளை மடைமாற்றம் செய்ய எத்தனிக்கின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ் மக்கள் அடையாளப்படுத்தப்பட்டு தேடியழிக்கப்பட்ட கறுப்பு யூலை நினைவுகளின் 42 ஆவது ஆண்டினை உணர்வுபூர்வமாக எமது இனம் அனுஷ்டிக்கின்றது.

கடந்த 42 ஆண்டுகளுக்கு முன் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உள்ளிட்ட 54 அரசியல் கைதிகள் வெலிக்கடை சிறையில் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழர்களை வாக்காளர் பட்டியலுடன் தேடிச் சென்று மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களை உயிருடன் தீயில் இட்டும் இதர கொடூரங்களுக்குள்ளாகவும் கொன்றழித்தனர். ஒன்றரை இலட்சம் பேர் வீடற்றவர்கள் ஆயினர். 8 ஆயிரம் வீடுகளும் 5 ஆயிரம் வணிக நிறுவனங்களும் கொள்ளையிடப்பட்டன, அழிக்கப்பட்டன.

இக்காலகட்டத்தில் 300 மில்லியன் டெலர்கள் அழிக்கப்பட்டன. இதனை பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் தமிழருக்கு எதிரான திட்டமிட்ட இனப் படுகொலை என விபரித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. இவ் இனப்படுகொலையை அரச இயந்திரமே தகவமைத்து வழிப்படுத்தியது என்பதற்கு சகல ஆதாரங்களும் உள்ளன.

இவ்வாறாக நாட்டில் இனப்படுகொலை நடைபெற்றமைக்கு பொறுப்புக் கூறல் எதையும் முன்வைக்காமல் அத் தேவையினை போர்த்தி மூடிவிடும் உத்தியுடன் இன்றைய அரசாங்கம் நிதானமாகச் செயற்படுகின்றது. இப்படுகொலைகளுக்கு ஜே.வி.பியும் பொறுப்புடையது.

ஆதலால் அரசாங்கத்தின் மாணவர் அமைப்பான ஜே.வி.பி தலைமைச் செயலகத்திற்குள்ளேயே இயங்கும் உத்தியோக பூர்வ இளைஞர் அமைப்பான சோசலிச இளைஞர் அமைப்பு ஊடாக அரச அனுசரணையுடன் இன்றைய நாளை சகோதரத்துவ நாள் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இதற்காக யாழில் அரச வளங்கள் ஈடுபடுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையினையும் அதற்கான பொறுப்புக்கூறலையும் திட்டமிட்டு மறைக்கின்ற இல்லாமலாக்குகின்ற முயற்சியாகும். இதனை நாம் கண்டிக்கின்றோம். ராஜபக்சாக்களை ஒத்ததாக இன்றைய அரசாங்கம் மென்வலு அணுகுமுறையில் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது என்ற வழிப்புணர்வை ஏற்படுத்துகின்றோம் என மேலும் தெரிவித்தார்.

# மயிலிட்டியில் 90 வீதமான நிலப்பரப்பு ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதற்கான காரணம் இராணுவக் காரணங்களுக்காக அல்ல!

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

23.07.2025

மயிலிட்டியில் 90 வீதமான நிலப்பரப்பு இன்னமும் விடுவிக்கப்படாமல் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதற்கான காரணம் இராணுவக் காரணங்களுக்காக அல்ல. அதி உயர் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்டு அந்த அறிவித்தல் காரணமாக அந்தப் பகுதி மக்கள் அங்கு செல்ல முடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயமும், சுற்றுலாப் பயணிகளுக்கு ஹோட்டல் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதன் மூலம் இராணுவத்திற்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் சூழலே அங்கு காணப்படுகிறது எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பகுதியில் விடுவிக்கப்படாத காணி உரிமையாளர்களை வெள்ளிக்கிழமை (18.07.2025) சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் வைத்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மயிலிட்டியில் விடுவிக்கப்பட்டுள்ளதொரு பாடசாலையில் முன்னர் 1500 மாணவர்கள் கல்வி கற்று வந்த நிலையில் தற்போது வெறும் 150 மாணவர்களே கல்வி கற்கிறார்கள். இந்தப் பாடசாலையைச் சுற்றிவர மக்கள் இதுவரை குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் மிகவும் கஷ்ரப்பட்ட பிள்ளைகளை மாத்திரம் தான் அவர்களின் பெற்றோர்கள் இந்தப் பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். மயிலிட்டி மீள்குடியேற்ற அமைப்பின் வேண்டுகோளுக்கமைய நாங்கள் இந்த விடயங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளோம். இது தொடர்பில் நாங்கள் மேலதிகமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

# ஜே.ஆர். ஜெயவர்தன விட்ட தவறை அனுரகுமார திசாநாயக்கவும் விட்டால் பாரிய பாதிப்பு ஏற்படும்!

## பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

23.07.2025

கறுப்பு யூலை இனப்படுகொலை இடம்பெற்று 42 ஆண்டுகள் கழிந்துள்ள போதிலும் இதுவரையிலும் பொறுப்புக்கூறல் இடம் பெறவில்லை என்று இன்று (23) பாராளுமன்றில் தெரிவிக்கப்பட்டது. 42 ஆண்டுகளுக்கு முன்னர், ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் இதேபோன்ற ஒரு நாளில் தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலை மேற்கொள்ளப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்தார்.

42 ஆண்டுகள் கடந்தும் இந்த விடயத்தில் எவ்வித பொறுப்புக்கூறலும், நீதியும், விசாரணையும் இல்லாமல் இருக்கிறது.

இந்த வரலாற்றில் எந்த அரசாங்கம் வந்தாலும், இதுவரையிலும் நீதியான முறையில் அதற்கான மன்னிப்பையோ அல்லது பரிகாரத்தையோ தேட முற்படவில்லை. ஜே.ஆர். ஜெயவர்தன விட்ட தவறை தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க விடுவாரானால், நாடு தான் விரும்பும் திசையில் பயணிக்கும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்திருந்தார்.

அது சுயநிர்ணயத்துடன் கூடிய தமிழர்களுக்கான தீர்வை நோக்கியதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, அவரை தொடர்ந்து கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் தனுர திசாநாயக்க, இந்த நாட்டின் அரசாங்கமொன்று தமது படை பலத்தை பயன்படுத்தி கடுமையான வேதனையுடன், இன்று வரை தீர்க்க முடியாத பிரச்சினையை ஆரம்பித்து வைத்த நாளாக இன்றைய நாள் இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

சர்வதேச ரீதியாக இலங்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நிலைக்கு கொண்டு செல்லப்பட்ட நாளாகவும் இந்த நாள் உள்ளது. அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சியே இதற்கு பொறுப்பு கூற வேண்டும்.

திட்டமிட்ட வகையில் இலங்கையில் இனவாதத்தை அவர்கள் ஏற்படுத்தினார்கள் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் தனுர திசாநாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை, அவரை தொடர்ந்து கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 1983ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தின் உந்துதலுடன் குறிப்பாக கொழும்பு உட்பட வடக்கு கிழக்குக்கு வெளியே தமிழர்கள் திட்டமிடப்பட்டு வேட்டையாடப்பட்டனர் என்று தெரிவித்தார்.

இராணுவத்தினரும் பொலிசாரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். சில சாதாரண சிங்கள மக்கள் தங்களின் நண்பர்களை பாதுகாப்பதற்காக தங்களால் முடிந்த அளவு தமிழ் மக்களை மறைத்து வைத்திருப்பதற்கும் உதவியிருந்தார்கள். தற்போதைய அரசாங்கம் தங்களை சகல சந்தர்ப்பங்களிலும் இனவாதிகள் இல்லை என்று கூறி வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் வடக்கு கிழக்கு மக்கள் கறுப்பு யூலை தினத்தை நினைவு கூரும் இன்றைய தினம் (23), அரசாங்கம் தெற்கில் இருந்து இளைஞர் குழுக்களை வடக்குக்கு அனுப்புகிறது.

அந்த நினைவு கூரலை முழுமையாக மாற்றியமைக்கும் வகையில் சகோதரத்துவம் என்ற பெயரில் அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறது. ஜே.வி.பி அரசாங்கத்துக்கு இனவாதம் இல்லை என்றால், இன்றைய தினம் கறுப்பு யூலையை நினைவு கூர்ந்திருக்க வேண்டும். இன்றைய தினத்தை சகலரும் நினைவு கூரும் தினமாக தற்போதைய அரசாங்கம் செய்திருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இதற்கு மாறாக வரலாற்றை மறைக்கவும் மாற்றியமைக்கவும் தற்போதைய அரசாங்கம் முயல்கிறது.

இதுவரையிலும் உத்தியோகபூர்வ மன்னிப்பு ஏதும் கிடைக்காத நிலையில், வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் கறுப்பு யூலையை நினைவு கூருகின்றனர் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

www.sangathamil.ca

# யாழ். பல்கலைக்கழகத்தில் கறுப்பு யூலை நினைவேந்தல்

23.07.2025

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கறுப்பு யூலை நினைவுதினம் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் இன்றைய தினம் வியாழக்கிழமை (23.07.2025) கறுப்பு யூலை நினைவுருவ படத்திற்கு மாணவர்களால் ஈகைச் சுடரேற்றப்பட்டதோடு மலர் வணக்கத்துடன் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் பல்கலைக்கழக மாணவர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு நினைவு வணக்கம் செலுத்தினர்.

கறுப்பு யூலை என்பது பொதுவாக தமிழ் போராளிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான இலங்கை உள் நாட்டுப் போரின் தொடக்கமாகக் கருதப்படுகிறது.

ஆரம்பத்தில் ஐக்கிய தேசிய கட்சி (UNP) உறுப்பினர்களால் திட்டமிடப்பட்ட போதிலும், அதன் பின்னர் கணிசமான சிங்கள பொதுமக்களின் பங்கேற்புடன் 1983 யூலை 23 இரவு, தலைநகர் கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான கலவரம் தொடங்கி, பின்னர் நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவியது.

அந்தகவகையில், 1983 ம் ஆண்டு யூலை மாதம் சிறீலங்கா அரசு, சிறீலங்கா சிங்கள பாதுகாப்பு படையினர், இனவெறி கொண்ட காடையர்கள் மற்றும் பொதுமக்களால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பான கறுப்பு யூலை சம்பவம் இன்னமும் தமிழ் மக்களின் மனதில் மாறாத வடுவாகவே இருக்கிறது.

# யாழ். நகரில் முனியப்பர் கோயிலடியில் கறுப்பு யூலை 42ஆம் ஆண்டு நினைவேந்தல்

23.07.2025

கடந்த 1983 ஆம் ஆண்டு சிறீலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட கறுப்பு யூலை 83 இனப் படுகொலையின் 42 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 23.07.2025 புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் யாழ்நகரில் முனியப்பர் கோயிலடியில் இடம்பெற்றது.

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி நல்லூர் கேணல் கிட்டுப் பூங்காவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பம்

# செம்மணி சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி: இதுவரை 76 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுப்பு

24.07.2025

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இதுவரை 76 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி புதைகுழி வழக்கின் 19 ஆம் நாள் வியாழக்கிழமை

(24) யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்து கொள்ளப்பட்டது.

தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதவா குழுவினர்,

சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள், தடயவியல் பொலிஸார், குற்றப்புலனாய்வுப் திணைக்களத்தினர், தொல்லியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிவரூபி சஜிதரன் ஆகியோரின் பங்கேற்புடன் அகழ்வு பணிகள் நடைபெற்று வருகிறது.

அகழ்வு பணிகள் தொடர்பாக வியாழக்கிழமை (24) ஊடகங்

களுக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி வி.எஸ்.நிரைஞ்சன் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே ஆழ்ந்தெடுக்கப்பட்ட 67 மனித எலும்பு கூடுகளுடன் புதன்கிழமை (23) பிற்பகலில் இருந்து இன்று வரை 9 மனித எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக 76 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய நாளில் புதிதாக மூன்று மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதுவரை 88 மனித எலும்புக் கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

நாளை 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை 20வது நாளாக அகழ்வு பணிகள் தொடரும்.

சிறு போத்தலொன்றும் இரும்புகள் என்று நம்பப்படுகின்ற பல கட்டிகளும் எடுக்கப்பட்டிருக்கிறது என்றார்.

# இரண்டு பிள்ளைகளும் நான் இறந்தால் அனாதைகளாகிவிடும் அதனால் எனது மகனை விடுதலை செய்யுங்கள்

## திரு. ஆனந்த சுதாகரனின் தாயார்

24.07.2025

இரண்டு பிள்ளைகளும் நான் இறந்தால் அனாதைகளாகிவிடும் அதனால் எனது மகன் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்ய வேண்டும்என அவரின் தாயார் உருக்கமான வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் கேணல் கிட்டு பூங்காவில் இன்று இடம்பெற்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குரலற்றவர்களின் குரல் அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில் சிறைக் கூடங்களை காட்சிப்படுத்தப்பட்டு சிறையிலுள்ளவர்களின் உறவுகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் கடைசியாக யூலை மாதம் 17ம் திகதி அவரை போய் பார்த்துவிட்டு வந்தனான்,அவருக்கு வழக்கு நடந்துகொண்டிருக்கு, வழக்கில் என்ன முடிவு வரும் என்று தெரியாது. அவருக்கு ஒரு நல்ல முடிவு வரும் என சொல்லியிருக்கினம், ஆனால் எனது மகன் இல்லாமல் கஷ்டம், நான்தான் இந்த பிள்ளைகளை படிப்பித்து வளர்த்துக்கொண்டிருக்கின்றன், இனி எனக்கு வயசும் போயிட்டுது.கண்ணும் விளக்கமில்லை, நெடுக வருத்தம்.ஆனமுறையிலை,இவர்களிற்கு எந்தவொரு உதவியும் வேண்டாம், அப்பாவின் ஆதரவுதான் வேண்டும்,

எனக்கு இருப்பது ஒரேயொருமகன்தான், அவரை விட்டால் வேறு பிள்ளைகளும் இல்லை, அதனால் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யவேண்டும் என கோரித்தான் நான் இங்கே வந்திருக்கின்றேன்.

இரண்டு பிள்ளைகளும் நான் இறந்தால் அனாதைகளாகிவிடும் அதனால் எனது மகன் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்ய வேண்டும்.

ஆனந்த சுதாகரன் தற்போது உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார், அவரை கொண்டுபோய் போகம்பரை சிறைச்சாலையில் வைத்திருக்கினம், 15 வருடங்களாக மகசின் சிறைச்சாலையில் இருந்தவர்.

தற்போது போகம்பரை சிறைச்சாலையில் உரிய வசதிகள் இல்லை, கடும் மன அழுத்தத்தில் சிக்குண்டவர் போல காணப்படுகின்றார், பார்ப்பதற்கு மிகவும் கவலையாக உள்ளது.

கடந்த 19 ம் திகதி அவரை பார்த்துவிட்டு வந்தேன் அப்போது தனக்கு உடல்நிலை சரியில்லை என்று அவர் தெரிவித்தார்.அது எனக்கு பெரும்மனகுழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. யாரை

கேட்பது என தெரியவில்லை.

மனித உரிமை குழுவிடம் தெரிவித்தேன் அவர்கள் தற்போது தானே வழக்கு முடிந்தது அடிக்கடி போய்வராதீர்கள் உங்களிற்கு தூரம் என்றார்கள்.

தூரம் என்பதற்காக என்னால் விட்டுவிட்டு இருக்க முடியாது, மனக்குழப்பமாக உள்ளது பிள்ளைகள் இருவரும் அம்மாவும் அப்பாவும் இல்லாத நிலையில் இருக்கின்றார்கள்.

பிள்ளைகள் தாய்பாசமோ தந்தை பாசமோ இல்லாமல் இருக்கின்றார்கள், அன்பாய் அரவணைக்க யாரும் இல்லை.

# மனிதப் புதைகுழிகளுக்கு நீதி வேண்டி மன்னாரில் இருந்து மாந்தை வரை அமைதிப் பேரணி!

24.07.2025

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித புதைகுழிகளுக்கு நீதி கேட்டு, மன்னார் அடம்பன் சந்தியில் இருந்து திருக்கேதீஸ்வரம் மாந்தை வரையிலான அமைதிப் பேரணி ஒன்று நடைபெற்றது.

இப்பேரணி, மாந்தை மேற்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், வியாழக்கிழமை (24) காலை 10.00 மணியளவில் அடம்பன் சந்தியில் இருந்து ஆரம்பமாகி, மாந்தை மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தை நோக்கி முன்னெடுக்கப்பட்டது.

பேரணியில் கலந்து கொண்ட பொதுமக்கள், “எங்கே எங்கள் உறவுகள்?”, “மனிதனும் புதைகுழிக்குள் நீதியும் புதைகுழிக்குள்ளா?”, “வேண்டும் சர்வதேச விசாரணை!”, “இது நாடா இடுகாடா?”, “சர்வதேசமே மௌனத்தை கலை” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாகச் சென்றனர்.

பேரணி மாந்தை திருக்கேதீஸ்வரத்தில் உள்ள மனிதப் புதைகுழி பகுதியில் நிறைவடைந்தபின், அங்கிருந்த வணக்க நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கும், புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்டவர்களுக்கும் மலர் தூவி, சுடர் ஏற்றி

வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வின் முடிவில், மக்கள் சார்பில் தயாரிக்கப்பட்ட மகஜர், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளாரிடம் கையளிக்கப்பட்டது.

# செம்மணிக்கு நீதிக்கோரி கரவெட்டி பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றம்

24.07.2025

செம்மணிக்கு நீதி கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் கோரிக்கைகளை வலுப்படுத்துவதற்காக வடமராட்சி தென்மேற்கு கரவெட்டி பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடமராட்சி தென்மேற்கு கரவெட்டி பிரதேச சபையின் அமர்வின் போது தவிசாளர் தமது யோசனைகளை முன்மொழிந்தார். இதன்படி, செம்மணி உள்ளிட்ட மனித புதைகுழிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் இலங்கை பொறுப்புகூறல் செயல் திட்ட அதிகாரிகள், தொழில்நுட்ப ரீதியான உள்ளீட்டை வழங்கவும் கண்காணிப்பில் ஈடுபடவும் இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டது.

அத்துடன் 46ன் கீழ் 1 தீர்மானத்திற்கு அமைய இனப்படுகொலை, யுத்த குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களை சேகரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அதிகாரிகளுக்கு தடையற்ற வசதிகளை அரசாங்கம் வழங்க வேண்டும்.

புதைகுழி அகழ்வுப் பணி தொடர்பில் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றால் கோரப்படும் அனைத்து நிதிக் கோரிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். இதுவரை வெளிவந்த தகவல்களின் பிரகாரம் அனைத்து புதைகுழிகளிலும் சர்வதேச கண்காணிப்புடனான அகழ்விற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் போன்ற யோசனைகள் தவிசாளரால் முன்வைக்கப்பட்டன.

இதனை சபை உறுப்பினர் கந்தன் பரஞ்சோதி வழிமொழிந்ததுடன் சபை உறுப்பினர்களால் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# அப்பாவை [ஆனந்த சுதாகரன்] விடுதலை செய்யுமாறு எல்லா அரசாங்கங்களையும் கேட்டுள்ளோம்!

24.07.2025

அப்பாவை விடுதலை செய்யுமாறு இலங்கையின் எல்லா அரசாங்கங்களையும் கேட்டுக்கொண்டதாகவும் எனினும் எவரும் விடுதலை செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ள தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் இந்த அரசாங்கமாவது தங்கள் அப்பாவை விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கேணல் கிட்டு பூங்காவில் இன்று இடம்பெற்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.

ஆனந்தசுதாகரனின் மகள் தெரிவித்துள்ளதாவது,

நான் எட்டுமாசம் வயிற்றில் இருக்கும்போதே அப்பாவை கொண்டுபோய்விட்டார்கள்.

நாங்களும் எவ்வளவோ அரசாங்கத்தை போய் கேட்டுக்கொண்டிருந்தோம் அப்பாவை விடச்சொல்லி, யாருமே முன்வரவில்லை.

இந்த அரசாங்கமாவது முன்வந்து எங்கள் அப்பாவை விடுதலை செய்யவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலில் விழுந்தெல்லாம் கேட்டோம் அப்பாவை விடுவார்கள் என்ற நம்பிக்கையில் இருந்தோம் விடவில்லை.

ஆனந்தசுதாகரனின் மகன் தெரிவித்துள்ளதாவது,

எனது அப்பா பிடிபட்டு 14 வருடங்களாகின்றது,நிறைய அரசியல்வாதிகளை சந்தித்து அப்பாவின் விடுதலை தொடர்பாக கதைத்தோம் இதுவரை எந்த முடிவும் இல்லை. இந்த அரசாங்கமாவது எங்கள் அப்பாவை விடுதலை செய்யவேண்டும்.

# கன்னியாவில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்த பௌத்த பிக்கு பிதுர்கடன் தீர்க்க சென்றவர்களுக்கு காலக்கெடு விதித்தார்

24.07.2025

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று சிவன் ஆலயத்தில் ஆடி அமாவாசை பிதுர்க்கடன் தீர்க்கும் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு பௌத்த பிக்கு ஒருவர் காலக்கெடு விதித்த சம்பவம் இன்று (24) இடம்பெற்றுள்ளது.

கன்னியா வெந்நீர் ஊற்று சிவன் ஆலயத்தில் இன்று (24) வியாழக்கிழமை ஆடி அமாவாசை தீர்த்தமும், பிதுர்தர்பண நிகழ்வும் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டு பிதுர்தர்ப்பண வழிபாட்டிலும் தீர்த்த உற்சவத்திலும் ஈடுபட்டு தமது முன்னோர்களுக்கான கடமையை நிறைவேற்றியிருந்தார்கள். குறித்த நிகழ்வானது நிறைவு பெற்ற தறுவாயிலில் அங்கு இருந்த பூசைப் பொருட்கள் மற்றும் அன்னதானப் பொருட்களை ஏற்றுவதற்காக முச்சக்கரவண்டி உள்நுழைந்த போது அங்கு வருகை தந்த பௌத்த பிக்கு ஒருவர் இங்கே வாகனங்கள் உள்நுழைய முடியாது எனவும் நேரம் முடிந்து விட்டது அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறும் அங்கு சத்தம் போட்டு அப்பகுதியில் அமைதியின்மையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் பக்த அடியார்கள் உட்பட பூசகர்கள் தங்களுக்குரிய பூசைப் பொருட்களையும் அன்தான பொருட்களையும் எடுத்துக் கொண்டு அமைதியான முறையில் அங்கிருந்து வெளியேறினார்கள்.

குறித்த நிகழ்வை செய்வதற்காக தொல்லியல் திணைக்களத்திடம் 11.00 மணிவரை அனுமதி பெற்றிருந்த நிலையில் சம்பந்தம் இல்லாத பௌத்த பிக்கு அங்கு குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் இறந்த ஆத்மாக்களுக்கான கடனை தீர்க்கும் புனித

மான நிகழ்வில் நாகரீகமற்ற முறையில் நடந்து கொண்டதாகவும் ஒவ்வொரு வருடமும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்வதாகவும் ஏற்பாட்டாளர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

# திருகோணமலை கடற்கரையில் உள்ள வெளிக்கடை தியாகிகள் அரங்கில் இடம்பெற்ற இன அழிப்பு - கறுப்பு யூலை நினைவேந்தல்

25.07.2025

இன அழிப்பு கறுப்பு யூலை நினைவேந்தல் நிகழ்வு...

தமிழ் மக்களின் வாழ்வியல் வரலாற்றில் மறக்க முடியாத, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர் மற்றும் உடமைகள் அழிக்கப்பட்ட, இன அழிப்புகளில் ஒன்றான கறுப்பு யூலையை நினைவு கூறும் முகமாக பொது நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை கடற்கரையில் உள்ள வெலிக்கடை தியாகிகள் அரங்கில் இடம் பெற்றது. இதனை திருகோணமலை நண்பர்கள் வட்டம் ஏற்பாடு செய்திருந்தனர்.

'1983 களில் தமிழர்களுடை வாழ்வியலை அளித்த யூலை கலவரம், தமிழர்களுடைய வாழ்வியல் பரப்பில் தங்களுடைய வாழ்வை அலங்கோலமாக்கி அலைந்து திரிந்து உடமைகளை உயிரை இழந்து புலம்பெயர் தேசங்களுக்கு கூடுதலான தமிழர்கள் இடம் பெயர்ந்து, அல்லோல கல்லோலப்பட்ட நாள் ஒன்றினை இன்னுமொரு யுகத்துக்கும் சந்ததிக்கும் நினைவுபடுத்தி கடத்திச் செல்கின்ற அந்த நிகழ்வை திருகோணமலையில் செய்கின்றோம்.

இந்த நாள் தமிழர்களுடைய ஒரு கரி நாளாக, தமிழர்களுடைய வாழ்வில் இனப்படுகொலையின் ஆரம்ப நாளாக இதனை பார்க்கின்றோம். தமிழர்களுடைய வாழ்வியல் பரப்பில் பல்வேறு அசம்பாவிதங்கள் ஏற்பட்டுள்ளன. யூலை 23 தொடங்கிய கலவரம் அதற்கு பின்னர் பல்வேறு நாட்கள் இடம் பெற்று தமிழர்களை அவர்களுடைம பண்பாட்டியலையும் வாழ்வியலையும் கூறு போட்ட நிகழ்வாக திருகோணமலை நண்பர்கள் வட்டம் சார்பாக நினைவு கூறுகிறோம்' என நிகழ்வில்

கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்தனர்.

www.sangathamil.ca

# செம்மணிக்கு சர்வதேச விசாரணை வேண்டும்

## யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்

யாழ் கிறிஸ்தவ ஒன்றியம்
JAFFNA CHRISTIAN UNION

25.07.2025

யாழ். செம்மணி சித்துப்பாத்தி மனிதபுதைகுழிக்கு இலங்கை அரசும் சர்வதேசமும் முறையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என யாழ் கிறிஸ்தவ ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது,

இக்கொலைகளை மேற்கொண்ட இலங்கை அரசு, அதற்கு உதவிய சர்வதேச நாடுகள் அனைத்தினதும் பொறுப்பற்ற கொலை முன்னெடுப்புகள், மனுக்குலத்துக்கு எதிரான குற்றங்கள் என இயேசுவின் இறையாட்சியின் விழுமியங்கள் அடிப்படையில் பதிவிடுகிறோம்.

“கொலை செய்யாதே - விப 20:13”, மனித மாண்பை வலியுறுத்தும் சமயக்கட்டளையாக இருப்பினும், “கொலை செய்தல்” இடைவிடாமல் அகிலமெங்கும் தொடரப்பட்டு வருகிறது. இதனை தடுக்கவேண்டிய பொறுப்பு, சர்வதேச சமூகத்தால் முறையாக நடைமுறைப்படுத்த நிலையே யதார்த்தமாகி விட்டது. கொலை வலையமைப்பு தரும்.

அண்மையில் வெளியிடப்பட்ட ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கை, இலங்கை அரசின் கொலைவலையமைப்பை, உறுதிப்படுத்தி வாழ்த்துவது போலவே அமைந்திருந்தது. தொடர்ந்து ஆட்சிக்கு வரும் சிங்கள பௌத்த அரசுகளால், அவர்களுடைய அடக்குமுறைக்குப் பலியான தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை கொடுக்க எந்த முயற்சியையும் மேற்கொள்ள முடியாமலுள்ளது என்பது வரலாற்று உண்மை என்பதை சர்வதேசம் உட்பட அனைவரும் புரிந்துகொள்வது முக்கியம்.

யாழ், செம்மணி மனிதப்புதை குழியில் அடையாளப்படுத்தப்பட்ட என்புத்தொகுதிகள் எமக்கு வெளிப்படுத்தும் உண்மை என்ன? அகழ்வின்போது வெளிப்பட்ட நீல நிறத்திலான புத்தகபையுடன் அடையாளம் காணப்பட்ட சிறு குழந்தையொன்றின் எலும்புக்கூடு, பாதணி மற்றும் குழந்தைகள் விளையாடும் பொம்மையொன்று என்பன எமது மனிதநேயத்தின் இருப்பை கேள்விக்குள்ளாக்குகின்றன அல்லவா? இச்செம்மணி மனித புதைகுழி மற்றும் என்புத்தொகுதிகள், நாம் கொலைகாரரின் நாட்டில் வாழ்கிறோம் என்பதை மட்டுமே வெளிப்படுத்துகின்றன.

இலங்கை அரசும் சர்வதேசமும், முறையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலகட்டத்தில் பொறுப்பிலிருந்தவர்கள் நீதியின் முன் கொண்டுவரப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வேறு எந்தெந்த இடங்களில் மனிதப்புதைகுழிகள் அடையாங்காட்டப்பட்டவையோ அந்த இடங்களில் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு, நீதியை உறுதி செய்வதற்கு அவசியமான பரிசோதனைகள் மற்றும் பாதுகாப்பான ஆவணப்படுத்தல்கள் மேற்கொள்ப்படவேண்டும்.

காணாமலாக்கப்பட்ட உறவுகள் உட்பட, பாதிக்கப்பட்ட மக்களின் கூக்குரல் மதிக்கப்படவேண்டும். நீதி கிடைக்கும் என அவர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை மதித்து, ஐக்கிய நாடுகள் சபையின் செப்ரெம்பர் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் பரிகாரநீதியை உறுதி செய்ய வேண்டும். போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை பொறுப்புடன் கையாளாத இலங்கையின் புதிய அரசு பாதிக்கப்பட்டோரை புரிந்து கொள்ள வேண்டும்.

பலரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட செல்வி. கிருஷாந்தி குமாரசாமி உட்பட, எமது வரலாற்றில் செம்மணியில் நடைபெற்றுள்ள மனித மாண்பற்ற செயல்களுக்காக உரிய விசாரணைகளை மேற்கொண்டு நீதி உறுதி செய்யப்படவேண்டும். இராணுவ வீரர் சோமரத்ன ராஜபக்ஸ வெளியிட்ட சாட்சியத்தின் அடிப்படையில், செம்மணியில் 300 - 400 உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான நீதிக்காக செயற்படுவது இன்றைய காலத்தின் தேவை.

உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கி கதறிக்கொண்டிருக்கிறது (தொடக்க நூல் 4:10)”, என கடவுள், கொலையாளி காயீனுக்கு கூறியது போல, செல்வி. கிருஷ்சாந்தி குமாரசாமி உட்பட பலருடைய கதறலை அங்கீகரித்து, உரிய நீதியை பொறுப்புடன் மேற்கொள்ள யாழ் கிறீஸ்தவ ஒன்றியம் அனைவரையும், குறிப்பாக இதனுடன் நேரடியாக சம்பந்தப்பட்டோரை அழைக்கிறது. - என்றுள்ளது

# யாழ். கேணல் கிட்டுப் பூங்கா வளாகத்தில் நடைபெற்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி... விடுதலை நீர் சேகரிப்பு போராட்டம் - 25.07.2025

www.sangathamil.ca

# அரசியல் கைதிகளை விடுவியுங்கள் மானிப்பாய் பிரதேச சபையில் பிரேரணை நிறைவேற்றம்

25.07.2025

அரசியல் கைதிகளின் விடுதலையை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் கலொக் கணநாதன் உஷாந்தனால் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. அந்த பிரேரணையானது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தனது பிரேரணை தொடர்பாக உறுப்பினர் சபையில் கருத்து தெரிவிக்கையில்,

மிக மோசமான துன்பியல்கள் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கறுப்பு யூலையை நினைவேந்தி வருகின்றோம்.

இவ் வலி மிகு காலத்தில் மிக நீண்ட காலமாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் பிரேரணை ஒன்றை சபையில் சமர்ப்பிக்கிறேன்.

பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு காரணங்களை காட்டி சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் இருள் சூழ் நாட்களை கழித்து வருகின்றனர்.

அவர்கள் எவ்விதமான நிபந்தனையும் இன்றி பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை இப் பிரேரணை மூலம் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு அடிப்படையில் பல்வேறு பாரதூரமான குற்றம் இழைத்து தண்டனை விதிக்கப்பட்டவர்களும் விடுவிக்கப்பட்ட நிலையில் இப் பத்து தமிழ் அரசியல் கைதிகளும் தொடர்ந்து கொடும் சிறைக்குள் வாழ்வை தொலைப்பது மன வேதனைக்குரிய விடயமாகும்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசியல் கைதிகள் விவகாரம் சாதகமாக பரிசீலிக்கப்படும் என குறிப்பிட்ட இப்போதைய ஜனாதிபதி இவ் விடயத்தில் பாராமுகமாக இருப்பது ஏமாற்றத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது.

எனவே தமிழ் அரசியல் கைதிகள் எவ்விதமான நிபந்தனையும் இன்றி பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை இப் பிரேரணை மூலம் வலியுறுத்த விரும்புகிறேன் என்றார்.

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கறுப்பு யூலை நினைவேந்தல்

26.07.2025

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கறுப்பு யூலை நினைவேந்தல் நிகழ்வுகள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் இடம்பெற்றன.

இன்று சனிக்கிழமை காலை  பிரதேச சபை முன்றலில் கறுப்பு யூலை இன அழிப்பில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை கொலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளையும் நினைந்து அக வணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொது ஈகைச் சுடரினை தவிசாளர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து உறுப்பினர்கள் ஈகைச் சுடர் விளக்குகளை ஏற்றி வைத்து அக வணக்கம் செலுத்தி நினைவு கூரப்பட்டது.

இவ் நினைவேந்தல் வணக்க நிகழ்வில் கருத்துரைத்த தவிசாளர் தியாகராஜா நிரோஷ்,

மாறி மாறி ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றன.  எனினும் இலங்கை அரச கொள்கை தமிழ் மக்களுக்கான நீதியை வழங்க முடியாத ஒன்றாகக் காணப்படுவதனாலும் அரச இயந்திரமும் மக்கள் சமூகமும் இனவாதமயப்படுத்தப்பட்டுள்ளமையின் விளைவினாலும் தமிழ் மக்களுக்கான நீதி பொறுப்புக்கூறல் கிட்டவில்லை. நாம் வரலாற்று ரீதியாக ஏமாற்றப்பட்ட நிலையில் சர்வதேச நீதி ஒன்றே எமக்குத் தீர்வாகும் என்பதை முன்வைக்கின்றோம்.

கறுப்பு யூலை கலவரத்தின் போது அரச அனுசரணையில், ஊக்குவிப்பில், பங்கேற்பில், முன்னெடுப்பில் சகல படுகொலைகளும் தமிழ் மக்கள் மீதான பாரதூரமான மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன.

வாக்காளர் இடாப்பில் தமிழர்களைத் தேடி அழிக்கும் முயற்சியை கச்சிதமாக மேற்கொண்டனர். மூவாயிரம் தமிழர்கள் வரையில் குத்தியும் உயிருடன் எரியூட்டியும் படுகொலை செய்யப்பட்டனர்.

ஏராளமான பொருளாதார அழிவுகள் ஏற்படுத்தப்பட்டன. அரசின் சிறைச்சாலைக்கதவுகள் திறந்து விடப்பட்டு அண்ணன் குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை உள்ளிட்ட 54 அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். எவற்றுக்கும் நீதி கிட்டவில்லை என்றார்.

மேலும் அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் உறுப்பினர்களும் தமது கண்டனங்களையும் கருத்தக்களையும் முன்வைத்தனர்.

# சர்வதேச விசாரணை கோரி யாழில் மக்கள் போராட்டம்

26.07.2025

வடக்கு கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் செம்மணி வளைவுப் பகுதியில் இன்றைய நாள் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்புக்கு பன்னாட்டு சுதந்திர நீதிப் பொறிமுறை ஊடாக மட்டும் நீதியை வேண்டி நிற்பதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி திருகோணமலையில் மக்கள் போராட்டம்

26.07.2025

வடக்கு கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி இன்று சனிக்கிழமை (26) திருகோணமலை சிவன் கோவில் முன்பாக பாரிய மக்கள் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சிறீலங்காவின் உள்ளக நீதிப்பொறிமுறையென்பது என்றைக்கும் நியாமான தீர்வினை வழங்கப்போவதில்லை என்பதால் தங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்பிற்கு பன்னாட்டுச் சுதந்திர நீதிப் பொறிமுறை ஊடான நீதியைக் கோரி பாதிக்கப்பட்ட மக்கள், சமூக மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள், சமூதாய மன்றங்களின் உறுப்பினர்கள், பெண்கள் வலையமைப்புக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு "தமிழின் அழிப்பிற்கு சர்வதேச நீதி வேண்டும்" என்ற வாசகம் அடங்கிய பதாதைகளை ஏந்தியும் கோசங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் இறுதியில் பின்வரும் ஒன்பது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார்கள். பின்னர் குறித்த மகஜருக்கு கையெழுத்திட்டனர்.

1.ஈழத்தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்பிற்கு பன்னாட்டு நீதிப்பொறிமுறை ஊடான விசாரணைகள் உடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2.ஈழத்தமிழ் மக்களுக்கு இடம்பெற்ற இனப்படுகொலைக்கான நீதிப்பொறிமுறை நடவடிக்கைகள் காலம் தாழ்த்தப்படரமல் உடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.தமிழர்களுக்கு எதிராக சிறீலங்காவில் இடம்பெற்ற இன அழிப்பு உட்பட பன்னாட்டு குற்றங்களை விசாரிக்கவும் குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்தவும் ஒரு பன்னாட்டு குற்றவியல் நீதித்துறை அமைப்பை உருவாக்கவேண்டும்.

4.வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியை சர்வதேசம் கால இழுத்தடிப்பு செய்யாமல் உடன் சர்வதேச நீதிப் பொறிமுறையை மேற்கொள்ள வழி செய்ய வேண்டும்.

5.சிறீலங்காவில் தமிழ் இன அழிப்பு நடந்ததை சர்வதேசம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

6.செம்மணி, மன்னார் மற்றும் பிற பகுதிகளில் காணப்படும்

பெரும்பாலான மனிதப் புதை குழிகள் தொடர்பாக பன்னாட்டு தணிக்கை நிபுணர்களை விசாரணைக்காக அனுப்ப வேண்டும்.

7.தமிழர் பாரம்பரியப் பண்பாட்டுச் சின்னங்களை அழிக்கும் நடவடிக்கைகளை மற்றும் நில ஆக்கிரமிப்புக்களை உடன் நிறுத்த வேண்டும். (இவை அரச அனுசரணையுடன் நடத்தப்படும் சிங்களமயமாக்கல் திட்டங்களின் ஒரு பகுதியாகும்.)

8.தமிழ் அரசியல் கைதிகள் உடன் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

9. பயங்கர வாத தடை சட்டம் மற்றும் நிகழ் நிலை சட்டம் இரத்து செய்ய சிறீலங்கா அரசிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

# கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டோரே செம்மணி புதைகுழிக்குள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன்

26.07.2025

செம்மணியில் 100க்கும் அதிகமான எலும்புக்கூடுகள் வெளி வந்திருக்கின்றன. இந்த புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் சித்திரவதைகளுக்கும் பாலியல் வல்லுறவுகளுக்கும் உட்படுத்தப்பட்டு கொன்று புதைக்கப்பட்டவர்கள் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் செம்மணியில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துரைக்கையில்,

உணவுத்தடை மற்றும் மருந்து தடை என்பவற்றையும் ஆயுதமாக பயன்படுத்தி அந்த இன அழிப்பு அரங்கேற்றப்பட்டது. அதன் பின்னர் கிட்டத்தட்ட 1980ஆம் ஆண்டுகளின் பிற்பாடு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பல இளைஞர்களும் யுவதிகளும் சிறீலங்கா இராணுவத்தினராலும் அவர்களுடன் இணைந்து இயங்கிய துணை இராணுவ குழுக்களினாலும் கைது செய்யப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கு பிற்பாடு சந்திரிக்க அரசாங்கத்தினால் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணம் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் 96ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் யுவாதிகளும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோர் எல்லோரும் கொன்று புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இப்போது செம்மணியில் 100க்கும் அதிகமான எலும்புக்கூடுகள் வெளி வந்திருக்கின்றன. இந்த புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் சித்திரவதைகளுக்கும் பாலியல் வல்லுறவுகளுக்கும் உட்படுத்தப்பட்டு கொன்று புதைக்கப்பட்டவர்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இந்த இனப்படுகொலைக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுருக்கும் உள்ளகப் பொறிமுறை மூலம் எந்த விதமான நீதியும் கிடைக்காது என்பது தமிழ் மக்களுடைய உறுதியான நிலைப்பாடு. எனவே எமக்கு எதிராக அழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். அது தொடர்பான தீர்மானமானது ஐநாவின் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் இந்த பொறுப்பு கூறல் தொடர்பாக 2012ஆம் ஆண்டில் இருந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தாலும் அந்த தீர்மானங்களானது முற்றும் முழுதாக உலக விசாரணையை வலியுறுத்துகின்ற தீர்மானமாகவே இருந்து வந்திருக்கிறது. அதன் காரணமாக இந்த 15 வருடங்களில் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நீதியும் கிடைக்கப்பெறவில்லை.

யுத்தம் நடைபெறுகின்றபோது இந்த இலங்கை அரசிற்கு முழுமையாக துணை நின்ற ஐநா, யுத்தம் நிறைவடைந்த பின்னர் அந்த இனவழிப்பை மேற்கொண்டவர்களிடமே பொறுப்பு கூறல் விவகாரத்தை ஒப்படைத்துக் கொண்டு வருவது என்பது ஏமாற்றுகரமான விடயம்.

பாதிக்கப்பட்ட தரப்பிலிருந்து சிலர் அந்த உலக விசாரணையை ஏற்றுக்கொண்டு வந்ததால் எமக்கு இன்று வரை நீதி கிடைக்காமல் இருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வை பெறுவதற்கும் இந்த உள்ளக பொறிமுறை மூலம் தீர்வு பெறுவதற்கு ஒத்துக்கொண்டமையால் இன்று வரைக்கும் அவர்களுக்கான நீதியானது கிடைக்காமல் காணப்படுகின்றது.

ஆகவே இந்த உலக பொறிமுறை நாடகங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். இந்த செம்மணி விவகாரத்தில் கூட மீண்டும் ஜனாதிபதியையே அதை விசாரிக்குமாறு கோரி உள்ளக விசாரணைகளுக்கு வாய்ப்பு கொடுக்கின்ற நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றது. அந்தத் தவறு இனிமேல் நடக்கக்கூடாது.

எங்களைப் பொறுத்தவரை பக்கச்சார்பற்ற ஒரு முழுமையான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். அது தொடர்பான ஒரு தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் எடுக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தலைவர், ஆணையாளர் போன்றவர்கள் இந்த பொறுப்பு கூறல் விவகாரமானது 15 ஆண்டுகள் தோல்வி அடைந்திருக்கின்றது என்ற விடயத்தை ஐ.நா செயலாளருக்கு தெரியப்படுத்தி, அவரிடம் இந்த விடயத்தை பாரப்படுத்தி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்தப் போராட்டத்தின் குறிக்கோளாக இருக்க முடியும் என்றார்.

**செல்லுங்கள் – வீழ்த்துங்கள் –வெல்லுங்கள்**
**இதுதான் போரின் உண்மைத் தார்ப்பரியம்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# சர்வதேச நீதி கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் போராட்டம்

26.07.2025

வடக்கு, கிழக்கு தமிழர்கள் கோரும் சர்வதேச நீதி பொறிமுறை யூடான நீதி கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து, மாண்புமிகு மலையக மக்கள் சிவில் சமூகக் கூட்டிணைவு சிறீலங்கா தலைநகர் கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை யின் இலங்கை காரியாலயத்திற்கு முன்பாக இன்று சனிக் கிழமை (26) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தது.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை 101 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம்

26.07.2025

யாழ்ப்பாணம், அரியாலை செம்மணி சிந்துப்பாத்தி பகுதியில் உள்ள இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் இன்றைய நாள் 11 மனித எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப் பட்டுள்ளதுடன் 09 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழி அகழ்வு தொடர்பாக இன்று ஊடகங் களுக்கு கருத்துத் தெரிவித்த போதே சட்டத்தரணி வி.எஸ். நிரைஞ்சன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி பகுதியில் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01" மற்றும் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02" என நீதி மன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் போது, இன்றைய நாள் சனிக்கிழமை (26) அகழ்ந்து எடுக்கப்பட்ட 09 எலும்பு கூட்டு தொகுதியுடன் 90 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இது வரையில் 101 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப் பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, இந்த அகழ்வு நடடிக்கைளில் 46 சாட்சிய ஆதாரப் பொருட்கள் இதுவரை அகழப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# கொடூர இனவழிப்பைத் தொடர்ந்து தமிழர்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை ஆரம்பித்துள்ள சிங்களப் பேரினவாதம்: பன்னாடுகளின் தலையீடே தமிழர்களுக்கான ஒரே தீர்வு

**வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்**

26.07.2025

கடந்தகாலத்தில் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட கொடூர இனவழிப்பினை மேற்கொண்ட சிங்களப் பேரினவாதம், தற்போது தமிழர்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச்செயற்பாட்டைக் கட்டவிழ்த்துவிட்டிருப்பதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே கடந்த காலத்தில் சிங்களப் பேரினவாதத்தின் திட்டமிட்ட தமிழ் இனவழிப்பிற்கும், மனிதப் புதைகுழிகள் விவகாரத்திற்கும், தற்போதைய கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகளுக்கும் பன்னாடுகள் தலையீடு செய்து முறையான தீர்வினைப் பெற்றுத்தரவேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்இனவழிப்பிற்கு பன்னாட்டு நீதிப்பொறிமுறையூடாக மாத்திரமே நீதி பெற்றுத்தரவேண்டுமென வலியுறுத்தி வடக்கு கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் 26.07.2025இன்று முல்லைத்தீவு மாவட்டசெயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு மற்றும் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழ்மக்கள் நீண்டகாலமாக ஏமாற்றப்பட்டுக் கொண்டிருப்பதுடன், அழிக்கப்பட்டுக்கொண்டுமிருக்கின்றனர்.

தற்போது வடகிழக்குத் தமிழர் தாயகப்பரப்பில் எங்குபார்த்தாலும் மனிதப்புதைகுழிகள் இனங்காணப்படுகின்ற நிலமைகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் இந்த மனிதப் புதைகுழி விவகாரங்கள் பன்னாட்டுப் பொறிமுறையில் அகழ்வாய்வுசெய்யப்படுவதுடன், இந்த மனிதப் புதைகுழி விவகாரங்களுக்கு பன்னாட்டு நீதி விசாரணை மேற்கொள்ளப்பட்டு நீதி நிலைநாட்டப்படவேண்டுமென்பதே எமது தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

தற்போது எமது தமிழ் மக்களுடைய நிலங்கள் பறிக்கப்படுகின்றன. அண்மையில் வவுனியா வடக்கில் தமிழர்களின் பழந்தமிழ் கிராமங்களில் ஒன்றான வெடிவைத்தகல்லில் திரிவச்சகுளம் பகுதியில் மகாவலி அதிகாரசபையால் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் மிகத் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டிருப்பதை நேரில் சென்று பார்வையிட்டு, அந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை உரிய்தரப்பினருக்குத் தெரியப்படுத்தி அந்த ஆக்கிரமிப்புச்செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றோம்.

இவ்வாறாகத் தொடர்ச்சியாக எமது தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்களையெல்லாம் அபகரித்து பெரும்பான்மையினக் குடியேற்றங்களை மேற்கொண்டு இனவாத அரசு எமது தமிழ்க்களை அடக்கி ஒடுக்கவேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்படுகின்றது.

இந்நிலையில் தற்போது ஆட்சிப்பொறுப்பேற்றிருக்கின்ற இந்த அரசாங்கம் இதற்கான ஒரு நியாயத்தை வழங்குமென்ற நிலையில் எமது தமிழ்மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

நிச்சயமாக்தமிழ் மக்களுக்கு உள்ளக விசாரணைகள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

தமிழர் தாயகப்பரப்பில் இனங்காணப்படுகின்ற மனிதப்புதைகுழிகள் தொடர்பில் இனவாதத்தை வெளிப்படுத்தும் விதமாக மிக மோசமானவகையில் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த இனவாதிகள் கருத்துக்களை முன்வைத்துவருவதை அவதானிக்கக்கூடியவாறுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணம் செம்மணி சிந்துபாத்தி மனிதப்புதைகுழியில் சிறிய பிஞ்சுக்குழந்தைகளின் எலும்புக்கூட்டத் தொகுதிகள் கூட இனங்காணப்படுகின்றன. இதன் மூலம் கடந்தகால இனவாத அரசுகள் எவ்வாறாக திட்டமிட்டவகையிலான மிகக் கொடூரமான தமிழ் இன அழிப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளன என்பதை நன்கு உணரக்கூடியதாகவிருக்கின்றது.

எனவே இந்த கொடூரமான திட்டமிட்ட இனவழிப்புச் செயற்பாடுகளுக்கு பன்னாட்டு விசாரணையூடாக நீதியைக் கோருகின்றோம். எனவே பன்னாடுகள், பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்கள், திட்டமிட்ட இவ்வாறான தமிழ் இன அழிப்பிற்கு நீதியைப் பெற்றுத்தருமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்தகாலத்தில் எமது தமிழ் மக்கள் மீது இவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட கொடூரமான இனவழிப்புச் செயற்பாடு இன்றுவரை தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. அந்தவகையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மீது தற்போது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச்செயற்பாடு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. எமது தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதுடன், எந்தவித நிலத்தொடர்புமற்றவகையில் விகாரைகள் அமைக்கப்பட்டு மதத் திணிப்புச் செயற்பாடுகள் தீவிரம்பெற்று வருகின்றன. இவ்வாறாக தமிழ் மக்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இதையெல்லாம் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காமல் பன்னாடுகள் தமிழ் மக்களுக்கானதொரு தீர்வினைப் பெற்றுத்தர முன்வரவேண்டும்.

பலஸ்தீனத்தின் தீர்வுதொடர்பில் பேசும் பன்னாடுகள், இலங்கைத் தமிழர்களது தீர்வுதொடர்பில் கவனம்செலுத்தாமைக்கான காரணமென்ன? இலங்கை அரசாங்கத்தைக்கண்டும், இனவாதிகளைக்கண்டும் அஞ்சுகின்றீர்களா எனக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

தயவுசெய்து ஈழத்தமிழர்கள் விடயத்தில் பன்னாடுகள் கரிசனையுடன் செயற்படவேண்டும். ஈழத்தமிழர்களாகியநாம் நியாயமான கோரிக்கைகளைத்தவிர வேறு எதனையும் கேட்கப்போவதில்லை.

வடக்கு கிழக்கென்பது தமிழர்களின் பூர்வீகதாயகமாகும். இந்த வடக்கு கிழக்கை ஈழத்தமிழர்களான நாம் முழுமையாக ஆட்சி செய்வதற்கான பொறிமுறையொன்றினை ஏற்படுத்தி, ஈழத் தமிழர்களிடம் வடக்குக்கிழக்கை ஒப்படையுங்கள் என்றுதான் கேட்கின்றோம்.

அத்தோடு தமிழர் தாயகப்பரப்பில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழிகளுக்கு நியாயம் கிடைக்கவேண்டும். பிஞ்சுக் குழந்தைகள்கூட ஆயுதம் ஏந்தினார்களா எதற்காக அவர்கள் கொடூரமாகப் படுகொலைசெய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர். பாடசாலைப் புத்தகப்பயுடன் சிறார்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதும் தற்போது அம்பலமாகியிருக்கின்றது. இத்தகைய கொடூரர்களிடமிருந்து எம்மை பன்னாடுகள் காப்பாற்றவேண்டும். முறையான பன்னாட்டு நீதிவிசாரணை வேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளத்தக்க நீதி வேண்டும்

**பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்**

26.07.2025

வடக்கு கிழக்கு தமிழர் நாயகப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த இனப்படுகொலை மற்றும் அடிப்படையில்லாத அநீதிகளுக்கு சர்வதேச நீதி பொறிமுறைகள் மூலம் நீதியான தீர்வை சர்வதேச சமூகம் வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுச் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் சனிக்கிழமை (26) கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றில் முன்னெடுத்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவர் இதனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளில் 84க்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன. சம்பூர், மன்னர், திருக்கேதீஸ்வரம், கொக்கு தொடுவாய் போன்ற பல இடங்களில் மனித புதைகுழிகள் சோற்றப்படுவதைத் தொடர்ந்து பல தமிழர்களுடைய உடல்கள் புதைக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அனேகமாக மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுடையதாகவும் இருக்கின்றன.

கொக்கு தொடுவாயில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட 51 மனித எலும்புக் கூடுகள் துப்பாக்கி சூட்டால் பாதிக்கப்பட்டவையாகவும் அடைத்து மறைக்கப்பட்டவையாகவும் மருத்துவ ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொகுதிகளாக சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை பலர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இந்த இனப்படுகொலை குறித்து அரசாங்கம் வெளிப்படையாக ஒப்புதல் அளிக்க மறுப்பதும், தமிழர் சமுதாயத்திற்கு பெரும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட சமுதாயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வதேச நீதி மற்றும் மனித உரிமை அமைப்புகளை தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர் என்றார்.

குறித்த போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஒருங்கிணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

www.sangathamil.ca

# சோமரட்ன ராஜபக்ச அளித்த சாட்சியம் ஊடாக நாங்கள் செம்மணியை அணுக வேண்டும்

## மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந்

27.07.2025

கிருஷாந்திகுமாரசுவாமி கொலையின் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட சோமரட்ண ராஜபக்ச என்கின்ற வீரர் நேரடியாக அளித்த சாட்சியம் ஊடாக நாங்கள் இந்த செம்மணியை அணுக வேண்டும் என மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந் தெரிவித்துள்ளார்.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கிருஷாந்திகுமாரசுவாமி கொலையின் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட சோமரட்ண ராஜபக்ச என்கின்ற வீரர் நேரடியாக அளித்த சாட்சியம் ஊடாக நாங்கள் இந்த செம்மணியை அணுக வேண்டும் என்ற பார்வை எனக்கு இருக்கின்றது.

300 முதல் 600 வரையிலான பேரை கொலை செய்து எங்களிடம் மேலதிகாரிகள் தருவார்கள் - தந்தார்கள்,இங்கு கொண்டு வந்து அவர்களை புதைத்திருக்கின்றோம் என அவர் சாட்சியம் வழங்கியிருந்தார்.

அதன் பின்னர் சர்வதேச அமைப்புகள் சர்வதே மன்னிப்புச்சபை போன்றன மேற்கொண்ட முயற்சிகள் மூலம் 99ம் ஆண்டு வரையிலே அகழ்வு பணியை மேற்கொண்டு சுமார் 19 எலும்புக் கூடுகளை அப்போதே கண்டுபிடித்திருந்தார்கள்.

அதுமட்டுமின்றி இன்று கட்டிடங்களிற்கான அகழ்வு வேலை இடம்பெற்றபோது சில மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, அதற்கான வழக்குத்தொடுக்கப்பட்டு பின் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, நேற்றுவரை 90 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது ஒரு இனஅழிப்பின் சான்றாக, ஒரு இனத்தின் மேல் நிகழ்த்தப்பட்ட பெரும் கொலையாக நாங்கள் பார்க்கவேண்டும் - பல சிங்கள சகோதரர்கள் எங்களுடன் பேசும்போது, தர்க்கம் செய்யும் போது விடுதலைப்புலிகளின் கொலைகளை பற்றியெல்லாம் பேசுகின்றார்கள்.

அதுவல்ல இங்கு பிரச்சினை விடுதலைப்புலிகளை அரசாங்கம் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியுள்ளது, பாதுகாப்பு படையினர் என்ற பெயரிலே மக்களை பாதுகாக்க வந்தவர்கள் கொலை செய்திருந்தால், அது மிகப்பெரிய தண்டனைக்குரிய குற்றம் என்பதை மறந்துவிடக்கூடாது.

இந்த நாட்டிலே இராணுவீரர்கள் வெற்றிவீரர்களாக அனைவராலும் கொண்டாடப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

இதேநாட்டின் பிரஜைகளை கொன்றொழித்தவர்களை எவ்வாறு வெற்றி வீரர்களாக கொண்டாடுவது என்ற கேள்வி ஒரு சமூகத்திற்கு இருக்கின்றது.

எனவே அந்த அடிப்படையில் சோமரட்ண ராஜபக்ச உயிரோடு இருக்கின்றார், உத்தரவிட்ட உயர் அதிகாரிகள் இருக்கின்

றார்கள், அவர்களிற்கு எல்லாம் தலைமை தாங்ககூடிய, முப்படை தளபதியாக இன்றைய ஜனாதிபதியிருக்கின்றார் எனவே இதற்கான விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இந்த பாரிய குற்றங்களை இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும், இதற்காக உள்நாட்டு பொறிமுறை சரியான விதத்தில் வேலைசெய்யவில்லை என தமிழ் மக்களாகிய நாங்கள் உணர்கின்றோம், இங்கிருக்கும் மலையக சகோதரர்கள் அதனை உணர்கின்றார்கள் எனவேதான் சர்வதேச நீதி விசாரணையொன்று அவசியம் என நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

# மனித உரிமை செயற்பாட்டாளர் ச. சிவயோகநாதனுக்கு விசாரணைக்கான அழைப்பாணை

27.07.2025

மட்டக்களப்பு உதவி பொலிஸ்மா அதிபர்காரியாலயத்திலிருந்து மனித உரிமை செயற்பாட்டாளர் ச.சிவயோகநாதனுக்கு விசாரணைக்கான அழைப்பாணைஅனுப்பப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

இன்று 27.07.2025 காலை 10.10 மணிக்கு மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் இருந்து மனித உரிமை செயற்பாட்டாளர் ச.சிவயோகநாதன் அவர்களது வீட்டிற்குச் சென்ற மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் உத்தியோகத்தரால் சிங்களத்தில் ஒரு கடிதம் வழங்கப்பட்டது. கடிதம் சிங்களத்தில் உள்ளதால் அது தனது மொழி உரிமையை மீறும் செயல் என கூறி கடிதம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இந் நிலையல் மீண்டும் மதியம் 12 .00 மணிக்கு சென்றத மேற்படி பொலிஸ் அதிகாரி தமிழ் மொழியில் எழுதப்பட்ட கடிதத்தினை வழங்கிச் சென்றுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸிற்கு எதிராக செய்துள்ள முறைப்பாடு தொடர்பில் விசாரணை ஒன்று செய்யப்பட உள்ளதால் நாளை மாலை 4.00 மணிக்கு மட்டக்களப்பு உதவி பொலிஸ்மா அதிபர் காரியாலயம் வருமாறு



பணிக்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது கடந்த 19.04.2025 அன்று நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்வதற்கு எதிராக மட்டக்களப்பு காத்தான்குடி, கொக்குவில் சந்திவெளி ஆகிய 4 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் ச.சிவயோகநாதன் உட்பட மூன்று பேருக்கு எதிராக நீதிமன்ற தடை யுத்தரவு ஒன்றினை பெற்றிருந்தனர்.

இச் செயற்பாடானது தனக்கு இருக்கும் அடிப்படை மனித உரிமையை மீறும் செயல் என தெரிவித்து மேற்படி நான்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக் கும் எதிராக கடந்த 21.04.2025 அன்று மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றினைப் பதிவு செய்திருந்தார்.

இவை தொடர்பில் சென்ற 13.06.2025 அன்று உதவிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் அழைக்கப்பட்டு உதவிப் பொலிஸ்மா அதிபர் அவர்களால் ஒரு விசாரணையும் நடாத்தப்பட்ட நிலையில் மீண்டும் நாளை மாலை விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் .

# யாழில் முறையற்ற கழிவகற்றல்; உயிரியல் பல்வகைமைக்கு ஆபத்து

## யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் கணபதி கஜபதி

26.07.2025

யாழில் முறையற்ற கழிவு முகாமைத்துவம் சூழல் தொகுதியின் உயிர் பல்வகைமைக்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் கணபதி கஜபதி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர் பறவைகளான வலசைப் பறவைகள் அரிதாக காணப்படுகின்ற சரசாலை குருவிக்காடு , நாகர்கோவில் பகுதி மற்றும் அரியாலைப் பகுதி முறையற்ற கழிவகற்றல் மற்றும் முறையற்ற கழிவு முகாமைத்துவத்தினால் ஆபத்தை எதிர் கொள்ளும் பகுதிகளாக காணப்படுகின்றன.

நகரமயமாதல், பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கை தர அதிகரிப்பு மற்றும் குடித் தொகை அதிகரிப்பு கழிவகற்றல் செயற்பாட்டிற்கு சவாலாக இருக்கின்ற நிலையில் அதற்கேற்ற முறையான கழிவகற்றறல் பொறிமுறை இன்னும் உருவாக்கப் படவில்லை.

மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வீதிகளில் கழிவுகள் வீசப்படுகின்றன எரியூட்டப்படுகின்றன இவை அனைத்தும் சட்டத்துக்கு முரணான செயற்பாடாகும்.

முறையற்ற கழிவகற்றலினால் சமூகத்தில் வாழுகின்ற உயிரினங்கள் பாரிய சவால்களை எதிர் நோக்குகின்றன.

சரசாலை, நாகர்கோயில் மற்றும் அரியாலை பகுதிகள் அடையாளப் படுத்தப்பட்ட பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளாக காணப்படுகின்ற நிலையிலும் அங்கு உக்க முடியாத கழிவுகள் தொடர்ந்து கொட்டப்படுகின்றது.

கடற்கரை ஓரமாக மற்றும் அடர்ந்த பற்றைகள் உள்ள பிரதேசங்களில் இவ்வாறு கழிவுகள கொட்டப்படும் போது அவற்றை விலங்குகள் மற்றும் பறவை இனங்களின் உணவுக்காக தேடிச் செல்கின்றன.

அவற்றை உண்ணும் போதும் விலங்குகள் மற்றும் பறவை இனங்களின் உணவுத் தொகுதிக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய கழிவுகள் கொட்டப்படுவதை அவதானிக்க முடிகிறது.

அண்மையில் நெடுந்தீவு பிரதேசத்தில் குதிரைகள் இறந்து கிடந்த போது அவற்றை ஆய்வு செய்தபோது அவற்றின் வயிற்றுக்குள் பொலுத்தீன் பைகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

சூழலைப் பற்றிய அறிவு இல்லாமல் கழிவகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் போது மனிதனுக்கு மட்டுமல்ல சூழலில் வாழுகின்ற உயிரினங்களுக்கும் அது ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கும்.

ஒரு சூழல் வாழ்கின்ற மனிதன் மற்றும் உயிரிகளின் இயல்பான வாழ்க்கைக்கு முறையான கழிவகற்றல் பொறிமுறை செயல்படுத்தப்பட வேண்டும். அல்லாவிட்டால் சூழலில் வாழ்கின்ற ஒரு அங்கி அல்லது ஒரு அங்கம் பாதிக்கப்படுமானால் அது ஒட்டுமொத்த சூழலையும் பாதிக்கும் .

ஆகவே யாழ் மாவட்டத்தில் முறையான கழிவு முகமைத்துவம் பின்பற்றப்படாத நிலையில் கழிவகற்றல் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம் பெறுவது எதிர்காலத்தில் பாரிய அனர்த்தத்துக்கு வழிவகுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு 42ஆம் ஆண்டு நினைவேந்தல்

27.07.2025

1983 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முக்கியஸ்தர்களின் 42 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா அரங்கில் நேற்றைய நாள் (26.07.2025)சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதை தொடர்ந்து, நடராசா தங்கவேல் (தங்கத்துரை), செல்வராசா யோகச்சந்திரன்(குட்டிமணி), கணேசானந்தன் ஜெகநாதன் (ஜெகன்) செல்லத்துரை சிவசுப்பிரமணியம் (தேவன்) ஆகியோரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றி நினைவு வணக்கம் செலுத்தப்பட்டது.

# செம்மணியில் மேலும் 05 எலும்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன

27.07.2025

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் அமைந்துள்ள மனிதப் புதைகுழிகளில், இன்று ஞாயிற்றுக்கிழமை (05) புதிய எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இன்று புதிதாக எலும்புக்கூட்டு தொகுதிகள் எதுவும் அடையாளம் காணப்படாத நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 5 தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. கடந்த 7 நாட்களில் மட்டும் 30 தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வுகள், நீதிமன்றத்தால் "தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இல - 01" மற்றும் "இல - 02" என அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக 45 நாட்கள் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், இன்றைய தினம் 22வது நாளாக பணி முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 7 நாட்களில் 36 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதுவரை 101 தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன, அதில் 95 தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இன்று அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புகளுடன் இருந்த ஒரு பொலித்தீன் பை, மேலதிக ஆய்விற்காக சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டி காந்தி பூங்காவில் ஆர்ப்பாட்டம்

26.07.2025

மட்டக்களப்பில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புக்கு சர்வதேச நீதி பொறிமுறையூடாக தீர்வு தேவை எனக் கோரி சனிக்கிழமை (26) காந்தி பூங்காவில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில், "தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்பிற்கு சர்வதேச நீதி" என்ற தொனிப்பொருளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களில் ஒரே நேரத்தில் மக்கள் கவனயீர்ப்பு போராட்டங்களில் ஈடுபட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஞா.சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி சிறிநாத், மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம் பாக்கியநாதன் உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிகள், இனப்படுகொலைக்கு சாட்சியாகக் கூறப்பட்டதோடு, சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கையொழுத்து பதிவு செய்து அமைதியாகக் கலைந்தனர்.னாங

# கூட்டாக இனத்தை அழிக்கின்ற மனோநிலை சிறீலங்கா அரசிற்கு தொடர்ந்தும் இருந்திருக்கின்றது!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

27.07.2025

கூட்டாக இனத்தை அழிக்கின்ற மனோநிலை சிறீலங்கா அரசிற்கு தொடர்ந்தும் இருந்திருக்கின்றது என்பதையே செம்மணி மனித புதைகுழியும் ஏனைய மனித புதைகுழிகளும் வெளிப்படுத்தியுள்ளன என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இதுவரையில் 89 உடல்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன, மேலதிகமாகவும் பல உடல்கள் உறுதிப்படுத்தப்படக்கூடிய நிலையில் காணப்படுகின்றன.

இந்த மனிதப்புதைகுழி என்பது கிட்டத்தட்ட 96ம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து மூடிமறைக்கப்பட்ட ஒரு விடயம்.

அப்போது செம்மணியில் 15 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அன்றைய சந்திரிகாகுமாரதுங்க அரசாங்கம் அன்றைய வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை பயன்படுத்தி இது கிருஷாந்தி குமாரசுவாமி கொலைவழக்கில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட சோமரட்ண ராஜபக்ச எரிச்சலால், அரசாங்கத்தின் மீதான கோபத்தில் சொன்ன பொய் என்ற கோணத்தில் உலகையே நம்பவைத்ததுதான் அன்றைய காலத்திலிருந்து இன்றுவரைக்கும் காணப்படுகின்றது.

போர்நடைபெற்ற கடைசிக்காலப்பகுதியிலே இடம்பெற்ற இன அழிப்பை கூட மூடிமறைத்து ஒரு உள்ளக விசாரணை என்ற பெயரிலே, அதனையும் படிப்படியாக குறைத்து அதனையும் உண்மையும், நல்லிணக்க ஆணைக்குழுவுடன், எந்தவித குற்றவியல் விசாரணைகளையும் நடத்தாமல் மூடிமறைப்பதைதான் மாறிவந்த ஒவ்வொரு அரசாங்கமும் செய்துகொண்டிருந்தது.

முற்றுமுழுதாக மறைப்பதற்கான ஒரு முயற்சியை சர்வதேச சமூகமும் சேர்ந்து செய்து வந்த செயலில்தான் இந்த செம்மணி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எங்களை பொறுத்தவரை செம்மணி கண்டுபிடிப்பு இரண்டு விடயங்களிற்கு முக்கியமானது.

ஒன்று இன அழிப்பிற்கு இது ஒரு முக்கியமான ஆதாரம், கூட்டாக இனத்தை அழிக்கின்ற மனோநிலை ஸ்ரீலங்கா அரசிற்கு தொடர்ந்தும் இருந்திருக்கின்றது .

அது ஒரு குறிப்பிட்ட சம்பவம் மாத்திரமல்ல, அது தொடர்ச்சியாக காலம்காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

செம்மணியொன்று, முல்லைத்தீவிலே கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழி, மன்னார் இவை எல்லாம் எதனை வெளிப்படுத்துகின்றது என்றால், கூட்டாக அழிக்கின்ற சிறீலங்கா அரசின் மனோநிலையையே இவை வெளிப்படுத்தியுள்ளன.

சர்வதேசசமூகம் விசாரணைகளை இறுதிப்போரின் இறுதிக் காலகட்டத்துடன் மட்டுப்படுத்த முயல்கின்ற நிலையில் செம்மணி மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட அவ்வாறு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரணைகளை மட்டுப்படுத்துவது பொருத்தமற்றது, நீதியானது இல்லை என்பதை சொல்லிநிற்கின்றது. நிரூபித்திருக்கின்றது.

அனைத்து கோணங்களிலும் நாங்கள் பார்க்கின்ற போது தமிழர்களின் இனப்படுகொலைக்கான ஆதாரங்களை தேடுகின்ற இந்த போராட்டத்தினை நாங்கள் அவதானிக்கின்ற போது செம்மணி ஒரு திருப்புமுனை என்றுதான் சொல்ல வேண்டும்.

உண்மையிலேயே நாங்கள் கிருபாகரனிற்கும் நன்றி சொல்ல வேண்டும்.

அவர் இந்த விடயத்தை எங்களிற்கு சொன்னது மாத்திரமல்ல, அவர் அரியாலை பகுதியை சார்ந்தவர் என்ற அடிப்படையிலே அந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை தனிப்பட்ட முறையில் அறிந்தவர் என்ற அடிப்படையில் இது செம்மணியின் ஒரு அங்கம் என்பதை எங்களிடம் ஆணித்தரமாக சொன்ன இடத்தில்தான் அவர் அந்தவிடயத்தை எடுத்து பொலிஸிற்கு முறைப்பாடு செய்து - தனக்கு எத்தனையோ அச்சுறுத்தல் வரக்கூடிய நிலையில்தான் அவர் இதனை செய்தவர்.

அதன் இன்னுமொரு பரிமாணமாக நாங்கள் இந்த செம்மணியின் முழுமையான விசாரணையை சர்வதேச மட்டத்தில் எடுத்துச்செல்வதற்கும், அதனை உறுதி செய்வதற்கும் நாங்கள் எங்கள் முயற்சிகளை தீவிரப்படுத்துவோம் .

# நெல்லியடியில் கறுப்பு யூலை நினைவேந்தல் நிகழ்வு

27.07.2025

1983 ஆம் ஆண்டு கறுப்பு யூலை இனப்படுகொலையி நினைவாக, நெல்லியடி பேருந்து நிலையத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 7 மணியளவில் உணர்வுபூர்வமான நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில், மாநகர மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் பங்கேற்று, கறுப்பு யூலையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நினைவுகூர்ந்து நினைவு வணக்கம் செலுத்தினர்...

# யாழில் கறுப்பு யூலை நினைவுக் கருத்தரங்கு "நேற்று - இன்று - நாளை...?

27.07.2025

கறுப்பு யூலை நினைவுக் கருத்தரங்கு "நேற்று - இன்று - நாளை" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்றது.

1983ஆம் ஆண்டு யூலை மாதம் 23ஆம் திகதி முதல் ஒரு வார காலம் இலங்கையில் இடம்பெற்ற படுகொலைத் தாக்குதல்களில் பலியான உறவுகளின் நினைவாக இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த கருத்தரங்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெற்றது.

இதில், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பம், சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.கஜேந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சட்டத்தரணி ப.குகனேஸ்வரன், சமூக அரசியல் செயற்பாட்டாளர் சி.சிவமோகன் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# கறுப்பு யூலை, செம்மணி மனிதப் புதைகுழி, வடக்கு – கிழக்கு இனப்படுகொலைகளுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

28.07.2025

கறுப்பு ஜூலை பேரவலத்தை நினைவுகூர்ந்தும், செம்மணி மனிதப் புதைகுழி மற்றும் வடக்கு, கிழக்கில் நிகழ்த்தப்பட்ட மனிதப் படுகொலைகளுக்கு நீதி கோரியும், இனி இதுபோன்ற கொடூரங்கள் மீள நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியத் தினரால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெற்ற இந்த ஆர்ப் பாட்டத்தில் ஒன்றியத்தின் அருட்தந்தையர்கள், மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது “கறுப்பு யூலை சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் கொடூரம்”, “செம்மணி புதைகுழிக்கு சர்வதேச விசாரணை வேண்டும்”, “தமிழர் தாயகத்தில் இலங்கை அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்ட மனித புதைகுழிகளுக்கு சர்வதேச நீதி வேண்டும்”, “வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும்” என்கிற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோஷம் எழுப்பினர்.

சர்வதேச நீதிப் பொறிமுறையின் கீழ் வடகிழக்கில் நடந்த இனப் படுகொலைகள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

# சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி அம்பாறையில் கவனயீர்ப்பு

28.07.2025

வடக்கு கிழக்கு சமூக இயக்கம் , மனித உரிமை செயற்பாட் டாளர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம் செயற்பாட்டாளர்கள் இணைந்து வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் நேற்றைய தினம் (26.07.2025) முன் னெடுத்த இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட் டிருக்கின்ற அநீதிகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்திய போராட்டங்கள் இடம்பெற்றது.

அந்த வகையில் நேற்று முந்தைய (26.07.2025) நாள் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தை முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் இணைந்து கவன ஈர்ப்பு ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழர் தேசிச நில அபகரிப்புகள், தமிழர் தேச வளச் சுரண்டல்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அத்துமீறல்கள், போன்ற பல விடயங்களுக்கு சர்வதேச நீதியை வலியுறுத்து கின்ற போராட்டத்தில் அதன் ஏற்பாட்டாளர்கள் சார்பில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பிரதீபன், காந்தன், யசோதரன் உள்ளிட்டவர்களும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அம்பாறை மாவட்ட சங்கத் தலைவி தம்பிராஜா செல்வராணி மற்றும் நிர்வாகத்தினர், அம்பாறை மாவட்ட இலங்கை தமிழ அரசுக் கட்சியின் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க. கோடீஸ்வரன் ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் தர்மதாச உதவி தவிசாளர் ரகுபதி மற்றும் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் சு. பாஸ்கரன் ஆகியோரும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தமிழ்,முஸ்லீம் பல்கலைக்கழக மாண வர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்ததோடு பெருமளவிலான இளைஞர்களும் பொதுமக்களும் இதற்கு ஆதரவு தெரிவித்து தங்களுடைய கையெழுத்துக்களையும் வழங்கி இருந்தார்கள்.

# செம்மணியில் இன்று மேலும் மூன்று எலும்புக் கூடுகள் மீட்பு

28.07.2025

யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழியில் இன்று (28) மேலும் மூன்று எலும்புக்கூடுகள் வெளிப்பட் டுள்ளன.

இதனையடுத்து, இதுவரை சித்துப்பாத்தியில் இருந்து மொத்தமாக 104 என்புக்கூட்டுத்தொகுதிகள் வெளிப்பட்டுள்ளன.

அவற்றில், 97 என்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. சித்துப்பாத்தி புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் 23 நாள் அகழ்வுப்பணிகள் இன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் நாளையும் (29) அகழ்வுப்பணிகள் தொடரவுள்ளன.

# செம்மணியில் இன்றும் 07 மனித எலும்புக்கூடுத் தொகுதிகள் கண்டுபிடிப்பு: தொத்தம் 111 எலும்புக்கூட்டுத் தொகுதிகள்!

29.07.2025

செம்மணி - சித்துப்பாத்தி பகுதியில் அடையாளம் காணப்பட்ட இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் இன்றைய நாள் (29) புதிதாக 7 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

அத்துடன், ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகளில் 3 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி பகுதியில் “தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01” மற்றும் “தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02” என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனிதப் புதைகுழி களில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக 45 நாட்கள் நீதி மன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தின் முதலாம் அமர்வில் 15 நாட்கள் அகழ்வு முன்னெடுக்கப்பட்டதுடன், இரண்டாம் அமர்வு இன்றுடன் 9 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய, குறித்த 9 நாட்களில் மொத்தமாக 34 எலும்புக் கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இது வரையில், மொத்தமாக 111 என்புக் கூட்டு தொகுதிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 99 என்புக்கூடுகள் முழுமை யான அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

# முத்து நகர் விவசாய நிலங்கள் அபகரிப்பு: திருகோணமலையில் மக்கள் போராட்டம்

29.07.2025

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அபிவிருத்தித் திட் டத்தின் கீழ் நிலங்களை இழக்கும் அபாயத்தில் உள்ள திருகோணமலை - முத்து நகர் பகுதி மக்கள், இன்று (29) திருகோணமலை மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முத்து நகர் பகுதியில், சூரிய மின் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் நோக்கில், பொதுமக்களின் விவசாய நிலங்கள் அபிவிருத்தி என்ற பெயரில் அபகரிக்கப்படுவதற்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அப்பகுதியில் வேலியிடப்பட்ட நிலங்கள், பல ஆண்டுகளாக விவசாயக் களமாக பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், முந்தைய ஆலோசனைகள், உரிய தகவலளிப்பு மற்றும் மக்கள் ஒப்புதல் இல்லாமல், அரசாங்கம் முன்வைக்கும் இந்த நடவடிக் கையை மக்கள் கடுமையாக கண்டித்துள்ளனர்.

“எங்கள் காணிகளை எங்களுக்கு கொடு”, “திருகோணமலை யின் வளங்களும் நிலங்களும் சூறையாடப்படுவதை நிறுத்து”, “கம்பனிகளுக்கு இலாபம் எங்களுக்கு நடுத்தெரு”, “அரிசி இல் லாமல் நாம் மண்ணையா சாப்பிடுவது”, “இந்திய கம்பனிகளின் காணி மற்றும் வளத்திருட்டுக்கு எதிராக போராட்டத்தை தொடங்குவோம்” உள்ளிட்ட வாசகங்கள் குறிப்பிடப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும் கோசம் எழுப்பியவாறும் கவன யீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மக்கள் போராட்ட இயக்கத் தினர், சமூக அமைப்புகள், விவசாய சங்கங்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து காணி அபகரிப்புக்கு எதிராக குரல் எழுப் பியிருந்தனர்.

போராட்டத்தின்போது மாவட்ட செயலக அதிகாரிகளுடன் கலந் துரையாடல் கோரப்பட்டதுடன், அதற்கான தீர்வு எட்டப்படா விடின் எதிர்வரும் நாட்களில் பரபரப்பான மக்கள் எதிர்ப்பு நட வடிக்கைகள் தொடரப்படலாம் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# குழந்தையை அரவணைத்த படி பெரிய எலும்புத் தொகுதி

## சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா

30.07.2025

செம்மணியில் நேற்று முந்தின நாள் (29) அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது பெரிய மனித எலும்புத் தொகுதியுடன் சிறிய குழந்தையின் மனித எலும்புத் தொகுதியும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரி வித்துள்ளார்.

சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் குறித்து இன்றைய நாள் (30) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரிய மனித எலும்புத் தொகுதியுடன் சிறிய எலும்பு தொகுதி யானது அரவணைக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

அது சுத்தப்படுத்தப்பட்டு, அடையாளப்படுத்தப்பட்டு இன்று காலை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# சஜீவன் படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் மீது ஒரு மாதத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்; தவறினால் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு தொடர் போராட்டம் இடம்பெறும்

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

29.07.2025

முல்லைத்தீவு - மல்லாவி பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஆனந்தராசா சஜீவனின் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராக, ஒரு மாத காலத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில், மல்லாவி பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு தொடர் போராட்டம் நடத்தபப்படும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மல்லாவி பொலிசாரை எச்சரித்துள்ளார்.

அதேவேளை சஜீவனின் படுகொலை விவகாரம் தொடர்பில் தம்மால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் கவனத்திற்கு கொண்டுவரப்படுவதுடன், இந்த விவகாரத்திற்கு விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு தம்மால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படும் எனவும் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மல்லாவியில் இன்று (29) சஜீவனின் படுகொலைக்கு நீதி கோரி, மல்லாவி பொது அமைப்புக்கள் மற்றும் மல்லாவி வர்த்தக சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது. இந்த பேரணியில் பங்கேற்றபோதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மல்லாவி பகுதியைச் சேர்ந்த இளைஞன் கடந்த வருடம் படுகொலை செய்யப்பட்டிருந்த நிலையில், நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வவுனிக்குளம் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் சிலருக்கெதிராக சஜீவனின் குடும்பத்தினரால் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாடு அளிக்கப்பட்டும் கொலையுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக பொலிசாரால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அந்த வகையில் சஜீவனின் படுகொலை இடம்பெற்று பத்தொன்பதாம் நாளன்று கடந்த 16.08.2024 அன்றும், அதன் பிற்பாடு ஏழு மாதங்கள் கடந்து, 14.03.2025 அன்றும் படுகொலைக்கான நீதி கோரி, மல்லாவி வர்த்தக சங்கம் மற்றும் மல்லாவி பொது அமைப்புக்கள், பொதுமக்கள் இணைந்து பாரிய ஆர்ப்பாட்டப் பேரணிகளில் ஈடுபட்டன. இருப்பினும் இந்தப் படுகொலைக்கு நீதி கிடைக்கவில்லை.

அதன் தொடர்ச்சியாக சஜீவனின் படுகொலை இடம்பெற்று ஒரு வருடமாகியுள்ள நிலையிலும், கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இத்தகைய சூழலில் இன்று (29) சஜீவனின் படுகொலைக்கு நீதி கோரி மல்லாவி வர்த்தக சங்கம் மற்றும் பொது அமைப்புக்கள், பொதுமக்கள், ரவிகரன் ஆகியோர் இணைத்து ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியானது மல்லாவி பேருந்து நிலைய வளாகத்திலிருந்து மல்லாவிப் பொலிஸ் நிலையம் வரை சென்றது.

சஜீவனுக்கு நீதி கிடைக்கவேண்டும், கொலைக் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி கோஷம் எழுப்பியும், பதாதைகளைத் தாங்கியும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதன்போது பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

அவ்வேளை, ரவிகரன் தெரிவிக்கையில்,

ஒரு வருடகாலமாக சஜீவனின் கொலைக்கு நீதி கோரி இந்த மக்கள் போராடிவருகின்றனர். இருப்பினும் இந்தப் படுகொலைக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை.

இந்தப் படுகொலைக்கான நீதி கிடைக்கவேண்டும். குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இன்னும் ஒரு மாதகாலத்திற்குள் இந்த கொலைக்கான நீதி கிடைக்கவில்லை எனில், இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனில், மல்லாவி பொலிஸ் நிலையம் முற்றுகையிடப்பட்டு, பாரிய ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

இந்தப் படுகொலை விவகாரத்தில் மல்லாவிப் பொலிசாரின் அசமந்தப்போக்கு பற்றி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவிற்கு தெரியப்படுத்துவதுடன், இந்த படுகொலைக்கான நீதியை உடனடியாக வழங்குமாறும் கோரவுள்ளேன் என்றார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், தற்போது இந்தப் படுகொலை விவகாரம் குற்றப் புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், இந்த படுகொலைக்கு விரைந்து உரிய நீதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது சஜீவனின் படுகொலைக்கு விரைந்து நீதி வழங்குமாறு கோரி மல்லாவி பொது அமைப்புக்கள் மற்றும் மல்லாவி வர்த்தக சங்கம் மற்றும் மல்லாவி பொதுமக்கள் சார்பாக துரைராசா ரவிகரனால் மகஜர் ஒன்றும் பொலிசாருக்கு வழங்கப்பட்டது.

# விடுதலைப்புலிகளின் காலத்தில் இல்லாத போதைப்பொருள் ஊடுருவல் தற்போது அதிகரித்துள்ளது; கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு (?) அமைச்சரிடம் ரவிகரன் எம்.பி. வலியுறுத்தல்

29.07.2025

விடுதலைப்புலிகளின் காலத்தில் கடந்த 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் வன்னிப் பகுதியில் கொடிய உயிர்கொல்லி போதைப் பொருட்களின் ஊடுருவல்கள் இருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தற்போது வன்னிப் பகுதியில் அதிகரித்துள்ள போதைப்பொருள் ஊடுருவல்களைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் போதைப்பொருள் ஊடுருவல்களைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமெனத் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக்குழுக்கூட்டம் 25.07.2025அன்று பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. குறித்த கூட்டத்திலேயே குறித் விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கசிப்பு, கஞ்சா, ஹெரோயின், ஐஸ்போதைப்பொருள், போதை மாத்திரை உள்ளிட்ட பல உயிர்கொல்லி போதைப்பொருட்கள் வன்னியில் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டிற்குமுன்னர் விடுதலைப்புலிகளின் காலத்தில் இவ்வாறு போதைப்பொருட்களின் ஊடுருவல்கள் இருக்கவில்லை.

ஆனால் 2009ஆம் ஆண்டின் பிற்பாடு வன்னிப் பகுதிகளில் போதைப்பொருள் ஊடுருவல்கள் அதிகரித்துள்ளதால் மிக மோசமான பாதிப்பு நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. போதைப் பொருள் பாவனையால் அதிகளவானர்கள் உயிரிழந்து வருகின்றனர். பலர் உயிரிழக்கும் நிலையில் காணப்ஏபடுகின்றனர். இது தவிர இத்தகைய போதைப் பொருள் பாவனைகளால் பல்வேறு வன்முறைச்சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. சமூகச் சீர்கேடான விடயங்களும் அதிகரித்துச் செல்கின்றது.

இந்த உயிர்கொல்லி போதைப்பொருள் ஊடுருவல்களை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு எம்மிடம் தொடர்ந்து கோரிக்கைகளை முன்வைத்துவருகின்றனர். இவ்வாறான போதைப் பொருட்களின் பாவனையிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்குமாறு வலியுறுத்துகின்றனர்.

அந்தவகையில் வன்னியிலுள்ள அனைத்து மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களிலும், அனைத்து பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் இத்தகைய சட்டவிரோத உயிர்கொல்லி போதைப்பொருட்களை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு உரிய பாதுகாப்புத் தரப்பினரிடம் நாம் தொடர்ந்தும் கோரிக்கைகளை முன்வைக்

இருப்பினும் இத்தகைய உயிர்கொல்லிப் போதைப்பொருட்களின் ஊடுருவல்கள் தொடர்ந்தும் அதிகரித்துச்செல்வதையே காணப்படுகின்றது.

எனவே இந்த உயிர்கொல்லிப் போதைப்பொருட்களின் ஊடுருவல்களை கட்டுப்படுத்தும் விவகாரத்தில் கடந்தகால அரசுகள் செயற்பட்டதைப்போன்றில்லாமல், இந்த அரசு இவ்வாறான போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கரிசனையோடு செயற்படவேண்டும். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்றவகையில் தாங்கள் இந்த விடயத்தில் கூடுதல் கவனம்

www.sangathamil.ca

# செம்மணி சமூக புதைகுழி இலங்கையில் இனப்படுகொலை நிகழ்ந்துள்ளது என்பதற்கான சாட்சியாகும்

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்

29.07.2025

செம்மணி சமூக புதைகுழி இலங்கையில் இனப்படுகொலை நிகழ்ந்துள்ளது என்பதற்கான சாட்சியாகும். பல சான்று பொருட்களும் வெளிவந்திருப்பதன் மூலம் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மண்ணில் பிறந்த அனைத்து உயிரினங்களும் நலமே வாழ வேண்டும் என்பதோடு இயற்கையும் சுற்றுச்சூழலும் தன் நிலை கெடாத வகையில் மனிதன் வாழ வேண்டும் என்பதே அனைத்து சமயங்களில் போதனையாகும். அதனை காக்கவே புத்தரும், இயேசுவும் நீதி வாழ்வுக்கான அறைகூவல் விடுத்தனர். வலுவான மக்கள் சக்தியையும் உருவாக்கினர்.

ஆனால் அவர்கள் பெயரால் இன்று கட்டியெழுப்பப்பட்டுள்ள சமய நிறுவனங்கள் தான் நிலை பிறழ்ந்து இனவாத நோக்கில் இலங்கையில் செயல்படுவது சமய தர்மத்தையும், நீதியையும், உண்மையும் சமூக புதைகுழிகளுக்குள் தள்ளுவதாகவே தோன்றுகின்றது.

செம்மணி சமூக புதைகுழி இலங்கையில் இனப்படுகொலை நிகழ்ந்துள்ளது என்பதற்கான சாட்சியாகும். இதுவரை நூற்றுக் கதிகமான மனித எச்சங்கள் முழுமையாகவும் பகுதி பகுதியாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆண்கள், பெண்கள் என பலருடையதாக சந்தேகிக்கப்படும் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதோடு விசேடமாக குழந்தைகள் பாவிக்கும் பால் போத்தல், பாடசாலை சிறுவர்களின் புத்தகப் பை, உடைகள் உட்பட பல சான்று பொருட்களும் வெளிவந்திருப்பதன் மூலம் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளமை தெரியவருகின்றது.

கிரிசாந்தி குமாரசாமி கொலை வழக்கில் சாட்சியான சோமரத்தின ராஜபக்சரின் கூற்றின்படி பல நூறு பேர் அநியாயமாக கொல்லப்பட்டு குழிகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அல்லது உயிரோடு குழிகளுக்குள் தள்ளி கொன்று மண்ணில் மறைத்துள்ளனர்.

இதற்கு நீதி கேட்டு வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல தலைநகரான கொழும்பிலும் போராட்டங்கள் நடந்த வண்ணம் உள்ளன. அல்ஜசீரா போன்ற சர்வதேச ஊடகங்களிலும் செய்திகள் வெளிவந்த நிலையில் தெற்கின் பிரதான சிங்கள ஊடகங்கள் இவ்விடயம் தொடர்பில் பேசாதிருப்பது இனவாத நோக்கில் எனபது நாம் அறிந்ததே. பட்டலந்த விடயம் அல்ஜசீரா ஊடகத்தில் வெளி கொண்டு வந்த போது இவ் ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவம் செம்மணி விடயத்தில் மௌனம் காப்பது; கொல்லப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதாலும் கொலையாளிகள் சிங்கள படையினர் என்பதாலுமே.

ஆனால் சமய அறம் காக்க உருவாக்கப்பட்ட அமைப்புகளும் நிறுவனங்களும் அதன் தலைமைத்துவங்களும் அமைதி காப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. நடைபெற்ற இனப்படுகொலை யுத்தத்துக்கும் படைவீரர்களுக்கும், ஆயுதங்களுக்கும் ஆசி வழங்கிய சமய தலைமை தலைமைகளிடமிருந்து நாம் நீதியை எதிர்பார்க முடியாது.

உயிர்ப்பு தின குண்டு வெடிப்புக்கும், அதில் கொல்லப்பட்டோருக்கும் நீதி கேட்டு ஜெனிவா வரை சென்றவரும் இது தொடர்பில் ஊடகங்களுக்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கின்றவருமான கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் கார்டினல் மெல்கம் ரஞ்சித் அவர்கள் ஒரு பால் திருமணம் மனித உரிமை சார்ந்தது அல்ல.

அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. சமயத்திற்கு எதிரானது என எதிர்ப்பு குரல் எழுப்பி உள்ளார். ஆனால் இனப்படுகொலையின் அடையாளமான செம்மணி தொடர்பில் வாய் திறக்காத உள்ளமை கத்தோலிக்க திருச்சபையின் பிளவுபட்ட தன்மையையும் இனவாதத்தையுமே வெளிப்படுத்துகின்றது. அதன் அடையாளமாகவே கொழும்பு பேராயர் காட்சி தருகின்றார். இதற்கு எதிராக கத்தோலிக்க திருச்சபையின் நீதியின் மக்கள் குரல் கொடுக்க வேண்டும். அதுவே இறை நீதியாகும்.

அதுமட்டுமல்ல கொழும்பை தலைமையகமாக கொண்ட ஏனைய கிறிஸ்தவ அமைப்புகளும் அதன் நிறுவனங்களும் அதன் தலைமைகளும் இனப்படுகொலை தொடர்பில் கருத்து கூறாதிருப்பது இனவாத தற்காப்பு நிலையே.

இன, மத, பிரதேச வாதத்தை பாதுகாத்து முதலாளித்துவத்திற்கு பணி புரியும் சமய தலைமைகளும் அவர்களின் தலைமையில் இயங்கும் சமய நிறுவனங்களும் சமூகத்திற்கு சாபமே. சாதனை நீதியின் மக்கள் இதற்கு எதிராக எழும் காலம் வெகு தூரத்தில் இல்லை. ஒடுக்கப்பட்டோருக்கான நீதிக்கான மக்கள் எழுச்சி இறை நீதி சமயங்களின் வாழ்விடம்.

# செம்மணி மனிதப் புதைகுழியில் 04 புதிய மனித எலும்புத் தொகுதிகள் அடையாளம்!

30.07.2025

செம்மணியில் இன்று வரையான காலப்பகுதியில் 115 எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 102 எலும்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் உள்ள மனிதப் புதைகுழியின் இரண்டாவது கட்டத்தின் 25ஆம் நாள் அகழ்வுப் பணிகள் இன்றைய நாள் (30) நடைபெற்றன.

இதன்போது சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா கூறுகையில்,

இந்நிலையில், இன்றைய தினம் 4 புதிய எலும்புத் தொகுதிகள் அகழ்வுப் பிரதேசம் ஒன்றில் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் இன்றைய தினம் மூன்று மனித எலும்புத்

தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புத் தொகுதிகள் நீதிமன்றத்தின் கட்டுக்காவலுக்குள் உட்படுத்தப்பட்டுள்ளன.

இன்றைய நாள் முடிவில் இதுவரை 115 எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 102 எலும்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# உள்ளகப் பொறிமுறையால் நீதி கிடைக்காது

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம்

30.07.2025

உள்ளகப் பொறிமுறையால் நீதி கிடைக்காது, தொடர்ச்சியான கோரிக்கையை ஐ.நா புறந்தள்ளுகிறது என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் இன்று (30) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

உள்ளகப் பொறிமுறையை நாம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றோம். அவ்வாறிருந்தபோதும் அதனையே மேற்கொள்ளுமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஒரு இனப்படுகொலை இடம்பெற்ற நாட்டில் அதனை மேற்கொண்ட குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கு இந்த உள்ளக பொறிமுறை எப்படி சாத்தியமான முறையில் வழிவகுக்கும் என எமக்கு தெரியவில்லை.

இந்த நாட்டில் குற்றம் இழைத் தவர்களுக்கு உயர் பதவிகளை வழங்கி கௌரவிக்கும் நிலையே தொடர்ச்சியாக இருக்கின்றது.

அத்துடன் தாயக பகுதிகளில் தற்போது வெளிப்படும் மனித புதைகுழிகள் இங்கு இனப் படுகொலை நடந்துள்ளது என் பதை உணர்த்தி நிற்கிறது.

இனப்படுகொலை நடந்துள்ளது என்பதற்குச் சாட்சியமாகவே இந்த புதைகுழிகள் வெளிப்படு கின்றன. இவற்றை செய்தது யார் என்ற உண்மையை சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமே அறியமுடியும்.

தொடர்ச்சியாக நீதி கோரிப் போராடிவரும் நாம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் சர்வதேச விசாரணையினை வலியுறுத்தி, வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம் என்று தெரிவித்தனர்.

# சம்பூர் மனித எலும்பு எச்சங்களை கண்டெடுக்கப்பட்ட இடத்தில் அகழ்வு செய்வதா? இல்லையா? ஆகஸ்ட் 06 முடிவு!

30.07.2025

திருகோணமலையின் சம்பூர் மனித எலும்பு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் தொடர்ந்து அகழ்வு செய்வதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க எதிர்வரும் ஆகஸ்ட் 6 ந் திகதி விசேட கூட்டம் ஒன்றை நடத்த வேண்டும் என்று மூதூர் நீதிவான் நீதிமன்றம் இன்று புதன்கிழமை (30) தீர்மானித்துள்ளது.

தொல்பொருள் திணைக்களம், தடயவியல் பிரிவினர், சட்ட வைத்திய அதிகாரி, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம், குற்றவியல் பிரிவினர், தேசிய நிலக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர், என்பனவற்றின் அலுவலர்கள் நீதிவான் ஒன்று கூடி ஆராய்வது என்றும், அதன் பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அமைய இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கண்டெடுக்கப்பட்டுள்ள எலும்பு எச்சங்கள் மிகவும் பழமையானவை. அதனால் தீர்மானம் ஒன்றிற்கு வருவதாயின் அகழ்வுடன தொடர்புடைய சகல தரப்புகளுடனும் இணைந்து கலந்துரையாட வேண்டிய நிலை உள்ளதால் அதற்கான நடவடிக்கை எடுப்பது என்று நீதிமன்று தீர்மானித்தது.

சம்பூர் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பிரிவினர் யூலை 19

ஆம் திகதி அகழ்வில் ஈடுபட்ட போது மனித மண்டையோடு மற்றும் எலும்பு எச்சங்கள் என்பன வெளிவந்தன. இதனை அடுத்து மூதூர் நீதிமன்ற உத்தரவின்படி அகழ்வு வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

57 பொதுமக்கள் சுட்டும், வெட்டியும், எரியூட்டியும் கொலை செய்யப்பட்ட, இலங்கை இராணுவத்தின் மீது குற்றம் சாட்டப்படும், யூலை 7, 1990 சம்பூர் படுகொலையின் நினைவாக பாதிக்கப்பட்ட கிராம மக்களால் அமைக்கப்பட்ட நினைவுச்சின்னத்திலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# செம்மணி மனிதப் புதைகுழி: 118 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் – சட்டத்தரணி நிரஞ்சன்

31.07.2025

யாழ்ப்பாணம், அரியாலை செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி அகழ்வு பணிகள் வியாழக்கிழமை (31) முன்னெடுக்கப்பட்ட போது புதிதாக மூன்று மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வியாழக்கிழமை (31) மூன்று எலும்புக்கூட்டு தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் மூன்று மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் இன்றைய தினம் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டது.

அந்தவகையில் இதுவரை 118 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இதுவரை மொத்தமாக 105 எலும்பு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்பு தொகுதிகள் நீதிமன்றத்தின் கட்டுக்காவலுக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளது. வருகின்ற ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமை முடிவடையும் ஸ்கேன் பரிசோதனைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

# கனடிய செய்திகள்

# யூன் மாதம் கனடாவின் பணவீக்கத் தரவு வெளியீடு

15.07.2025

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் Statistics Canada, ஜூன் மாத பணவீக்க விகிதத்தை (Inflation Rate) இன்று வெளியிட்டுள்ளது.

மே மாதத்தில் 1.7% இருந்த பணவீக்க விகிதம், ஜூன் மாதத்தில் 1.9% ஆக உயர்ந்திருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உணவு மற்றும் போக்குவரத்து செலவுகள் அதிகரித்ததால், பணவீக்கம் 2% அளவிற்கு கூட அதிகரித்திருக்கலாம் எனவும் பி.எம்.ஓ வங்கி வெளியிட்ட மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஜூன் மாத பணவீக்க அறிக்கையானது ஜூலை 30ஆம் திகதி நடைபெறவுள்ள வட்டிவிகித தீர்மானத்திற்கு முன்னதாக வெளியிடப்படும் பணவீக்க அறிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.




# பிரம்ரன் நகர முதல்வர் பாட்ரிக் பிரவுனுக்கு கொலை மிரட்டல்

16.07.2025

பிராம்ரன் நகர முதல்வர் பாட்ரிக் பிரவுன் மீது அண்மையில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் காவல்துறை பாதுகாப்பு வழங்கியுள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மிரட்டல் இரண்டு முதல் மூன்று வாரங்களுக்கு முன் நகர முதல்வரின் அலுவலகத்திற்கு மின்னஞ்சல் வழியாக வந்ததாக, விசாரணையை நெருக்கமாக அறிந்த தகவலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த மின்னஞ்சலில் பிரம்ரன் நகர முதல்வரின் மனைவியும் மகனும் குறிப்பாகப் பெயரிடப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

"இந்த மிரட்டல் மேயருக்கும், அவரின் குடும்பத்தினருக்கும் எதிராக வந்ததைக் கருத்தில் கொண்டு, தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து, காவல்துறை பாதுகாப்பு வழங்கப்பட்டது என காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரம்ரன் நகர முல்வரின் இல்லம் மற்றும் அவர் சுற்றியுள்ள பகுதிகளில் இரண்டு வாரங்கள் காவல்துறை பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும், விசாரணை சில முன்னேற்றங்களை பெற்றதையடுத்து அந்த பாதுகாப்பு தற்போது திரும்ப அழைக்கப்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மிரட்டல் கனடாவின் உள்ளிருந்து வந்ததாக உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், விசாரணையில் நாம் முன்னேறி வருகிறோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

# ஒன்ராரியோ அரசு எலும்பியல் அறுவைச்சிகிச்சைகளை விரிவு படுத்துவதற்காக 125 மில்லியன் டொலர் முதலீடு செய்கிறது

17.07.2025

இடுப்பு மற்றும் முழங்கால் மாற்று அறுவைச்சிகிச்சைகள் உள்ளிட்ட எலும்பியல் அறுவைச்சிகிச்சைகளுக்கான அணுகலை மேம்படுத்த, ஒன்ராரியோ அரசு 125 மில்லியன் டொலர் முதலீட்டை சமூக அறுவைச்சிகிச்சை மற்றும் கண்டறிதல் மையங்கள் வழியாக மேற்கொள்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் வருடத்திற்கு கூடுதலாக 20,000 அறுவைச்சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நோயாளிகள் 90% பேர் மருத்துவ பரிந்துரை செய்யப்பட்ட காலத்திற்குள் சேவையை பெறுவதை உறுதி செய்கிறது. இது, படமெடுப்பு மற்றும் குறைக்கேட்பு சேவைகளை மேம்படுத்த 155 மில்லியன் டொலரும், 300,000 பேருக்கும் அதிக மானவர்களுக்கு முதன்மை மருத்துவ சேவைகளை விரிவுபடுத்த 235 மில்லியன் டொலரும் முதலீடு செய்ததின் தொடர்ச்சியாக அமைகிறது. இந்த விரிவாக்கப்பட்ட சேவைகளுக்கான புதிய அனுமதிகள் 2026 ஆரம்பத்தில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"காத்திருக்கும் நேரத்தை குறைத்து, மக்களுக்கு அருகிலேயே சிகிச்சையை கொண்டு வருவதற்காக எங்கள் அரசு தீர்மானமான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இந்த முதலீடு, ஒன்ராரியோ முழுவதும் உள்ள குடும்பங்கள் தேவையான நேரத்தில், தேவையான இடத்தில், அரசு நிதியளிக்கக்கூடிய அறுவைச்சிகிச்சைகளை பெறுவதை உறுதி செய்கிறது," என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

இந்த துணிவான முயற்சியுடன், அறுவைச்சிகிச்சைக்கான காத்திருப்பு நேரத்தை குறைக்கும் பணியில், அரசுத் தொகை மருத்துவ அமைப்பை பலப்படுத்தும் முயற்சியில் ஒன்ராறியோ மாகாணம் கனடாவை முன்னணியில் அழைத்துச் செல்கிறது.

# கறுப்பு யூலை இலங்கையின் வரலாற்றில் ஒரு சோகமான அத்தியாயம்

## கனடியப் பிரதமர் மார்க் கார்னி

24.07.2025

கறுப்பு யூலை இலங்கையின் வரலாற்றில் ஒரு சோகமாக அத்தியாயமாகவே உள்ளது என கனடாவின் பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

கறுப்பு யூலையை குறிக்கும் விதத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான ஒரு இனப்படுகொலை வெடித்தது ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர், குடும்பங்கள் உடைந்தன எண்ணற்றோர் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இலங்கை வரலாற்றில் கருப்பு யூலை ஒரு சோகமான அத்தியாயமாகவே உள்ளது.

தமிழ்-கனடியர்களின் ஆதரவால் உந்தப்பட்டு 1983 ஆம் ஆண்டு துன்புறுத்தலில் இருந்து தப்பி ஓடும் 1800க்கும் மேற்பட்ட தமிழர்களை வரவேற்க கனடா ஒரு சிறப்பு நடவடிக்கை திட்டத்தை செயல்படுத்தியது மேலும் 2022 ஆம் ஆண்டில் கனடா நாடாளுமன்றம் மே 18 ஆம் தேதியை தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக ஒருமனதாக அறிவித்தது - இது உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நீடித்த அர்ப்பணிப்பாகும்.

இந்தக் கொடுமைகளில் பாதிக்கப்பட்டவர்களையும் உயிர் பிழைத்தவர்களையும் நினைவு கூர்வதில் கனடா தமிழ்-கனடியர்களுடன் நிற்கிறது. இந்தப் நாளில் இழந்த உயிர்களை நாங்கள் போற்றுகிறோம் அர்த்தமுள்ள நீதி மற்றும் பொறுப்புக் கூறலுடன் கூடிய உலகைக் கட்டியெழுப்புவதற்கான எங்கள் பணியை உறுதிப்படுத்துகிறோம்.

Prime Minister of Canada
@CanadianPM

Black July marks a dark chapter in Sri Lanka's history. Today, Canada stands with Tamil-Canadians in remembrance of the victims and survivors.

Prime Minister Carney's statement:



Statement by Prime Minister Carney to mark 42 years since Black July

From pm.gc.ca

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# "கறுப்பு யூலையின் வலிகள் மீண்டும் எதிரொலிக்கின்றன" கனடாவின் எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொய்லியர்

24.07.2025

தமிழ்மக்களிற்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனப் படுகொலை குறித்த புதிய ஆதாரங்கள் வெளியாகியுள்ள நிலையில் கறுப்பு யூலையின் வலிகள் மீண்டும் எதிரொலிக்கின்றன என கனடாவின் கென்சவேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லியர் தெரிவித்துள்ளார்.

கறுப்பு யூலையை குறிக்குமுகமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது,

தமிழ் பாரம்பரியத்தை கொண்ட கனேடியர்கள் கறுப்பு யூலையை நினைவு கூருவதற்கு தயாராகும் இவ்வேளையில் நாங்கள் மீண்டுமொரு முறை இலங்கையில் தமிழர்களிற்கு எதிரான வன்முறையின் ஈவிரக்கமற்ற பாரம்பரியத்தை எதிர் கொண்டுள்ளோம்.

இலங்கையில் செம்மணி மனித புதைகுழி அகழ்வுகள் ஆரம்பமாகி இந்த வாரத்துடன் ஒரு வாரமாகின்றது. இந்த மனித புதைகுழியிலிருந்து கைக்குழந்தைகள் என கருதப்படும் உடல்கள் உட்பட தமிழர்களின் பெருமளவு உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

தமிழ்மக்களின் உயிர்கள் கௌவரத்திற்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலை குறித்த புதிய ஆதாரங்கள் வெளியாகியுள்ள நிலையில் கறுப்பு யூலையின் வலிகள் மீண்டும் எதிரொலிக்கின்றன.

வழமையான கட்டுமானபணியாக ஆரம்பித்தது - நடுங்கவைக்கும் கண்டுபிடிப்பாக மாறியது - தொழிலாளர்கள் நிலத்திற்கடியில் மனித உடல்களை கண்டுபிடித்தனர்.

நீதிமன்ற உத்தரவுகள் காரணமாக தற்போது ஆழமற்ற மனித புதைகுழிகள், கண்கள் கட்டப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கள், சிறுவர்கள் தனிப்பட்ட ரீதியில் எதிகொண்ட பாதிப்புகள் - விளையாட்டுப்பொருட்கள் , புத்தகபைகள்,ஆடைகள் - தெரிய வந்துள்ளன.

ஈவிரக்கமற்ற தன்மை ஆழம்காணமுடியாதது.

தமிழ் கனேடியர்கள் தங்கள் இதயங்களில் பல தசாப்தங்களாக அறிந்திருந்த விடயங்களை - அதாவது இலங்கையின் உள்நாட்டு போரின் போது தங்களின் உறவுகள் காணாமல் போவது தற்செயலாக இடம்பெற்றது இல்லை என்பதை - செம்மணி மனித புதைகுழி நிரூபித்துள்ளது.

NEWS RELEASE

Statement from Conservative Leader Pierre Poilievre on the Chemmani Mass Grave Excavation in Sri Lanka

July 23, 2025
FOR IMMEDIATE RELEASE

Ottawa, ON – The Hon. Pierre Poilievre, Leader of the Conservative Party of Canada, released the following statement on the anniversary of Black July:

"As Canadians of Tamil Heritage prepare to mark the solemn anniversary of Black July, we are once again confronted with the brutal legacy of anti-Tamil violence in Sri Lanka.

"This week marks one month since excavation work began at the Chemmani mass grave site in Sri Lanka – where the remains of dozens of Tamil civilians, including infants, have now been uncovered. The pain of 1983 echoes as new evidence surfaces of the genocide committed against Tamil lives and dignity.

"What began as a routine construction project became a chilling revelation – workers uncovered human bones buried just beneath the surface. The court-ordered excavation has since revealed shallow graves, blindfolded victims, and the personal effects of children: school bags, toys and clothing. The cruelty is unfathomable.

"These discoveries confirm yet again what Tamil Canadians have known in their hearts for decades – that their loved ones who disappeared during the genocidal war against Tamils were not lost by accident. They were taken. Silenced. And buried in secrecy.

"Canada has a moral responsibility to listen to survivors and to stand firm in the pursuit of justice wherever mass atrocities have taken place. That

NEWS RELEASE

includes standing with Tamil families, here and around the world, who have carried this burden for far too long.

"As I have pledged before, a future Conservative government will take real, concrete action:

- We will impose Magnitsky sanctions on those responsible for the genocide perpetrated against Tamils in Sri Lanka.
- We will support international efforts to investigate and prosecute those responsible – including members of the genocidal Rajapaksa regime.
- We will work with allies to ensure Canada is never a safe haven for war criminals, and
- We will press for independent international forensic involvement in the Chemmani excavations, to ensure the truth is preserved – and never buried again.

"The Conservative Party under my leadership has unequivocally recognized the Tamil genocide.

"I remain unwavering in my commitment to ensuring that Canada is a country where the voices of the oppressed are heard – and where those responsible for mass atrocities are held to account, no matter how much time has passed.

"To the Tamil community: your grief is real. Your pursuit of justice is just. And you will not walk this path alone."

-30-

அவர்கள் கொண்டு செல்லப்பட்டார்கள் - மௌனமாக்கப்பட்டார்கள் - இரகசியமாக புதைக்கப்பட்டார்கள்.

உயிர்தப்பியவர்களிற்கு உறுதியான ஆதரவை வழங்கவேண்டிய, பாரிய அநீதிகள் எங்கு இடம்பெற்றாலும், நீதிக்கான தேடலில் உறுதியாகயிருக்கவேண்டிய தார்மீக பொறுப்பு கனடாவிற்குள்ளது.

மிக நீண்டகாலமாக இந்த சுமையை சுமக்கும் இங்குள்ள மற்றும் உலகெங்கிலும் உள்ள தமிழர்களிற்கு ஆதரவாக இருக்கவேண்டிய பொறுப்பும் உள்ளது.

# செம்மணிப் படுகொலைக்கு நீதி வேண்டி 'விழித்தெழு தமிழா' எழுச்சி நிகழ்வு

26.07.2025

26-07-2025 சனிக்கிழமையன்று 6ம் திகதி சனிக்கிழமையன்று மாலை 6.00 மணிக்கு கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ALBERT CAMPBELL SQUARE திறந்த வெளியரங்கில் "யாழ்ப்பாணம் செம்மணி புதைகுழிகள் மற்றும் கண்டெடுக்கப்பட்ட எம் உறவுகளின் எலும்புக் கூடுகள் மற்றும் சிறீலங்கா அரசின் கடந்த காலம் தொடக்கமான இனப் படுகொலைகள் ஆகிய காட்டுமிராண்டிச் செயல்களை சர்வதேசம் கண்டிக்கவும் தகுந்த பொறுப்புக் கூரல்களை வலியுறுத்தியும் BEHIND ME FOUNATION அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பெற்ற "விழித்தெழு தமிழா" என்று விழிப்புணர்வு எழுச்சி நிகழ்வு.

# செப்டம்பர் மாதம் பாலஸ்தீன அரசை கனடா அங்கீகரிக்கவுள்ளது

## கனடியப் பிரதமர் மார்க் கார்ணி

30.07.2025

செப்டம்பர் மாதத்தில் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்க கனடா திட்டமிட்டுள்ளதாகவும், சமீபத்திய நாட்களில் இதுபோன்ற அறிவிப்பை வெளியிடும் மூன்றாவது G7 நாடாக இது உருவெடுத்துள்ளதாகவும் பிரதமர் மார்க் கார்ணி கூறியுள்ளார்.

செப்டம்பர் மாதம் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபையில் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்க கனடா உத்தேசித்துள்ளது என்று பிரதமர் மார்க் கார்ணி புதன்கிழமை தெரிவித்தார்.

இந்த அறிவிப்பு கனேடிய அரசாங்கத்தின் வியத்தகு கொள்கை மாற்றத்தைக் குறிக்கிறது.

இசுரவேல்-பாலஸ்தீன மோதலுக்கு இரு நாடுகள் தீர்வுக்கான நம்பிக்கையைப் பாதுகாப்பது அவசியம் என்று கூறி கார்ணி இந்த முடிவை நியாயப்படுத்தினார் .

செப்டம்பர் 2025 இல் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் 80வது பொதுச் சபை அமர்வில் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்க கனடா விரும்புகிறது என்று கார்ணி கூறினார்.

இது சமீபத்திய நாட்களில் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து எடுத்த இதேபோன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகிறது.

2026 ஆம் ஆண்டு பாலஸ்தீன ஆணையம் பொதுத் தேர்தல்களை நடத்த வேண்டும். அதில் ஹமாஸ் எந்தப் பங்கையும் வகிக்க முடியாது. மேலும் பாலஸ்தீன அரசை இராணுவ மயமாக்குவதை உறுதி செய்ய வேண்டும் என்பதன் அடிப்படையில் கனடாவின் அங்கீகாரம் அமைந்துள்ளது என்று கார்ணி கூறினார்.

www.sangathamil.ca

# தமிழக செய்திகள்

## பரந்தூர் விமான நிலையத்துக்கு நிலம் எடுக்கும் பணி தொடக்கம்: 13 கிராம மக்கள் போராட்டம்

16.07.2025

பரந்தூர் பசுமை வெளி விமான நிலையத்துக்கு நிலம் எடுக்கும் பணி தொடங்கியதைத் தொடர்ந்து 13 கிராம மக்கள் ஏகனாபுரம் அம்பேத்கர் சிலை முன்பு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சியினர் பங்கேற்று ஆதரவு தெரிவித்தனர்.

பரந்தூர் விமான நிலையத்துக்கு நிலம் எடுக்கும் பணியை மாவட்ட நிர்வாகம் தொடங்கியுள்ளது. 19 பேரின் நிலங்கள் பரந்தூர் விமான நிலையத்துக்காக வழங்கப்பட்டுள்ளன. இந்த விமான நிலையத்துக்கான பணிகள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, விமான நிலையத்தால் பாதிக்கப்படும் 13 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஏகனாபுரம் அம்பேத்கர் சிலை முன்பு இந்த ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. ஏகானாபுரம் உள்ளிட்ட கிராமங்கள் முழுமையாக கையகப்படுத்தப்பட உள்ளதால் அந்த கிராம மக்கள் அதிகளவில் பங்கேற்றனர். மற்ற கிராமங்களில் இருந்து குறைந்த அளவு பொதுமக்களே போராட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக அரசையும், மாவட்ட நிர்வாகத்தையும் கண்டித்து பலர் பேசினர். இந்த ஆர்ப்பாட்டதில் தமிழக வெற்றிக் கழகம், நாம் தமிழர் கட்சி, விசிக உள்பட பல்வேறு கட்சியினர் பங்கேற்றனர். விமான நிலைய திட்டத்தை கைவிடக் கோரி தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தலைமையில் தலைமைச் செயலகத்தை முற்றுகையிட உள்ளதாக போராட்டக் குழுவினர் தெரிவித்தனர்.

## கச்சத்தீவை மீட்க வேண்டும்: வைகோ

23.07.2025

பரபரப்பான அரசியல் சூழலில் பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் யூலை 21 ஆம் தேதி தொடங்கியது.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்கியதில் இருந்து எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கூச்சலிட்டு அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பாராளுமன்ற நடவடிக்கைகள் முடங்கின. இந்நிலையில், 3 ஆம் நாளாக இன்றும் பாரளுமன்ற நடவடிக்கைகள் முடங்கின. எதிர்க்கட்சிகளின் கடும் அமளியால் மக்களவை நண்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

அமளிக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் பேசிய வைகோ, “இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகிறது. 2025 ஆம் ஆண்டில் மட்டும் 150 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றால் கச்சத்தீவு ஒப்பந்தத்தை மத்திய அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். கச்சத்தீவு ஒப்பந்தத்தை இந்திய அரசு திரும்ப பெற வேண்டும். கச்சத்தீவை மீட்பது தான் மீனவர் பிரச்சனைக்கான ஒரே தீர்வு ” என்று தெரிவித்தார்.

## இந்தியாவில் மறுவாழ்வு முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் குடியுரிமைக்காக விண்ணப்பம்

24.07.2025

இந்தியாவில் பிறந்து மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக மறுவாழ்வு முகாம்களில் தங்கியுள்ள பல இலங்கைத் தமிழர்கள் குடியுரிமைக்காக விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதன் பின்னர் விண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு பரிசீலனைக்காக அனுப்பப்படும் என்று தமிழகத்தின் குடியுரிமை பெறாத தமிழர்களின் மறுவாழ்வு மற்றும் நல ஆணைக்குழு தகவல்களை கோடிட்டு இந்த செய்தி வெளியாகியுள்ளது.

விண்ணப்பங்களை முதற்கட்டமாக ஆய்வு செய்ததில், குடியுரிமைச் சட்ட விதிகளின் கீழ் சுமார் 300 இலங்கைத் தமிழர்கள் குடியுரிமை பெறுவதற்கான தகைமையை கொண்டுள்ளமை தெரியவந்தது.

தமிழகத்தில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் 57 ஆயிரத்து 500 பேரை உள்ளடக்கிய வகையில் குறித்த ஆணைக்குழு மதிப்பீட்டை நடத்தியதுடன் குடியுரிமை பெறுவதில் அவர்களுக்கு உதவி செய்வதாகவும் உறுதியளித்தது.

இதனையடுத்து குடியுரிமைக்கான விண்ணப்பங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு குடியுரிமைக்காக விண்ணப்பித்துள்ளவர்களில் பெரும்பாலானோர் 1987ஆம் ஆண்டு யூலை முதலாம் திகதி அல்லது அதற்குப் பிறகு இந்தியாவில் பிறந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 1964 மற்றும் 1974 ஒப்பந்தங்களின் கீழ், இலங்கையில் உள்ள இந்திய தூதரகங்களால் வழங்கப்பட்ட இந்திய-இலங்கை கடவுச்சீட்டை கொண்டுள்ள இந்திய வம்சாவளி தமிழர்கள் சிலரும் இந்திய குடியுரிமைக்காக விண்ணப்பித்துள்ளனர்.

அதேவேளை, தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர்களின் திருமணங்களை பதிவுச் செய்து அவர்களுக்கான ஆவணங்களை வழங்குவதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**தமிழ் மக்களின் விடுதலைக்கான ஒரு தேசிய மக்கள் படையாக நாங்கள், எங்கள் போரை முன்னெடுத்துச் செல்கின்றோம்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# செம்மணி மனிதப் புதைகுழி: தமிழினப் படுகொலையின் சாட்சி

## தென்னிந்திய பிரபல நடிகரும், முக்குலத்தோர் புலிப்படை கட்சியின் தலைவருமான சேது கருணாஸ்

24.07.2025

எல்லா தேசங்களிலும் மண்ணைத் தோண்டினால் வளங்கள் தான் கிடைக்கும். ஆனால் ஈழ தேசத்தில் மட்டும்தான் எங்கு தோண்டினாலும் பிணங்கள் கிடைக்கின்றன. இப்போது அந்தப் பிணங்கள் காலத்தின் கறையான் அரித்து எலும்புக்கூடுகளாய் மாறி, அவை ஈழத்தில் நிகழ்ந்தது இனப்படுகொலைதான் என் பதை அடையாளம் காட்டுகின்றன. செம்மணி மனிதப் புதை குழியானது தமிழினப் படுகொலையின் சாட்சியாகும். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், செம்மணி புதைகுழிக்கு எதிராக சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என தென்னிந் திய பிரபல நடிகரும் முக்குலத்தோர் புலிப்படை கட்சியின் தலைவருமான சேது கருணாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இனப்படுகொலைக்கு செம்மணிதான் சாட்சி. இதற்கு முன்னால் எத்தனையோ இனப்படுகொலை சாட்சிகளைப் பன்னாட்டு அவையில் முன்னிறுத்தினோம். ஆனால் நீதிக்கு இடம் தராத ஐ.நா அவைகள் கள்ள மௌனம் காத்தது. இந்த செம்மணி அக ழாய்வு உண்மையிலாவது, இனப்படுகொலையின் இன் னல்களை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளட்டும்.

செம்மணி மனிதப் புதைகுழி 2009ஆம் ஆண்டிற்கு முன் நிகழ்ந்திருக்கிலாம் அல்லது பின் நிகழ்ந்திருக்கலாம். எப்போது நடந்தாலும், சிங்களவரால் நிகழ்த்தப்பட்டது. இனப்படுகொலை தான் என்பதை செம்மணியும் மற்ற அகழ்வாய்வுகளும் வெளிப் படுத்தியிருக்கின்றன.

2009க்கு பின்னும் கூடுதலாய் அதே புதைகுழி உத்தியை சிங்கள பேரினவாத அரசு கையாண்டுள்ளது என்பது இப்போது கூடுதலாய் வெளிப்பட்டிருக்கிறது. சமகாலத்தில் செம்மணியை விட சர்வதேச சமூகத்திற்கு வேறென்ன சான்று வேண்டும்!?

இதுவரை 80க்கும் மேற்பட்ட அகழ்வாய்வு தொகுப்புகள் கிடைத்துள்ளன. எந்த நாட்டிலும் இதுபோல், அகழாய்வில் அதிர்ச்சியில்லை. தமிழர் அகழாய்வில் முன்னோர் வாழ்வியல் படித்துள்ளோம். ஆனால், தமிழீழ தேசத்தில்தான் எலும்புக் கூடுகளின் வலியை உணரமுடிகிறது.

தாயும் குழந்தையும் கட்டி அணைத்தபடி மடிந்த எலும்புக்கூடு களின் காட்சி, காலம் கடந்தும் நம் காயங்களை மீண்டும் காயப் படுத்துகிறது. பள்ளிச்சிறுவர்களின் புத்தகப் பை, பொம்மை யோடு கண்டறிந்த அகழாய்வு கொடுமையின் உச்சத்தை தொடுகிறது. எண்ணிலடங்கா எலும்புக்கூடுகளில் சிறுவர் சிறுமியர் அதிகம் என்பதை உலகம் கண்டுணரா அதிர்ச்சி.

வதைக்கப்பட்டும் புதைக்கபட்டும் வல்லுறவில் மறைக்கப்பட்டும் எத்தனைப் பெண்கள்! அத்தனையும் செம்மணியில் எலும்புக் கூட்டின் சாட்சியங்கள். இன்னும் இலங்கை அகழாய்வு நீண் டாலும் கள்ள மௌனம் சாதிக்கும் இவ்வுலகம்.

நாம் சிங்கள பௌத்த பேரினத்தின் அநீதிகளை பன்னாட்டு அவையில் எடுத்துரைப்போம். மக்கள் திரள் போராட்டம் வழி யாய் நமக்கான நீதிக்குக் குரல் கொடுப்போம்.

ஒன்றிய அரசு, அண்டை நாட்டில் நிகழ்ந்த அநீதிக்கு ஐ.நா

அவையில் குரல் கொடுக்க வேண்டும்! இதற்கு முன் தமிழினத் திற்கு செய்ததை, செம்மணி மனிதப் புதைகுழியை அறிந்தும் கண்டும் காணமல் இருக்கக்கூடாது.

தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் செம்மணி மனிதப் புதைகுழி படுகொலைக்கு, சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, இலங்கை அரசை பன் னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டுகோள் விடுக்க வேண் டும். மேலும் ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

செம்மணி நமது தமிழினப் படுகொலைக்கு சாட்சியத்திற்கு அடையாளம். ஆனாலும், இன்னும் இதுபோன்ற தோண்டப் படாத அகழாய்வுகள் இன்னும் எத்தனையோ உள்ளன. காலம் ஈழத் தமிழனத்திற்கு நல்ல தீர்ப்புகள் வழங்கும். நாம் தொடர்ந்து போராடுவோம் என குறிப்பிடப்பட்டுள்ளார்.

# செம்மணி தமிழினப்படுகொலைக்கு சென்னை சிவானந்தம் சாலையில் பன்னாட்டு சுதந்திர நீதி விசாரணை வேண்டி மாபெரும் போராட்டம் – 27.07.2025

# ஆதாயக் கொலையும், மது போதைக் கொலையுமாக தமிழ் நாடு இருப்பது வெட்கக்கேடு

## பாமக நிறுவனர் இராமதாஸ்

30.07.2025

ஆதாயக் கொலையும், ஆதாயக் கொள்ளையுமாக அடுத்தடுத்த நாள்களில் இருந்தது போலவே மது போதை மோதலிலும் அடுத் தடுத்த நாள்களில் தமிழ்நாட்டில் கொலைகள் நடந்து கொண் டிருப்பது வெட்கக்கேடு என்று பாமக நிறுவனர் இராமதாஸ் தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சேலம் மாவட்டம், வலசையூர் அருகே அரூரில் வசிக்கும் பூமாலை- சின்னபாப்பா தம்பதியை கொடூரமாக தாக்கி, அவர்களை கட்டிப் போட்டு விட்டு நகை - பணத்தை மர்ம நபர்கள் கொள்ளையடித் துச் சென்றுள்ளனர். கணவர் பூமாலையும், மனைவி சின்னப் பாப்பாவும், இணைந்து விவசாயம் பார்ப்பதோடு, செங்கல் சூளையிலும் வேலை பார்த்து சொந்த உழைப்பில் பொருளீட்டி வாழ்கிற அருமையான உழைப்பாளிகள்.

ஒரு மகனை பிலிப்பைன்ஸ் நாட்டில் மருத்துவம் படிக்க அனுப்பி வைத்திருக்கிறார்கள். இன்னொரு மகன் தமிழ்நாட்டின் திருச் செங்கோட்டில் பொறியியல் படித்துக் கொண்டிருக்கிறார். உழைப்பின் உன்னதத்தை பறைசாற்றக்கூடிய உதாரண தம்பதியராய் வாழும் அவர்களின் சேமிப்பு நகையையும், பணத்

தையும்தான் கொள்ளையடித்து போயிருக்கிறது கொள்ளைக் கூட்டம்.

காஞ்சிபுரம் மாவட்டம் திம்மசமுத்திரத்திலும் இப்படியொரு சம்பவம் நடந்திருக்கிறது. எட்டுபவுன் நகைக்காக இளம்பெண் அஸ்வினியை யூலை 24- ஆம் தேதி கொடூரமாக தாக்கி விட்டு நகையை கொள்ளையடித்துப் போயிருக்கிறார்கள். 26-ஆம் தேதி வரை மருத்துவ சிகிச்சையில் இருந்த அஸ்வினி, 27-ஆம் தேதி இறந்து போயிருக்கிறார். நகைக்காக அஸ்வினியை கொலை செய்த விதமும் மிகக் கொடூரமானது என்பதை உற வினர்கள் விவரித்திருக்கிறார்கள்.

ஆதாயக் கொலையும், ஆதாயக் கொள்ளையுமாக அடுத்தடுத்த நாள்களில் இருந்தது போலவே மது போதை மோதலிலும் அடுத் தடுத்த நாள்களில் தமிழ்நாட்டில் கொலைகள் நடந்து கொண்டி ருப்பது வெட்கக்கேடு. சென்னை குரோம்பேட்டையில் டாஸ்மாக் மதுக் கூடத்திலேயே மதுபோதையில் தகராறு ஏற்பட்டு பரந் தாமன் என்பவரை ஒரு கும்பல் கொலை செய்திருக்கிறது. சென்னை ஐ.சி.எஃப் பகுதியில் நண்பர்களோடு மது அருந்திய விஜயகுமார் என்பவர் அதே நண்பர்களால் கொலை செய்யப் பட்டிருக்கிறார்.

ஆதாயத்துக்காக ஒரு கொலை, ஒரு கொலை முயற்சியும், மதுபோதையில் இரண்டு கொலைகளுமாக அடுத்தடுத்த நாள்களில் நடந்திருக்கும் இப்படியான சமூக சீர்கேட்டை சாதா ரணமாக கடந்துபோக நினைப்பது ஆட்சியாளர்களுக்கு அழகல்ல. ஆதாயக் கொலைகளைப் போலவே மதுபோதை யால் நிகழக்கூடிய கொலைகளும் ஆபத்தானது” என்று இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

**மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்துகொள்ளவார்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# உலக செய்திகள்

## காசாவின் ஒரேயொரு கிறிஸ்தவ தேவாலயம் மீது இசுரவேல் தாக்குதல்: மூவர் பலி

18.07.2025

முன்னாள் பாப்பரசர் பிரான்சிஸ் நாளாந்தம் தொடர்பை பேணிய காசாவின் ஒரேயொரு கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது இசுரவேல் மேற்கொண்ட தாக்குதலில் மூவர் கொல்லப் பட்டுள்ளனர்.

தேவாலயத்தின் பணியாளர் ஒருவரும் தேவாலயத்தின் வளாகத்தில் உள்ள கரித்தாஸ் கூடாரத்தில் உளவியல் சிகிச்சை பெற்றுவந்த பெண்ணொருவரும் அவருடன் இருந்த மற்று மொரு பெண்ணும் கொல்லப்பட்டுள்ளதாக கரித்தாஸ் இன்டநஷனல்ஸ் தெரிவித்துள்ளது.

உயிர்தப்புவதை நோக்கமாக கொண்டு தேவாலயத்தில் தஞ்ச மடைந்திருந்த மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து பெரும் அதிர்ச்சியடைந்துள்ளதாக கரித்தாஸ் இன்ட நஷனலின் செயலாளர் நாயகம் அலிஸ்டர் டட்டன் தெரிவித் துள்ளார்.

இவர்களின் மரணம் முற்றுகையின் கீழ் பொதுமக்கள் மருத் துவ உதவியாளர்கள் எதிர்கொண்டுள்ள மோசமான நிலையை மீண்டும் நினைவுபடுத்துகின்றது என தெரிவித்துள்ள அவர் ஏற்பட்ட இழப்புகள் குறித்து நாங்கள் துயரடைகின்றோம் சம்பந் தப்பட்ட தரப்பினரை வாழ்க்கையின் புனிதத்தினையும் அதனை பாதுகாப்பதற்கான தளத்தையும் மதிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

பத்துபேர் காயமடைந்துள்ளனர் சிலருக்கு ஆபத்தான காயங்கள் ஏற்பட்டுள்ளன எறிகணை சிதறல்களால் காயங்கள் ஏற்பட் டுள்ளன என அல் அஹ்லில் அராபிய மருத்துவமனையின் மருத்துவ பணியாளர்ப்ராஹிம்சகல்லா கார்டியனிற்கு தெரி வித்துள்ளார்.

தேவாலயம் தாக்கப்பட்டதாக மருத்துவமனைக்கு அறிவிக்கப் பட்டதாக சகல்லா கூறினார். “நான் ஆம்புலன்ஸில் ஏறி நேராக தேவாலயத்திற்குச் சென்றேன்” என்று அவர் மேலும் கூறினார்.

“இந்த இசுரவேலிய இராணுவம் திமிர்பிடித்தது - அது கிறிஸ் தவரா அல்லது முஸ்லிம் என்று வேறுபடுத்திப் பார்ப்பதில்லை

அது ஒரு தேவாலயமா மசூதியா வீடா அல்லது ஒரு பள்ளியா என்பது கூட கவலையில்லை. நாங்கள் ஒரு கொடூரமான போரின் நடுவே வாழ்கிறோம்.

21 மாத காலப் போரின் போது குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உட்பட நூற்றுக்கணக்கான பாலஸ்தீனியர்கள் தங்கியிருந்த தேவாலய வளாகத்தையும் ஷெல் தாக்குதல் சேதப்படுத்தியது.

தேவாலயத்திற்கு அடுத்துள்ள ஒரு பள்ளியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த 75 வயது கிறிஸ்தவரான அட்டாலா டெர்சி கூறி னார்: “நான் சில நிமிடங்கள் வெளியே இருந்த பிறகு வகுப் பறைக்குத் திரும்பியபோது ஒரு பெரிய வெடிப்பு ஏற்பட்டது. போர் தொடங்கியதிலிருந்து வெடிப்பின் சத்தம் இவ்வளவு தீவிரமாக இருந்தது இதுவே முதல் முறை.

ஏப்ரல் மாதம் இறப்பதற்கு முன்பு முன்னாள்பரிசுத்த பாப்பரசர் அர்ஜென்டினாவைச் சேர்ந்த கேப்ரியல் ரோமனெல்லியை ஒவ்வொரு மாலையும் அழைப்பார். ஹமாஸ் இசுரவேல் மீதான தாக்குதல்கள் காசாவில் பேரழிவுப் போரை தூண்டிய இரண்டு நாட்களுக்குப் பிறகு, அக்டோபர் 9 2023 அன்று அவர் வழக்கத்தைத் தொடங்கினார்.

## இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான அட்டூழியங்களில் முன்னாள் ராஜீவ் காந்தியின் பங்கு குறித்து பா.ஜ.க. கேள்வி

19.07.2025

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான அட்டூழியங்களில் இந்தியா வின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பங்கு குறித்து பாரதீய ஜனதாக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நிசிகாந்த் துபே கேள்வி எழுப்பியுள்ளார்.

1988ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி ராஜீவ் காந்தி அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி றொனால்ட் றீகனுக்கு (Ronald Reagan) அனுப்பியதாக கூறப்படும் கடிதத்தை அவர் இதற்கு சான்றாக பகிர்ந்துள்ளார்.

இந்தியாவும் இலங்கையும் தமிழர்களுக்கு எதிராக எவ்வாறு அட்டூழியங்களைச் செய்தன என்பதை இந்தக் கடிதம் விபரிக் கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இறையாண்மை கொண்ட நாடாக இருக்கும் இந்தியா அமெரிக்காவுடன் இந்த விபரங்களைப் பகிர்ந்து கொண்டது ஏன்? என்றும் பாரதீய ஜனதாக்கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் நிசிகாந்த் துபே கேள்வி எழுப்பியுள்ளார்.



## காசாவில் உணவு உதவிமையங்களுக்கு அருகில் இசுரவேல் தாக்குதல்: 50 பேர் பலி

19.07.2025

காசாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள பலஸ்தீனிய நகரமான ரஃபாவில் இசுரவேல் மேற்கொண்ட தாக்குதலில் 50 பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

உணவு உதவி மையங்களுக்கு அருகில் இன்று சனிக்கிழமை இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

காசாவில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் பட்டினியில் இருப்பதாக உலக உணவுத் திட்டம் (WFP) தெரிவித்துள்ளது,

மேலும் அந்த பகுதியில் உள்ள மூன்றில் ஒருவர் பல நாட்கள் உணவில்லாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியா ஜனாதிபதி சுவைதா மாகாணத்தில் “உடனடி போர் நிறுத்தத்தை” அறிவிக்கிறார்.

காசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீதமுள்ள அனைத்து கைதிகளையும் விடுவிக்கும் ஒரு போர்நிறுத்த திட்டத்தை இசுரவேல் நிராகரித்ததாகவும்,

எந்த ஒப்பந்தமும் இல்லாவிட்டால் நீண்ட போருக்குத் தயாராக இருப்பதாகவும் ஹமாஸ் கூறியது.

இசுரவேல் -ஹமாஸ் மோதல் காரணமாக இதுவரை 58,667 பேர் உயிரிழந்துள்ளதுடன் 139,974 இற்கும் மேற்பட்டோர்

காயமடைந்துள்ளனர்.

**மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிப் பகுதியில் சரணடைந்தவர்களின் பெயர் விபரங்களை காணாமல்போனோர் அலுவலகம் பெற்று வெளியிடுவதை உறுதிப்படுத்துங்கள்!

**சர்வதேச மன்னிப்புச்சபை**

22.07.2025

இலங்கையின் உள்நாட்டு மோதலின் முடிவில் சரணடைந்தவர்களின் பெயர் விபரங்களை பெற்று வெளியிடுவதன் மூலம் காணாமல்போனோர் அலுவலகம் காணாமல்போனோரை தேடுவதற்கான அதன் ஆணையை நிறைவேற்றுவதில் குறிப்பிடதக்க முன்னேற்றத்தை காண்பிக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் குழுவிற்கு சமர்ப்பித்துள்ள 22 பக்க அறிக்கையில் சர்வதேச மன்னிப்புச்சபை இதனை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பலவந்தமாக காணாமல்போனோர் தொடர்பான குழுவின் 29 வது அமர்வு செப்டம்பர் 22 முதல் ஒக்டோபர் 3ம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபைதனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

இந்த அமர்வில் ஐநாவின் குழு பலவந்தமாக காணாமல்போதலில் இருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் இன் கீழ் இலங்கை தனது கடப்பாடுகளை எவ்வாறு நிறைவேற்றியுள்து என்பது குறித்து ஆராயவுள்ளது.

இலங்கை இந்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல பரிந்துரைகளையும் அவதானிப்புகளையும் சர்வதேச மன்னிப்புச்சபை 22 பக்க அறிக்கை முன்வைக்கின்றது.

சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் உள்நாட்டு மோதலின் முடிவில் சரணடைந்தவர்களின் பெயர் விபரங்களை பெற்று வெளியிடுவதன் மூலம் - பலவந்தமாக காணாமலாக்கப்படுதலில் தொடர்புபட்ட படையினர் மற்றும் பிற குற்றவாளிகளிடம் இது வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்த புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்குவதன் மூலம் காணாமல்போனோர் அலுவலகம் காணாமல்போனோரை தேடுவதற்கான அதன் ஆணையை நிறைவேற்றுவதில் குறிப்பிடதக்க முன்னேற்றத்தை காண்பிப்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

தொடரும் மனித புதைகுழி அகழ்வுகள் தொடர்பில் மிகவும் அவசரமாக காணாமல்போனவர்கள் அலுவலகம் வெளிநாட்டு தொழில்நுட்ப நிபுணத்துவத்தை கேட்டுப்பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தவேண்டும்.

காணாமல்போனவர்களின் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட ஆணையை நிறைவேற்றுவதில் காணாமல்போனவர்களின் அலுவலகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காண்பிக்காதமைக்கு அதன் தலைமைத்துவத்தை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துங்கள்.அதன் நடவடிக்கைகள் குறித்து ஒழுங்கமைக்கப்பட்ட மாற்றங்களை மேற்கொள்ளுங்கள்அந்த அலுவகத்திற்கு நியமிக்கப்படுபவர்கள் திறமைசாலிகள் அர்ப்பணிப்புள்ளவர்கள் சுயாதீனமானவர்களாக விளங்குவதை உறுதி செய்யுங்கள்.

பல தசாப்தங்களாக பதில்களைக் கோரும் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் கோரிக்கைகளை அவசரமாகவும் உண்மையாகவும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

காணாமல்போனவர்கள் எங்கிருக்கின்றாகள் தெளிவுபடுத்தாமல், அவர்கள் உள்ள இடத்தை சுயாதீனமாக ஆராயாமல், காணாமல்போனமைக்கான சூழ்நிலைகளை தெரிவிக்காமல், உயிருடன் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மனித எச்சங்களை அவர்களின் குடும்பத்தவர்களிடம் வழங்காமல் இது தொடர்பான விடயத்திற்கு அதிகாரிகள் முடிவை காண முயலக்கூடாது.

பாதிக்கப்பட்டவர்களின் உண்மை நீதி மற்றும் இழப்பீட்டிற்கான உரிமைகளிற்கு அதிகாரிகள் முன்னுரிமை வழங்கவேண்டும், அவற்றை மதிக்கவேண்டும்,அதற்கு உதவவேண்டும்.

நிறுவனத்திற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடையே நிலவும் நம்பிக்கை மற்றும் அறிவு இடைவெளியைக் குறைக்க இன்னும் பல தொலைநோக்குப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

# செம்மணி புதைகுழி: சர்வதேச விசாரணைக்கு அவுஸ்திரேலிய கிறீன்ஸ் கட்சி வலியுறுத்தல்

22.07.2025

"செம்மணி புதைகுழி விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்." - என்று அவுஸ்திரேலிய கிறீன்ஸ் கட்சியின் நியூ சவூத் வேல்ஸ் மாநில செனட்டர்டேவிட் சூபிரிட்ஜ் வலியுறுத்தியுள்ளார்.

உண்மையை ஒருபோதும் புதைக்க முடியாது. இலங்கையில் தமிழ் மக்கள் மீது கட்டாயமாக நடத்தப்பட்ட காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் இனப்படுகொலையை நினைவூட்டும் வகையில் செம்மணி புதைகுழி அமைந்துள்ளது.

29 ஆண்டுகள் கடந்தும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. நீதி நிலைநாட்டப்படவில்லை.

எனவே செம்மணி உட்பட இலங்கையில் அடையாளம் காணப்பட்ட மனித புதைகுழிகள் குறித்து சர்வதேச அளவில் கண்காணிக்கப்படும் தடயவியல் விசாரணை அவசியம்." - எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பாலஸ்தீனத்தை செப்டம்பர் மாதம் பிரான்ஸ் அங்கீகரிக்கும் என ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அறிப்பு

24.07.2025

செப்டம்பர் மாதம் நடைபெறும் ஐ.நா பொதுச் சபையில் பிரான்ஸ் பாலஸ்தீன அரசை பிரான்ஸ் முதல் முறையாக அங்கீகரிக்கும் என்று ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் நீதியான மற்றும் நீடித்த அமைதிக்கான அதன் வரலாற்று உறுதிப்பாட்டிற்கு உண்மையாக, பிரான்ஸ் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என்று நான் முடிவு செய்துள்ளேன். செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் முறையான அறிவிப்பை வெளியிடுவேன் என்று மக்ரோன் சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார்.

காசாவில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதும், பொதுமக்களுக்கு உதவி வழங்குவதும் இன்றைய அவசரத் தேவையாகும். அமைதி சாத்தியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

செப்டம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் கூறியதற்கு இசுரவேலிய பாதுகாப்பு அமைச்சர் இசுரவேல் காட்ஸ் பதிலடி கொடுத்துள்ளார்.

பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதற்கான தனது நோக்கத்தை மக்ரோன் அறிவித்தது ஒரு அவமானம் மற்றும் பயங்கரவாதத்திற்கு சரணடைதல் ஆகும், இது ஹோலோகாஸ்டுக்குப் பிறகு யூத மக்களின் மிகக் கொடூரமான படுகொலையைச் செய்த ஹமாஸின் கொலைகாரர்கள் மற்றும் பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கு வெகுமதியையும் ஊக்கத்தையும் வழங்குகிறது என்று காட்ஸ் எக்ஸ் தளத்தில் பதிவிட்டார்.

இந்த சோதனை நேரத்தில் இசுரவேலுடன் நிற்பதற்குப் பதிலாக, பிரான்ஸ் ஜனாதிபதி அதை பலவீனப்படுத்தச் செயல்படுகிறார்.



நமது பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கும், நமது இருப்புக்கு ஆபத்தை விளைவிக்கும் மற்றும் இசுரவேல் நிலத்திற்கான நமது வரலாற்று உரிமையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஒரு பாலஸ்தீன அமைப்பை நிறுவுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இந்த கடுமையான ஆபத்தைத் தடுக்க நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம் என அவர் தனது பதிவில் பதிவிட்டார்.

**எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் போராளிகளுக்கு அஞ்சலி சர்வதேச சட்டத்திற்கு முரணாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் போராளிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## எம் கண்களை குட்டிமணியின் கண்களாக கருதி தமிழ் ஈழம் காண்போம்

### நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

24.07.2025

நாற்பத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஈழத் தமிழர்கள் இலங்கை தீவில் தமிழ் இனப்படுகொலைக்கு உட்பட்டனர். இதில் 3000க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர், 100,000க்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்தனர், மேலும் 5000க்கும் மேற்பட்ட தமிழ் வியாபாரங்கள் அழிக்கப்பட்டன. மறைந்த இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி இதை ஒரு இன அழிப்புஎனக் கூறினார். International Commission of Jurists (சர்வதேசநீதியாளர்ஆணையம்) இதைத் தெளிவாக ஒரு இன அழிப்பு எனக் கூறியது. ஆனால் இதுவரை ஒருவரும் நீதிக்கு முன் கொண்டு வரப்படவில்லை. இதற்குக் காரணம், இந்த இனஅழிப்பு சிறீலங்கா அரசகட்டமைப்புகள் அனைத்தினாலும் நிகழ்த்தப்பட்டது என்பதே ஆகும்.

இந்த இன அழிப்பின்போது, 1983 ஜுலை 25 மற்றும் 27 ஆம் திகதிகளில், வெலிகடைசிறையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் சிறை அதிகாரிகளின் துணையுடன் படுகொலை செய்யப் பட்டனர். இந்தபடுகொலையில் TELO இயக்கத் தலைவர்கள் செல்வராஜா “குட்டிமணி” யோகசந்திரன், கணேஷனன் ஜெகநாதன் மற்றும் “காந்தியம்” அமைப்பின் தலைவர் டாக்டர ராஜசுந்தரம் ஆகியோர் கொல்லப்பட்டனர். குட்டிமணி மற்றும் ஜெகநாதன் இருவரும் தங்களின் கண்கள் தமிழ் ஈழம் பிறக்கும் நாளில் காணக்கூடிய தமிழருக்கு தானமாக வழங் கப்பட வேண்டும் என விரும்பினர். குட்டிமணியின் வார்த் தைகளில், “என் கண்களை கண்ணில்லாத நபருக்கு தானமாக அளிக்க வேண்டும், தமிழ் ஈழம் எனது கண்களால் காணப் படவேண்டும்” என்றார். சிறைச்சாலை படுகொலையில் இரு வரும் முதலில் முழங்காலில் நிறுத்தி ,இரும்புக் கம்பிகளைப் பயன் படுத்தி கண்கள் பிடுங்கப்பட்டன, கொடூரமாக கொலை செய்யப்பட்டனர். மேலும், ஒரு சிங்களக்கைதி குட்டிமணியின் நாக்கை வெட்டிச் சிவந்த அவரது இரத்தத்தை குடித்துவிட்டு, “நான் புலியின் இரத்தத்தை குடித்து விட்டேன்” எனப் பெருமை அடித்தார். மேற்கு கல்வி பெற்ற அமைச்சரான மறைந்த அதுலத்முதலி இதை “சிங்கள அசுரர்களின் இரத்தவெறி ஆசையை அடக்கிய ஒரு பலியீடு” என விவரித்தார். இதற்கும் இதுவரை நீதியின் முன் ஒருவரும் நிறுத்தப்படவில்லை

சிறீலங்கா அரசு இன்று வரை சிங்களை சிறையை தமிழ் அடக்கு முறைக்கு ஒரு ஆயதமாகப் பயன்படுத்துகிறது. போர் முடிந்து 16 ஆண்டுகள் ஆகியும், தமிழ் போர்க்கைதிகள் (POWs) இன்னும் சிங்கள சிறைகளில் அடைத்து வைக்கப் பட்டுள்ளனர். சிலர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக அடைத்து வைக்கப்பட்டுள்ளன்ர். 2002 ஆம் ஆண்டு சிறீலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் கையெழுத்திடப்பட்ட போர் நிறுத்த ஒப் பந்தத்தில், சிறீலங்காப் பிரதேசமும். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசமும் தெளிவாக வரையறுக்கப் பட்டுள்ளமை, போரும் அதில் ஈடுபட்டவர்கள் குறித்த நடவடிக்கைகள் யாவும் உள் நாட்டு சட்டங்களால் அல்ல மாறாக சர்வதேச சட்டங்களின் படி நடத்தப்பட வேண்டுமென எடுத்தியம்புகிறது. 3வது ஜெனீவா ஒப்பந்தத்தின் 118 ஆவது ஷரத்து போர் நிறைவுக்குப் பின்னர் போர்க்கைதிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண் டும் எனக் கூறுகிறது. ஆனால், சிறீலங்கா தொடர்ச்சியாக சர்வ தேச சட்டங்களை மீறிக் கொண்டே இருக்கிறது.

சிறீலங்காத் தீவில் அமைதியை உருவாக்குவதற்கு 3 வது ஜெனீவா ஒப்பந்தத்திற்கு முரணாக தடுத்து வைக்கப்பட்டுள்ள போர்க்கைதிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். கறுப்பு யூலை நினைவு நாளையொட்டி, சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தையை முன்னெடுத்த அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் நோர்வே, தமிழ்ப் போர்க் கைதிகளை விடிவிக்கும் முயற்சியில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என நாடு கடந்ததமிழீழ அரசாங்கம் கோருகிறது.

இவ் விடயம் தொடர்பாக “குரலற்றவர்களின்குரல்”, தாயக மனித உரிமை அமைப்பின் முயற்சிகளையும் நாடு கடந்ததமிழீழ அரசாங்கம் ஆதரிக்கிறது. சிங்கள சிறையில் படுகொலை

செய்யப்பட்ட தமிழ் வீரர்களையும், மக்களையும் நினைவு கூரும் சிறந்தவழி, இன்றும் சிறையில் அடைத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ் போர்க்கைதிகளை விடுவிப்பதற்கும், எங்கள் கண்களை குட்டிமணியின் கண்களாக கருதி தமிழ் ஈழத்தைப் காண்பதற்கும் எங்களை அர்ப்பணிப்பதே ஆகும்.

தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்ததமிழீழஅரசாங்கம்

# தாய்லாந்து – கம்போடியா மோதல்: 12 பேர் பலி

24.07.2025

தாய்லாந்து மற்றும் கம்போடிய துருப்புக்களுக்கு இடையேயான சர்ச்சைக்குரிய எல்லையில் ஏற்பட்ட மோதல்களில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டதாக தாய்லாந்து அதிகாரிகள் தெரிவிக் கின்றனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலோர் மூன்று தாய் மாகாணங் களைச் சேர்ந்த பொதுமக்கள், பலர் காயமடைந்ததாகத் தாய் லாந்து இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். கம்போடியா விற்கு ஏதேனும் உயிரிழப்புகள் ஏற்பட்டதா என்பதை இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

வியாழக்கிழமை அதிகாலை இரு தரப்பினரும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இருதரப்பினரும் மாறி மாறி ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி மோதலைத் தூண்டிவிட்டதாகக் கூறினர்.

தாய்லாந்து கம்போடியா ராக்கெட்டுகளை வீசியதாக தாய்லாந்து கூறியது. பாங்காக் கம்போடிய இராணுவ இலக்குகள் மீது தாய் லாந்து வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாக கம்போடியா குற்றம் சாட்டியது.

தாய்லாந்து கம்போடியாவுடனான தனது எல்லையை மூடி யுள்ளது. அதே நேரத்தில் கம்போடியா தனது இராணுவம் அதிகப்படியான பலத்தை பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டி, தாய்லாந்துடனான தனது உறவுகளைக் குறைத்துள்ளது.

இரு நாடுகளும் எல்லைக்கு அருகிலுள்ள தங்கள் குடிமக்களை அந்தப் பகுதிகளை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொண் டுள்ளன. தாய்லாந்து 40,000 பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றியுள்ளது.

சுரின், உபோன் ரட்சதானி மற்றும் ஸ்ரீசாகெட் மாகாணங்களில் எட்டு வயது குழந்தை மற்றும் 15 வயது குழந்தை உட்பட மொத் தம் 11 பொதுமக்களும், ஒரு ராணுவ வீரரும் கொல்லப்பட்டதாக தாய் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எல்லைக்கு அருகே தாய்லாந்து துருப்புக்களைக் கண்காணிக்க

கம்போடியாவின் இராணுவம் ட்ரோன்களை அனுப்பியதில் இருந்து இது தொடங்கியதாக தாய்லாந்து கூறுகிறது.

எல்லைக்கு அருகிலுள்ள ஒரு கெமர்-இந்து கோவிலை நோக்கி முன்னேறி, தாய்லாந்து வீரர்கள் ஒப்பந்தத்தை மீறி மோதலைத் தொடங்கியதாக கம்போடியா கூறுகிறது.

# ரஷ்யாவில் நிலநடுக்கம்: பல இலட்சம் மக்கள் வெளியேற்றம்

30.07.2025

ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தின் கடற்கரையில் 8.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதால் பசிபிக் பெருங்கடல் முழுவதும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது ஜப்பான் முதல் பெரு வரை பசிபிக் முழுவதும் மக்களை வெளி யேற்றத் தூண்டியுள்ளது. அமெரிக்காவின் ஹவாய் மற்றும் அலாஸ்கா மாநிலங்களும் அலைகளால் பாதிக்கப்படுகின்றன.

நிலநடுக்கம் காரணமாக பசிபிக் பெருங்கடல் முழுவதும் சுனாமி எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. கிழக்கில் ஜப்பான் முதல் மேற்கு அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் உள்ள கொலம்பியா மற்றும் பெரு போன்ற நாடுகள் வரை பாதிப்புக்கள் ஏற்பட்டன.

பசிபிக் தீவுக்கூட்டத்தின் முக்கிய குடியேற்றமான செவெரோ-குரில்ஸ்க் கடற்கரையை முதல் சுனாமி அலை தாக்கியதாக ரஷ்ய உள்ளூர் ஆளுநர் வலேரி லிமரென்கோ தெரிவித்தார்.

சுனாமி அலைகள் எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னர் அமெரிக்காவின் ஹவாய் மாநிலத்தைத் தாக்கியுள்ளன. ஹவாயில் உள்ள துறைமுகங்கள் மூடப்பட்டுள்ளன. குடியிருப் பாளர்கள் உயரமான இடங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அலைகள் வருவதால் ஹவாயில் உள் ளவர்கள் நான்காவது மாடி அல்லது அதற்கு மேற்பட்ட கட்டிடங்களுக்குச் செல்லுமாறு வலியுறுத்தப்படுகிறார்கள்.

ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தில் 8.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதில் காயமடைந்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நிலநடுக்கத்திற்குப் பின்னர் கமசட்காவில் பின்னதிர்வுகள் ஏற்படும் என்று ரஷ்ய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவின் ஹவாய் மாநிலத்திலும் அலைகள் கரையைக் கடந்துள்ளன, அலாஸ்காவும் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பசிபிக் பெருங்கடல் முழுவதும் மக்களை வெளியேற்றுதல், பெரு மற்றும் அண்டை நாடான சிலியிலும் சுனாமி எச்சரிக் கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

# இலங்கை தமிழர்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணை அவசியம் என பிரான்சின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

30.07.2025

இலங்கையில் தமிழர்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணை அவசியம் என பிரான்சின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் (17.07.2025) விடுத்துள்ளனர்.

பிரான்சின் எல்எவ்ஐ மற்றும் என்எவ்பி கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்திக்குறிப்பொன்றில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

தமிழர்களிற்கு எதிரான தசாப்தகால விசாரணைகளை கண்டித்துள்ள பிரான்சின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதி உண்மை மற்றும் இழப்பீட்டுக்கான உரிமையை வலியுறுத்தி யுள்ளனர்.

யுத்தத்தின் இறுதி மாதங்களில் இலங்கை அதிகாரிகளால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

பல அறிக்கைகள் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை 40,000 என்கின்றன என தெரிவித்துள்ள அவர்கள் பல்வேறு நிபுணர்களின் கருத்துப்படி இது பெரும்பாலும் குறைத்து மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையாகும் என தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் மீது கனரக ஆயுத தாக்கு தல்களை மேற்கொள்ளுதல், சட்டவிரோத படுகொலைகள், பாலியல் வன்முறைகள்,பலவந்தமாக காணாமல் போகச் செய்தல், சித்திரவதை மற்றும் போதிய மருத்துவ உணவு வசதியின்றி தமிழர்களை இடைத்தங்கள் முகாம்களில் அடைத்து வைத்திருத்தல் போன்றவற்றில் இலங்கை அர சாங்கம் ஈடுபட்டது என பல ஆவணங்களை மேற்கோள்காட்டி பிரான்சின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் செம்மணியில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதை தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள பிரான்சின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையில் யுத்த குற்றங்கள் இடம்பெற்றமையும் 80 வருடங்களாக தமிழர்கள் தொடர்ந்தும் அங்கு அமைதியாக வாழ முடியாத நிலை காணப் படுவதும் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள பிரான்சின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்கள் நீதியை கோரி நிற்கின்ற போதும்,இதுவரை சுயாதீன விசாரணை யெதுவும் இடம்பெறவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

பிரான்சின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது செய்திக்குறிப் பில் இலங்கையின் வடக்குகிழக்கில் சமீபத்தில் கண்டுபிடிக்கப் பட்ட மனித புதைகுழிகளை பட்டியலிட் டுள்ளதுடன், இது இலங்கை அரசாங்கம் நீண்டகாலமாக தண்டனையிலிருந்து விலக்களித்து வருவதை வெளிப் படுத்துகின்றது என குறிப் பிட்டுள்ளனர்.

இதன் காரணமாக இலங்கையில் தமிழ் மக்களிற்கு எதிராக போர்க்குற்றங்கள் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் இடம் பெற்றது என்பதை பிரான்ஸ் அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும், என வேண்டுகோள் விடுத்துள்ள பிரான்சின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரான்ஸ் நம்பகதன்மை மிக்க நீதி செயற்பாட்டிற்கு ஆதரவளிக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

செம்மணி மனித புதைகுழிகள் சர்வதேச நீதிமன்றத்தின் முன் சட்ட நடவடிக் கைகளை ஆரம்பிப்பதற்கும் இவற்றிற்கு காரண மானவர்களை பொறுப்புக் கூறலிற்கு உட்படுத்துவதற்கும் முக் கியமான வாய்ப்பை வழங்குகின்றன என பிரான்ஸ் நாடாளு மன்ற உறுப் பினர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரான்சில் வசிக்கும் 220,000 தமிழ் வம்சாவளி மக்கள், அவர்களில் பெரும் பாலோர் 1980 களில் போரிலிருந்து தப்பி ஓட வந்தவர்கள், உலகெங்கிலும் உள்ள மற்ற தமிழ் சமூகத்தைப் போலவே, அவர்களுக்கு உண்மை, நீதி மற்றும் இழப்பீடு அவசரமாகத் தேவை" என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கூட்டுப் பிரகடனத்தில் LFI-NFP கூட் டணியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் தேசிய சட்டமன்ற உறுப்பினர்களான கார்லோஸ் மார்டென்ஸ் பிலோங்கோ (வால் டி'ஓய்ஸ்), எரிக் கோக்வெரல், அலி டியோரா மற்றும் தாமஸ் போர்டெஸ் (சீன்-செயிண்ட்-டெனிஸ்), பெர்செவல் கெய்லார்ட் மற்றும் ஜீன்-ஹியூஸ் ரேட்டன் (ரீயூனியன்) ஆகியோர் கையெழுத்திட்டனர்.

COMMUNIQUÉ DE PRESSE | 17.07.2025



Justice et réparation pour le peuple Tamoul

Dans les derniers mois de la guerre civile, des dizaines de milliers de Tamouls ont été massacrés par les autorités Sri Lankaises. Différents rapports établissent le bilan de la longue guerre civile à 40 000 morts, un décompte encore largement sous-estimé selon différents experts. Les ONGs indépendantes et l'ONU ont fait état de nombreux abus du droit international et des droits humains par les autorités successives du Sri-Lanka visant le peuple Tamoul, comme l'utilisation d'armes lourdes dans des zones civiles, des exécutions extrajudiciaires, des viols, des disparitions forcées, des actes de tortures, ainsi que des détentions massives dans des camps sans accès aux soins ni aide juridique.

Des décennies plus tard, les preuves des crimes contre l'humanité commis à l'encontre du peuple Tamoul continuent d'émerger. En février 2025, des ouvriers ont découvert des restes humains à Chemmani, au Sri Lanka. Depuis, les fouilles ont mis au jour au moins 33 squelettes, dont plusieurs seraient ceux d'enfants. C'est d'ailleurs la deuxième fois qu'une fosse commune est découverte sur ce même site de Chemmani. En 1999, à la suite d'aveux du caporal Somaratna Rajapakse, qui avait servi dans le nord du Sri Lanka en 1995-1996, une fosse contenant 15 restes squelettiques avait déjà été découverte.

D'autres fosses communes ont aussi été découvertes ces dernières années dans les provinces du Nord et de l'Est, notamment à Thiruketheeswaram, dans le district de Mannar, en 2013, mais aussi à Kalavanchikudy, dans le district de Batticaloa, en 2014, dans l'enceinte de l'Établissement coopératif de vente en gros à Mannar en 2018 où encore à Kokkuthoduvai, dans le district de Mullaitivu en 2021.

L'existence de crimes de guerre et l'impossibilité persistante pour le peuple Tamoul de vivre en paix au Sri Lanka depuis plus de 80 ans sont clairement établis. Pourtant, alors que le peuple Tamoul demande justice, aucune enquête indépendante n'a à ce jour pu être menée.

**Aussi, la France doit s'engager en faveur d'une reconnaissance des crimes de guerre et des crimes contre l'humanité commis à l'encontre du peuple Tamoul au Sri-Lanka. En ce sens, nous appelons à ce que notre pays réclame une enquête indépendante internationale,**

# செப்டம்பர் மாத்தில் இங்கிலாந்து பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும்

## இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டாமெர்

30.07.2025

காசாவில் நிலவும் பயங்கரமான சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டு வர இசுரவேல் கணிசமான நடவடிக்கைகளை எடுக் காவிட்டால்" செப்டம்பர் மாதத்தில் இங்கிலாந்து பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என்று இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டாமெர் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தம், இரண்டு தேசத்தினை உறுதி செய்யும் நீண்ட காலதீர்விற்கு அர்ப்பணித்தல், ஐக்கியநாடுகள் காசாவில் மீண் டும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அனுமதித்தல் போன்ற நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என தெரிவித்துள்ள பிரிட்டிஸ் பிரதமர் இல்லாவிட்டால் எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஐக்கியநாடுகள் பொதுச்சபையின் அமர்வில் பிரிட்டன் நடவடிக்கை எடுக்கும் என தெரிவித்துள்ளார்.

காசாவில் காணப்படும் சகிக்கமுடியாத நிலைமை காரண மாகவும், இரண்டுதேசத்திற்கான வாய்ப்புகள் குறைவடை கின்றன என்ற கரிசனை காரணமாகவும் இந்த நடவடிக் கைகளை அறிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca




சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# உயிரிலும் உன்னதமானது

# எமது உரிமை
# எமது சுதந்திரம்
# எமது கௌரவம்

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –

"எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது; வீர காவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவையெல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள். ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து, ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி; தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி; உலகத்தின் மனச்சாட்சியைத் தீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்கான இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தம் என்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச்செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது?

திலீபன் உங்களுக்காக இறந்தான்; உங்கள் மண்ணுக்காக இறந்தான்; உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால், நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன்; அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை; காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழந்துகொண் டிருக்கிறான்".

*– தமிழீழத் தேசியத் தலைவரின் "எனது மக்களின் விடுதலைக்காக" என்ற நூலில் இருந்து.*

Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும் பொன் நகை மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்

HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com

K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# நீதி செத்துக் கிடக்கிறது...
# பொதிசுமக்கும் கழுதை பேசாமற் கிடக்கிறது...

ஒப்புக்குப் போர்த்திய பட்டுச் சட்டடையின் உள்ளே
ஒட்டியுலர்ந்துளது உடலொன்று!
பட்டினி கிடக்கும் பாழும் குடலை மறைத்து,
பசித்தவயிறுக்குப் பன்னீர் தெளித்து,
உலகுக்கொரு "ஓரங்க நாடகத்தை" ஒப்பேற்றியுள்ளனர்.
வேருக்கு விஷநீர் பாய்ச்சிவிட்டு
விழுதுக்கு வெளிச்சம் போட்டுள்ளனர்.
"கிருஷாந்தி கொலைவழக்கில் எதிரிகளுக்கு மரணதண்டனை"
செம்மணிக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாம்.
எரிவாய்க்குப் புனுகுதடவி
கொளுத்திய குற்றம் குறைக்கப்பட்டுள்ளது.
எய்தவனிருக்க அம்புக்குத் தண்டனை.
கிருஷாந்தி மீதான முலைதிருகலும், நகக்கீறல்களும்
வக்கிரகாமத்தின் வடிகாலல்ல-
ஒரு இனத்தின் மீதான அடக்குமுறை அடையாளங்கள்.
செம்மணியிற் புதைத்தது உயிரற்ற உடலங்களைமட்டுமல்ல -
எம்மினத்தின் "வாழ்தல் உரிமையின்" குறியீடுகளையும்தான்.
நான் ஆள்பவன்... நீ ஆளப்படுபவன்... என்ற
அதிகாரத்தின் அளவிடுதலிது.
"நாவற்குழியில் நானூறு உடல்களுக்குமேல்
புதைக்கப்பட்டிருக்கும்"
சொன்னவன், பார்த்தவன் மட்டுமல்ல -
செய்தவனும்கூட.
சொல்லிய இடமும் கள்ளுக்கடையின் தாழ்வாரத்திலல்ல,
தீர்ப்பெழுதும் "தர்மதேவதை"யின் திருக்கோவிலில்.
நாலுபேருக்கு நீதிவழங்கிய "நல்லவர்களே"
நானூறுபேருக்கு நீதி எங்கே?
வாழ்வை முடித்தேகிய சோதரிக்காக வாதாடியவர்களே!
வாழ்ந்து கொண்டிருக்கும் கிருஷாந்திகளுக்காக
தீர்ப்பெழுதும் "தேவதை" சிம்மாசனமேறுவது எப்போது?
மனிதஉரிமை வாய்களுக்கும் பொரியரிசிபோட்டு
அநியாய நாடகத்தை அரங்கேற்றிவிட்டனர்.
செம்மணி வயல்வெளியே!
எலும்புக்கூடுகளைச் சுமந்து உறங்கிக்கிடப்பாயாக.
செம்மணியின் உரமான "சீவன் முத்தர்கள்"
யார் யாரென்பது யாருக்குத் தெரியும்?
அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து வாக்களிக்கும்
"பெரியவர்" களுக்கு தெரியும்.
வன்னி நிவாரணத்திற்குக்கூட வரி கேட்டு நின்ற
"சின்னத் தலைவர்" களுக்குத் தெரியும்,
மாநகரசபையை ஆளவந்துள்ள "மன்னவனுக்குத்" தெரியும்.
எல்லோரும் சேர்ந்தே எங்களை ஏமாற்றுகின்றனர்.
காணாமற் போனவரைக் கருவிற் சுமந்தோரே!
இனி நல்லூரின் வீதியில் உண்ணாவிரதம் இருக்காதீர்.
கச்சேரிக்கு முன்பாக கண்டன ஊர்வலம் நடத்தாதீர்.
ஐ.சி.ஆர்.சீக்கு மகஜர் அனுப்பாதீர்.
கண்டுபிடித்துத் தருவதாகக் கூறும் "கட்சிக்காரர்" களைப் பிடித்துத்
தண்டிக்க எழுவீர்.
களுத்துறையில் "தர்மம்" கழுத்துவரை சென்றுவிட்டு
பிளைத்துப்போவென்று போட்டுவிட்டுப் போனதாம்.
அனுங்கிக் கொண்டு கிடந்ததாம் "அதர்மம்".
எழுவீர் எம்மக்களே!
காலச்சூதைக் கழுவேற்ற வேண்டும்.
நீதி செத்துக் கிடக்கிறது.
"பொதி சுமக்கும் கழுதை" பேசாமற்கிடக்கிறது.
இளிச்சவாயர் தமிழரென்ற இளக்காரம் எரிந்துபட
வெளிச்சங்களே! வீதியில் இறங்குங்கள்.
முகத்தை முத்தமிடும் காற்றை மூச்சுக்குழலிட்டு,
சின்னசின்னக் கூடுகளைக்கட்டி
சீவித்திருந்தன குருவிகள்,
மலைகளற்ற ஊரெனினும் உயர எழுந்து
சிட்டுக்குருவிகள் சிறகடித்தன.
பருந்துகளுக்கு சகிக்க முடியவில்லை.
பச்சைவயல்களிற் பாதம்பதித்து
ஓடும் வாய்க்காலில் உடல் நனைத்தன மணிப்புறாக்கள்.
கழுகுகளுக்கு மனம் பொறுக்கவில்லை.
சந்திரனிலிறங்கும் கனவுகளோ,
இந்திர வாழ்வுக்கான எதிர்பார்ப்புகளோ,
எதுவுமின்றி இன்புற்றன பொன்வண்டுகள்.
சுமையற்ற வாழ்வே சுகமெனக் கருதியதால்
அமைதியுற்றிருந்தது குருவிகளின் அன்றாடம்.
அதையும் இல்லாதாக்கினாள்
நிலவின் மறுநாமம் கொண்ட "நெட்டூரீ:
"பெண்ணான மாயப்பிசாசு" என்று
சித்தர்கள் வார்த்தைச் சாட்டையால் விளாசியது
எல்லாப் பெண்களையுமென்று எண்ணவேண்டாம்.
கொத்தியெரிக்க வருமொரு "குடிகேடி" என்று
முக்காலமுணர்ந்த முனிவர்கள்
வருங்காலமுணர்த்திய வரிகளவை.
அப்பன் ஐம்பத்தாறிலும்,
ஆத்தாள் எழுபத்தேழிலும்,
மகளானவள் இன்றுமாக
தமிழன் குருதியில் ஜலக்கிரீடை.
கோழிபிடிக்கத் தெரியாத புனைகள் சில
கோமணம் கட்டினவாம்.
அதுபோல
எங்களுள்ளும் சில கோமாளிகள்
பாதம் கழுவும் பல்லக்குக்காவிகள்.
சாயம் போன சேலைக்கு நீலம் போடுகின்றனர்.
ரோஷநரம்பையே அறுத்தெறிந்து ஆடுபவர்களுக்கு
வீர உணர்வுபற்றி விளக்கம் வேண்டியதில்லை.
எம்தேசமே! எழுக.
காட்டிக்கொடுப்பவரின் கழுத்தை நெரித்திடுக.
இருளை ஆனந்தமென இருக்குதொரு கூட்டம்.
விடிகாலை இவர்களுக்கு வேம்பு
இட்டபணிக்கு ஏவல்செய்வதே இன்பம்.
"தேசியநீரோட்டத்திற்குத் திரும்பியவர்" என்று
கூசாமற் கூறும் குறைப்பிரசவங்கள்.
நிமிர்ந்த வாழ்வை நிறுத்து விற்றுவிட்டு
அயர்ந்து கிடக்கின்ற அற்பங்கள்.
பேய்கள் வந்து உன் ஊரைக் கலக்கும்போது
தாயாளையும் விற்றுச் சாப்பிடும் தலையாட்டிகளை
எது செய்யப்போகிறாய்?
திசையெட்டுமதிரத் தலைவிரித்தாடு தாயே.
வசையழிந்து போகட்டும்.
இனிக் கிருஷாந்திக்காக எவரும் அழவேண்டாம்.
அவளை ஒருமுறை புதைத்தது போதும்.
தோண்டியெடுத்து மீண்டும் மீண்டும் புதைக்க வேண்டாம்.
"என்னைப் புதைத்தவரைப் புதையுங்கள்
உங்களைப் புதைக்காதிருக்கப் புறப்படுங்கள்."
இது கிருஷாந்தியின் அசரீரி.
சோதரி பாரச்சிலுவை சுமந்து போய்விட்டாள்.
இனியேனும் எழுவீர்.
நாவற்குழியுள்ள நானூறு உடலங்கள் மீதும்
உறுதியொன்றெடுத்து உயர்வோம்.
வீரியமுள்ளவரின் கைக்கெட்டும் தூரத்திற்தான்
சூரியனுள்ளது.
"எடுத்தகாரியம் யாவிலும் வெற்றி"
காலையில் வானொலி சொல்வதின் அர்த்தம் புரிகிறதா?
நீ அதிரநடந்தாற் போதும்.
பூகம்பம் வாய்புதைத்துக் கொள்ளும்.
இன்னும் உறக்கமா?
உன்வழி திறக்குமா?

- உலைக்களம், வியாசன்
களத்தில் (26.08.1998)

# மணலாற்றுச் சமர்

## 29.08.1991 - 26.09.1991

**கடந்த 29.08.1991 இலிருந்து 26.09.1991 வரையுள்ள 28 நாட்களும் மணலாற்றுப்பகுதியில் இராணுவ நட வடிக்கைகளில் ஈடுபட்ட சிங்களப்படைகளை எதிர்த்து நாம் ஒரு சமரை நடாத்தியுள்ளோம்.**

**ஆனையிறவைவிட அதிகளவு பலத்தை மணலாற்றுச் சமரில் பிரயோகித்ததாக சிங்கள அரசு கூறியுள்ளது.**

**இத்தகையதொரு பாரிய இராணுவ நடவடிக்கையை மேற் கொள்வதற்கு சிங்கள அரசிற்கிருந்த தேவை என்ன? மணலாற்றின் முக்கியத்துவம் எத்தகையது? இந்தச்சமரின் முடிவும், விளைவும் எப்படி இருந்தது? என்பதை இங்கே பார்ப்போம்.**

**28 நாட்கள் நடந்த இக்காட்டுச்சமரில் 200ற்கும் மேற்பட்ட லிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். சுமார் 500 போராளிகள் காயமடைந்துள்ளனர்.**

**இராணுவ தரப்பில் 300ற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப் பட்டிருக்கின்றார்கள். பல நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.**

மணலாறு மாவட்டம் தமிழீழத்தின் ஒன்பதாவது மாவட்ட மாகும். வட-தென் தமிழீழத்தை இணைக்கும் கேந்திரமுக் கியத்துவம் வாய்ந்த ஒரு நிலப்பகுதியிலேயே மணலாறு மாவட்டம் அமைந்துள்ளது.

மிகப் பெரிய காட்டுவளத்தைக்கொண்ட இப்பகுதி பழந்தமிழரின் பூர்வீகநிலம் என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கள - பௌத்த பேரின வாத அரசு தமிழ்த் தேசியத்தைச் சிதைத்து கருவறுக்க முனைந்து வருவதை உலகம் அறிவும்.

தமிழீழ மக்களின் தேசிய இன நிலைப்பாட்டை சிதைத்து, அவர்களின் தேசிய இன உணர்வுகளை மழுங்கடிப்பதற்காக நீண்டகாலைத்திற்கு முன்பிருந்தே சிங்கள அரசுகள், பேரின வாத சக்திகள் ஆகியன கூட்டாகச் சேர்ந்து ஒரு போர்முறைத் திட் டத்தை (STRATEGIC) வகுத்துச் செயற்படுத்தி வருகின்றார்கள்.

“தமிழீழ தேசியத்தை அழித்தொழித்தல்” என்ற அரசியல் இலக் கைக்கொண்ட இப் போர்முறை திட்டம் ஐந்து தாக்குதற் திட்டங் களுக்கூடாக செயற்படுத்தப்பட்டுவந்தது:

1. தமிழரின் மொழியைச் சிதைத்தல்.
2. தமிழரின் பண்பாட்டை அழித்தல்.
3. தமிழரின் பொருளாதார பலத்தை முறியடித்தல்.
4. தமிழரின் தாயகநிலத்தைப் பிரித்துச் சிதைத்தல்.
5. தமிழ் மக்கள் மீது இனக்கொலையை கட்டவிழ்த்து விடல் என்பனவே அவையாகும்.

இத்தாக்குதற் திட்டங்களை நிறைவேற்றி தமது போர்முறைத் திட்டத்தின் இலக்கை அடைவதற்காக மாறி மாறிவந்த சிங்கள அரசுகள் பலவழிமுறைகளையும், தந்திரேபாயங்களையும் செயற்படுத்திவந்தன.

அதில் ஒன்றுதான் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாகும். தமிழீழத்தின் எல்லைப்புறங்கள் அனைத்திலுமே திட்டமிட்டரீதி யில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இவை புற்றுநோய் போன்று பரவி, தமிழரின் நிலங்களை அப கரித்து சிங்கள மயமாக்கத் தொடங்கின.

முன்னர் முல்லைத்தீவு - திருக்கோணமலை மாவட்டங் களுக்குள் அடங்கியிருந்த ஒரு வளம்மிக்க பகுதியாகிய மண லாற்றுப் பிரதேசமும் இவ்விதம் சிங்களக்குடியேற்றம் என்ற புற்றுநோய்க்கு இலக்காகியது. இதன் உச்சக்கட்டமாக மண லாறு பகுதி வெலிஓயா என பெயர் மாற்றப்பட்டதுடன், தமிழரின் மாவட்டங்களாகிய திருக்கோணமலை முல்லைத்தீவுக்குள் அமைந்திருந்த மணலாற்றுப்பகுதியை சிங்களவரின் மாவட்ட மான அநுராதபுரத்துடன் இணைத்து அதனை முழுமையான சிங்களப் பகுதியாக மாற்றுவதே இனவாத சிறீலங்கா அரசின் நோக்கமாகும்.

இதன்மூலம் வட - தென் தமிழீழத்தின நிலத் தொடர்பை துண்டித்து தமிழரின் தாயகத்தை இரு கூறாக்கித் தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதே சிங்கள அரசின் பிரதான நோக்கமாக இருந்துவருகின்றது.

ஆனால் சிறீலங்கா அரசின் இவ் இனவாத நோக்கத்துக்கு - மணலாற்றுப் பகுதி மீது நாம் வைத்திருக்கும் இராணுவ மேலாண்மை ஒரு தடைக்கல்லாக இருக்கின்றது.

இவ் இராணுவமேலாண்மையை முறியடித்து மணலாற்றுப் பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து தமிழர் பலத்தை சிதைப்பதுதான் மணலாறின் மீதான எதிரியின் தற்போதைய இராணுவ நடவடிக்கையின் நோக்கமாகும்.

இதற்காகவே விமானப் படைகளின் உதவியுடன் பாரியதொரு இராணுவ நடவடிக்கையை சிங்கள இராணுவம் தொடக் கிவைத்தது.

இவ் இராணுவ நடவடிக்கைக்கு எதிராக பெரும் சமர் ஒன்றை நடாத்தி எதிரியின் திட்டத்தை முறியடித்துள்ளோம்.

தமிழீழ நில ஒருமைப்பாட்டுக்கு அபாயம் விளைவிக்க முயன்ற இந்த இராணுவ நடவடிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் பொடியாக்க 200ற்கும் மேற்பட்ட புலி வீரர்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்துள்ளார்கள்.

### சமர் பல கண்ட மணலாறு

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10ஆம் திகதி இந்திய ஆக்கிரமிப் புப்படைகளுக்கு எதிராக புலிப்படையின் வரலாற்றுப்போர் தொடங்கியது.

ஆரம்பத்தில் இப்போரின் மையம் யாழ்குடா நாட்டிலேயே இருந்தது.
இந்திய - புலிகள் போர் தொடங்கி சுமார் ஒரு மாத காலம்வரை நடந்த யாழ்ப்பாணச் சமர் (BATTLE OF JAFFNA) புலிகளின் போர்த் திறனை முகர்ந்து பார்க்க இந்திய இராணுவத்திற்கு உதவிய முதற்சமர், எனச் சொன்னால் அது மிகையாகாது.

புகழ்பெற்ற யாழ்ப்பாணச் சமருக்குப் பின்னர் தலைவர் பிரபா கரன் அவர்கள் மணலாற்றுக்காட்டிலேயே இருந்து இந்திய - புலிகள் போரை வழிநடாத்தினார். இதனால் இந்திய அரசின் முழுக்கவனமும் மணலாற்றின் மீதே திரும்பியது.

மணலாறு போர்க்களமாகின்றது.

இந்திய இராணுவம் எங்குமே சந்தித்திருக்காத வரலாற்றுச் சமர்கள் மணலாற்றில் நிகழ்கின்றன.

உலகப்புகழ் வாய்ந்தவை எனச்சொல்லப்படும் பஞ்சாப், கூர்க்கா படையணிகளும், ஆசாம், மணிப்பூர் காடுகளில் இந்திய கெரில் லாக்களுடன் சண்டையிட்டு அனுபவம் பெற்ற சிறப்புப்படை யணிகளும் மணலாற்றுக்காட்டுக்குள் ஏவிவிடப்பட்டன.

கத்தி எடுத்தால் இரத்தம் காணாது உறைக்குள் செல்லமறுத்த கூர்க்காக்களின் கத்திகள் கறையான் புற்றுக்குள்ளும், பற் றைகளுக்குள்ளும் சொருகப்பட்டன.

ஆயுதபாணிகளாக நின்றால் புலிகள் கொன்று விடுவார்கள் என

மணலாற்றுச் சமரில்
17.09.1991 அன்று வீரச்சாவடைந்த
சாள்ஸ் அன்ரனி சிறப்புப்
படையணியின் 3வது பொறுப்பாளர்.

**லெப். கேணல் ஜஸ்ரின்**
**[பொன்னுச்சாமி பாஸ்கரன்]**
**தையிட்டி, காங்கேசன்துறை,**
பிறப்பு: 09.04.1962



மணலாற்றுச் சமர் முனையில் புலிவீரர்கள்.

மணலாற்றில் சமர்புரியும் ஒவ்வொரு புலிவீரனும், தான் தமிழீழ தேசத்தின் இதயத்தைப் பாதுகாப்பதாகவே நினைத்துக் கொள்கிறான். அதனால், அந்த உறுதியையும், வியக்கத்தக்க போர்த்திறனையும் காட்டி எமது போராளிகள் அங்கு போரிடுகின்றார்கள்.

அஞ்சி தமது துப்பாக்கிகளையும் எறிந்துவிட்டு கத்திகளையும் பயத்தில் மறைத்து வரலாறு நிகழ்ந்த இடம்தான் மணலாறு.

இந்திய - புலிகள் போரின் தலைவிதியை நிர்ணயித்த சமர்கள் பல நிகழ்ந்த இடம் தான் மணலாறு.

சுருக்கமாகச் சொன்னால் இந்திய ஆக்கிரமிப்புப்படைகளின் வெளியேற்றத்திற்கு களமாக இருந்தது மணலாறு மாவட்டமே யாகும்.

இத்தகைய சமர் பல கண்ட மணலாற்றில்தான் சிங்கள இராணுவமும் தனது பலத்தைக் காட்ட முயற்சித்தது.

28 நாட்கள் நடந்த இந்த வரலாற்றுச் சமரில் காட்டை நாசப் படுத்தியதைத்தவிர சிங்கள இராணுவம் பெரிதாக எதையுமே சாதிக்கவில்லை.

இந்த மணலாற்றுச்சமரில் எதிரி காட்டிய மிகப் பெரிய பலம் அதனது இராணுவமோ அல்லது அதன் போர்த்திறனோ அல்ல. அவன் பயன்படுத்திய தொன்கணக்கான வெடிமருந்துகள் தான்.
விமானக்குண்டடகளும், எறிகணைகளும் 24 மணிநேரமும் மிகத்தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன.

சிறீலங்கா அரசு புதிதாகக் கொள்வனவு செய்த சீன விமானங் களையும் இச் சமரில் பயன்படுத்தியது.

மணலாற்றுச் சமரில் எதிரி பயன்படுத்திய வெடிமருந்து என்பது உண்மையில் சிறீலங்கா அரசின் சக்திக்கு அப்பாற்பட்டது என்பது தெளிவு.

இறுதியாக எதையோ சாதிப்பதற்காக சிறீலங்கா அரசு ஒரு முக்கு முக்கியிருக்கின்றது. ஆனால் எதையுமே அது சாதிக்கவில்லை.

ஆனாலும், மணலாற:றுச் சமரில் எதிரி பயன்படுத்திய படைக் கல சக்தியை (FIRE POWER) தொடர்ந்துவரும் சமர்களிலும் பயன்படுத்த முடியாது என்பது வெளிப்படை, அதற்கு சிறீலங்கா அரசின் எந்த வளமும் இடங்கொடாது.

மணலாற்றிலுள்ள சட்ட விரோத சிங்களக் குடியேற்றங்களில ிருந்து "ஆட்டிலறி" எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டபடி "பிறை" வடிவில் மணலாற்றுக்காட்டுக்குள் இராணுவம் புகுந்த போதும் எமது பிரதான முகாம்களுக்குள் இராணுவம் நுழையவேயில்லை.

காட்டின் ஓரங்களிலும் அதற்குச்சற்று உள்ளேயும் இருந்த மூன்று முகாம்களைத் தவிர வேறெதற்கும் இராணுவம் செல்ல வில்லை.

சிங்கள அரசு பிரசாரம் செய்வதுபோல் எமது ஆயதங் களையோ, இயந்திரதளபாடங்களையோ இராணுவம் கைப்பற றவில்லை.

இந்தச் சமரில் தனது பக்க இழப்புகளை இராணுவம் மறைத் துள்ளது என்பது அப்பட்டமாக நிரூபிக்கக்கூடியது.




ஏனெனில் ஆனையிறவுச் சமரைவிட மணலாற்றுச் சமர் கடுமையாக நடக்கின்றது என இராணுவ உயர் அதிகாரிகள் பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனயைிறவில் 200றகும் மேறபட்ட இராணுவத்தினர் கொல லப்பட்டனர் என அரசாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டது.

உண்மையில் இது 400றகும் மேல் என்பது குறிப்பிடத்தக்கது. சிறீலங்கா அரசு தனது இழப்புக்களை குறைத்துக் காட்டுவது வழமை என உலகச்செய்தி நிறுவனங்களே குறைகூறியுள் ளதும் இங்கு கவனிக்கத்தக்கது.

அப்படியாயின், ஆனையிறவைவிட கடமையான சமர் மண லாற்றில் நடந்தது என்பதன் அர்த்தம் ஆனையிறவைவிட அதிக இழப்பை இராணுவம் சந்தித்துள்ளது என்பதே உண்மை யாகும்.

29.08.1991 அன்று "மின்னல் நடவடிக்கை" (OPERATION LIGHTING) எனப் பெயர் சூட்டிவிட்டு மணலாற்றுக் காட்டுக்குள் இராணுவம் புகத்தொடங்கியது.

மணலாற்றுப்பகுதியிலிருந்து வீடுகள், விளைச்சல் நிலங்கள், காட்டுமிருகங்கள், கால்நடைகளை அழித்துக் கொண்டு இந்த மின்னல் கீற்றுக்கள் மணலாற்றுக்காட்டுக்குள் நுழைய 27 நாட்கள் எடுத்தன.

மின்னல் வேகத்தில் காட்டை ஊடறுத்துச் செல்வதற்குப்பதிலாக நத்தை வேகத்தில் சென்ற இக் கீற்றுக்கள் குறித்து இலக்கைச் சென்றடையாமலே திரும்பியனுப்பப்பட்டுவிட்டன.

அதிவேகம், அல்லது பலமானவேகம் (ஒப்பறேசன் பலவேகய) எனப் பெயர் சூட்டப்பட்டு 14.07.1991 அன்று வெற்றிலைக்கேணி யில் கொண்டு சென்று தரையிறக்கப்பட்ட சிங்களப்படைகள் 8 கி. மீ. தூரத்திலிருந்த ஆனையிறவு தளத்தைச் சென்றடைய 24 நாட்கள் எடுத்தன. அதைப் போன்றே "மின்னல் நடவடிக்கை" எனப் பெயர் சூட்டிவிட்டு மணலாற்றில் எதிரி நடாத்திய இரா ணுவ நடவடிக்கையும் பொருளற்றுப்போய் விட்டது.

சிறீலங்கா இராணுவத்தினது விருப்பங்களும், முயற்சிகளும் நிறைவேற்றப்பட முடியாதவையாக வளர்ந்து செல்கின்றன என் பதனைத்தான் கடந்த இரண்டு பெரும் சமர்களும் நிரூபிக் கின்றன.

- விடுதலைப்புலிகள் (ஆவணி - புரட்டாதி, 1991)



# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# சாம்பல்தீவு படுகொலை 04,09.08.1985

திருகோணமலையிலிருந்து தமிழ்மக்களை விரட்டும் நோக்கத்துடன் 04.09.1985க்கும் 09.09.1985க்கும் இடைப்பட்ட காலத்தில் பெரிய எடுப்பில் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சிறீலங்கா அரசின் முப்படைகளும் பொதுமக்கள் மீதான இந்நடவடிக்கையில் ஈடுபட்டன.

ஊர்காவற்படையும், சிறீலங்கா இராணுவத்தினரும் கனஆயுதங்களுடன் மத்திய வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்பு வெளி, 3ம் கட்டை, நாவலர் வீதி ஆகிய இடங்களில் இறங்கித் தமிழரை தாக்கத் தொடங்கினர். 1500 வரையான வீடுகளும், சிவானந்தம் தபோவனம் எனப்படும் 200 சிறுவர்களை பராமரித்து வந்த சிறுவர் இல்லமும், பல கடைகளும் அழிக்கப்பட்டன. தமிழ் மீனவர்களுடைய மீன்பிடி உபகரணங்கள் சூறையாடப்பட்டது. 25க்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டனர். ஊடகவியலாளர்கள் எவரும் இவ்விடங்களுக்குச் செல்ல அநுமதிக்கப்படவில்லை.

அப்போது பிரஜைகள் குழுத் தலைவராக இருந்த பாடசாலை அதிபர் ஒருவர் எழுதிய அறிக்கையின்படி யூன் 1985இல் மட்டும் 311 பொதுமக்கள் திருகோணமலையில் கொல்லப்பட்டுள்ளனர். செப்டம்பர் மாதத்தில் 383 பொது மக்கள் கொல்லப்பட்டனர். இவ்வறிக்கைபற்றி யாழ்பாணத்திலிருந்து அக்காலத்தில் வெளி வந்து கொண்டிருந்த 21.12.1985 சற்றடே ரிவ்யூ பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பூந்தோட்டச்சந்தி படுகொலை 10.08.1985

வவுனியா நகரிலிருந்து கிழக்கே மூன்று கி.மீ. தூரத்தில் பூந்தோட்டம் அமைந்துள்ளது. வயல்களாற் சூழப்பட்ட இக்கிராமத்தில் அதிகமானவர்கள் விவசாயிகளாவர்.

10.08.1985 அன்று காலை 7மணியளவில் வழமைபோல் மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சந்தைக்குப் பொருட்கள் வாங்க மற்றும் விற்கச்செல்வோர், வைத்தியசாலைக்குச்செல்வோர், பாடசாலை செல்வோர் எனப் பூந்தோட்டம் வீதியால் அதிகளவான மக்கள் பயணம் செய்தனர். அந்த நேரம் அவ்வீதியால் வாகனத்தில் வந்த காவற்றுறையினர் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் பத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர்காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 வெள்ளையன் தேவதாஸ் - லொறி கிளினர் - 20
02 பொன்னம்பலம் வில்வராஜ் - வியாபாரம் - 22
03 கதிரேசு சுந்திரசேகரம் - மருந்துத் தொழிலாளர் - 25
04 சிங்காரம் நாகலிங்கம் - தொழிலாளி - 33
05 முனியாண்டி மூக்கன் - தொழிலாளி - 34
06 வீரமாரெட்டியர் கோவிந்தராஜ் - வியாபாரம் - 38
07 சின்னக்கருப்பன் கிட்ணசாமி - தொழிலாளி - 40
08 துரைராஜா நடேசபிள்ளை - உதவி முகாமையாளர் - 43
09 கறுப்பையா ராமராஜ் - வியாபாரம் - 48
10 கோவிந்தசாமி சிங்காரவேலு - கமம் - 63

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கள்ளம்பற்றைச் சந்தி படுகொலை 10.08.1985

திருகோணமலை மாவட்டத்தின் புகழ் பெற்ற இடங்களில் ஒன்றான திரியாய்க் கிராமம். திருகோணமலையிலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு இனக்கலவரத்தினால் பாதிப்படைந்த மக்கள் அகதி முகாம்களிற் தஞ்சமடைந்திருந்தனர்.

முகாமிற்கு வந்த இராணுவத்தினர் வன்முறைகளால் இடம் பெயர்ந்து வந்திருந்த மக்கள் ஒன்பது பேரைக் கைது செய்து அழைத்துச் சென்றார்கள். இவ்வாறு கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட மக்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக கள்ளம்பற்றைச் சந்தியிலிருந்து மீட்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இடம் பெயர்ந்து வந்த தமிழர்கள் ஆவர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 நாராயணன் ஜெகநாதன் - கல்லுடைத்தல் - 48
02 சுப்பிரமணியம் நாராயணபிள்ளை - கிராமசேவகர் - 45
03 மாணிக்கம் கிருஸ்ணமூர்த்தி - -
04 நாகேஸ் --

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# வல்வைப் படுகொலைகள்

# 02, 03, 04. 08.1989

தமிழர் உரிமைப் போராட்டத்தின் திருப்பு முனையாக ஏற்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் (யூலை 29.1987) விளைவாக இலங்கைக்கு வந்த இந்தியப் படைகள் (IPKF) ஏற்கனவே திட்டம் இட்டபடி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுத களைவு என்ற பெயரில் ஒரு முழு யுத்தத்தினையே நடத்தத் தொடங்கின. வேறு வழிவகை அறியா தமிழீழ விடுதலைப் புலிகளும் மக்கள் ஆதரவினை மட்டும் நம்பி உலகின் நாலாவது பெரிய இராணுவத்தினை எதிர்த்து போர்புரிந்துவெற்றியும் பெற்றனர்.

இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள் முடிந்து அந்தப் பிரதேசத்தை விட்டு இராணுவம் முகாம்களுக்குத் திரும்பிய பின் வல்வெட்டித்துறைக்குச் சென்று பார்த்தவர்களால், அங்கு நடைபெற்று முடிந்த கொடூரங்களை ஜீரணிக்க முடியவில்லை.

இந்தப் படுகொலைகளின் பொழுது, ஆண், பெண், முதியோர், குழந்தைகள் என்ற வேறுபாடுமின்றி அங்குமிங்குமாக 71 பொதுமக்கள், சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டிருந்தனர். இதில் பலர் நிலத்தில் முகங் குப்பறப் படுக்கவைக்கப்பட்ட நிலையில் முதுகில் சுடப்பட்டிருந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்திருந்தனர்.

ஒரு நாளில் யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றுவோம் என சொன்ன இந்திய அமைதிப்படையினர் யாழ்பாணத்தினைக் கைப்பற்ற 1 மாதம் எடுத்தது.

யாழ்ப்பாணத்தினை கைப்பற்றிய பின்பு ஏனையபகுதிகளையும் கைப்பற்றிய இந்தியப் படைகள் 200 மீட்டருக்கு ஒன்று என்று ரீதியில் முகாம்களை அமைத்தது. புலிகளும் தமது பிரதான முகாம், தலைமை என்பனவற்றை வன்னிக்கு மாற்றிவிட்டு மற்றைய பகுதிகளில் தமது குறிப்பிட்டளவு போராளிகளை நிறுத்தியிருந்தனர். தினமும் எதாவது ஒரு பகுதியில் போராளிகளைத்தேடும் இந்திய இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்ற வண்ணமே இருக்கும்.

இப்படி தான் 1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 2ந் திகதி வல்வெட்டித்துறையில் இருக்கும் ஊரிக்காடு, பொலிகண்டி இராணுவ முகாம்களிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடன் புறப்பட்டனர் இந்தியப் படையினர். இந்த இந்திய இராணுவவீரர்களுக்கு தலைமை தாங்கியது. முறையே மேஜர் சுதர்சன் சிங், கப்டன் கோபாலகிருஸ்ன மேனன், கப்டன் கபூர் என்போராவார். இவர்களை எதிர் கொண்டு புலிகள் நடத்திய தாக்குதலில் 09 சீக்கிய சிப்பாய்கள் கொல்லப்பட ஆயுதம் தாங்கிய புலிகளை அழிக்க திராணியற்ற இந்திய படைகள் அப்பாவி மக்கள் மீது தனது வெறியாட்டத்தினை வழமை போல தொடங்கியது.

ஒகஸ்ட் 2 ந் திகதி இச் சம்பவம் நடைபெற 3,4 திகதிகளில் வல்வெட்டித்துறையிலும் அதைச் சூழ உள்ள பகுதிகளிலும் ஊரடங்கு சட்டத்தினை பிரகடனப்படுத்திவிட்டு வெறியாட்டம் ஆடினர். யாருமே வல்வெட்டிதுறைக்குள் போகவே, அங்கிருந்து தப்பி வரவோ முடியவில்லை. வெறியாட்டம் முடிந்து இந்திய இராணுவம் முகாம்களுக்கு திரும்பிய பின் வல்வெட்டித்துறைக்கு சென்றுபார்த்தவர்களால் நடைபெற்ற கொடூரங்களை ஜீரணிக்க முடியவில்லை.





63 பொதுமக்கள் சுட்டும் ,வெட்டியும், எரித்தும் கொல்லப் பட்டிருந்தனர்.இதில் பலர் நிலத்தில் கிடத்தி முதுகில் சுடப்பட்டிருந்தனர்.ஆண்,பெண்,முதியோர் வேறுபாடு இன்றி.

100 பேர் அளவில் காயமடைந்திருந்தனர்.

123 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன.

45 கடைகள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன.

வல்வை சனசமூக நிலையம் (நூலகம்) தீயிடப்பட் டிருந்தது. பல ஆயிரக்கணக்கான நூல்கள். தளபாடங்கள் கொழுத்தப்பட்டிருந்ததுடன் நூலகத்தில் இருந்த காந்தி, நேரு, நேதாஜி, இந்திராகாந்தி போன்ற தலைவர்களின் படங்கள் கூட நொருக்கப் பட்டு தீயிடப்பட்டு இருந்தன.

176 மீன்பிடி வள்ளங்கள் எரிக்கப்பட்டன.

இக்கோர தாண்டவம் பற்றி எந்த ஒரு இந்திய ஊடகமும் செய்தி வெளியிடவில்லை. இன்று கூட எத்தனை இந் தியருக்கு இது பற்றி தெரியும் என்பது கேள்விக் குறியே?

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடத்திய படு கொலைகள் பற்றி பழ. நெடுமாறன் அவர்களால் எழுதப்பட் டவை கீழ் வருமாறு :
தம்பி பிரபாகரன் அவர்களையும் மற்றும் பல புலிகளையும் பெற்றெடுத்த ஊர் என்பதனாலும், இவ்வூர் மக்கள் அனை வருமே புலிகளுக்கு முழுமையாக ஆதரவு தந்தவர்கள் என்பதனாலும் வல்வெட்டித்துறை மீது இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு மிகுந்த கோபம் இருந்தது. அந்தக் கோபத்தை அவர்கள் தீர்த்துக் கொண்ட விதம் மிகக் கொடூரமானது.

1919ம் ஆண்டு, ஏப்ரல் 13ம் நாள் இந்தியாவில் அமிர் தசரஸ் நகரத்தில் ஜாலியான்வாலாபாக் படுகொலை நடந் தது. மைதானத்தில் கூடியிருந்த அப்பாவிப் பொது

ஜாலியான் வாலாபாக் படுகொலை இந்திய மக்களை அன்று கொதித்தெழ வைத்தது. ஆனால், அதே இந்திய நாட்டைச் சேர்ந்த இராணுவம் வல்வெட்டித் துறையில் மற்றொரு ஜாலியன் வாலாபாக்கை நடத்திக் காட்டியது.

இந்திய இராணுவம் நடத்திய படுகொலைகளை இந்திய அரசு திட்டமிட்டு மறைத்தது. இந்தியப் பத்திரிகைகளுள் பெரும்பகுதி இச் செய்தியை மறைப்பதில் ஒத்துழைப்புக் கொடுத்தன.

ஆனால், வல்வெட்டித்துறையில் இச்சம்பவம் நடந்த 13 நாள்களுக்குப் பிறகு அங்கு சென்ற இலண்டன் "பெர்னாண்டஸியல் டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச்சம்பவத்தைப் பற்றிய விவரங் களை முதன் முதலாக ஆகஸ்ட் 17ம் நாளன்று அவரது பத்திரிகைகளில் இச் செய்தி வெளிவந்தது. பரபரப்பாக வெளி வந்த பிறகு செப்டம்பர் 3ம் நாள் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" சிறிய அளவில் இச் செய்தியை வெளியிட்டது.

## இந்திய இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு பலியான 63 பொதுமக்கள்

எங்கும் சடலங்கள், அவல ஓலங்கள், தீக்கொழுந்துகள், காயமடைந்த, கொல்லப்பட்ட உறவினர்களின் அவலக் குரல்கள். காலங்கள் பல சென்றாலும் இன்றும் வல்வெட்டி துறை மக்களின் மனங்களில் இரண வடுவாக அச்சம் பவம் இருந்து வருகிறது. ஒரே குடும்பத்தில் 3 பேர் கூட கொல்லப்பட்டிருந்தனர். வல்வெட்டிதுறையில் நடைபெற்ற

மக்களைப் பிரித்தானிய இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டுப் படுகொலை செய்தது. அந்தப் படுகொலையைத் தலைமை தாங்கி நடத்திய பிரித்தானிய ஜெனரல் டையர் "சுட்டேன், சுட்டேன் குண்டுகள் தீரும் வரை சுட்டேன்" என்று கொக்கரித்தான்.

இந்த முறை வல்வெட்டித் துறைக்கு நான் சென்ற போது இந்தப் படுகொலைகள் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து கொள்ள முயற்சி செய்தேன். வல்லவை மக்கள் குழுவின்தலைவர் எஸ்.செல்வேந்திரா, செயலாளர் ஆனந்தராஜ், பொருளாளர் நடன சிகாமணி உட்பட பலரை



இந்திய இராணுவத்தினால் கண்மூடித்தனமான
தாக்குதலுக்கு பலியான பொதுமக்கள்.

# The IPKF in Thamileelam

நான் சந்தித்துப் பேசினேன். இப்படுகொலைகள் நடைபெற்று ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குப் பிறகு கூட அந்த அதிர்ச்சியில் இருந்து வல்வை மக்கள் மீளாததை நான் பார்த்தேன்.

1989ம் ஆண்டு ஆகஸ்ட் 2ம் நாள் வல்வெட்டித் துறை சந்தைச் சதுக்கத்தில் காலை 11 மணிக்கு யாரும் எதிர்பாராத விதமாக விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதில் 6 இந்தியப் படை வீரர்கள் இறந்ததுடன் 11 பேர் காயம் அடைந்தனர். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து வல்வெட்டித் துறையைச் சுற்றி இருந்த மூன்று இராணுவ முகாம்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் வெறியுடன் புறப்பட்டு வந்து வல்வெட்டித் துறையைச் சுற்றி வளைத்தனர். உடனடியாக ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினர். தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டது. வீடுகளை விட்டு வெளியே வராமல் அச்சத்துடன் பதுங்கியிருந்த மக்களை வீட்டுக் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்து பதறப் பதறச் சுற்றுக் கொன்றார்கள். மொத்தம் 63 பேர் இவ்விதம் படுகொலை செய்யப்பட்டனர்.

நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களுக்கு மருத்துவ உதவி செய்வதற்கு முன் வந்த பிரான்சு மருத்துவக் குழுவினரை ஊருக்குள் நுழையவே இந்திய இராணுவம் அனுமதிக்கவில்லை. தொடர்ந்து மூன்று நாள்களாக இராணுவத்தினர் ஊரைச் சுற்றி முற்றுகையிட்டு இருந்ததால் இறந்து போனவர்களின் பிணங்களைக் கூட அப்புறப்படுத்த முடியவில்லை. பிணங்கள் அழுகிப் போன நிலையில் அந்தந்த வீடுகளுக்குள்ளேயே வைத்து உறவினர்களால் எரிக்கப்பட்டனர். கணவர் உடலை மனைவியும், மனைவியின் உடலைக் கணவரும் பெற்றோர் உடலைப் பிள்ளைகளும் பிள்ளைகளின் உடலைப் பெற்றோரும் எரிக்க வேண்டிய அவலத்திற்கு ஆளாயினர்.

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 இராஜலிங்கம் சதீஸ்குமார் - மாணவன், 18
02 இராசையா இராஜரட்ணம் - கடற்தொழில், 33
03 இராமச்சந்திரன் நவரத்தினம் - வியாபாரம், 26
04 இராசகுரு யவனராஜ் - மாணவன், 13
05 இராசகுரு புஸ்பராணி - வியாபாரம், 45
06 இராசா ஜெயமயில் - வியாபாரம், 20
07 இராசமாணிக்கம் நடராசா - தபாலதிபர், 62
08 ஈஸ்வரமூர்த்தி இராசலட்சுமி - 24
09 நாகராசா ஞானகுலசிங்கம் - கடற்தொழில், 22
10 நாகலிங்கம் பவப்பிருந்தா - மாணவி, 14
11 நடராசா நல்லமுத்து - வீட்டுப்பணி, 72
12 நடராசா சிவகுமாரன் - மாணவன், 25
13 நடராசா ரவீந்திரன் - கடற்தொழில், 31
14 நல்லரெத்தினம் பானுகோபால், - இரும்பு வேலை, 23
15 கந்தசாமி தங்கராசா - வியாபாரம், 70
16 கந்தசாமி வேலும்மயிலும் - தொழிலாளி, 45
17 கதிர்காமத்தம்பி சிவநேசராசா - வியாபாரம், 36
18 குமாரவேல் செல்வானந்தவேல் - மாணவன், 18
19 கணேசலிங்கம் சசி - குழந்தை, 01
20 குழந்தைவடிவேல் சண்முகவடிவேல் - தொழிலாளி, 37
21 குணரட்ணம் இராசசேகரம் - கடற்தொழில், 18
22 பாலகிருஸ்ணன் பிரேமதாஸ் - சாரதி, 20
23 பாலசுப்பிரமணியம் மகேந்திரதாஸ் - மாணவன், 15
24 பாலசுப்பிரமணியம் யோகேந்திரராசா - மீன்பிடித்தல், 28
25 பீற்றத் விஜயராஜன் கிருஸ்ணவதனா - வீட்டுப்பணி, 33
26 தளையசிங்கம் ஜெயமோகன் - கடற்தொழில், 18
27 தளையசிங்கம் சிவகுமாத் - கடற்தொழில், 21
28 துரைராசா நாகதாஸ் - மின்னியலாளத், 28
29 தங்கவேலாயுதம் ஜெயக்குமார் - மெக்கானிக், 20
30 தங்கவேலாயுதம் சாம்பசிவம் - கடற்தொழில், 18
31 தணிகாசலம் ரவிச்சந்திரன் - வியாபாரம், 28
32 முருகேசு செல்லத்துரை - சாரதி,
33 அப்பாத்துரை மதிவாணன் - வியாபாரம், 18
34 ஆதிஅருணாசலம் பராசர் - வியாபாரம், 20
35 ஆதிஅருணாசலம் பரம்சோதி - வியாபாரம், 18
36 ஆதிஅருணாசலம் சுந்தரேஸ்வரன் - மாணவன், 12
37 அமிர்தலிங்கம் உமாதேவி - 26
38 அருள்பிரகாசம் சுவர்ணதாஸ் - கடற்தொழில், 19
39 அருளப்பு இலங்கைநாதன் - கடற்தொழில், 22
40 அருணாச்சலம் இளையபெருமாள் - துறைமுக ஊழியர், 76
41 ஆறுமுகநாதன் இராமச்சந்திரன் - மேசன், 41
42 பொன்னுத்துரை இராசேந்திரம் - மீனவர், 23
43 பொன்னுத்துரை சண்முகலிங்கம் - சாரதி, 43
44 பொன்னம்பலம் றஞ்சிதகுமார் - கடற்தொழில், 25
45 பொன்னையா காளிதாஸ் - இரும்பு வேலை, 26
46 செந்திவேல் சக்திவேல் - கடற்தொழில், 24
47 சோதிலிங்கம் றமேஸ்குமார் - கடற்தொழில், 18
48 செல்லையா யோகராசா - கமம், 19
49 செல்வக்கதிரமலை மயில்வாகனம் - பரிசோதகர், 55
50 செல்வசுந்தர் தவசீலன் - மாணவன், 07
51 வெங்கடாச்சலம் சுப்பிரமணியம் - நிலஅளவை அதிகாரி,
52 வேலும்மயிலும் செல்வச்சந்திரன் - மாலுமி, 26
53 சுந்தரமூர்த்தி உமாசங்கர் - வியாபாரம், 22
54 சுந்தரலிங்கம் ஞானவேல் - கடற்தொழில், 21
55 சுப்பிரமணியம் அமுதன் - வர்த்தகர், 28
56 சுப்பிரமணியம் பேரின்பம் - மாணவன், 20
57 சின்னத்துரை தம்பித்துரை - கடற்தொழில், 60
58 சின்னத்தம்பி கணேசலிங்கம் - தொழிலாளி, 25
59 சின்னத்தம்பி சிவலிங்கம் - சீவல், 50
60 சின்னவன் கந்தன் - தொழிலாளி, 30
61 சிவப்பிரகாசம் சபாநாயகம் - வியாபாரம், 77
62 சிவபாக்கியம் கந்தசாமி - சலவைத்தொழில், 42
63 சிவலிங்கம் இராமநாதன் - சாரதி, 35
64 வடிவேலு குமாரசாமி - தொழிலாளி, 89
65 விஜயரட்ணம் முரளிதரன் - கடற்தொழில், 20



# திராய்க்கேணிப் படுகொலை 06.08.1990

1954ஆம் ஆண்டு அமரர் தர்மரட்ணம் என்பவரின் தென்னந் தோட்டத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றக் கிராமம் திராய்க் கேணியாகும். திராய்க்கேணிக்கு கிழக்குப் பக்கத்தில் ஒலுவில் கிராமமும் தெற்குப் பக்கத்தில் பாலமுனையும் அமைந்துள்ளது. இக்கிராமம் அட்டாளைச்சேனை உதவிஅரசாங்க அதிபர் பிரிவின் கீழும் அக்கரைப்பற்று நீதிமன்று நியாதிக்கத்தின் கீழும் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் முன்நூற்றெழுபதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் முன்நூற்றைம்பது வீடுகளில் வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் பிரதான தொழில் விவசாயமாகும்.

05.08.1990 அன்று திரியாய்க்கேணியில் வசித்து வந்த முசுலிம்களில் ஒருவர் காட்டுக்குச் சென்றவேளை மர்மமான முறையில் உயிரிழந்ததனைத் தொடர்ந்து 06.08.1990 அன்று அக்கிராமத்திலிருந்த நூறு-நூற்றைம்பது பேர் கொணட் முசுலிம் குழு திரியாய்க் கேணியிலிருந்த தமிழர்களைத் தாக்கினார்கள்.

தாக்கக் கத்தி, வாள், பொல்லு போன்ற ஆயுதங்களைப் பயன் படுத்தியதுடன், வீடுகளையும் அவர்களின் உடைமைகளையும் தீயிட்டு எரித்தார்கள். முசுலிம்களின் தாக்குதல் தீவிரமடைய கிராமமக்கள் அருகிலிருந்த பிள்ளையார் கோயிலில் அடைக் கலம் புகுந்தார்கள். கோயிலுக்குள் நுழைந்த முசுலிம் குழுக்கள் அடைக்கலம் புகுந்த மக்களை வாள்களால் வெட்டியும் கத்தி யாற் குத்தியும் தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் குழந் தைகள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் கொல்லப் பட்டனர்.

இவ்வாறு முசுலிம்கள் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கும் போது கோயிலுக்கு வெளியில் சிறீலங்கா இராணுவத்தினர் பவள் கவச வாகனத்தில் தாக்குதல் நடத்துபவர்களிக்குப் பாதுகாப்பினை வழங்கிக்கொண்டிருந்தார்கள். எஞ்சியிருந்த நூற்றிஐம்பது குடும்பத்தினர் அகதி முகாமுக்குச் சென்றனர்.

தாக்குதலில் தொண்ணூறிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந் தார்கள். நாற்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். முன்நூற்றுநாற்பதிற்கும் மேற்பட்ட வீடுகளும், எழுபது மில் லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான சொத்துக்களும் எரிக்கப்பட்டன.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி மயிலாப்பொடி - -
02 இராமக்குட்டி மயில்வாகனம் - தொழிலாளி 18
03 இராசதுரை பிரகலா - -
04 நாகலிங்கம் தம்பிராசா - -
05 நல்லதம்பி புலேந்திரன் - தொழிலாளி 27
06 கனகரத்தினம் அழகையா - ஊழியர் 35
07 கனகரட்ணம் சுப்ரமணியம் - -
08 கந்தக்குட்டி பூபாலப்பிள்ளை - தொழிலாளி 19
09 கந்தக்குட்டி வேலாயுதம் - -
10 கா.பாஸ்கரலிங்கம் - தொழிலாளி 39
11 கா.சாமித்தம்பி - விவசாயம் 43
12 காந்தன் நவரட்ணம் - -
13 காளிக்குட்டி பாக்கியராசா - -
14 காளிக்குட்டி தம்பிப்பிள்ளை - -
15 கதிரன் கணபதி - -
16 கதிரன் பாக்கியராசா - தொழிலாளி 34
17 கணபதி காளிக்குட்டி - ஊழியர் 50
18 கணபதி காளிமுத்து - வைத்தியர் 45
19 கணபதிப்பிள்ளை கிருஸ்ணன் - -
20 கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம் - -
21 பூபாலப்பிள்ளை புலேந்திரன் - தொழிலாளி 30
22 பூபாலப்பிள்ளை ஏகாம்பரம் - தொழிலாளி 24
23 தம்பியப்பா கோபால் - தொழிலாளி 50
24 தம்பிமுத்து ஆனந்தராசா - -
25 மு.கணபதி - தொழிலாளி 76
26 மா.குஞ்சித்தம்பி - தொழிலாளி 50
27 மா.ஜெயசீலன் - தொழிலாளி 24
28 மார்க்கண்டு கிருபை - தொழிலாளி 30
29 மார்க்கண்டு மயில்வாகனம் - -
30 மார்க்கண்டு ஜெயக்குமார் - -
31 முருகன் இளையதம்பி - தொழிலாளி 39
32 முருகேசு நாகேந்திரன் - தொழிலாளி 28
33 பொன்னன் அழகையா - தொழிலாளி 29
34 செல்லையா பாக்கியராசா - தொழிலாளி 26
35 செல்வம் சீனித்தம்பி - -
36 செல்லத்துரை கிருஸ்டியன் - -
37 செல்லத்துரை பாலச்சந்திரன் - -
38 செல்லத்துரை அமிர்தலிங்கம் - -
39 வேலன் கதிரேசப்பிள்ளை - தொழிலாளி 44
40 வேலுப்பிள்ளை குணராசா - -
41 வேலுப்பிள்ளை பாஸ்கரலிங்கம் - தொழிலாளி 35
42 சாமித்தம்பி நாகராசா - -
43 சாமித்தம்பி சௌந்தராஜன் - -
44 சின்னத்தம்பி கன்னி - -
45 சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை - -
46 சின்னத்தம்பி சிவசிதம்பரம் - -
47 சற்குணம் இளையதம்பி - -
48 சற்குணம் விஜயலட்சுமி - -
49 வ.பாக்கியராசா தொழிலாளி 26
50 விஸ்வலிங்கம் அழகை - -

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# சேவியர்புரம் படுகொலை 07.08.1990

குறவர் பழங்குடியினர் 1950ல் குடியமர்த்தப் பட்ட இடத்தின் பெயர்தான் அம்பாறையில் உள்ள சேவியர்புரம்.

7ம் தேதி ஆகஸ்ட் மாதம், 1990ல் குறவர் பழங்குடியினரின் வீடுகள் கொழுத்தப்பட்டு, அந்த சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களும் கொல்லப்பட்டனர். இவர்களது கோயில்கள், பாடசாலைகள், சமூகப் பொதுமண்டபங்கள் யாவும் இடிக்கப்பட்டதோடு, இச்சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் என அனை வரையும் மனிதவதைக்கு இந்த நாளில் உள் ளாக்கப்பட்டனர். குறவர் சமூகத்தின் மீது எவ் வித காரணங்களுமின்றி வன்முறை கட் டவிழ்த்து விடப்பட்டது. இச்சமூகத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் இஸ்லாமிய ஊர்க் காவல் படையைச் சேர்ந்தவர்கள் என பின்னர் தெரியவந்தது. விடுதலைப்புலிகள் இச்சமூகத் தோடு உறவு வைத்திருந்தார்கள் என்னும் குற்றச்சாட்டோடு இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. மினியக்கா என்ற பெண்மணி சேவியர் புரம் தாக்குதல் குறித்து சொல்லிய போது,

“1990 ஆகஸ்ட் 07ம் தேதி முற்பகல் 1 மணிக்கு அன்றைய முதல்வேளை உணவை சிலர் உட்கொண்டும், வேறு சிலர் சமைத்துக் கொண்டு இருந்த சமயத்தில், வன்முறை யாளர்கள் அங்கு வந்தனர். நீதை சாலை வழியாக 18 டிராக்டர்கள் ஒன்றன் பின் ஒன் றாய் வந்தது. வந்தவர்களிடம் கத்தி, குண்டாந் தடிகள், அரிவாள், துப்பாக்கி போன்ற ஆயு தங்கள் இருந்தன. வன்முறையாளர்கள் எங்கள் கிராமத்தின் நடுவில் நின்று கொண்டு, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனை வரையும் ஒன்றாய் கூடும்படி கட்டளை யிட் டனர். வன்முறையாளர்கள் கொண்டு வந்த ஆயுதங்களை யார்க்கும் போது ஏதோ இராணுவ படை போன்று தெரிந்தது. வன் முறையார்கள் எங்களிடம் நடந்து கொண்ட முறையும் பயத்தை வரவழைத்தது. சேவியர் புரம் மக்கள் அனைவரும் இந்த நடவடிக் கையை பார்த்து திகைத்துப் போய் செய்வ தறியாது நின்றனர். சாப்பிட்டுக் கொண்டிருந்த மக்கள் அனைவரும், அவசரமாய் கைகளை கழிவிக் கொண்டு, வன்முறையாளர்களின் முன் கூடினர். நானும், எனது கணவர் மற்றும் என்னுடைய மகன், மகள் எல்லோரும் அங்கு நின்றோம். சீருடையணிந்த வன்முறை யாளர்கள் இஸ்லாமிய ஊர் காவல் படையினர் என்றும் அவர்களுடன் வந்த ஏனையோர் அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் எங்களால் அடையாளம் காண முடிந்தது.”

சம்பவந்தை நேரில் பார்த்த ஒருவர் கூறினார், “வந்திருந்த இஸ்லாமிய ஊர்காவல் படை யினர் மற்றும் வன்முறையாளர்களின் முன் நாங்கள் கூடியிருந்த போது, என்னுடைய ஒரே மகனை எங்கள் முன்னேயே மனித வதைக்கு உட்படத்தி, கொடுமைப் படுத்தினர். அதே போல், ஜெயராஜ் என்ற எங்களது சமூகத் தைச் சேர்ந்த வேறோரு இளைஞரையும் தொடர்ந்து மனிதவதைக்குட்படுத்தினர்.

எனது கணவரால் எங்களது கண் முன்னே எங்களது ஒரே மகனை கொடுமைப்படுத்தியது பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனது கணவர், துள்ளியெழுந்து தனது எதிர்ப்பை தெரியப்படுத்தினர். நானும் சத்தமிட்டுக் அழு தேன். வன்முறையாளர்களில் ஒருவன், ஒரு மரக்கட்டையை எடுத்து எனது கணவரது நெஞ்சை நோக்கி கொடுத்த அடியினால், அவர் சுயநினைவை இழந்து கீழே விழுந்தார். அவர் கீழே விழுந்தது, ஏதோ ஒரு பெரிய மரம் சாய்ந்தது தோன்றியது. நான் அவசர அவசர மாய் அங்கு ஓடிச் சென்ற எனது கணவரின் தலையை தூக்கி பார்த்தேன். அப்போது, மற் றொரு வன்முறையாளன், அயுதத்தைக் கொண்டு எனது தலையில் பலமாய் அடித் தான். இதனால், எனது தலையிலிருந்து இரத் தம் கொட்டியது மட்டும் உணர்ந்து கொண் டிருக்கும் போதே மயக்கமுற்றேன்.

இத்தாக்குதலிருந்து தப்பிய அனைவரும் காயம்பட்டோரையும் தூக்கிக்கொண்டு திருக் கோயிலுக்கு ஓடினோம். அவர்கள் அனை வரும் தங்களது முதுகில் உடுத்த துணி மட்டும் எடுத்துக் கொண்டு ஓடினர். இதில் சிலர் முந்திய நாள் உணவு கூட உண்ணா திருந் தனர்.

நான் கண் திறந்து பார்த்தபோதுதான், ஒரு மருத்துவமனை படுக்கையில் இருப்பதை உணர்ந்தேன். அங்கு என்னுடன் கிராமத் தைச் சேர்ந்த பலரும் இருந்தனர். அப்போது மாலை சுமார் 4 மணி இருக்கும. நான் என்ன நடந்தது என யூகிக்க முயற்சித்த போதும், முடியாமல் போனது. கவலையும் அதிர்ச்சியும் அடைந்த உறவினர்கள் எனது குடும்பத்தாரை பார்க்க வந்திருந்தனர். இஸ்லாமிய ஊர் காவல் படையனிர் பெட்ரோலையும், மண் ணெண்ணையையும் ஊற்றி எனது கிராம வீடுகளை எரியூட்டியதையும், அங்கு பலர் கொல்லப்பட்டதையும் சொன்னர்கள். எல்லா மக்களும், கிராமத்திலிருந்து ஓடிவிட்ட போதும். சிலர் மட்டும், இறந்தவர்களுக்கு கடைசி மத சடங்குகளை செய்ய சேவியர்புரம் சென்றனர்.

என்னையும் ஏதோ ஒன்று அவர்களுடன் சேவியர்புரம் செல்ல துண்டியது. என் னுடைய உடல்நிலை மிக மோசமாய் இருந்த போதும், என்னைப் போல வலியால் துடித்துக் கொண்டிருந்த எனது கணவரையும் கண்டு பிடித்து, எங்களது கிராமத்தை சேர்ந்த ஒருவ ருடைய டிராக்டர் வண்டியில் சுமார் 20 பேர்களை ஏற்றிக் கொண்டு எனது கிரா மத்தை நோக்கி சென்றோம். அங்கு என்னு டைய மகன் துப்பாக்கி குண்டுகளால் சிதைந்து கிடந்ததைப் பார்த்து கல்லானேன். அருகே மேலும் இரு வரது உடல்கள் கிடந்தது.

அழித்து ஒழிக்கப்பட்ட அந்த கிராமத்தின் மயான அமைதி என்னுள் ஒரு அச்சத்தை உண்டு செய்தது. சிதைந்து கிடந்த வீடுகள் பேய்களை நினைவுபடுத்தியது. நாங்கள் உடனடியாக திருக்கோவில் ஊருக்கு திரும்பினோம்.”

மாசன்னா என்ற வயதான பெண்மணி குறவர் பழங்குடியினர் வாழ்ந்து வந்த சேவியர் புரத்திலிருந்த மற்றொரு பாதிக்கப் பட்ட நபராவார். அந்த வயதான பெண்மணி தாக்குதல் நடத்தியவர்கள் எல்லோரையும் தனக்கு தெரியும் என்று கூறினார். இப்பெண் மணி வாழ்ந்து வரும் இடத்தின் அருகிலே இருந்த நெல் உற்பத்தியாளர்கள்தான் அன்று தாக்குதல் நடத்திய வன்முறையாளர்கள். அந்த இஸ்லாமிய நெல் உற்பத்தியாளர்களின் வயல்களிலேயே அந்த குறவர் சமூகத்தினர் வேலை செய்து வந்தனர். அம்மாதிரியான உறவுள்ள மக்களின் கிருத்துவகோயில், பாட சாலை, வீடுகள் என அனைத்தையும் நிர் மூலம் ஆக்கினது மட்டுமல்லாது அம்மக் களையும் அன்று கொன்று குவித்தனர்.

வீடுகளை இழந்து தமது வாழ்வாதரங்களை தொலைத்து அன்று கண்ட கொடுமைகளை தாங்க முடியாத அம்மக்களில் சிலர் பின்னர் தற்கொலை செய்து மாண்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கல்முனைப் படுகொலை 11.08.1990

மட்டக்களப்பு நகரத்திலிருந்து 40கி.மீ தொலை வில் கல்முனை உள்ளது. இதனைச்சுற்றி பண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, நிலாவணை ஆகிய கிராமங்கள் உள்ளன.

11.08.1990 அன்று பண்டிருப்பு, கல்முனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் இராணுவச் சுற்றிவளைப்பினால் அச்சமடைந்து தத்தம் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர். இராணுவம் வீடுகளுக்குள் குறிவைத்துச் சுட்டு மக்களை வெளியே வரும்படி செய்தது. இளம் ஆண்கள் தமது தேசிய அடையாள அட்டையை கையில் வைத்தபடி வெளியே வந்தனர். தாய்மார் தங்கள் குழந்தைகளை இறுகப் படித்தபடி வெளியே வந்தனர். 25 இளம் ஆண்களை இராணுவம் கல்முனைக் கிராமத்திலிருந்து காரைதீவு இராணுவ முகாமிற்குக் கூட்டிச் சென்றது. தமது பிள்ளைகளைத் தொடர்ந்து சென்ற தாய்மார் துவக்கினால் தாக்கப் பட் டனர். பல தாய்மார் மயக்கமுற்று விழுந்தனர்.

அடுத்த நாள் கூட்டிச் செல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கல்முனை நகருக்கூடாக காரை தீவு முகாமை நோக்கி நடந்து சென்றனர். கல்முனை நகரில் இராணுவம் இவர்களை வீதியருகே நிற்க வைத்தது. பெரும் தொகையான இராணுவம் அவ்விடத்திற்கு வந்து உறவினர்கள் மத்தியிலிருந்த இளம் பெண் களைத் தெரிவு செய்து அருகே இருந்த கட்டடத் திற்குள் கூட்டிச்சென்று அவர்களை பாலியல் வல்லுறவிற்குட்படுத்தியது. உறவினர்கள் மத்தியிலிருந்த ஆண்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் கொலைசெய்யப் பட்டனர். மொத்தமாக இரண்டு மணித்தியாலங்களில் 37 பொது மக்கள் கொல்லப் பட்டனர்.

முதல் நாள் காரைதீவுக் குக் கூட்டிச் செல்லப் பட்ட 25 இளம் ஆண்களும் பின்னர் காணப் பட வில்லை. இரண்டு நாட்களில் 62 பொது மக்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலை கள் (1956-

# துறைநிலாவணைப் படுகொலை 12.08.1990

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் துறைநிலாவணைக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்கள் விவசாயத்தினையும், மீன்பிடியினையும் தமது பிரதான தொழிலாகக் மேற்கொண்டு வருகின்றார்கள்.

12.08.1990 அன்று காலை நீலாவணை, கல்லாறு இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினர் துறைநிலாவணைக் கிராமத்தினைச் சுற்றிவளைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள். இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வயது வேறுபாடின்றி வீடுகளிலிருந்தவர்களும் வீதியாற் சென்றவர்களுமாக அறுபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பல பொதுமக்கள் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இளையதம்பி மனோகரன் -
02. இராசதுரை சிவானந்தராஜா - 27
03. நவரட்ணகா சுமதி - 28
04. நல்லதம்பி செல்வராசா - 35
05. கந்தையா சிவானந்தன் -
06. கந்தக்குட்டி சுப்பிரமணியம் - 40
07. கந்தளக்குட்டி திலகநாதன் - 20
08. கணேஸ்தாஸ் சதாசிவம் - 25
09. கண்மணி கிருபாகரன் - 21
10. பூபாலப்பிள்ளை நிமலநாதன் - 21
11. பாக்கியவதி அப்புத்துரை - 35
12. பழனிவேல் பாக்கிராசா - 28
13. வைரமுத்து உதயராஜா - 20
14. வைரமுத்து செல்வராசா - 15
15. வைரமுத்து சுதாகரன் - 20
16. தம்பியப்பா நவரத்தினமூர்த்தி - 28
17. தம்பிமுத் து அழகம்மா 33
18. தட்சணாமூர்த்தி சுதாகரன் - 20
19. தினேஸ்குமார் உதயகுமார் - 18
20. தங்கராசா ஆறுமுகம் - 40
21. மகாலிங்கம் தம்பியப்பா - 35
22. மாணிக்கம் குழந்தைவேல் - 38
23. மகேஸ்வரன் சுதாகரன் - 24
24. அ.ரவிச்சந் திரன் -
25. அழகுதுரை கிருஸ்ணபிள்ளை - 40
26. அழகையா கமலநாயகி - 23
27. பொன்னம்பலம் சின்னவன் - 28
28. பெரியதம்பி இராசலட்சுமி - 20
29. செம்பன் கதிரேசு -
30. வேலுப்பிள்ளை பாக்கியநாதன் - 28
31. ச.சிவமோகன் - 18
32. சுந்தரம் கனகசபை - 38
33. சாமித்தம்பி சிவஞானமூர்த்தி -
34. சதாசிவம் சுகுமார் - 22
35. சின்னத்தம்பி மகேஸ்வரி - 28
36. சின்னத்தம்பி செல்லத்துரை -
37. சின்னமுத்து அன்னம்மா - 45
38. சிவஞானமூர்த்தி சரோசினி - 14
39. சிறிதரன் சிறிகாந்தராஜ் -
40. வடிவேல் சந்திரகுமார் - 28

41. விஜயபால குணபால -
42. விஸ்வலிங்கம் லூத்துமேரி - 21
43. வீரமலை சுவீராஜன் - 23
44. வீரமலை சண்முகதாசன் - 25
45. ரத்தினம் சுவேந்திரன் - 20
46. ரவிக்குமார் ராஜபுத்திரன் - 18
47. வேலுப்பிள்ளை பேரின்பநாயகி - 21

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# ஏறாவூர் வைத்தியசாலைப் படுகொலை 12.08.1990

11.08.1990 அன்று இராணுவத்தினா் செங்கலடி, கிரான் போன்ற கிராமங்களைச் சுற்றி வளைத்து மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இராணுவத்தினரின் துப்பாக்கி பிரயோகத்தினால் காயமடைந்தவர்களில் பத்துப் பேரிற்கும் மேற்பட்டவர்கள் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்கள்.

12.08.1990 அன்று இரவு 11.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில் இராணுவத்தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து ஏறாவூர் வைத்தியசாலையிற் சிகிச்சைபெற்று வந்த பொதுமக்கள் பத்துப் பேரையும் வைத்தியசாலையினுள் வைத்தே வெட்டியும் சுட்டும் படுகொலை செய்தார்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கோராவெளி, ஈச்சையடித்தீவு படுகொலை 14.08 1990

கோராவெளி, ஈச்சையடித் தீவுக் கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளன. இக்கிராமங்கள் இயற்கை வளம் நிறைந்த விவசாயக் கிராமங்களாகும். மக்கள் நெற்செய்கை மரக்கறிப் பயிர்ச்செய்கை போன்றவற்றில் ஈடுபட்டு வந்ததுடன், தங்களது கிராமத்திற்குரிய தனித்துவமான கலைகளையும் வளர்த்து வந்தார். கோரா வெளிக் கிராமத்தில் இந்து மதத்தவரின் பிரசித்திபெற்ற கோராவெளி அம்மன் ஆலய மும் அமைந்துள்ளது.

1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. இராணுவத்தினரும் சிங்கள-முசுலிம் குழுக்களும் மக்கள் மீதான தாக்குலை நடத்தி வந்தனர்.

14.08.1990அன்று நண்பகல் செங்கலடி, கல்லடி இராணுவ முகாம்களிலிருந்து வந்த இராணுவத்தினர் கோராவெளி, பச்சையடித் தீவு கிராமங்களைச் சுற்றிவளைத்து பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தினார். இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீடுகளிலிருந்தவர், வீதிகளிற் சென்றவர், வயல்களில் வேலை செய்துகொண்டிருந்தவர் எனப் பதினைந்து பேர் உயிரிழந்தார். இருபத்தைந்து பேர் காயமடைந் தார்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மைலந்தனைப் படுகொலை 09.08.1992

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களாக மைலந்தனை, புனானைக் கிராமங்கள் அமைந்துள்ளன. இங்கு வாழ்கின்ற மக்கள் பிரதான தொழிலாக விவசாயத்தினை மேற்கொண்டு வருகின்றார்.

புனானை, மைலந்தனை போன்ற கிராமங்கள் புனானை இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரால் அடிக்கடிசுற்றிவளைக்கப்படுவதும், பொதுமக்கள் தாக்கப்படுவதும் வழக்கமாக இருந்தன.

09.08.1992அன்று அதிகாலை புனானை, மைலந்தனைக் கிராமங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுப் பொதுமக்கள் மிக மோசமான முறையில் கத்தி, வாள், பொல்லு போன்றவற்றினாற் தாக்கப்பட்டார்கள். இராணுவத்தினர் துப்பாக்கிகளினாலும் சுட்டார்கள்.

இவ்வாறு இராணுவத்தினரின் தாக்குதலால் ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார். பலர் காயமடைந்தார்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# அக்சன் பார்ம் தன்னார்வ நிறுவனப் படுகொலை 05.08.2006

இலங்கையின் கிழக்குமாகாணத்திலுள்ள திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேசங்களில் ஒன்றே மூதூர் ஆகும். இங்கு தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இலங்கை அரசு இப்பிரதேசத்திலுள்ள மாவிலாறு அணையைத் திறப்பதற்கான யுத்தம் ஒன்றை 2006ஆம் ஆண்டின் யூலை மாத இறுதியில் ஆரம்பித்திருந்தது. இலங்கை அரசு தமிழர் பகுதிகள் மீது விதித்து வந்த பல்வேறு பொருளாதாரத் தடைகள், நெருக்கடிகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களையும் நடாத்திய மக்கள் இறுதியில் மாவிலாறு அணைக்கட்டை பூட்டிவிட்டார்கள். இதனை ஏற்றுக்கொள்ளமுடியாத இலங்கை அரசு தனது படைகளை ஏவி மாவிலாறு அணைக்கட்டை திறக்க முயற்சித்தது. இலங்கைத்தீவில் 2002ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையையும் கவனத்திற்கொள்ளாது தமிழர் பிரதேசம் மீது யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டது. இதற்கு பதில் நடவடிக்கையாக தமிழீழ விடுதலைப் புலிகளும் மூதூர் பகுதி இராணுவ நிலைகள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். விடுதலைப் புலிகள் மூதூர் பகுதி இராணுவ நிலைகளை தகர்த்துவிட்டு தமது பழைய நிலை களில் மீண்டும் நிலைகொண்டனர். இதன் பின்னர் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 05ஆம் நாள் மூதூர் பகுதிக்குள் நுழைந்த இலங்கை அரச படைகள் அப்பகுதி மீது தமது அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டனர். அங்கு மக்கள் பலர் இராணுவத்தினராற் கொல்லப்பட்டனர். இதன் ஓர் அங்கமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான பல்வேறு உதவிகளையும் செய்து வந்த. “Action Contre La Faim” எனும் அரசசார்பற்ற நிறுவனத்தின் பணியாளர் 17 பேரை அப்பிரதேசத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் கோரமான முறையில் படுகொலை செய்தனர்.

“Action Contre La Faim” நிறுவனமானது பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்டது. இந்நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளை வழங்கும் நோக்கில் திருகோணமலை, மூதூரில் தமது அலுவலகத்தை அமைத்துச் செயற்பட்டுவந்தது. மூதூர்ப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கிக் கொண்டிருந்த வேளை அவர்களது அலுவலகத்திற்குள் வைத்தே, அவர்களது நிறுவனச் சீருடையில் இருந்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்களில் நான்கு பேர் பெண்களாவர். ஒருவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர். இச்சம்பவத்தில் 17 பணியாளர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்களை இராணுவத்தினர் குழிதோண்டிப் புதைத்துள்ளனர். சடலங்களை மீட்டு பரிசோதித்த போது இப்பணியாளர் ஒவ்வொருவரது உடலிலும் 20 வரையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. இப்படுகொலையுடன் இலங்கை அரசே தொடர்புபட்டுள்ளது என்பதற்கு அப்பகுதி மக்களும், இலங்கை போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் அறிக்கையும் சாட்சியங்களாகும்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது) :

01. றிச்சட் அருள்ராஜ், 24
02. சிவபாலன் றோமிலா, 25
03. சிங்கராசா பிறீமஸ் ஆனந்தராசா, 34
04. சக்திவேல் கோணேஸ்வரன், 24
05. செல்லையா கணேஸ், 54
06. கணேசு சிறீதரன், 36
07. யோகராசா கோடீஸ்வரன், 31
08. அம்பிகாபதி ஜெயசீலன், 31
09. அப்துல் லத்தீன் மொகமட் ஜப்பா, 31
10. முத்துலிங்கம் நர்மதன், 24
11. கணேசு கவிதா, 27
12. மாதவராசா கேதீஸ்வரன், 36

13. ஜ.முரளிதரன்,35
14. வைரமுத்து கோகிலவதனி, 29
15. கனகரட்ணம் கோவர்தனி, 28
16. பி.பார்த்தீபன், 27
17. ரவிச்சந்திரன் றிசிகேசன், 28

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.**
**நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்**
**உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு**
**தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**

# சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 15 பொதுமக்கள் படுகொலை 08.08.2006

திருகோணமலை மாவட்டத்தின் தெற்கில் உள்ள மூதூர் கிழக்கில் உள்ள நல்லூர் மற்றும் ஊபுரல் கிராமங்கள் மற்றும் தெற்கில் உள்ள ஒவ்வொருசிலம்பத்து கிராமங்கள் மீது ஞாயிற்றுக்கிழமை சிறீலங்கா இராணுவம் மற்றும் சிங்கள கடற்படையினர் நடத்திய பீரங்கி குண்டுகள் தாக்கியதில் குறைந்தது 15 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 20 பேர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.15 மணியளவில் இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் உள்ள பல கரையோர கிராமங்களில் ஊபுரல் மற்றும் நல்லூர் ஆகியவை அடங்கும்.

சிவில் சமூகத்தினர் இந்தக் கிராமங்களுக்குச் சென்று சிறிலங்கா அரச படையினரின் பயங்கர பீரங்கித் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் தொடர்பான மேலதிக விபரங்களை சேகரித்துள்ளனர்.

மேலும் விவரங்கள் தெரியவில்லை.

# கதிரவெளி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் சிறீலங்கா படைகளின் தாக்குதலில் 50 பொதுமக்கள் படுகொலை – 10.08.2006

கதிரவெளி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில், ஆயிரக்கணக் கான பொதுமக்கள் இன்னும் அப்பகுதிகளை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த நிலையில், வியாழன் காலை, இலங்கைப் படைகளின் வான்வழி குண்டு வீச்சு மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் குறைந்தது 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சிறீலங்கா இராணுவம் கல்லாறு முகாமில் இருந்து மாவிலாறு மதகு நோக்கி ஆயிரக் கணக்கான துருப்புக்களை உள்ளடக்கிய ஒரு புதிய தாக்குதலை ஆரம்பித்தது, அதே நேரத்தில் ஈசிலம்பத்து மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கண்மூடித்தனமான வான்வழி மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியது.

மட்டக்களப்புக்கு வடக்கே சுமார் 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கதிரவெளி பகுதியில் குறைந்தது பதினைந்து பொதுமக்களின் சடலங்கள் காணப்படுவதாக சிவில் வட்

# முகமாலையில் 8 பொதுமக்கள் சிறீலங்கா படையினரின் பீரங்கித் தாக்குதலில் படுகொலை – 12.08.2006

கதிர்காமம் இந்து கோவிலுக்கு மத யாத்திரை சென்று திரும்பிய 7 யாழ்ப்பாணப் பொது மக்கள் முகமாலை சோதனைச் சாவடியிலிருந்து வடக்கே பின்வாங்கிய சிறீலங்கா இராணுவத்தின் படையினரின் பீரங்கித் தாக்குதலில் கொல்லபபட்டனர் - யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் சமூக வட்டாரங்கள் தெரிவித்தன.

வெள்ளிக்கிழமை மாலை கதிர்காமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த 48 சிவிலியன் யாத்திரீகர்களுடன் சென்ற பேருந்தை சிறீலங்கா இராணுவத்தினர் தடுத்துள்ளனர். நான்கு பயணிகள் தங்கள் சோதனைச் சாவடிகளில் இருந்து வெளியேறும் போது சிறீலங்கா துரப்புக்களின் பீரங்கி மற்றும் துப்பாக்கிச் சூடு தாக்குதல்களில் இருந்து தப்பினர். காயமடைந்தவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் சனிக்கிழமை மீட்டனர்.

"சண்டை வெடித்ததால் நாங்கள் எல்லா திசைகளிலும் பரவினோம்," என்று உயிர் பிழைத்தவர் சுப்பிரமணியம் பாக்கியலட்சுமி, 65, கூறுகிறார்.

துருப்புப் படையினர் விடுதலைப் புலிகளுடன் பீரங்கி சண்டையில் ஈடுபட்டதால் பயணிகள் சாலையோரம் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பின்னர் செக்போஸ்ட்டில் இருந்த சிப்பாய்கள் செக்போஸ்ட்டில் இருந்து வெளியேறினர், செக்போஸ்ட்டில் சிக்கித் தவித்த பொதுமக்களை கவனிக்காமல் விட்டுவிட்டனர் என்று உயிர் பிழைத்தவர்களில் ஒருவர் கூறினார்.

பாக்கியலட்சுமி மற்றும் 3 பேர் அருகில் உள்ள கழிவறைக்கு பின்னால் சென்று மறைந்தனர். பின்னர், அந்தப் பகுதியிலிருந்து வெளியேறும் போது இலங்கைப் படையினர் துப்பாக்கிச் சூடு மற்றும் மோட்டார் குண்டுகளை வீசினர்.

"இன்று காலை புலிகள் வரும் வரை இரவு முழுவதும் நாங்கள் அங்கேயே சிக்கிக் கொண்டோம்," என்று அவர் கூறுகிறார்.

பாக்கியலட்சுமியின் கூற்றுப்படி, ஷெல் தாக்குதலில் குறைந்தது 7 பேர் கொல்லப்பட்டனர். மற்றவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை, என்கிறார்.

கைதடியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவசுப்ரமணியம், 61, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நடராசா இந்திரன், 51, மற்றும் துரைராஜா தவமணி, 68, ஆகிய மூவர், முகமாலை சோதனைச் சாவடியில் உள்ள கழிவறைக்குப் பின்னால் சிக்கி, சனிக்கிழமை

சுப்பிரமணியம் பாக்கியலட்சுமி, 64

துரைராஜா தவமணி, 68

அறுமுகம் சிவசுப்பிரமணியம், 61

நடராசா இந்திரன், 51

# நெடுங்கேணி – சமளங்குளம் படுகொலை 08.08.2006

இலங்கையின் வடபகுதியில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேசமே நெடுங்கேணி ஆகும். இப்பகுதிகளில் அண்மைக்காலத்தில் இலங்கை இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினரால் பல்வேறுபட்ட தாக்குதல்கள் பொதுமக்கள்மீதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. இப்பிர தேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு மருத்துவ வசதியினை நொடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனையே வழங்கிவருகின்றது. பெரிதளவிலான வசதிகளைக் கொண்டிராத இம மருத்துவமனை பாரியளவில் பாதிப்பிற்குள்ளான நோயாளர்களை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றமை வழமையானதே.

அவ்வாறே 2006 ஓகஸ்ட் 08ஆம் நாள் இரவு 7.00மணியளவில் நெடுங்கேணி வைத்திய சாலையிலிருந்து கர்ப்பிணித்தாய் ஒருவரை ஏற்றிச்சென்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு இரவு 10.00மணியளவில் நெடுங்கேணி வைத்தியசாலை நோக்கி நோயாளர் காவுவண்டி என்ற தகவலை வழங்கும் ஒலியுடனேயே திரும்பிக் கொண்டிருந்தது. இவ்வாறு நோயாளர் காவு வண்டி நெடுங்கேணி வீதியில் உள்ள சமளங்குளம் பகுதியில் இரவு 11.30 மணியளவில் சென்று கொண்டிருந்த சமயம் இலங்கை அரச படைகளின் ஆழ ஊடுருவும் படையினரால் கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் அவ்வாகனத்தில் பயணம் செய்துகொண்டிந்த வைத்தியர் ஜெயபாலினா அவரது மனைவி, தாதியர் இருவர் மற்றும் சாரதி ஆகிய ஐவரும் உயிரிழந்தனர்.

வைத்தியர்கள் மிகவும் பற்றாக்குறையான சூழ்நிலைகளிலேயே வன்னி வைத்திய சாலைகள் இயங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதுடன், நெடுங்கேணி சுற்றியல்கூறு வைத்தியசாலையில் ஒரேயொரு வைத்தியர் தான் கடமையாற்றுகின்றமையும் மிகவும் கவலைக்கிடமானதே.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது)

01. கதிர்காமத்தம்பி ஜெயபாலினா, 60
02. ஜெயபாலினா பொன்னம்மா, 52
03. ஜெகாநந்தன் நகுலேஸ்வரி, 32
04. இராஜலிங்கம் ஞானேஸ்வரி, 23
05. கோபாலசுந்தரம், 57

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# அல்லைப்பிட்டி செல்வீச்சு 13.08.2006

யாழ்ப்பாணத்தின் கரையோரமாக அமைந்திருக்கும் தீவுகளில் அல்லைப்பிட்டியும் ஒன்றாகும் சிறீலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே அல்லைப்பிட்டிக்கு சமீபமாக சண்டை ஆரம்பித்ததும் மக்கள் அடைக்கலம் புகுந்த பிலிப்நேரி தேவாலயப் பக்கமாக இராணுவத்தினர் கண்டபடி சுட்டார்கள். இதில் பல எண்ணிக்கையானோர் இறந்ததாக கூறப்படுகின்றது.

இது இன்றுவரை பதிவுக்குட்படுத்தப்படவில்லை. இந்த செல்தாக்குதல் சம்பவத்தைக் கண்ட பில்ப்நேரி தேவாலய பங்குத்தந்தை ஜிம் பிறவுணும் இராணுவத்தினரால் காணாமல் போகச் செய்யப்பட்டார். இந்தச் செல்தாக்குதலுக்கு ஆளான தன்னை இனம் காட்ட விரும்பாத இளம் பெண் ஒருவர் பின்பு இந் நிகழ்வு தொடர்பான தமது அனுபவம்பற்றி எழுதியுள்ளார்.

அந்த இரவின் நிகழ்வு தொடர்பாக வேறு பதிவுகள் இல்லாததால் அவரது பதிவு மிகவும் முக்கியமானது. அவரது கூற்றுப்படி எல்லா இடத்தையும் சுற்றி செல் விழுந்து வெடித்த வண்ணம் இருந்ததால் தாங்கள் மாட்டிக் கொண்டதாகநினைத்தார்கள். அவர்கள் பிலிப்நேர் தேவாலயத்தில் அடைக்கலமடைந்தனர். பின்பு சிறீலங்கா இராணுவத்தினர் தேவாலயத்திற்கு வந்து அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்வதாக வாக்குறுதி அழித்தனர். சிறீலங்கா இராணுவத்தினர் மக்களை கேடயமாக பாவித்து தமது முகாமுக்கு அண்மித்தும் அவர்களை கைவிட்டனர். எனவே மக்கள் செல்தாக்குதலுக்கு மத்தியில் மீண்டும் தேவாலயத்தை நோக்கிச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். இராணுவத்தின் நோக்கை மக்கள் உணர்ந்து கொள்ளும் வரை பலமுறை இராணுவத்தினர் இவ்வாறு நடந்துகொண்டனர். சில மணித்தியாலங்களுக்கு பிற்பாடு செல்தாக்குதல் நேரடியாக தேவாலயத்துக்கு வந்தது.

கடலிலிருந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தநேரத்தில் பலர் இறந்துவிட்டார்கள். பெற்றோரை பிள்ளைகள் இழந்தனர். இந்த அக்கிரமத்தின் பின்பு உடல்களை மீட்பதற்கு அருட்தந்தை ஜிம் பிறவுணும் முயன்ற போது இராணுவம் அதையும் தடுத்தது. இன்றுவரை கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை பதிவுக்குட்படுத்தப்படவில்லை. இந்தப் புத்தகத்தின் 71ம் பகுதியல் குறிப்பிடப்பட்ட 1990இல் இடம்பெற்ற பெரும் தொகையானோர் காணாமல் போன சம்பவத்தின் மையமாக இதே பிலிப்நேரி தேவாலயம் விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. யோகன் றொபேற், 41
2. மேரிமஞ்சுளா, 45
3. மெனிஸ், 19
4. மைக்கல், 55
5. நடராஜா, 60
6. தேவகுமார், 28
7. உதயகுமார், 35
8. டு.ஞானப்பிரகாசம், 70
9. ரமேஸ், 26
10. தேவநாயகி, 30

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# வள்ளிபுனம் செஞ்சோலைப் படுகொலை 14.08.2006

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் 2006 ஒகஸ்ட் 10ஆம் நாள் முதல் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ முதலுதவிப் பயிற்சி நெறியில் வன்னிப்பிரதேச கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி வலயங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான உயர்தர வகுப்பு மாணவிகள் பங்குபற்றியிருந்தனர். மாணவர் பயிற்சி நெறியில் பங்குபற்றிக்கொண்டிருந்த வேளை இலங்கை வான்படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் செஞ்சோலை வளாகத்தில் 2006 ஒகஸ்ட் 14 அன்று காலை 7.30 மணியளவில் காலைக் கடன்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவிகள் மீது கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதலினை மேற்கொண்டன. இக் குண்டுத் தாக்குதலில் 52 மாணவியர் மற்றும் இரு பணியாளர் உட்பட 54 பேர் உயிரிழந்தனர். 130 மாணவியர் படுகாயமடைந்ததுடன் பல மாணவியர் சிறு காயங்களுக்குமுள்ளாகினர்.

படுகாயமடைந்தவரில் மூன்று மாணவியர் கால்கள் துண்டிக்கப்பட்டதுடன் மாணவி ஒருவர் கண் ஒன்றை இழந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவர்களில் மேலும் காயப்பட்ட மூன்று மாணவியர் முல்லைத்தீவு வைத்தியசாலையினால் கண்டி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

சிறீலங்கா பயங்கரவாத விசாரணைத்

திணைக்களம் உடனடியாக காயப்பட்ட மூன்று மாணவியரும் கைதுக்குள்ளாக்கினர். இறுதியாக மூன்று மாணவியர் விடுவிக்கப்பட்டு வன்னியிலுள்ள தமது வீட்டுக்குச்செல்ல விடுவதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்களுள் காயமடைந்த ஒரு மாணவி வவுனியாவில் இறந்துவிட்டார். மற்றைய இரு மாணவிகளும் உடனடியாக கண்டி வைத்திய சாலைக்கு திரும்ப எடுத்துச் செல்லப்பட்டனர். சில மாதங்களின்பின் இரு மாணவியர் எங்கே தங்குகின்றார் என்பதே மர்மமாக மாறியது அவர்களது பெற்றோர்கள் மட்டும் ஏற்கனவே ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் அவர்களைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப் படுகின்றனர். ஏறத்தாழ இரு வருடங்களாக எதுவித குற்றச் சாட்டுக்களுமின்றி இந்த இரு மாணவியர் தடுத்துவைத்தலானது அவர் களது பெற்றோருக்கு விளங்கிக்கொள்ள முடியாததாகவே இருக்கிறது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது)

01. அருளம்பலம் யசோதினி, 18
02. பாலகிருஸ்ணன் மதினி, 18
03. சந்திரமோகன் நிவேதிகா, 17
04. சந்திரசேகரன் விஜயகுமாரி, 29
05. கனகலிங்கம் நிருபா, 17
06. கனகலிங்கம் நிருஷா, 17
07. கணபதிப்பிள்ளை நந்தினி, 18
08. கந்தசாமி குமாரசாமி, 48
09. கிரிதரன் டயானி, 16
10. குபேந்திரச்செல்வம் லிகிதா, 19
11. மகாலிங்கம் வசந்தராணி, 18
12. மகாலிங்கம் வென்சிடியூலா, 17
13. மார்க்குப்பிள்ளை கெலன்சுதாயினி, 18
14. முருகையா அருட்செல்வி, 18
15. முத்தையா இந்திரா, 18
16. நாகலிங்கம் கோகிலா, 19
17. நாகலிங்கம் தீபா, 19
18. நகுலேஸ்வரன் நிஷாந்தினி, 19
19. நல்லபிள்ளை நிந்துஜா, 18
20. நவரட்ணம் சாந்தகுமாரி, 18
21. நீலாயினார் நிவாகினி, 17
22. பத்மநாதன் கலைப்பிரியா, 18
23. புவனசேகரம் புவனேஸ்வரி, 17
24. இராசமோகன் கம்சனா, 19
25. இராசேந்திரச்செல்வம் மகிழ்வதனி, 18
26. இரவீந்திரராசா றம்ஜா, 18
27. ச. ஜெயரூபி, 20
28. சாந்தகுமார் சுகிர்தா, 19
29. சந்தனம் சத்தியகலா, 20
30. செல்வம் நிறோஜினி
31. சண்முகராசா பாவேந்தினி
32. சிவமயஜெயம் கோகிலா
33. சிவமூர்த்தி கார்த்திகா, 18
34. சிவானந்தராசா திவ்வியா
35. சிவசுப்பிரமணியம் வட்சலாமேரி, 20
36. சொலமொன் சிங்கராசா, 65
37. சுந்தரம் அனோஜா, 17
38. தம்பிராசா லக்சியா, 17
39. தம்பிராசா சுகந்தினி, 18
40. தம்பிராசா தீபா, 19
41. தமிழ்வாசன் நிவேதிகா, 18
42. தனபாலசிங்கம் பகீரதி, 19
43. தணிகாசலம் தனுசா, 19
44. தர்மகுலசிங்கம் கேமாலா, 18
45. தர்மராசா பிருந்தா, 17
46. தேவராசா சர்மினி, 17
47. திருநாவுக்கரசு நிரஞ்சுலா, 18
48. துரைசிங்கம் சுதர்சினி, 17
49. துரைசிங்கம் திசானி, 18
50. உதயகுமாரன் கௌசிகா, 19
51. வைரமுத்து கிருத்திகா, 19
52. வரதராஜா மங்களேஸ்வரி, 17
53. வீரசிங்கம் றாஜிதா, 18
54. விஜயபவன் சிந்துஜா, 18
55. விவேகானந்தம் தட்சாயினி, 18
56. தம்பிமுத்து தயாழினி, 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

துக்குடியிருப்பு
URAL HOSPITAL
PUTHUKKUDIYIRUPPU

JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Free!
ESTIMATES
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com

அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203

The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com

Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com

# ஆனைக்கோட்டைத் தொல்லியலாய்வு: பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்

ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் தென்மேற்குப் பகுதியின் மேற்குப் பக்கத்தில், நவாலிக்குத் தெற்கே யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் AB 17 வீதிக் கருகே யாழ்ப்பாணக் கடலேரிக்குக் கிழக்காக அமைந்த பண்டைய கிராமம். முன்னொரு காலத்தில் வன்னியில் யானைகளைப் பிடித்து, ஆனையிறவு வழியாக யாழ்ப்பாணம் கொண்டுவந்து, அவற்றை இக்கிராமத்தில் உள்ள அடைப்பரண்களில் (Corral) அடைத்து வைத்துப் பின்னர் கப்பல் வழியாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்த காலப்பகுதியில் இக்கிராமத்திற்கு 'ஆனைக்கோட்டை' என்ற பெயர் ஏற்பட்டது என்ற மரபுவழிக் கதைகள் உள்ளன.

ஆனைக்கோட்டைக்கு சற்று தென்மேற்கே கடற்கரையோடு அமைந்த நாவாந்துறைப் பகுதியில் 'கண்ணபுரம் குடியேற்றத் திட்டக் காலனியில்' புதிய வீடுகள் அமைப்பதற்காக அங்கிருந்த நிலத்தைச் சீர்செய்வதற்காக ஆனைக்கோட்டையிலிருந்த கரையாம்பிட்டி மண்மேடு வெட்டப்பட்டு மண்கும்பிகள் அகற்றப்பட்டன. இதைத் தோண்டுவதற்கு அனுமதி கொடுத்த அலுவலகர்கள் கரையாம்பிட்டி ஒரு புராதன தொல்லியல் மேடு என்பதை அறிந்திலர் போலும். மேலும், அச்சமயம் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையினர் ஆனைக்கோட்டைத் தொல்லியல் மையம் இருந்த இடத்தில் ஒரு சர்வதேச விளையாட்டு அரங்கம் அமைப்பதற்காக 30 ஏக்கர் நிலத்தைப் பெற்றிருந்தார்கள்.

The Anaikoddai Royal Seal.
Image Source : Dr P. Ragupathy.

## ஆனைக்கோட்டைத் தொல்லியல் மேலாய்வுகள் - 1980



ஆனைக்கோட்டை தாழிப் புதையல் : 29-11-1980.
Image Source - Dr. P. Ragupathy.

1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆனைக்கோட்டைக் கரையாம்பிட்டியில் மண்ணகற்றல் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், அங்கே கலாநிதி இரகுபதி தலைமையிற் சென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வுக் குழுவினரால் இது ஒரு பெருங்கற் பண்பாட்டுத் தொல்லியல் மேடு என இனங்காணப்பட்டது. அச்சமயம் பெய்த பெருமழையில் மண் தோண்டப்பட்ட இடங்களில் மண் கரைந்து பெருவாரியான மட்கலத் துண்டுகள் வெளியே தெரிந்தன.

ஆனைக்கோட்டைக் கரையாம்பிட்டி தொல்லியல் மேட்டை வட திசையிலிருந்து நோக்குமிடத்து பரந்து விரிந்த நெல் வயல்களின் பின்னணியில் பனந்தோப்புகளுக்கு இடையே மண்கும்பிகள் கிழக்கு - மேற்காக நீண்டு கிடந்தன. இந்த மேட்டை தென் திசையிலிருந்து நோக்குமிடத்து, மண்கும்பிகள் அகற்றப்பட்ட நிலம் பனை மர அடிமட்டத்திலிருந்து மூன்று அடிவரை கீழே தோண்டப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக குழுவினரின் மேலாய்வுகளில் புராதனத் தொல்பொருட்கள் காணப்படும் நிலம் இரண்டு சதுர கி.மீ. அளவினதாகக் காணப்பட்டது. அப்பரப்பினுள் ஆறு தொல்லியல் மண்கும்பி மையங்கள் இனங்காணப்பட்டன (Ragupathy, P. 1987: 66).

## ஆனைக்கோட்டைக் கரையாம்பிட்டி மண்மேடும் அதில் கண்ட தாழிப்புதையலும்

இந்த மண்மேடு ஆனைக்கோட்டை நெல் வயல் வீச்சளவின் இடையே இரண்டு ஏக்கர் பரப்பளவிற்குப் பரந்து கிடந்தது. இந்த மேட்டின் அரைவாசிப் பகுதி அகற்றப்பட்டிருந்தது. மிகுதிப் பகுதியில் இயற்கையான தாவரங்களும் பனை மரங்களும் காணப்பட்டன. மண் தோண்டப்பட்ட பகுதியில் நவம்பர் மாதத்தில் பெய்த பெருமழையின் பின்னர் ஏராளமான மட்பாண்டங்களின் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன.




கீறல் எழுத்துக்களைக் கொண்ட கறுப்பு-சிவப்பு மட்கலன்கள்
Image Source - Dr. P. Ragupathy.

மேற்பகுதி நீக்கப்பட்ட பெரிய அளவினதான ஒரு தாழிப் புதையல், அதனுள் காணப்பட்ட பல எலும்புத் துண்டுகள், ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டத் துண்டுகள், ஆரம்பகால சிவப்பு மட்கலன்கள், இரும்புக் கருவிகள் என்பன இந்த மையத்தின் பெருங்கற்காலப் பண்பாட்டு வளத்திற்கான சான்றாக அமைகின்றன (Ragupathy. P. 1987: 66).

இத்தாழியில் கழுத்துப்பகுதியும் விளிம்பும் காணப்படவில்லை. தாழியின் உள்ளே ஆராய்ந்த பொழுது எலும்புகள், சிப்பிகள், நண்டுக்கோது, ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டத் துண்டுகள் என்பன காணப்பட்டன. இத்தாழிக்கு அருகில் செப்பினால் செய்த ஒரு 'கோலக்குச்சி' கண்டெடுக்கப்பட்டது. இப்படியான 'கோலக்குச்சிகள்' பொம்பரிப்புத் தாழிப் புதையல்களோடு காணப்பட்டதை விமலா பெக்லி குறிப்பிட்டிருக்கிறார் (Begley, V. 1970: 84-93). இவற்றோடு உரோம ரௌலெற்றெட் மட்பாண்டத் துண்டுகள், சித்திர எழுத்துப் பொறித்த மட்கலத் துண்டுகள் என்பன கிடைத்தன. இவற்றில் ஒரு ரௌலெற்றெட் மட்பாண்ட ஓட்டில் 'பி', 'யி' ஆகிய பிராமி எழுத்துகள் கீறப்பட்டிருந்தன. இவைதவிர கல்லினால் ஆன அம்மி - குழவிகள், கற்கருவிகள், இரும்பினாலான ஈட்டியின் பாகங்கள், இரும்பு ஆணிகள், உருக்கிய இரும்பின் கழிவுக் கசடுகள் (Iron slags) என்பனவும் இத்தாழியின் அருகே கண்டெடுக்கப்பட்டன (Ragupathy. P. 1987: 66-67).



புதையற் பொருட்கள்: கற்களினால் செய்யப்பட்ட அம்மி, குழவி, மற்றும் உபகரணங்கள்
Image Source - Dr. P. Ragupathy.

### கண்ணகி அம்மன் கோயில் மண்மேடு

ஆனைக்கோட்டையில் வட்டுக்கோட்டை வீதிக்கு அருகாமையில் உள்ள கண்ணகி அம்மன் கோயிலுக்கு வடக்கே பண்டைய மட்கலன்களைக் கொண்ட மூன்று மண்மேடுகள் காணப்படுகின்றன. இவற்றில் இரு மேடுகள் கலைக்கப்பட்டும், ஒன்று முழுமையாகவும் காணப்பட்டன. இவற்றில் தடித்த விளிம்பு கொண்ட மட்பாண்டங்கள் மிக அதிகமாகக் காணப்பட்டன. கலைந்திருந்த மேடையிலிருந்து உரோம ரௌலெற்றெட் மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன (Ragupathy. P. 1987:67).

### ஐந்துபனைப் பிட்டி

இந்த மண்மேட்டில் ஐந்து பனை மரங்கள் காணப்படுவதனால் இது ஐந்துபனைப் பிட்டி என அழைக்கப்படலாயிற்று. ஆனால் இந்த மண்மேடு மண் மொண்டெடுப்பவர்களால் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்ணின் அடியில் பலவகையான மட்பாண்டத் துண்டுகள், முக்கியமாக தடித்த விளம்பு கொண்ட மட்கலன்கள் மற்றும் இரும்புக் கசடுகள் என்பன கண்டெடுக்கப்பட்டன.

### முள்ளிப் பிட்டி

ஆனைக்கோட்டை நெல் வயல்களின் கரையோரமாக பழைய டச்சுப் பாதையினருகே காணப்படும் மேட்டு நிலம் முள்ளிப் பிட்டி. இவ்விடத்தில் இரு இடங்களில் பண்டைய மட்பாண்டத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இதில் ஒன்று கரைப்பிரான் பிள்ளையார் கோயில் மேடு. இந்தக் கோயிலுக்கும் நவாலி வீதிக்குமிடையே இருந்த வீட்டு வளவுகளிலும் பல பண்டைய கலவோடுகள் கண்டெடுக்கப்பட்டன. இக்கோயில் மேட்டிற்கு வட மேற்கேயுள்ள மணல் மேடுகள் மற்றைய மையங்கள் ஆகும். இங்கிருந்தும் பல வகையான மட்கலன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

### யாவில் குளக்கரை மேடுகள்

யாவில் குளக்கரையில் காணப்பட்ட மண்மேடுகளிலும் பல வகையான மட்பாண்டங்கள் காணப்பட்டன. இவற்றில் அதிகமானவை தடித்த விளிம்பு கொண்ட மட்பாண்டங்களும், சிவப்பு நிற மட்பாண்டங்களுமாகும்.

### காத்தவராயர் கோயில்

ஆனைக்கோட்டை நெல் வயல்களின் வடகரையில் ஆனைக்கோட்டைக்கும் - நவாலிக்குமிடயிலான எல்லையில் அமைந்திருப்பது காத்தவராயர் கோயில். புகழ் பெற்ற இக்கிராமக் கோயிலில் ஆண்டுதோறும் காத்தவராயர் கூத்து நடைபெறுவது பாரம்பரியமாகப் போற்றிப் பேணப்படும் நிகழ்வு. இப்பிராந்தியத்தில் பளபளப்பாய் மினுக்கப்பட்ட நீள்சதுரமான சுண்ணாம்புக் கற்களும், பவளப்பாறைக் கற்களும், மரம் நடுவதற்கேற்ற குழிக் கற்களும் பரவிக்கிடப்பது, இவ்விடத்தில் புராதன கட்டடங்கள் இருந்ததைக் காட்டுகின்றன. இவ்விடத்தில் முறையான ஓர் அகழாய்வு செய்வதன் மூலமே இவற்றை வெளிக்கொணர முடியும் (Ragupathy. P. 1987: 68).

### ஆனைக்கோட்டை மட்கலன்கள்

ஆனைக்கோட்டை மேலாய்வுகளில் கண்டடெடுத்த மட்கலன்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். இவ்வகையான மட்பாண்டங்களின் அமைப்பு முறையும் காலக் கணிப்பும் மூன்றாம் இயலில் கூறப்பட்டுள்ளன.

### கட்டட அமைப்பு

பண்டைய யாழ்ப்பாணத்தில் கிடைத்த கல் வகைகளில் சுலபமாகக் கிடைத்தவை சுண்ணாம்புக்கற்கள் ஆகும். கந்தரோடையில் காணப்பட்ட ஸ்தூபங்களின் அடித்தளங்கள் வெட்டப்பட்ட சுண்ணாம்புக் கற்களைக் கொண்டே கட்டப்பட்டிருக்கின்றன. அதுபோல ஆனைக்கோட்டை - நவாலி எல்லைப் பகுதியில், மூடியிருந்த பற்றை பறகுகளையும் மண்ணையும் அகற்றி வெளிக்கொணரப்பட்ட பாழடைந்த கட்டடம் ஒன்று பொழியப்பட்டு, நேராக வெட்டப்பட்ட சுண்ணாம்புக் கற்பாளங்களால் கட்டப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. ஏற்கனவே கூறப்பட்டிருந்தது போல இப்பிராந்தியத்தில் பளபளப்பாய் மினுக்கப்பட்ட நீள்சதுரமான சுண்ணாம்புக் கற்களும், பவளப்பாறைகளும் (Coral rock), மரம் நடுவதற்கேற்ற குழிக்கற்களும் பரவிக்கிடப்பது, இவ்விடத்தில் இம்மாதிரியான கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இதுபோன்ற புராதனக் கட்டடங்கள் இருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. இவ்விடத்தில் முறையான ஓர் அக



ஆனைக்கோட்டை-நவாலி எல்லைப் பகுதியில் வெளிக்கொணரப்பட்ட பண்டைக்காலக் கட்டிடம். இது பொழியப்பட்டு நீள்சதுரமாக வெட்டப்பட்ட சுண்ணாம்புக் கற்களினால் அடித்தளமும், சுவர்களும் அமைக்கப்பட்டிருக்கிறது. அக் காலத்தைய அரச, அல்லது வேளிர் வகுப்பு மக்களின் கட்டிடங்கள் இவ்வாறான கட்டிட அமைப்பைக் கொண்டிருக்கலாம்.

Image Source : Dr. P. Ragupathy.

ழாய்வு செய்வதன் மூலமே இவற்றை வெளிக்கொணர முடியும்.

### ஆனைக்கோட்டைத் தொல்லியல் அகழ்வாய்வு – 1980

1980 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வுக் குழுவினர் ஆனைக்கோட்டையில் மேற்கொண்ட மேலாய்வுகளின் போது அந்த மையத்தின் தொல்லியல் வளம் தெரிய வந்தது. அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கா. இந்திரபாலா தலைமையில் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், கலாநிதி பொ. இரகுபதி ஆகியோர் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் துணையோடு 1980 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் அங்கே அகழ்வாய்வுகளை மேற்கொண்டார்கள். மண்ணை அகழ்ந்தெடுக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்த போதே அகழ்வாராய்ச்சிப் பணியும் தொடர்ந்தது. மண்ணை அகழ்ந்தெடுக்கும் போது பல எச்சங்கள் சிதைந்தும், குழப்பப்பட்டுங் காணப்பட்டாலுங்கூட, ஓரளவுக்கு இக்குறைபாடுகள் அற்ற பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு இப்பகுதியின் கலாசார முக்கியத்தினை எடுத்துக் காட்டியுள்ளது (சிற்றம்பலம், சி.க. 1993: 16).

### ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி மண்மேட்டு அகழ்வாய்வு




மேல் படம்: ஆனைக்கோட்டையில் ஈமச்சின்னங்களை உள்ளடக்கிய மயான மேடு வரைபடம்.
நடுப்படம்: அகழ்வு பெற்ற பகுதி. A. B எனக் குறிக்கப்பட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட இரு புதைகுழிகள்.
கீழ்ப் படம்: அகழ்வு மேட்டின் நில அடுக்கு. புதை குழிகள் மூன்றாம், நான்காம் மட்டங்களில் காணப்பட்டன.

Image Source : Dr. P. Ragupathy.

ஆனைக்கோட்டையில் கலைக்கப்பட்ட கரையாம்பிட்டி மண்மேடுகளின் வரிசையில், கலைக்கப்படாதிருந்த ஒரு மண்மேடு அகழ்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டது. ஈமச்சின்னங்களை உள்ளடக்கிய இந்த மண்மேட்டின் உயரம் சுமார் 4 அடிகளாகும். இந்த மேட்டில் 13 அடி நீளமும் 7 அடி அகலமுமான பகுதி அளந்து அகழ்வு செய்யப்பட்டது. இந்த அகழ்வில் நான்கு மண்படைகள் இனங்காணப்பட்டன.

**முதலாம் படை I:** இந்த மண்படை ஊரிகள், சங்குகள், நத்தை ஓடுகள், பவளச்சுண்ணப் பாறைகள் கலந்த மண்படையாகும். அருகிலுள்ள வயல்களைத் திருத்தும் வேளையில், அவற்றின் மேற்படையில் கடற்காற்று அடித்துக் கொண்டுவந்த கடற்கரை மணல்களோடு வந்த இப்பொருட்களைக் கொண்ட மண்ணை வயற்கரைகளில் வாரிக் கொட்டியபோது இவை சேர்ந்திருக்கலாம்.

**இரண்டாம் படை II:** இந்த மண்படை மணல் கலந்த செம்மஞ்சள் நிற மண்படை.

**மூன்றாம் படை III:** இது ஒரு வகையான இருவாட்டி மண்ணினால் ஆனது.

**நான்காம் படை IV:** இந்த மட்டத்தில் இருவாட்டி மண்ணும், இயற்கையான மண்ணும் கலந்து காணப்பட்டது.

இந்த மூன்றாம், நான்காம் மண் அடுக்குகளில் இரு மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை காணப்பட்ட இடங்கள் A,B என அடையாளப்படுத்தப்பட்டன. இப்படையில் சுமார் பத்து அடிக்கு அப்பால் இந்த எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் இவற்றின் காலம் முன்-பின்னதாக அமைந்திருந்தது என்பதை உணர்த்தும் வகையில் இப்படையின் அமைப்பு அமைந்திருந்தது. இவற்றில் முதலாவது எலும்புக்கூடு (A) நான்காவது மண்படையில் புதைக்கப்பட்டு, அதற்கு மேல் வரிசையாக கோடிட்ட சுட்ட ஓடுகள் அடுக்கப்பட்டிருந்தன. இரண்டாவது எலும்புக்கூடு (B), முதலாவது புதையலிலிருந்து 10 அடி தூரத்தில் மூன்றாவது மண்படையில் புதைக்கப்பட்டிருந்தது (Sitrampalam, S.K., 1983: 5-6: Ragupathy. P. 1987: 118-119).

### ஈமப்புதையல் – [A]

இங்கே அகழ்ந்தெடுக்கப்பட்ட இரு சடலங்களும் ஏறக்குறைய ஐந்து அடி உயரமானவை. இவை இரண்டும் மேற்கு - கிழக்குத் திசையை நோக்கிய வண்ணம் புதைக்கப்பட்டிருந்தன. முதலாவது புதைகுழியில் (A) காணப்பட்ட சடலத்தின் மேல் 12 வரிசையில் ஓடுகள் அடுக்கப்பட்டிருந்தன. சடலத்தின் இரு கைகளும் இடுப்பை நோக்கி மடித்த வண்ணம் காணப்பட்டன. இடுப்புக்குக் கீழே உள்ள பகுதிகள் பெரும்பாலும் அழிந்து விட்டன. இம்மனித உடலைச் சுற்றிவர நிவேதனப் பொருட்களாகப் பல பொருட்கள் படைக்கப்பட்டிருந்தன. இப்பொருட்கள் இறந்த இம்மனிதனுக்குச் செய்யப்பட்ட கிரியைகளின் எச்சங்கள் போலத் தோன்றின. இவற்றுள் மீன், சுறா ஆகியவற்றின் எலும்புகள், நண்டு ஓடுகள், சிப்பிகள், பலவகை மிருக எலும்புகள் என்பன குறிப்பிடத்தக்கன. இவை மட்பாண்டங்களினுள்ளே வைத்துப் புதைக்கப்பட்டிருந்தன. இந்த மட்பாண்டங்கள் கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் என்பனவாகும். இவற்றுள் ஆரம்பப் பெருங்கற்கால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், ஆரம்பகால சிவப்பு நிற மட்பாண்டங்கள் குறிப்பிடத்தக்கன. இம்மட்பாண்டங்களில் சித்திர எழுத்துகள் (Graffiti) வரையப்பட்டிருந்தன. சடலத்தின் காலடியில் பல சிப்பிகள் கூட்டாகப் புதைக்கப்பட்டிருந்தன. இவை அக்காலத்தைய ஈமப்புதையல் கிரியைகளாக இருக்கலாம். இவற்றைத் தவிர இரும்பினால் செய்த ஆணிகள், குத்துவாள், இரும்புக் கசடுகள் என்பனவும் புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன (Ragupathy. P. 1987: 119: சிற்றம்பலம், சி.க. 1993: 19).

புதையலின் தலைப்பாகத்தில் கண்டெடுத்த முத்திரை மோதிரம்

Image Source - Dr. P. Ragupathy.

முதலாவது ஈமப்புதையலில் கண்டெடுத்த முக்கியமான கண்டுபிடிப்பு சடலத்தின் தலையின் அருகில் ஒரு கறுப்பு - சிவப்புக் கிண்ணத்தினுள் வைக்கப்பட்டிருந்த கைவிரலில் அணியும் முத்திரை மோதிரமாகும். இத்தகைய பெருங்கற்காலச் சவ அடக்கங்களில் தென்னிந்தியாவிலோ, இலங்கையிலோ இதற்கு முன் இப்படிப் பெயர் பொறித்த பொருள் எதுவும் கிடைக்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203

கவில்லை. இம்மோதிரம் ஒரு முத்திரையாகப் பயன்படுத்தப் பட்டது. இம்முத்திரையில் இரண்டு வரிகளில் எழுத்துகள் உள் ளன. முதல் வரியில் மூன்று குறி எழுத்துகளும், இரண்டாவது வரியில் மூன்று பிராமி எழுத்துகளும் உள்ளன (Ragupathy. P. 1987: 119: Indrapala, K. 1987:201). இது பற்றிப் பின்னர் விரிவாகப் பேசப்படும்.

## ஈமப்புதையல் – (B)

முதலாவது ஈமப்புதையலுக்குச் சற்றுத் தெற்கே இரண்டாவது சடலம் அகழ்ந்தெடுக்கப்பட்டது. மேற்கு - கிழக்கு நோக்கிய வண்ணம் நீளக்கிடத்திப் புதைக்கப்பட்டிருந்த இச்சடலம் நான்கடி, ஒன்பது அங்குல உயரமானது. இது நிலத்தினுள் மூன்றாம் படை மட்டத்தில், முதலாவது புதையலுக்குச் சற்றுப் பிந்திய காலத்திற்குரியதாகக் காணப்பட்டது. இச்சடலத்தின் அடியில் படுக்கையாக சிப்பி ஓடுகள் பரப்பப்பட்டிருந்தன. இந்தச் சடலத்தின் காலடியில் ஒரு லக்ஷ்மி வில்லை, இரும்பு வாளின் துண்டுகள், இரும்பினாலான அகல் விளக்கு என்பன புதைக்கப் பட்டிருந்தன (Ragupathy. P. 1987: 120).

ஆனைக்கோட்டை அகழ்வில் கண்டெடுத்த லக்ஷ்மி வில்லை.

Image Source : Dr. P. Pushparatnam.

## பெருங்கற் பண்பாட்டுப் புதையல்கள்

ஆனைக்கோட்டைக் கரையாம்பிட்டி மண்மேட்டு அகழ்வுகளின் மூலம் இது ஒரு பெருங்கற் பண்பாட்டை எடுத்துக்காட்டும் கலா சார மையமாக உணரப்பட்டது. இப்பண்பாடு வரலாற்றுதயக் காலத்தில் தென்னிந்தியாவில் ஆரம்பமாகி இலங்கை முழு வதும் பரவியிருப்பதை சமீபகால ஆய்வுகள் எடுத்துக்காட் டுகின்றன. இன்றைய கற்கை நெறிகள், இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுதயக் காலத்தில் தென்னிந் தியாவிலும், இலங்கையிலும் இது ஒரு பொதுவான வாழ்க்கைப் பண்பாக இருந்து, பின்னர் இப்பண்பாடே இவ்விடங்களின் வர லாற்று ஆரம்பத்திற்குக் காரணமாக இருந்தது என்கின்றன.

ஆனைக்கோட்டையின் பெருங்கற் பண்பாட்டை எடுத்துக்காட் டும் கீழ்க்காணும் அடிப்படைத் தத்துவங்கள் தென்னிந்தியா விலும், இலங்கையிலும் காணப்படும் பெருங்கற் புதையல் களின் பொதுவான அம்சங்களாகும்.



அகழாய்வின் போது முதலாவது ஈமக்குழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட இரும்பினாலான வேல்நுனிகள், குத்துவாள், ஆணிகள், மற்றும் செப்பு கோலக்குச்சி.

Image Source : Dr. P. Ragupathy.

நிவேதனப் பொருட்களோடு மேற்கொள்ளப்படும் சடங்கு முறைமையான ஈமப்புதையல்கள்.

ஈமப் புதையல்களில் காணப்படும் கறுப்பு - சிவப்பு மட் பாண்டங்கள்.

ஒரே வகையான நிவேதனப் பொருட்கள்.

இரும்புப் பொருட்களும், இரும்பை உருக்கி வேலை செய்யும் போது கழிவுப் பொருட்களாக வரும் இரும்புக் கசடுகளும் இக் கால மக்கள் இரும்புத் தொழில்நுட்பத்தை அறிந்திருந்தார்கள் என்பதற்கான சான்றுகள்.

## மட்பாண்டங்களில் காணப்படும் பெருங்கற்காலச் சித்திர எழுத்துகள்.

இப்புதையல் மேடுகளின் மேற்பகுதி கலைக்கப்பட்டிருந் தமையால் அதன் மேற்தளக் கூறுகளைப் பற்றி அறிய முடிய வில்லை. ஆனால், முதலாவது ஈமப்புதையலின் மேல் அடுக்கப் பட்டிருந்த 12 வரிசை ஓடுகளும் இது ஒரு முக்கியமான




ஆனைக்கோட்டை பெருங்கற் புதையல்களில் கண்ட சித்திர எழுத்துக்கள் கொண்ட ஆரம்பகால கறுப்பு - சிவப்பு, மற்றும் சிவப்பு மட்பாண்ட ஓடுகள்.

Image Source : Dr. P. Ragupathy.

மனிதரின் புதையலுக்கான பெருங்கற் பண்பாட்டு அம்சமாக இருக்கவேண்டும் என்பதற்கான ஆதாரங்களாகும். இச்சடலத் தின் தலையினருகில் கண்டெடுக்கப்பட்ட அரச முத்திரை இந்த மனிதரை ஒரு முக்கியமான தலைவனாகக் காண்பிக்கின்றது. ஆதலால் இந்த ஓடுகளின் வரிசையும் இந்த மனிதரின் முக்கியத் துவத்தைக் காட்டுகிறது. பெருங்கற் புதையல்களில் பொதுவான பண்பாட்டு அம்சங்கள் காணப்பட்ட போதிலும், இடத்துக்கு இடம் காணப்படும் தனிப்பட்ட வேறுபாடுகளில் இது ஒன்றாக இருக்



ஆனைக்கோட்டை நீளக் கிடத்திப் புதையல். இது ஒரு அரசனின் சடலமாக இருக்கவேண்டும் என்பதை தலைப்பக்கத்தில் கண்டெடுத்த அரசமுத்திரை உறுதி செய்கிறது.

Image Source : Dr. P. Ragupathy.

கலாம் (Ragupathy. P. 1987: 121).

ஆனைக்கோட்டை பெருங்கற்பண்பாட்டு ஈமப்புதையல்களின் மற்றொரு வகை, 29-11-1980 இல் வெளிக்கொணரப்பட்ட மேற் பகுதி பழுதடைந்த தாழிப்புதையல். இறந்தவர்களின் சடலத் தையோ, எலும்புகளையோ நான்கடி வரை உயரமான பெரிய தாழிகளில் இட்டுப் புதைப்பது இன்னொரு வகையான பெருங் கற் பண்பாட்டு ஈமப்புதையல். கரையாம்பிட்டி மண்மேட்டில் புதைகுழிக்கு 3 மீட்டர் கிழக்கே, மேற்பகுதி அகழப்பட்ட மண் மேட்டில் இத்தாழி காணப்பட்டது (Ragupathy. P. 1987: 121).

இப்புதையல்களோடு பெருங்கற் பண்பாட்டு அம்சமான ஆரம்ப கால கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் (கி.மு. 1500 - கி.மு. 300), ஆரம்பகால சிவப்பு மட்பாண்டங்கள் (கி.மு. 1200 - கி.மு. 300) ஆகியனவும் காணப்பட்டன. கதிரியக்கக்கரிம ஆய்வுகளின்றி இப்புதையல்களின் சரியான காலக்கணிப்பை அளவிட முடியாதிருந்த போதிலும், இந்த ஆரம்பகால மட்பாண் டங்களைக் கொண்டு இப்புதையல்கள் இரண்டும் கி.மு. 300 ஆம் ஆண்டுக்காலத்திற்கு முற்பட்டவை எனக் கொள்ளலாம்.

## ஆனைக்கோட்டை அரச முத்திரை – ₮ጊ𐤀

ஆனைக்கோட்டை அரசமுத்திரை

Image Source : Dr. P. Ragupathy.

ஆனைக்கோட்டையில் 1980 டிசம்பர் மாதத்தில் பேராசிரியர் இந்திரபாலா தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத் துறையைச் சேர்ந்த ஒரு குழு அகழாய்வை நடத் தியபோது பெருங்கற் பண்பாட்டு ஈம அடக்கம் ஒன்று வெளிப் படுத்தப்பட்டது. அதில் காணப்பட்ட எலும்புக்கூட்டுடன் கைவிர லில் அணியும் ‘ஸ்றீற்றைற் ’ எனப்படும் கல்லிலாலான மோதிரம் ஒன்று, பொறிக்கப்பட்ட எழுத்துகளுடன் கிடைத்தது. இம்மோதிரம் ஒரு முத்திரையாகப் பயன்படுத்தப்பட்டது. இம் முத்திரையில் இரண்டு வரிகளில் எழுத்துகள் இருந்தன. முதல் வரியில் மூன்று குறி எழுத்துகளும், இரண்டாவது வரியில் மூன்று பிராமி எழுத்துகளும் காணப்பட்டன.

இம்முத்திரையிலுள்ள எழுத்துகளைப் பற்றி முதன்முதலாக விளக்கமளித்த பேராசிரியர் இந்திரபாலா முதல் வரியில் உள்ள எழுத்துகள் சிந்துவெளி எழுத்துகள் என்றும், அடுத்த வரியில் உள்ளவை பிராமி வாசகம் எனவும் கூறியிருந்தார். அதுமட் டுமல்லாமல் முதல் தடவையாக சிந்துவெளி எழுத்து வாசகமொன்றை பிராமி எழுத்துப்பெயர்ப்பு மூலம் வாசிக்கக் கூடிய சாத்தியம் ஒன்று இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார் (‘So, for the first time we have a chance of deciphering one complete legend in the characters of the Indus-derived script with the aid of a Brahmi transliteration’) (Indrapala, K. 1981, 1987: 201).

இரண்டாவது வரியில் பிராமியில் எழுதிய சாசனத்தில் மூன்று எழுத்துகளும் ஒரு அநுஸ்வரமும் காணப்படுகின்றன. முதலாம் எழுத்தின் எல்லா அம்சங்களையும் மிக அவதானமாகக் கவ னிக்குமிடத்து அவை தொடக்கத்திற் சில பிரச்சினைகளை ஏற் படுத்துகின்ற போதிலும், அவை மிக நெருக்கமாக, ஒரு சிறிய இடத்தில் எழுதப்பட்டுள்ளன. முதலாவது எழுத்தை வாசிக்க முற்படுமிடத்து சில கஷ்டங்கள் இருப்பினும், அதன் எல்லா அம் சங்களையும் கூர்ந்து அவதானிக்குமிடத்து அது ‘கோ’ என்ற உயிர்மெய் எழுத்தென்பது தெரிகிறது. இரண்டாம் எழுத்தை ‘வே’ என்றும் அடையாளங்காண முடிகின்றது. ‘த’ என்னும் எழுத்தின் மேல் ஒரு புள்ளியோ அநுஸ்வரமோ தெரிகின்றது. இச்சொல்லினை இரண்டு விதமாக அடையாளப்படுத்தலாம். அது அநுஸ்வரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அதனைத் ‘த’விற்கு முன்னதாகக் கொண்டால் சாசனத்தை ‘கோவேந்த’ என வாசிக்கலாம். அநுஸ்வரத்தை ‘த’விற்குப் பின் னுள்ளதாகக் கொண்டால் வாசகத்தை ‘கோவேந்தன்’ எனக் கொள்ளமுடியும். எவ்வாறாயினும் அது திராவிட மொழியிலுள்ள தாகும் (Indrapala, K. 1987: 201-202).

பேராசிரியர் இந்திரபாலாவின் மேற்கூறப்பட்ட விளக்கத்திற்கு பேராசிரியர் பத்மநாதன் கீழ்க்காணும் விமர்சன விளக்கத்தைத் தருகிறார்:

மேற்கூறப்பட்ட விளக்கத்திலே சில அடிப்படைப் பிரச்சினைகள் உண்டு. ஒன்று அநுஸ்வரம் பற்றியது. இரண்டாவது ஆனைக் கோட்டை முத்திரையில் இருமொழிச் சாசனம் எழுதப்பட் டுள்ளது என்ற சிந்தனை. முத்திரையிலே கோவேதன் என்ற பெயர் திராவிட (தமிழ்) மொழியில் அமைந்துள்ளது என்று பேராசிரியர் கா. இந்திரபாலா சொல்வது பொருத்தமானது. அது மறுப்பதற்குரியதுமன்று. ஆனால் அநுஸ்வரம் பற்றியும் இரு மொழி வாசகம் பற்றியும் அவர் கூறும் விளக்கங்கள் அவ்வித மானவை போலத் தெரியவில்லை. வாசகம் தமிழில் அமைந் திருப்பின் புள்ளியை அநுஸ்வரமாகக் கொள்ளவியலாது. அநுஸ்வரம் சமஸ்கிருத மொழி வழக்கிலுள்ளது. தமிழ்மொழி ஆவணங்களில் அது இடம்பெறுவதில்லை. இலக்கண நூலா சிரியர்களும் அதனைப் பற்றிச் சொல்வதில்லை. தொல்காப் பியம் புள்ளி இடவேண்டிய இடங்களைப் பற்றியே குறிப் பிடுகிறது. அநுஸ்வரம் பற்றியோ அதனைப் போன்ற வேறொன் றைப் பற்றியோ அது குறிப்பிடவில்லை (பத்மநாதன், சி. 2011: 33).

‘கோ’ என்னும் எழுத்துக்குப் பின்னால் வரும் சொல்லை ‘வேந்தன்’ என்று கொள்வது எவ்வாறு பொருந்தும்? ஒரே பொருளுடைய இரு சொற்களை, இரண்டு சொற்களை மட்டுங் கொண்ட வாசகத்திற் பயன்படுத்தினார்கள் என்று கொள்ள முடியாது. எனவே ‘கோ’ என்பதை பதவியினைக் குறிக்குஞ் சொல்லாகவும் ‘வேதன்’ என்பதை முத்திரையின் உடைமைக் காரனது பெயராகவும் கொள்வதே பொருத்தமான விளக்க மாகும். ‘கோ’ என்பது தொடக்க நிலையில் குறுநிலப் பிரிவுகளின் அதிபருக்குரிய பதவிப்பெயராக வழங்கியது. பிற்காலங்களில் அரசர்களையும் சக்கரவர்த்தியினோரையும் ‘கோ’ என்று அவர் களின் ஆவணங்கள் குறிப்பிட்டன (பத்மநாதன், சி. 2011: 33-34).

முத்திரையிலுள்ள மேல்வரியிற் காணப்படும் சித்திரங்களைச் சித்திர எழுத்துகளாகக் கொள்வது வெறுங்கற்பனையாகும். அவற்றில் வலமிருந்து இடமாகவுள்ள இரண்டு வடிவங்களும் குறியீடுகளாகவே கொள்ளத்தக்கவை. கேரளத்திலுள்ள எடகல் என்னுமிடத்தில் ‘கடும்மி புத சேர’ என்ற வாசகத்தைத் தொடர்ந்து திரிசூலம் போன்ற அடையாளம் அமைந்துள்ளது. அதனைத் தமிழ்நாட்டுத் தொல்லியல் துறையினர் ‘பனைமரம்’ என்று கொள்ளத்தக்க குறியீடு என்று குறிப்பிட்டுள்ளனர் (ஸ்ரீதர் 2006: 83, பத்மநாதன், சி. 2011: 34). ஐராவதம் மகாதேவன் இந்த அடையாளத்தை சேர அரசர் குல விருதுச்சின்னங்களில் ஒன்றான பனைமரம் (One of the insignia of the Cēra dynasty) எனக் குறிப்பிடுகின்றார் (Mahadevan, I. 2003: 610).

ஆனைக்கோட்டை முத்திரையில் குறியீடுகள் மேல்வரியிற் காணப்படுகின்ற பொழுதிலும் அவற்றைச் சாசனத்தின் இறுதி யான வடிவங்கள் என்று கொள்வது பொருத்தமாகும். சாசனம் கீழ்வரியிலுள்ள வலப்பக்கத்து முதலெழுத்துகளுடன் ஆரம்ப மாகின்றது. வலமிருந்து இடமாக வாசிப்பதன் மூலமே ‘கோ வேத’ என்ற சொற்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. மேல் வரியை சாசனத்தின் தொடர்ச்சியாகக் கொண்டு இடமிருந்து வலமாக நோக்குமிடத்து அவ்வரியிலுள்ள முதலெழுத்தைத்



**வாசகத்தின் இறுதியில் திரிசூலச் சின்னத்தைக் காட்டும் எடகல் கல்வெட்டின் மைப்பிரதி.**

Image Source : Dept. of Archaeology, Tamil Nādu.

தமிழுக்குச் சிறப்பெழுத்தான ‘ன’ வின் அடையாளம் என்று கொள்வதில் எதுவிதமான சிரமமும் இல்லை. உலோகத் துண்டத்தின் (ஸ்றீற்றைற் கல்லின்) எல்லைப்புறமான கோணத்தில் அது அமைந்திருப்பதால் அந்த எழுத்திற்குரிய ஒரு வளைகோட்டினை அதில் எழுத முடியவில்லை. இவ்வண்ணமாகச் சாசனத்தை நோக்குமிடத்து ‘கோ வேதன்’ என்ற வாசகம் உறுதியாகின்றது. அதனையடுத்து அமைந்துள்ள வடிவங்கள் இரண்டும் எடகல்லில் காணப்படும் சாசனத்தைப் போலக் குறியீடுகளாக வருகின்றன. அவற்றைக் கோ வேதனின் பதவிக்குரிய இலச்சினைகள் என்று கருதலாம் (பத்மநாதன், சி. 2011: 35).

### ஆனைக்கோட்டை முத்திரையின் காலம்

ஆனைக்கோட்டை முத்திரையில் காணப்படும் பிராமி எழுத்துகளின் வடிவ அமைப்பியலைக் (Morphology) கொண்டு அந்த முத்திரையின் காலம் கி.மு. 300 ஆம் ஆண்டிற்கு உரியதாகக் கணிக்கப்படுகின்றது (Indrapala, K. 1987: 200 Ramesh, K.V. 1987: 204).

ஆனால், எழுத்துகளின் வடிவ அமைப்பியலைக் கொண்டு கணிப்பிடும் காலக்கணிப்பு எப்போதும் சரியாக இருக்கும் எனக் கொள்ள முடியாது. உதாரணமாக தமிழ்நாட்டில் அழகன்களம், ஆதிச்சநல்லூர், கொடுமணல், பொருந்தல், கீழடி ஆகிய இடங்களில் கண்டெடுத்த மட்பாண்ட ஓடுகளில் காணப்பட்ட ஆனைக்கோட்டை எழுத்துகளை நிகர்த்த பிராமி எழுத்து வடிவங்கள் அவற்றின் வடிவ அமைப்பியலைக் கொண்டு கி.மு. 300 ஆம் ஆண்டிற்கு உரியதாக முதலில் கணிப்பிடப்பட்டன. ஆனால் கீழடி, ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வுகளில் கிடைத்த அறிவியல் ரீதியான காலக் கணிப்புகள் தமிழ்ப் பிராமி எழுத்துகளின் காலத்தை கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு எடுத்துச் செல்கின்றது (இரா. சிவானந்தம் 2019: 08). இவை போன்று ஆனைக்கோட்டை முத்திரையின் காலமும் கி.மு. ஐந்தாம் - ஆறாம் நூற்றாண்டிற்கு உரியதாக இருக்கலாம். எனவே, அறிவியல் ரீதியான கதிரியக்கக் காலக் கணிப்பை மேற்கொண்டாலே

ஆனைக்கோட்டை பெருங்கற்காலத் தொல்லியல் மேடு - வடதிசையிலிருந்து காணும்காட்சி:முன்னால் நெல் வயலும், பின்னணியில் பெருங்கற்புதையல் மேடுகளும் காணப்படுகின்றன.

Image Source : Dr. P. Ragupathy.

ஒழிய ஆனைக்கோட்டை முத்திரையின் சரியான காலத்தை அறிந்துகொள்ள முடியாது. அதுவரையில் அதன் காலத்தை கி.மு.300 ஆம் ஆண்டு என்றே கொள்ள முடியும்.

### யாழ்ப்பாணத்தில் அரசமைப்பின் ஆரம்பம்

யாழ்ப்பாண மண்ணில் ஓர் அரசமைப்பு, அது வெளியிடப்பட்ட காலப்பகுதியில் நடைமுறையில் இருந்திருக்கின்றது என்பதை நமது அறிவியலால் அறிந்துகொள்வது மட்டுமல்லாது, இன்று அந்த அரசமைப்பை வெளிப்படுத்தும் ‘தொட்டுணரக்கூடிய மரபுரிமைச் சான்றாகவும்’ (Evidence of a Tangible Cultural Heritage) இருப்பதுமே ஆனைக்கோட்டை முத்திரையின் முக்கியத்துவமாகும்.

முத்திரையில் இடம்பெறும் ‘கோ’ என்னும் அடைமொழி அவனது பெயரோடு இணைந்துள்ளதால் அவனை ஓர் அரசனாகவோ அல்லது சிற்றரசனாகவோ பதிவு செய்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், அதனை அடுத்துள்ள தீவுகளிலும், ஆதி இரும்புக்காலத்திற்குரிய பெருங்கற் பண்பாட்டு மக்கள் ஏற்படுத்திய குடியிருப்புகள், காலப்போக்கிலே சிற்றரசுகளாக உருவாகிவிடத் தொடங்கிவிட்டன என்பது ஆனைக்கோட்டையில் கிடைத்த எழுத்துப் பொறித்த முத்திரை அறுதியிட்டு உறுதிப்படுத்தும் (Affirmative evidence) சான்றாகும்.

- நன்றி: எழுநா - சிவ தியாகராஜா

**ஆனைக்கோட்டை பெருங்கற்காலத் தொல்லியல் மேடு - தென்திசையிலிருந்து காணும்காட்சி: முன்னால் நெல் வயலும், பின்னணியில் மண்மேடுகளிலிருந்து மண்கும்பிகள் அகற்றப்பட்டிருப்பதையும் காட்டும் படம்.**

Image Source : Dr. P. Ragupathy.





**ஆனைக்கோட்டையில் கண்டெடுத்த பல வகையான மட்கலன்கள்**

Image Source : Dr. P. Ragupathy.

**மண் தோண்டப்பட்ட பின்னர் கும்பிகளின் உச்சியில் நிற்கும் பனை மரங்கள்.**

Image Source : Dr P. Ragupathy.

# தேசியத் தலைவருக்கு விளக்கு கொழுத்தவுள்ள யாவருக்கும் வணக்கம்

23.07.2025

“விடிய விடிய இராமர் கதை, விடிந்த பின் இராமர் சீதைக்கு என்ன முறை?” இந்த பழமொழிக்கு விளக்க தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். ஆகையால் இதற்கான விளக்கத்தை தவிர்த்து, விடயத்திற்கு வருகிறேன்.

போர் முடிந்து கடந்த பதினைந்து வருடங்களிற்கு மேலாக, ஈழத்தமிழர்களாகிய நாம் - சிறீலங்காவின் போர்குற்றம், இன படுகொலை போன்று, அரசியல் தீர்வில் எந்த முன்னேற்றமும் கணாது வாழ்கிறோம். மாறாக நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும் 2009ம் ஆண்டு மே மாதத்தின் பின்னர், சகல கட்டமைப்புகளும் மூன்றாக நான்காக பிரிந்து ஒற்றுமையின்றி செயற்படுகின்றன.

இதற்குள் எமது தேசிய தலைவர் உயிருடன் இருப்பதை மறுதலித்து இல்லையென பரப்புரை செய்வதில் ஒரு பிரிவினர் மிகவும் கடுமையாக 24/7 உழைக்கிறார்கள். இன்னுமொரு பிரிவினர் தலைவரின் இருப்பு இப்போதைய நிலையில் முக்கிய அல்ல, அவர் விட்டு சென்ற விடயத்தை தொடருங்கள் என்கிறார்கள்.

(1-15) இவ் வியடத்திற்குள் செல்ல முன், ஓர் முக்கிய விடயத்தை சகலருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சில வருடங்களிற்கு முன் சுவிஸ்லாந்தில், சூரிஜ் மாநாகரில், போரில் இறந்ததாக கூறப்படும் சில தளபதிகளிற்கு விளக்கு ஏற்றப்பட்டது. அங்கு உயிருடன் இருக்கும் சில தளபதிகளிற்கு விளக்கேற்றப்பட்ட காரணத்தினால், அன்று இரவே, இவ் நிகழ்ச்சியை எதிர்த்து “நீங்கள் விளக்கு ஏற்றியவர்களில் சிலர் உயிருடன் இருப்பதை என்னால் நிரூபிக்க முடியுமென அன்று ஓர் WhatsApp அறிக்கை வெளியிடப்பட்டது.

இதனை அவ்வேளையில், ஐபிசி வானெலி தொலைகாட்சி, எனது அனுமதியுடன், அடுத்த நாள் தலைமை செய்தியாக்கியது. ஆனால் அன்று விளக்கேற்றியவர்கள் யாரும் இன்று வரை எனது அறிக்கையை மறுதலித்தது கிடையாது. யாவரும் இன்று வரை அமைதியாகி விட்டனர்.

இங்கு முக்கிய கேள்வி என்னவெனில், அன்று அவ் நிகழ்ச்சியை செய்தவர்களும், ஆகஸ்ட் 2ம் திகதி நிழ்ச்சியை செய்யவுள்ளவர்களும் ஒரே நபர்கள்.

ஆனால் அன்று தேசிய தலைவருக்கு விளக்கேற்ற தவறியவர்கள், ஏன் தற்பொழுது ஏற்ற முன் வந்துள்ளார்கள் என்ற வினாவிற்கு விடை காண முடியுமா?

(2-15) அடுத்து 2023ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ம் திகதி, கொழும்பில் வெளியாகும் ஓர் பிராபலியமான ஆங்கில பத்திரிகையில் (The Morning) தலைவர் உயிருடன் இருப்பது பற்றி - மகிந்த ராஜபக்சா, கோத்தபாயா, சரத் பொன்சேக்கா, கமால் குணரத்தின ஆகியோருக்கு முடியுமானால் எனது சவாலை ஏற்குமாறு எழுதியிருந்தேன். ஆனால் இன்று வரை அவர்கள் யாரும் முன்வராது வாயை மூடிவிட்டார்கள். இக்கட்டுரை சில தமிழ், சிங்கள இணையதளங்களில் வெளியாகியிருந்தது.

(3-15) இப்படியாக பல விடயங்கள் தொடர்ந்தனா. இதில் வெடிக்கை என்னவெனில், சில வருடங்களிற்கு முன் சுவிஸ்லாந்தில், உயிருடன் இருக்கும் சில தளபதிகள் விளக்கேற்றப்பட்டது பற்றிய அறிக்கை வெளியிடப்பட்டதற்கு முன்னுருமை கொடுத்த ஐபிசி வானெலி தொலைகாட்சி, திடீரென சில முன்னாள் போராளிகளை, தலைவருடன் சேவையாற்றியவர்களென, சிறீலங்கா புலனாய்விற்கு முன்பு கிடைக்காத தகவல்களை, இப் போராளிகள் மூலம் பெற்று, தமது ஊடகங்களில் வெளியிட்டு, லட்சக்கணக்கான பணத்தை சம்பாதித்தார்கள் என்பது வேறு கதை.

ஐபிசி ஊடகங்களில் அன்று செவ்வி கொடுத்த எந்த எவரும், தேசிய தலைவருடன் 2007ம் ஆண்டின் பின்னர் சேவையாற்றியவர்கள் இல்லை என்பது இங்கு குறிப்பிடதக்கது.

(4-15) அன்று தலைவரது இயக்கத்தில், அவர் போட்ட உணவு, கொடுத்த பயிற்சி உடை துணிவு யாவற்றையு கொண்ட சிலர் இன்று சிலர், தேசிய தலைவர் மீதே பலம் பார்க்கிறார்கள். இதன் விழைவாக, எதிர்வரும் ஆகஸ்ட் 2ம் திகதி, லட்சக்கணக்காண வெளிநாட்டு பணங்கள் செலவு செய்து, உயிருடன் உள்ள தேசிய தலைவரை, இறந்து விட்டாரென உலகிற்கு நிரூபிக்க போகிறார்களாம்.

(5-15) இது அவர்களது சுதந்திரம், அவர்கள் விரும்பியதை செய்யலாமென நாம் அலட்சியம் பண்ண முடியாது. இவர்கள் ‘ஆட்டை கடித்து மாட்டை கடித்து’ இன்று உயிருடன் உள்ள தேசிய தலைவருக்கே விளக்கு ஏற்ற துணிந்துள்ளார்கள்.

இது எமது தமிழீழ இனத்தின், மக்களின், நிலத்தின், கலாச்சரத்தின் பிரச்சனை. ஆகையால் எந்த தமிழனும் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது.

(6-15) ஆகையால், இவ் விளக்கேற்றுதல் - எமது இனத்திற்கு மக்களிற்கு, நிலத்திற்கு, கலாச்சரத்திற்கு என்ன நன்மைகள், தீமைகள் ஏற்படும் என்பதை ஆராய்வது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

(7-15) இதனால் ஈழத்தமிழர்களிற்கு ஏற்பட போகும் நன்மை என்று நாம் ஆராய்ந்தால், அதன் பதில் ‘சைவர்’ அதாவது சிறோ (Zero) என்பதே பதிலாகும்.

ஆனால் இவ் நிகழ்ச்சியை முன்னின்று நடத்துபவர்கள், சிங்கள பௌத்த அரசுகள், தலைவர்கள், புலனாய்வு பிரிவினர் ஆகியோரினால் - ‘தம்மால் செய்ய முடியதாதை இவர்கள் செய்துள்ளார்கள்’ என்ற பாரீய பாரட்டுதாலை பெற்று கொள்வதுடன், வேறு வேறு சுய லாபங்கள், பணம், பாரிசு பொருட்களையும் பெற்று கொள்ளுவீர்கள்.

(8-15) தேசிய தலைவருக்கு எதிர்வரும் ஆகஸ்ட் 2ம் திகதி விளக்கேற்றியவுடன், நீங்கள் தேசிய தலைவரின் கொடுத்த உணவை உண்டு, உடையை அணிந்து, பெற்ற பயிற்சியை கொண்டு போராடிய ‘தமிழீழம்’ மலர்ந்து விடுமா?

இல்லையேல் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் காணமல் போனோர் வந்து விடுவார்களா?

இல்லையேல், தாம் செய்தது ‘போர் குற்றம், இன அழிப்பு’ என்பதை சிங்கள பௌத்த அரசு ஏற்று கொள்ளுமா?

இல்லையேல், சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் தீர்வு கிடைத்துவிடுமா?

இல்லையேல், தலைவர் இருப்பை பிரதிபடுத்துபவர்கள், ஓரம் கட்டப்பட்டு இல்லாமல் அமைதியாகி விடுவார்களா? யாருக்கு ‘தலைப்பா’ கட்டுகிறீர்கள்?

இவை யாவும் நடைபெறாத கட்டத்தில், இந்த ஆகஸ்ட் 2ம் திகதி நிகழ்ச்சி யாரை திருப்தி படுத்ததுவதற்கு? இதை தொடர்ந்து, நீங்கள் எதிர்காலத்தில் என்ன செய்ய போகிறீர்கள்?

(9-15) ஆகஸ்ட் 2ம் திகதி நிகழ்வால், திருப்தி படவுள்ளவார்கள் - சிங்கள பௌத்த அரசுகள், இனவாத சிங்கள தலைவர்கள், சிறீலங்காவின் புலனாய்வின் பிரிவினர் உட்பட சிறீலங்காவின் முப்படையினரே. இவர்களை திருப்திபடுத்துவதற்கு, இவ்வளவு பணத்தை செலவழித்து, எமது இனத்திற்குள் பிரிவுகளிற்கு மேல் பிரிவுகளை உண்டு பண்ணியுள்ளீர்கள்.

(10-15) மீண்டும் மீண்டும் கேட்கிறேன், சில மாதங்களிற்கு முன் - சிலர் ஐரோப்பாவிலிருந்து டென்மார்க் சென்று விளக்கேற்றி என்னத்தை சாதித்தீர்கள்? அங்கு விளக்கேற்ற சென்றவரே, மிக அண்மையில் தேசிய தலைவருக்கும் அவரது சகோதரருக்கும் இருந்த உறவு பற்றி மிக அருமையாக கூறியிருந்தார். ஆனால் அப்படியான சகோதரர் தேசிய தலைவருக்கு ஒரு நிகழ்வை செய்வதை இவர் எப்படி விரும்பியிருக்க முடியும்? இங்கு தான் யாவருடைய பித்தலாட்டங்களும் தெட்ட தெளிவாகிறது.

(11-15) ஆகஸ்ட் 2ம் திகதி நீங்கள் தேசிய தலைவருக்கு விளக்கேற்றுவதால் அவருக்கு ஒரு குறையும் ஏற்பட போவதில்லை. ஆனால் என்றோ ஒரு நாள், தேசிய தலைவரின் இருப்பு நிரூபிக்கப்படும் வேளையில், நீங்கள் அத்தனை பேரும் மக்களால் துரத்தப்படுவீர்கள்.

(12-15) போர் முடிந்து பதினைந்து வருடங்களில், இவ் நிகழ்வை செய்யும், பங்கு கொள்ளும் யாவரும் இன்று வரை விளக்கு கொழுத்துவதை தவிர, ஈழத்தமிழினத்தின் அரசியல் இராஜதந்திர போராட்டத்திற்கு என்ன செய்துள்ளீர்கள் என்பதை உங்கள் நெஞ்சில் கையை வைத்து ஒழிவு மறைவின்றி கூறுங்கள்.

(13-15) இப்படியான உண்மைகள் யாதார்தங்களை எழுதியதற்காக, என் மீது வசை படப்போவதால், நீங்கள் எதையும் சாதிக்க மாட்டீர்கள். இதனால் எந்த தீர்வும் மக்களிற்கு கிடைக்க போவதில்லை.

(14-15) என்னை பொறுத்த வரையில், நான் சாவிற்கு பயந்தவன் அல்ல.... “ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, தாயகம் காப்பது கடமையடா”! எப்பொழுது சாவதற்கு தயாரகவுள்ளேன்...

(15-15) இறுதியாக, தேசிய தலைவருக்கு விளக்கேற்றுவதற்கு முன், நீங்கள் யாவரும் உங்களிற்கு கொழுத்துங்கள். ஏனெனில், “நீங்கள் யாவரும் இருந்தலென்ன, இறந்தலென்ன”, எமது தமிழினத்திற்கு உங்களால் எந்த நன்மையும் கிடைக் போவதில்லை.

தொடரும்...

கிருபா
ச. வி. கிருபாகரன்
பிரான்ஸ்
23.07.2025

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# மீண்டும் ஐநாவுக்கு ஒரு கடிதம்?

26.07.2025

கடந்த இருபதாம் தேதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் “டில்கோ” விருந்தினர் விடுதியில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. சந்திப்புக்கான அழைப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் எடுத்திருந்தார். குறிப்பாக கருத்துருவாக்கிகளை அழைக்கும் பொழுது அவர் அனைத்துலகை விசாரணைப் பொறிமுறை தொடர்பாகக் கதைக்கப் போகின்றோம் வாருங்கள் என்று அழைத்திருந்தார். அதோடு கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் தேதி ஐநாவுக்கு அனுப்பப்பட்ட கூட்டுக்கடிதத்தின் தொடர்ச்சியாகவும் கதைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

எண்பதுக்கும் குறையாதவர்கள் வந்திருந்தார்கள். தமிழ்த் தேசியப் பேரவையைச் சேர்ந்த கட்சித்தலைவர்கள், பிரமுகர்கள், குடிமக்கள் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காப் போராடும் அமைப்புகளை சேர்ந்தவர்கள், அணையா விளக்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தவர்கள், மத குருக்கள்…என்றிவ்வாறாக பலதரப்பட்டவர்களும் அங்கே வந்திருந்தார்கள். முதலில் கஜேந்திரக்குமார் பேசினார். தொடர்ந்து அங்கு வந்திருந்தவர்கள் பேசினார்கள்.

ஒரு கட்டத்தில் கஜேந்திரகுமார் அந்தக் கூட்டத்தின் நோக்கம் ஜெனிவாவுக்கு கடிதம் அனுப்புவது என்று சொன்னார். வரும் செப்டம்பர் மாதம் வர இருக்கும் கூட்டத்தொடரை முன்னிட்டு ஒரு கடிதத்தை அனுப்ப வேண்டும். அந்தக் கடிதம் நான்கு ஆண்டுகளுக்கு முன் அனுப்பப்பட்ட கடிதத்தின் தொடர்ச்சியாகவும், அந்தக்கடிதத்தில் ஏற்கனவே கூறப்பட்டவற்றை வலியுறுத்தியும் எழுதப்பட வேண்டும் என்று கஜேந்திரகுமார் கூறினார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி குருபரனும் அதே கருத்தைக்கூறி அந்த நோக்கத்துக்காகத்தான் அந்த சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது என்று கூறினார். ஆனால் அழைக்கப்பட்ட ஒரு பகுதியினருக்கு அது பொதுவாக சர்வதேசப் பொறிமுறையைக் குறித்து ஆராய்வதற்கு என்றுதான் கூறப்பட்டது. ஜெனிவாவுக்கு கடிதம் எழுதுவதற்காக என்று தெளிவாகக் கூறப்படவில்லை.

அதனால் அந்தச் சந்திப்பில் சர்வதேசப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான பரந்துபட்ட வேலைத்திட்டம் தொடர்பாக ஆழமாக உரையாடப்படவில்லை. இக்கட்டுரை ஆசிரியரும் உட்பட சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறீகாந்தா, காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்பு ஒன்றின் முக்கியஸ்தர்…போன்றவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கும் அப்பால் சந்திப்பு பெருமளவுக்கு ஐநா மனித உரிமைகள் ஆணையாளருக்கு எழுதப்போகும் கடிதத்தை நோக்கியே குவிமையப்படுத்தப்பட்டது.

இந்த இடத்தில் அதற்கு முன் அதாவது நான்கு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட கடிதத்தைப்பற்றிச் சுருக்கமாகக் கூற வேண்டும். அந்தக் கடிதத்தைத் தயாரிக்கும் வேலையை முதலில் தொடங்கியது மன்னாரைச் சேர்ந்த சிவகரன். அதன்பின் அவர் இக்கட்டுரை ஆசிரியரும் உட்பட வேறு சிலரையும் அதற்குள் ஈர்த்துக் கொண்டார். முதலாவது சந்திப்பு கிளிநொச்சியில் இடம்பெற்றது. இரண்டாவது சந்திப்பு வவுனியாவில். மூன்றாவது சந்திப்பு கிளிநொச்சியில். இந்த மூன்றாவது சந்திப்பின் விளைவாக ஒரு கூட்டுக்கடிதம் தயாரிக்கப்பட்டது. அந்தக்கூட்டுக் கடிதத்தில் பிரதான அம்சங்கள் இரண்டு. ஒன்று, பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பது. அதாவது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கான அந்தப் பொறிமுறையை ஐநா மனித உரிமைகள் பேரவை என்ற மட்டுப்படுத்தப்பட்ட ஆணையைக் கொண்ட ஒரு கட்டமைப்புக்குள் வைத்துக் கொண்டிருக்காமல் ஐநா பொதுச் செயலர் பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவையிடமிருந்து தன்னிடம் எடுத்துக்கொண்டு, அதனை பன்னாட்டு நீதி மன்றங்களுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்பது முதலாவது கோரிக்கை.

இரண்டாவது கோரிக்கை, போர்க்களத்தில் நிகழ்ந்த குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு பொறிமுறையை உருவாக்குமிடத்து அதற்கு கால வரையறை இருக்க வேண்டும் என்பது. அதன்படி கஜேந்திரக்குமார் 6 மாத காலம் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். ஆனால் ஏனைய கட்சிகள் குறைந்தது ஒரு வருடமாவது வழங்கவேண்டும் என்று கேட்டன. முடிவில் இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன் வைத்து கூட்டுக்கடிதம் எழுதப்பட்டது. 12 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து அவ்வாறு உலக நிறுவனம் ஒன் றுக்கு ஒற்றுமையாக ஒரு கூட்டுக்கடிதம் எழுதியமை என்பது அதுதான் முதல் தடவை.

ஆனால் அந்த கடிதத்திற்கு ஐநா பெருமளவுக்கு சாதகமாக பதில் வினையாற்றவில்லை. பொறுப்புக்கூறலை அவர்கள் தொடர்ந்தும் மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்கியதோடு, சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்பும் மனித உரிமைகள் பேரவையின் ஆணைக்கு உட்பட்டதாக, அணையாளருடைய அலுவலகத்துக்குள் இயங்கும் ஓர் அலுவலகமாக உருவாக்கப்பட்டது. அதற்குரிய கால எல்லையும் நிர்ணயிக்கப்படவில்லை. இன்றுவரை அது செயல்படுகிறது.

அதாவது அந்த கடிதத்தில் முன் வைக்கப்பட்ட இரண்டு கோரிக்கைகளையும்  ஐநாவானது தமிழ் மக்கள் திருப்திப்படத்தக்க விதத்தில் நிறைவேற்றவில்லை. இந்நிலையில் இந்த செப்டம்பர் மாதம் வரவிருக்கும் ஐநா கூட்டத் தொடருக்கு முன்னதாக தமிழ்க் கட்சிகள் மீண்டும் ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்புவதே டில்கோ சந்திப்பின் நோக்கம் என்று கூறப்பட்டது.

ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்து போயிருக்கும் ஒரு பின்னணியில், அவர் கொழும்பில் வைத்துத் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் மக்களின் கோரிக்கைகளோடு உடன்படாதவைகளாகக் காணப்படும் ஒரு பின்னணியில், கொழும்பில் உள்ள ஐநா அலுவலகம் தெரிவிக்கும் கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டத் தவறியிருக்கும் ஒரு பின்னணியில், இலங்கை அரசாங்கமானது சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம் ஒன்றை உருவாக்கவிருப்பதாக கஜேந்திரகுமார் அந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

அந்தக் கட்டமைப்பானது நாட்டின் உள்நாட்டுப் பொறிமுறையின் நம்பகத்தன்மையைப் பலப்படுத்தும் நோக்கத்தை கொண்டது. இது ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் உள்நோக்கத்தை கொண்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் சட்டமா அதிபர் திணைக்களமானது அரசாங்கத்தின் ஓர் அங்கமாக இருப்பதனால் அதன் சுயாதீனப் பண்பு குறித்து கேள்விகள் உண்டு. எனவே உத்தேச சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகமானது சுயாதீனமானது என்ற ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் முயற்சிக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், அது போன்ற உள்நாட்டுப் பொறிமுறைகளை பலப்படுத்தும்  கட்டமைப்புகளை ஏற்றுக்கொள்ளாமல் அனைத்துலக விசாரணையை வலியுறுத்தவேண்டும் என்றும் கஜேந்திரக்குமார் கேட்டுக்கொண்டார்.

சந்திப்புக்குத் தமிழரசுக் கட்சி அழைக்கப்பட்டிருந்த போதிலும் அது வந்திருக்கவில்லை. அண்மையில் அக்கட்சியின் பதில் தலைவர் சிவஞானம், ஐநாவுக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில் அங்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. எனினும் சில நாட்களின் பின் சிவஞானம் நடத்திய ஊடகச் சந்திப்பில், தமது கட்சி அனுப்பிய கடிதம் உள்நாட்டுப் பொறிமுறையைக் கேட்கவில்லை என்று தெரிவித்திருந்தார்.

ஐநாவுக்கு கடிதம் எழுதவேண்டும். அதில் சந்தேகம் இல்லை. தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளை பேசுவதற்கு திறக்கப்பட்டிருக்கும் ஒரே அனைத்துலக அரங்கம் அதுதான். அது பலவீனமானது. காஸாவில்  மீண்டும் ஒரு முள்ளிவாய்க்காலைத் தடுக்க முடியாத ஐநா தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட ஒரு நீதியைப் பெற்றுத்தரும் என்ற கேள்விக்கு இங்கு விடை முக்கியம்.

எனினும், தமிழ் மக்கள் ஐநாவுடன்தான் “என்கேஜ்” பண்ண வேண்டும். அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் இங்கு பிரச்சனை என்னவென்றால், ஐநா பொறுப்புக்கூறலை அனைத்துலகை நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும் என்று ஒரு கடிதத்தைக் கூட்டாக எழுதுவதால் மட்டும் அது நடக்கப் போவதில்லை என்பதைத்தான் கடந்த நான்கு ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன.

டில்கோ சந்திப்பில், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மா ஒருவர் தெரிவித்ததுபோல தமிழ் மக்கள் ஐநாவில் முடிவுகளை எடுக்கும் நாடுகளை நோக்கி லொபி செய்ய வேண்டும். ஈழத் தமிழர்கள் நீதிக்கான தமது போராட்டத்தில் அனைத்துலக அரங்கில்  தமக்கு ஆதரவான சக்திகளைத் திரட்டிக்கொள்ள வேண்டும். அவ்வாறு அனைத்துல சமூகத்தைத் தம்மை நோக்கித் திரட்டிக் கொள்வது என்றால், அதற்கு முதல் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே திரட்டிக் கொள்ள வேண்டும். இது டில்கோ சந்திப்பில் இக்கட்டுரை ஆசிரியரால் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் அத்தகைய பரந்துபட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் அச்சந்திப்பில் பெரிய அளவுக்கு விவாதிக்கப்படவில்லை. அவை ஒரு  சந்திப்பில் மட்டும் கூடி முடிவெடுக்கக்கூடிய விடையங்கள் அல்ல.

முன்னைய கடிதத்தின் தொடர்ச்சியாக கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழ்த் தரப்பு தாயகத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு உழைத்திராத ஒரு பின்னணிக்குள், ஐநா தமிழ் மக்களுக்கு  நம்பிக்கையூட்டா விதத்தில் விடயங்களை நகர்த்திக் கொண்டுவரும் ஒரு பின்னணியில், மீண்டும் ஒரு கடிதம் எழுதுவதை  எப்படிப் பார்ப்பது?

அதிலும் குறிப்பாக அக்கடிதத்தில் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி கையெழுத்துப் போடவில்லை என்றுசொன்னால் அந்த கடிதத்துக்கு  ஒப்பீட்டளவில் பெரிய அங்கீகாரம் இருக்காது. தமிழரசுக் கட்சி  அவ்வாறு ஒரு கூட்டுக்கடிதத்தில் கையெழுத்து போடக்கூடிய நிலைமைகள் இல்லை என்பதைத்தான்  டில்கோ சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு சிவஞானம்  கூறிய பதிலுக்கூடாக உணரக்கூடியதாக உள்ளது. ஆயின், தமிழ்த் தரப்பு இரண்டாக நிற்கிறது என்று பொருள். இவ்வாறு தமிழ்த் தரப்பு இரண்டாக நிற்பது என்பது தமிழ் மக்களைப் பிரித்துக் கையாள விரும்புகின்ற வெளிச் சக்திகளுக்கு வாய்ப்பானது.

ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கு முன் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து அனுப்பிய கடிதத்திற்கே ஐநாவின்  பதில்வினை சாதகமாக இல்லாத ஒரு பின்னணிக்குள், மீண்டும் ஒரு கடிதத்துக்கு, அதிலும் உள்ளதில் பெரிய கட்சி கையெழுத்திடாத ஒரு கடிதத்துக்கு ஐநாவின் பதில்வினை எப்படியிருக்கும்?

அதிலும் குறிப்பாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு நிகராக அரசாங்கத்துக்கும் ஏழு ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. எனவே தமிழ் மக்களின் விவகாரங்களைக் கையாள்வதற்குத் தனக்கும் ஆணை உண்டு என்று அரசாங்கம் கூறக்கூடிய நிலைமைகள் அதிகமுடைய அரசியல் மற்றும் ராஜீயச் சூழலில், தமிழ்த் தரப்பில் பிரதான, பெரிய கட்சியை இணைத்துக் கொள்ளாமல் ஒரு கடிதத்தை எழுதினால், அது அனைத்துலக அரங்கில் எப்படிப் பார்க்கப்படும்?

முதலாவது கடிதத்தின் பின் கடந்த நான்கு ஆண்டுகளாக அந்த கடிதத்தில் எழுதப்பட்டவற்றை நோக்கி அனைத்துலக சமூகத்தை உந்தித்தள்ளும் விதத்தில் தாயகத்தில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய நிர்ணயகரமான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாகவே ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் கொழும்பில் வைத்து  அரசாங்கத்துக்கு நோகாமல் கருத்துக் கூறிவிட்டுப் போயிருக்கிறார். இந்நிலையில், மீண்டும் ஒரு கடிதத்தை  தமிழ்த் தரப்பு எழுதப் போகிறது. கடிதம் எழுத வேண்டும். ஆனால்  அதோடு மட்டும் நிற்க முடியாது. அனைத்துலக சமூகத்தில் ஆதரவு சக்திகளைத் திரட்ட வேண்டும். இதுதான் முன்னைய கடிதத்திற்குப் பின்னரான கடந்த நான்கு ஆண்டுகளில் பெற்றுக்கொண்ட பாடம்.

நன்றி: நிலாந்தன்

# நாளைய செய்தி

1966ம் ஆண்டு யூலை மாத நடுப்பகுதி. பொழுது சாய்ந்து கொண்டு வருகின்ற நேரம். காற்றுச் சிறிது வெப்பமாய் உடலை உரசிப்போனது.

மலைக்கு மேலே சரிவில் ஒரு பாறையில் ரிச்சி-து-வான் அமர்ந்திருந்தான்.

அந்தச் சரிவில் மூங்கில் கம்புகளை நட்டு வைக்கோலினால் வேய்ந்த பத்துக்கு மேற்பட்ட குடிசைகள் வரிசையாய் இருந்தன. அவன் எட்டிப் பார்த்தபோது மலையின் அடிவாரம் தெரிந்தது. அவனது வியட்நாமிய நமிகோ பள்ளத்தாக்குப் பிரதேசம்…

திட்டுத் திட்டாய் பச்சைப் புதர்கள். நீர் நிலைகள் ஆற்றங் கரைகள்…

இவற்றின் நடுவே மிகவும் தூரத்தில் அமெரிக்க இராணு வத்தின் சாம்பல் நிறக் கூடாரங்கள்.

தூரத்தே வான் பரப்பில் அமெரிக்க ரோந்து விமானம் பெரும் இரைச்சலுடன் பறந்து போனது.

அவன் மிகுந்த கவலையுடன் அந்த அடிவாரத்தைப் பார்த்தான்.

ஒருவருடம் முன்பு வரை அந்த அடிவாரம் அவர்களது குடி யிருப்புப் பகுதியாக இருந்தது. பெரும் ஆலமரங்களும், அத்திப் பழ மரங்களும் நிறைந்த கிராமம். நெல் விதைத்தும் சோளம் பயிர் செய்தும் காடுகளில் மூங்கில் வெட்டியும் சீவியம் நடத்தி யிருந்தார்கள். நீர் நிலைகளில் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதும் எருமைகளோடு குளத்தில் நீரில் விளையாடுவதும் அவனுக்குப் பிடித்தமான விடயங்கள்.

**“ஒரு வருடம் முன்புவரை அந்த அடிவாரம் அவர்களது குடியிருப்புப் பகுதியாக இருந்தது. பெரும் ஆலமரங்களும், அத்திப்பழ மரங்களும் நிறைந்த கிராமம். நெல் விதைத்தும் கோளம் பயிர் செய்தும் காடுகளில் மூங்கில் வெட்டியும் சீவியம் நடத்தியிருந்தார்கள். நீர் நிலைகளில் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதும் எருமைகளோடு குளத்து நீரில் விளையாடுவதும் அவனுக்கு பிடித்தமான விடயங்கள்.”**

அந்த அழகான பிரதேசத்தை அமெரிக்க இராணுவம் ஒரு வருடத்துக்கு முன்னர் ஆக்கிரமித்துக் கொண்டது.

கிராம மக்கள் அவர்களின் கொடுமை தாளாது வெளியேற நேரிட்டது.

அன்றைய துயர சம்பவங்களை அவனால் ஒருபோதும் மறக்க முடியாது. அவன் கண்ணெதிரே தந்தையின் கால்களை வெட் டித் தாயின் தலைமயிர் பிடித்து இழுத்து அடித்துத் தம்பியின் கைகளை முறுக்கி விழுத்தி எத்தளை அவலம்.

கிராமத்தில் பல பேர் வட வியட்னாமிற்கும் வேறு கிராமங் களுக்கும் போய்விட்டார்கள்.

சிலர் இந்த மலைச் சரிவுகளில் வந்து குடியிருந்தார்கள். இங்கே பயிர் ஏதும் செய்ய முடியாது. சரிவில் சில வாழைக்கன்றுகள் போட்டுப் பூசினிக் கொடிகளும் வைத்தார்கள். மற்றும்படி காடுகளுக்குப் போய் மூங்கில் வெட்டித்தான் சீவியம் நடத்த வேண்டி இருக்கிறது.

அந்த அடிவாரத்தைப் பார்க்கும் போதெல்லாம் ரிச்சி-து-வானின் மனதில் ஒருவித ஏக்கம் ததும்பும்.

பிறந்ததிலிருந்து தவழ்ந்து, நடந்து.

வளர்ந்த பிரதேசம். இன்று எதிரியின் இருப்பிடமாகி விட்டதே…

சொந்த மண்ணை இழப்பது எத்தனை பெரிய சோகம் என்று எமி-ஜோலான் சொல்லியிருக்கிறான்.

இந்த அடிவாரத்தில் மட்டுமல்ல எங்கள் மண்ணின் நாலு பக் கங்களிலும் அமெரிக்க இராணுவம் சுற்றி நிற்கிறது. இவர் களைக் காலூன்ற விடாமல் அடித்துத் துரத்த வேண்டும். இதுதான் எங்கள் இலட்சியம்.

எயி- ஜோலான் சொல்லுவது உண்மைதான்.

“ரச்சி”

குடிசை வாசலில் நின்று அவனது அக்கா சாலி தராப் கூப் பிட்டாள்.

“என்ன சாலி”

மூங்கில் வெட்டிக் கட்டி வைத்துவிட்டு வந்தேன். வருகிறாயா போய் எடுத்து வருவோம்.

அவன் எழுந்து அவளுடன் நடந்தான்.

மலையின் பின்பக்க சரிவில் இடறுப்படுகின்ற கற்களின் நடுவே ஒற்றையடிப்பாதை மூங்கில் காட்டை நோக்கி இறங்கிப் போனது.

அந்தப் பின்புறச் சரிவில் சிறிது தூரத்தில் நாலைந்து கூடாரங்கள் புதிதாய் முளைத்திருந்தன.

அமெரிக்க ரோந்து விமானங்களின் பார்வையிலிருந்து தப்பு வதற்காக மேலே காட்டுக்கொடிகளைப் பரப்பிக் கூடாரங்கள் தெரியாதவாறு மறைக்கப்பட்டிருந்தன.

சாலி தராப் அந்தக் கூடாரங்களை உற்றுப் பார்த்தாள்.

“இவர்கள்”

“எங்கள் நண்பர்கள்தான். வியட்னாமிய விடுதலைப் படை யினர்”
ரிச்சி-து-வான் சந்தோசமாகச் சொன்னான்.

“அது தெரியும். எதற்காக இங்கே வந்து கூடாரம் போட்டு இருக்கிறார்கள்?”

சாலி தராப் வியப்புடன் கேட்டாள்.

“மலையின் அடிவாரத்தில் எங்கள் பிரதேசங்களை ஆக்கிர மித்துக்கொண்டிருக்கும் அமெரிக்கச் சிப்பாய்களைத் துரத்து வதற்காக.

அப்படித் துரத்த முடியுமா? சந்தேகத்தோடு கேட்டாள்.

“முடியும் என்றுதான் சொல்கிறார்கள்.” நிறையப் பேர் இருக் கிறார்களா?

ஆமாம், ஆண்களும் பெண்களுமாக…

சாலி தராப் சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தாள்.

உண்மைதான் சாலி. ஆண்களுக்குப் பப்புல் கங் பொறுப்பு. பெண்களுக்கு எமி ஜோலான் பொறுப்பு.

எப்படி உனக்கு இந்த விபரங்கள் தெரியும்.

நான்தான் ஒரு வாரமாக தினமும் கூடாரத்துக்குப் போகி றேனே. அவர்கள் போராட்டம் பற்றி எத்தனை பேசுகிறார்கள் தெரியுமா? ஹனாயின் நகர்ப்புறப் பகுதிகளிலெல்லாம் அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசுகிறதாம். சைகோன் நகரை இராணுவம் ஆக்கிரமித்துவிட்டதாம். நேற்றிரவும் கூடாரத்தில் பேற்றறி றேடியோவில் ஹோ சி மின் அவர்களின் பேச்சைக் கேட்டேனே. சுதந்திரத்தையும் விடுதலையையும் காட்டிலும் அரிதான பொருள் வேறொன்றும் கிடையாது என் றார். எவ்வளவு உணர்ச்சியுடன் பேசினார் தெரியுமா? அவர் எழுதிய “நமது நாட்டின் வரலாறு” என்ற புத்தகம் கூட எமி-ஜோலான் தந்து நான் வாசித்திருக்கிறேன். சிறிது நேர மௌன நேரத்தின் பின் சாலி தராப் கேட்டாள் “எமி-ஜோலான் அழ கானவளா?”

ஆமாம். உன்னைப்போல.

சிறிது நேரம் மௌனமாக அவர்கள் நடந்தார்கள். காட்டுக்குள் போனதும் சாலி தராப் மூங்கில் கட்டுக்களை சரி பார்த்துக் கொண்டாள்.

வேறு ஆட்களும் மூங்கில் கட்டுக்களை சுமந்து நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

சாலி தராப் தரையில் அமர்ந்து மூங்கில் கட்டுக்களை சரியாய் இழுத்துக் கட்டிய போதுதான் பிச்சி-து-வான் அவளைக் கவனித் தான்.

அவளுடைய மேல் சட்டை தோள் வளையில் பெரிதாய் கிளிந்து தொங்கியிருந்தது. அதனூடாக தோலின் வெண்மை பனீ ரெண்டு தெரிந்தது.
போதையில் போனவர்கள் அவளைப் பார்த்து எதுவோ தமக்




குள் சொல்லிச் சிரித்ததில் ரிச்சி-து-வானுக்கு மனம் நொந்து போனது.

சாலி! உனக்கு வேறு சட்டை இல்லையா? கவலையுடன் கேட்டான்.

சாலி தராப் தலையைக் குனிந்துகொண்டே மெல்லிய குரலில் சொன்னாள்.

வீட்டுக்குப் போனதும் தைத்துவிட்டுப் போட்டுக் கொள்கிறேன்.

நீ தைக்க வேண்டாம் நான் உனக்குப் புதிய சட்டை வாங்கித் தருகிறேன்.

இருவரும் மூங்கில் சுமையுடன் திரும்பி நடந்தார்கள். இந்த மூங்கில்களை அவன் சீவிக் கொடுக்க கால்களை இழந்த அப்பாவும் தம்பியும் கூடைகளையும் நாற்காலிகளையும் பின்னிக் கொடுப்பார்கள். அவன் நகரத்துக்கும் வேறு கிராமங்களுக்கும் கொண்டு போய் விற்று வருவான்.

அந்த சிறிதளவு வருமானத்தில் தான் அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

மூங்கில் கட்டுக்களை முற்றத்தில் இறக்கி வைத்துவிட்டு அவன் வீட்டுக்குப் பின் பக்கச் சரிவில் இறங்கி நடந்தான்.

கூடாரம் போட்டு வியட்னாமிய விடுதலைப் படை தங்கி இருக்கும் இந்த ஒரு வாரத்திலும் அவன் அடிக்கடி அங்கே போவான். அவர்களுக்கு எல்லா உதவியும் செய்வான். தண்ணீர் சுமந்து கொண்டுவந்து கொடுப்பான். அவர்களுக்குத் தேவையான பொருட்களை நகரத்துக்குள் போய் வாங்கிவந்து கொடுப்பான்.

அந்த விடுதலைப் படையில் தன்னை இணைத்துக்கொண்டு போராட அவனுக்கு விருப்பம் இருந்தது. ஆனால் வீட்டில் யாரும் சம்மதிக்கவில்லை. அவனுடைய உழைப்பிலேதான் அவர்கள் வாழவேண்டி இருந்தது.

அவன் அந்தக் கூடாரங்களை நோக்கி நடந்தான். அங்கு போராளிகளின் நடமாட்டம் அதிகமாக இருந்தது. முன்புறம் எமி-ஜோலான் தரையில் அமர்ந்து துப்பாக்கி துடைத்துக் கொண்டிருந்தாள்.

சிறிது தூரத்தில் பப்புல் கங் நின்று மற்றவர்களுக்கு ஏதோ வேலை சொல்லிக் கொண்டிருந்தான்.

பப்புல் கங் அதிக உயரமில்லாத சிறிது பருமனான உடம்பும் பரந்த முகமுமாய் இருந்தான். கொஞ்சம் நிறம் மங்கிய தலைமயிர் நெற்றியில் விழுந்திருந்தது. எப்போதும் சிந்தனையும் தீவிரமுமாய் இருப்பான்.

ரிச்சி து வானைக் கண்டதும் எமி ஜோலான் மகிழ்ச்சியோடு வரவேற்றாள்.

எமி ஜோலான் அழகான பெண். மஞ்சள் நிறம். சிறிய பழுப்பு நிறக் கண்கள். குண்டு முகம். கொஞ்சம் வளைந்த மூக்கு. சதைப்பிடிப்பான உதடுகள். மேலே அங்கியும் கால் சராயும் அணிந்து இடுப்பில் தடித்த துணியால் இறுக்கிக் கட்டியிருந்தாள்.

அவளின் சிறிய கண்களில் அன்பும் வாஞ்சையும் பொங்கி வழியும். ரிச்சி மீது அவளுக்கு மிகுந்த பிரியம்.

“வா ரிச்சி, உனக்கு எத்தனை வயது?”

தெரியாது. ஏன் கேட்கிறாய் எமி ஜோ?

“பதினைந்து இருக்குமா?”

“ம்...இருக்கம்”

“வியட்னாம் முழுவதும் சண்டை தீவிரமடைந்து வருகிறது தெரியுமா? ... மைலாய் கிராமத்தில் நடந்த கொடுமைகளை நினைக்க நெஞ்சு கொதிக்கிறது. எங்கள் தொழிற்கூடங்கள். நீர்த்தேக்கங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள் எல்லாவற்றின் மீதும் குண்டுகளை வீசுகிறார்கள். எங்கள் பிரதேச வளங்களைச் சுரண்ட வந்தவர்களைத் துரத்த வேண்டும். மேகாங் ஆற்றுப் பள்ளத்தாக்கு நகரங்களில் பெரும் சண்டை நடக்கிறது.

இங்கே எங்கள் போராளிகள் இருபது பேர்வரை இறந்து விட்டார்கள்.

ரிச்சி து வான் கவலையோடு கேட்டுள் கொண்டிருந்தான்.

அவர்களின் ஆயுதங்களில் ஒன்றை நீ எடுத்துக் கொள்வாயா?

ரிச்சி து வான் சட்டென்று மௌனமானான்.
இயலாமையுடன் அவளைப் பார்த்தான். ஒரு வினாடி வெறுமையாய் உணர்ந்தான்.

எமி ஜோலான் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு,

“வருத்தப்படாதே ரிச்சி உன் குடும்ப நிலைமை எனக்குத் தெரியும்” என்றாள்.

நான் உழைக்காவிட்டால் வீட்டில் எல்லோரும் பட்டினியில் செத்து விடுவார்கள். என்றான் அழுகையுடன்.

அப்போது அங்கே வந்த பப்புல் கங், ரிச்சி து வானின் தோளை தன் கைகளால் வளைத்துக் கொண்டு.

ரிச்சி நாலைந்து நாட்களுக்கு நீ இங்கே வரக்கூடாது என்றான்.

ஏன் பப்புல்?

அவன் முகம் வாடக் கேட்டான்.

நான் ஏதும் சொன்னால் அதற்குக் காரணம் இருக்கும் என்று உனக்குத் தெரியுமல்லவா?

ம்...

பப்புல் கங் அவனைப் பார்த்து தோழமையுடன் சிரித்துவிட்டுப் போனான்.

“நான் போகிறேன் எமி ஜோ!”

அவள் தனது துப்பாக்கியைத் தோளில் தொங்கவிட்டுக்கொண்டு அவனுடன் சிறிது தூரம் கூடவே நடந்து வந்தாள்.

பப்புல் கங், எமி ஜோலான் இருவரையும் அவனுக்கு மிகவும் பிடிக்கும். எந்நேரமும் போராட்டம் தாக்குதல் என்றே பேசிக் கொண்டிருப்பார்கள்.

அந்தப் பேச்சுக்களின் நடுவே அவர்களின் கண்களில் எப்போதாவது மின்னல் போல ஒரு நேசம் பளிச்சிடுவதை அவன் பார்த்திருக்கிறான்.
அவன் நின்று எமி ஜோலானைத் திரும்பிப் பார்த்தான்.

எமி ஜோ நீ பப்புல் கங்கை நேசிக்கிறாயா?

அவள் தலையைச் சாய்த்து “ம்” என்றாள்.

அவனைத்தான் திருமணம் செய்து கொள்வாயா?

ஆமாம்.

எப்போது?

இந்த மண் மீட்கப்பட்ட பிறகு.

எங்கள் மணி மீட்கப்படும் என்று நம்புகிறாயா?

நிச்சயமாக என்றாவது ஒரு நாள்.
எமி ஜோலானின் சிறிய கண்களில் கனிவு இருந்தது. நம்பிக்கை இருந்தது.

ரிச்சி! ஒரு நாளைக்கு தங்க நட்சத்திரம் பொறிக்கப்பட்ட செங்கொடி சைகோன் நகரில் வானளாவப் பறக்கும். அன்றைக்கு நாங்கள் திருமணம் செய்து கொள்வோம். ஏனோ அவனுக்கு துக்கமாய் இருந்தது.

அந்த மங்கிய பொழுதில் எமி ஜோலானைப் பார்க்க இன்னும் துக்கம் அதிகரித்தது.

பப்புல் கங் ஏன் என்னை வரவேண்டாம் என்றான்.

அவள் பேசாமல் நின்றாள்.

ஒரு வாரத்தின் பின் வரலாமா?

வரலாம் என்றாள் சந்தோசத்துடன்.

கொஞ்சம் தயங்கி விட்டு கேட்டான்.

மலை அடிவார முகாம் தாக்கப் போகிறீர்களா?

அதையெல்லாம் இப்போது கதைக்கக்கூடாது. பிறகு தெரிந்து கொள்வாய்.

அவளிடம் விடை பெற்றுக் கொண்டு பாரமான மனதுடன் வீட்டுக்கு நடந்தாள்.

நான்கு நாட்கள் நகர்ந்தன. வான்பரப்பில் அமெரிக்க விமானங்கள் பெரும் இரைச்சலுடன் பறந்து திரித்தன.

நான்காம் நாள் இரவு. அந்த மலைப் பிரதேசம் அமைதியாய் இருந்தது. காற்றுக் கூட வீசவில்லை.

நடுச்சாமத்தில் மலை அடிவாரத்தில் முதலாவது வெடிச்சத்தம் கேட்டது.

தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது என்பது அவனுக்குப் புரிந்து விட்டது.

துப்பாக்கி வெடிகளினாலும் பீரங்கிச் சத்தங்களினாலும் அந்தப் பிரதேசமே அதிர்ந்தது. மலையில் மோதிப் பயங்கரமாய் எதிரொலித்தது.

மலைச்சரிவுகளில் வாழ்ந்த மக்கள் நடுங்கிப் போனார்கள். அத்தனை பேரும் காட்டுக்குள் ஓடிப்போனார்கள்.

இரவு முழுவதும் ரிச்சி துவான் கண்ணில் நீர் வழிய விழித்திருந்தான்.

இறைவனே எங்கள் தோழர்களைக் காப்பாற்றும் அவரகளுக்கு வெற்றியைத்தாரும்...என்று திரும்பத் திரும்பப் பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தான்.

மறுநாளும் சண்டை தொடர்ந்தது. விமானங்கள் சுற்றுப் புறங்களில் குண்டுகளை மழையாய்க் கொட்டின. வெடி மருந்துகளின் மணம் காற்றில் மிதந்து பரவியது. மறுநாள் இரவு சத்தங்கள் ஓய்ந்துவிட்டன.

மனம் பதைபதைத்தது.

என்ன நடந்திருக்கும்.

நன்றாக விடிந்துவிட்ட பிறகு மக்கள் தங்கள் குடிசைகளுக்குத் திரும்பினார்கள்.

ரிச்சி துவான் ஓடிப்போய் பாறையில் நின்று அடிவாரத்தைப் பார்த்தான்.

மிகவும் தூரத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் அதே இராணுவக் கூடாரங்கள்.

மனதுக்குள் "திக்" கென்றது.

கால்கள் சோர்ந்து தடுமாற பாறையில் அமர்ந்து விட்டான்.

"தோல்வியில் முடிந்ததா ரிச்சி?"

சாலி தராப் அழுகையுடன் கேட்டாள்.

அப்படித்தான் தோன்றுகின்றது.

அவன் வெகுநேரம் அப்படியே அமர்ந்துவிட்டான்.

மூங்கில் வெட்டப் போகவில்லை. சாப்பிடவில்லை மனம் தவித்துக் கொண்டேயிருந்தது.

மத்தியானத்துக்குப் பிறகு அவனால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

அவன் பின் பக்கம் வந்து சரிவில் நின்று பார்த்தான். கூடாரத்துக்கு வெளியே எந்த நடமாட்டமும் தெரியவில்லை.

கீழே தூரத்தில் மலையைச் சுற்றிவரும் பாதையில் ஒரு பழைய டிரக் வண்டி ஆடி அசைந்து கொண்டு வந்தது.

மூங்கிலும் வைக்கோலும் ஏற்றித் திரியும் மை லீ கிழவனின் வண்டி அது. விடுதலைப் படையினரின் கூடாரங்களை நோக்கித்தான் வருகிறதோ தெரியவில்லை.

அவன் சரிவில் இறங்கிக் கூடாரங்களை நோக்கி நடந்தான்.

அங்கு எல்லோரும் களைத்துப் போன முகங்களுடன் தரையில் அமர்ந்திருந்தார்கள்.

மூங்கில் தட்டிகளில் சருகுகள் பரவிய படுக்கையில் காயப்பட்டவர்கள் படுத்திருந்தார்கள். தூரத்தில் பப்புல் கங் கலைந்த தலையும் சிவந்த கண்களுமாக மரக்குற்றியில் அமர்ந்திருந்தான்.

எல்லோர் முகங்களிலும் இருந்த சோகம் அவனுக்கு மிகுந்த கவலையைத் தந்தது. அவன் தயங்கியபடி பப்புல் கங்கின் அருகே போனான்.

"பப்புல்..."

அடிபட்ட பார்வையுடன் நிமிர்ந்தான்.

ரிச்சி! தோல்வியில் முடிந்துவிட்டது. ரிச்சி நம்மில் பலர் உள்ளே அகப்பட்டு இறந்து விட்டார்கள்.

ரிச்சி துவானின் கண்கள் கூட்டத்தினுள்ளே எமி ஜோலானை தேடின.

அவளைக் காணவில்லை என்பதை வேதனையுடன் உணர்ந்தான்.

நெஞ்சை அடைத்தது. எமி ஜோலான்...?

அவள் திரும்பவில்லை.

குபுக்கென்று ரிச்சி து வானின் கண்கள் நிறைந்தன.

மை லீ கிழவனின் வண்டி கூடார வாசலில் வந்து நின்றது.

நரைத்த தலையும் நீண்ட வெண்தாடியுமாக முகத்தில் நிறைந்த சுருக்கங்களுடன் மை லீ கிழவன் இறங்கினான். அவனின் இடுக்கிய கண்களில் தண்ணீர் இருந்தது.

பப்புல் கங்கிடம் வந்து சொன்னான்.

உங்கள் ஆட்களின் இறந்த உடல்களை அவர்கள் என் வண்டியில் ஏற்றி அனுப்பியிருக்கிறார்கள்.

பப்புல் கங் பாய்ந்து ஓடினான். வண்டியின் பின் பக்கக் கதவைத் திறந்தான்.

அவன் முகம் பேயறைந்தது போல மாறியது.

ஓவென்று ஆத்திரத்துடன் கத்திக்கொண்டே காலைத் தரையில் ஓங்கி அறைந்தான்.

ரிச்சி து வானும் ஓடிப் போய்ப் பார்த்தான்.

அப்போ இது என்ன கொடுமை...

இருபதுக்கு மேற்பட்ட விடுதலைப் படையினரது உடல்கள் கை கால் வெட்டப்பட்ட நிலையில் வண்டிக்குள் குவிக்கப்பட்டிருந்தன.

அவனால் நேசிக்கப்பட்ட போராளிகள்.

முன்பக்க ஓரத்தில் எமி ஜோலான்.

சிறிய கண்கள் பாதி மூடியிருக்க உதடுகள் சற்று திறந்திருக்க அப்போ இப்போதும் ஏதும் கனவு கண்டுகொண்டிருக்கிறாளோ...

அத்தனை பேரும் அதிர்ச்சியில் உறைந்து போயிருக்க ரிச்சி துவான் அவர்களை விலக்கிக்கொண்டு வேகமாய் வீட்டுக்கு வந்தான். பாசறையில் அமர்ந்து கைகளால் முகம் பொத்தி விம்மி விம்மி அழுதான். வீட்டில் உள்ளவர்கள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

**பப்புல் கங் பாய்ந்து ஓடினான். வண்டியின் பின் பக்கக்கதவைத் திறந்தான். அவன் முகம் பேயறைந்தது போல மாறியது. ஓவென்று ஆத்திரத்துடன் கத்திக்கொண்டே காலைத் தரையில் ஓங்கி அறைந்தான். ரிச்சி து வானும் ஓடிப் போய்ப் பார்த்தான். அய்யோ இது என்ன கொடுமை... இருபதுக்கு மேற்பட்ட விடுதலைப் படையினரது உடல்கள் கை கால் வெட்டப்பட்ட நிலையில் வண்டிக்குள் குவிக்கப்பட்டிருந்தன.**

ரிச்சி துவான் வெகுநேரத்தின் பின் எழுந்து வந்தான்.

நான் போகிறேன்.

யாரும் பேசவில்லை.

சாலி! உன் கிழிந்த சட்டையை தைத்துப் போட்டுக்கொள்.

குறிப்பு:
சரியாக ஒரு வருடத்தின் பின் 1967ம் ஆண்டு பருவ மழை பெய்துகொண்டிருந்த ஒரு இரவில் அந்த அடிவார முகாம் பப்புல் கங் தலைமையில் வியட்னாமிய விடுதலைப் படையினரால் தாக்கி அழிக்கப்பட்டது. ரிச்சி து வானும் இந்த தாக்குதலில் பங்கு வகித்திருந்தான். ஐந்து நாட்கள் நடந்த போரில் ஆறாயிரம் அமெரிக்க சிப்பாய்களும் அந்த நமிகோ பிரதேசத்திலிருந்து முழுவதுமாக விரட்டியடிக்கப்பட்டனர்.

- தாமரைச்செல்வி
களத்தில் - 07.08.1996



# பிரிட்டனின் பாலஸ்தீன அங்கீகார முடிவு: ஐரோப்பிய வரலாற்றில் பெரும் திருப்பு முனை!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

31.08.2025

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் காலனியாதிக்க வல்லரசான பிரித்தானியா உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஒரு தேசிய இனத்தை, தனியாக பிரிந்து செல்ல அங்கீகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பிரித்தானியாவின் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் முடிவு ஐரோப்பிய வரலாற்றில் பெரும் திருப்பு முனையாகவே கருதப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து கனடாவும் பாலஸ்தீன அங்கீகாரத்தை வலியுறுத்தி வருகிறது. அவுஸ்திரேலியா தாமதிக்காது பலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும் எனவும், இனியும் தாமதித்தால் அவுஸ்திரேலியா உலக அரங்கில் ஒரு பிற்போக்குத்தனமான நாடாகவே கருதப்படும் என்றும் உள்நாட்டில் கான்பரா தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

### பிரித்தானியா இஸ்ரேலுக்கு எச்சரிக்கை:

இஸ்ரேல் மனிதாபிமான நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் பாலஸ்தீன நாட்டை அங்கீகரிப்பதாக பிரதமர் கெயர் ஸ்டார்மர் (Keir Starmer) எச்சரித்துள்ளார்.

காசாவில் நிலவும் மோசமான நிலைமையை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேல் அரசு தீவிர நடவடிக்கை எடுக்காவிட்டால், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடருக்கு முன்னதாக செப்டம்பரில் பாலஸ்தீனத்தை அரசாக பிரித்தானிய அரசு அங்கீகரிக்கும் என பிரதமர் கெயர் ஸ்டார்மர் அறிவித்துள்ளார். மேலும் இந்த அறிவிப்பு, இஸ்ரேல் மீது அழுத்தம் ஏற்படுத்தும் முக்கியமான மாற்றமாகக் கருதப்படுகிறது.

இஸ்ரேல்-ஹமாஸ் போரால் காசாவில் ஏற்பட்ட மனிதாபிமான பேரழிவுக்கும், 60,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்களின் உயிரிழப்புக்கும் பதிலாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

காசாவில் பசியால் வாடும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், பலர் பசியால் தவிப்பதாகவும் பலர் இறந்து வருவதாகவும் பிரித்தானிய பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த கொடிய வேதனை மிகுந்த நிகழ்வுகள் முடிவடைய வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பிரித்தானிய அரசாங்கம் பாலஸ்தீன அங்கீகார முடிவை எதிர்வரும் செப்டம்பரில் முடிவை எடுக்கும் என்றும், இஸ்ரேல் கீழ்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றாவிட்டால் அங்கீகாரம் முழுமையாக வழங்கப்படும் என்றும் பிரதமர் ஸ்டார்மர் கூறியுள்ளார்.

காசாவுக்குள் அதிக உதவிகளை அனுமதிக்க வேண்டும் என்றும்,

மேற்கு கரையைக் கைப்பற்றி, யூத குடியேற்றங்களை பலப்படுத்த கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும் இரு நாட்டுத் தீர்வு நோக்கி நிலையான அமைதி முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். ஆனால் இஸ்ரேல், இந்த அறிவிப்பை ஹமாஸுக்கு விருது வழங்குவது போலும், அமைதி முயற்சிகளை பாதிக்கும் என்றும் எச்சரிக்கை செய்தஉ விமர்சித்துள்ளது.

பிரான்ஸ், கடந்த வாரம் பாலஸ்தீனத்தை அரசாக அங்கீகரித்ததுடன், பிரித்தானியா அடுத்த படியாக சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கிறது. சீனா, ரஷ்யா ஆகியவை ஏற்கனவே தேசங்களாக அங்கீகரித்துள்ளன.

பிரித்தானிய பிரதமர் கெயர் ஸ்டார்மர், முன்னர் அமெரிக்க அணுகுமுறையுடன் இணைந்து இருந்தாலும், இப்போது புதிய அரசியல் நிலைப்பாட்டில் குறிப்பிடத்தக்க மாறுபாடு கொண்டுள்ளமை தெரிகிறது.

பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கும் பிரிட்டன் முடிவானது,

காசா முனையில் இஸ்ரேல் இராணுவம் கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொண்டு வருகின்ற நிலையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கொடூர தாக்குதல்களில் பொதுமக்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள், முதியோர் என பலரும் பாதிக்கப்பட்டு, கொல்லப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் இஸ்ரேலின் தாக்குதலுக்கு பயந்து இலட்சக்கணக்கானோர் தங்களது வீடுகளை காலி செய்துவிட்டு பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

### இஸ்ரேலுக்கு அமெரிக்கா உதவி தொடருமா ?

இஸ்ரேல் ஹமாஸ் தொடரும் போரில் இஸ்ரலின் கைகளே ஓங்கி இருக்கின்றன. இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆயுதங்களை தொடர்ந்து விநியோகித்து உதவி செய்து வருகிறது. பாலஸ்தீனம் தனிப்பிரதேசமாக இருந்த போதிலும், அதனை பல உலக நாடுகள் தனி நாடாக அங்கீகரிக்கவில்லை.

தொடரும் போரை நிறுத்த உலக நாடுகளில் இருந்து பாலஸ்தீனத்துக்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை. ஆனாலும் உலகளாவிய ரீதியில் எழுந்த அனுதாபமே பிரான்சிலும், இதே போல பிரிட்டனிலும் கோரிக்கை எழுந்தது.

அதாவது பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க வேண்டும் பிரதமர் கெயர் ஸ்டார்மர் தொடர்புடைய தொழிலாளர் கட்சியினரே அவருக்கு அழுத்தம் கொடுக்க தொடங்கினர். அவர்களது அழுத்தத்துக்கு அடிபணிந்த பிரிட்டன் பிரதமர், பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க தான் பரிசீலித்து வருருவதாக தெரிவித்துள்ளார்.

அதேசமயம் இஸ்ரேல், ஹமாஸ் போர் நிறுத்தம் அமலுக்கு வந்தால் மட்டுமே தன்னால் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க முடியும் என்றும் அவர் நிபந்தனை விதித்திருக்கிறார்.

பிரிட்டன் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பீட்டர் கெயில், பாலஸ்தீனம் தனி நாடகத் திகழ வேண்டும் என்பதே எங்களது விருப்பம். அங்கு நீண்ட நாட்கள் இருக்கும் அரசியல் பிரச்சனைகளுக்கு முடிவு ஏற்பட வேண்டும்.

இன்றைக்கு பாலஸ்தீன மக்கள் அனுபவித்து வரும் துயரங்களை நாம் கண்கூடாக பார்த்து வருகிறோம். அதற்கு முடிவு கட்ட வேண்டும் என்பதே எங்களது நோக்கமாக இருக்கிறது என்று அமைச்சர் பீட்டர் கெயில் தெரிவித்துள்ளார்.

### காசாவில் பட்டினிக் கொடுமை:

காசாவில் இந்த யூலை மாதத்தில் மட்டுமே 156 பேர் பட்டினியால் உயிரிழந்துள்ளனர். பலரும் வாரக் கணக்காக தண்ணீர் அருந்தாமல், பல்வேறு உடல் உபாதைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர். உணவு, தண்ணீர் தேடிச் செல்லும் பலர் இஸ்ரேல் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவின் நீர் நிலைகளில் இஸ்ரேல் இராணுவம் அத்துமீறி நுழைந்து அழித்து வருகிறது. காசாவில் மனிதாபிமான உதவிகள் சென்றடைவதைத் இஸ்ரேலிய இராணுவம் தடுத்து வருகிறது.

காசாவில் பட்டிச் சாவை நோக்கிய எலும்பும் தோலுமான பாலஸ்தீன குழந்தைகளின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு நெஞ்சை உலுக்குகின்றன. உலகம் முழுவதிலும் பாலஸ்தீன மக்களுக்கான ஆதரவுக் குரல் ஒலிக்கிறது. மேலும் இதன் விளைவாக சர்வதேச நாடுகள் பாலஸ்தீன தனி நாட்டை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

### இலண்டன் மேயர் சாதிக் கான்:

இலண்டன் மேயர் சாதிக் கான் மற்றும் பிரிட்டன் வெளிவிவகாரங்கள் கமிட்டியும் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்குமாறு பிரதமர் கெயர் ஸ்டார்மருக்கு நீண்ட காலமாக வலியுறுத்தி உள்ளனர். பாலஸ்தீனத்தை பிரிட்டன் தனி நாடாக அங்கீகரித்தால், அந்நாடு பல முனைகளில் பயன்பெறும் என பிரிட்டன் கேபினட் அமைச்சர் ஷபானா மஹமத் அவர்களும் தெரிவித்துள்ளார்.

மேலும் பிரிட்டன் பாராளுமன்ற வெளியுறவுத்துறை கமிட்டி வெளியிட்ட அறிக்கையில், பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு நாம் நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டிய தேவையில்லை. ஏனென்றால் பாலஸ்தீனத்தில் இன்றைக்கு நிலவும் சூழலே அதனை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு போதுமானதாக இருக்கிறது. பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க இதுவே சரியான தருணம் என்று கருதுகிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.ca

# சர்வதேச சமூகத்தின் நோக்கத்தை செம்மணி கேள்விக்குட்படுத்தும்!

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

20.07.2025

செம்மணியை பிரித்து போர்க்காலத்தில் இடம்பெற்ற விடயங்களை பிரித்துவைப்பது பாதிக்கப்பட்ட மக்களிற்கு மிகப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செம்மணி ஜெனீவாவில் இருக்கின்ற சர்வதேச சமூகம் அதனை கொச்சைப்படுத்தி முடக்குகின்ற கடைசி கட்டத்தை மாத்திரம் விசாரிக்க சொல்கின்ற அந்த முயற்சியை கேள்விக்குட்படுத்தி, அது விரும்பியளவிற்கு பின்னிற்கு சென்று மக்களிற்கு நடந்திருக்ககூடிய அநியாயங்களை விசாரிக்ககூடிய காலவரையறையை நீடிக்க வேண்டும் என்ற நிலைமையை உயிர் கொடுக்கின்ற ஒரு சந்தர்ப்பமாகயிருக்கின்றது என தெரிவித்துள்ளார்.

செம்மணி இந்தளவிற்கு வந்திருப்பதன் உடன் வேறு வேறு இடங்களில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் இது இனப்படுகொலைக்கான இடம்பெற்றது என்பதற்கான சூழலை மீண்டும் திறக்கவைத்து விசாரணை செய்வதற்குரிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

பொறுப்புக்கூறல் என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக மாறியுள்ளது உங்களிற்கு தெரியும்.

ஐநாவின் மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என கிட்டத்தட்ட இரண்டு மாதங்களிற்கு முன்னரே எங்களிற்கு அறிவித்திருந்தார்கள். வார ஒரு நோக்கம் இருப்பதாக எங்களிற்கு சொல்லப்பட்டிருந்தது.

அப்படி சொல்லப்பட்ட நிலைமையில் வடகிழக்கை சேர்ந்த மனித உரிமை அமைப்புகள் ஐநா மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்திற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தன.

செப்டம்பர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வு முடிவடையும் வரை இங்கே வராதீர்கள் என அவர்கள் அந்த கடிதத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஏனென்றால் நீங்கள் அதற்கு முதல் இங்கு வந்தீர்கள் என்றால் அரசாங்கம் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நீங்கள் கேட்க விரும்புகின்ற அத்தனை வாக்குறுதிகளையும் செம்டம்பர் மாதம் வரப்போகின்ற அந்த தீர்மானத்தை எந்தளவிற்கு பலவீனப்படுத்த முடியுமோ அந்தளவிற்கு பலவீனப்படுத்துவதற்கான முழு முயற்சியையும் செய்து இறுதியில் அந்த தீர்மானம் பலவீனப்பட்ட பிறகு பாதிக்கப்பட்ட மக்களிற்கு அதிலிருந்து மீள முடியாத நிலையை ஏற்படுத்தும் என அவர்கள் தங்கள் மகஜரில் வலியுறுத்தியிருந்தனர்.

தெற்கில் இருக்கின்ற சுமார் 100 மனித உரிமை அமைப்புகளும் அவசரமாக நீங்கள் வராதீர்கள் என அவரிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

அதை எல்லாவற்றையும் மீறித்தான் அந்த ஆணையாளர் வருகின்றார், அந்த ஆணையாளர் வந்தபோது, துரதிஸ்டவசமாக என்னால் இங்கே இருக்க முடியாத ஒரு காலம்.

2021ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதி ஒரு பொது கடிதத்தை தமிழ் கட்சிகள் மனித உரிமை அமைப்புகள் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து அனுப்பியிருந்தோம்.

பொறுப்புக்கூறல் தொடர்பிலே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற விடயங்கள் - நான்கு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து நாங்கள் கடிதமொன்றை அனுப்பியிருந்தோம்.

அந்த கடிதத்தில் அவ்வேளை தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவராயிருந்த சம்பந்தன் அவர்களும் கையெழுத்திட்டிருந்தார்.

மனித உரிமை விடயத்தில் உறுதியாக இணைந்து பயணிக்கின்ற அமைப்புகளும் கைச்சாத்திட்ட கடிதம்.

இன்றைக்கும் நீங்கள் பார்த்தீர்கள் என்றால் அந்த கடிதம், இன்றும் மிகவும் பொருத்தமான ஒரு கடிதம்.

உண்மையிலேயே தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விடயம் 100க்கு நூறு வீதமாக நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கடிதமாக அது காணப்படுகின்றது.

நாங்கள் அந்த கடிதத்தை மீண்டும் வலியுறுத்தவேண்டும் என விரும்பியதால் நாங்கள் அந்த முயற்சியையும் மேற்கொண்டு வெற்றியையும் அடைந்தோம்.

அனைத்து தரப்புகளும் அந்த கடிதத்தில் கையெழுத்திட்டவை மனித உரிமை ஆணையாளர் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது இங்கேயிருக்கின்ற அமைப்புகளை சந்தித்த இடத்தில், தமிழ் சிவில் சமூக அமையத்தின் சார்பாக சிங்கம் ஊடாக அது வழங் கப்பட்டது.

அந்த கடிதத்தை நாங்கள் வழங்கியபோது செம்மணியையும் உள்வாங்கித்தான் அதனை கொடுத்திருந்தோம்.

தற்போது இருக்கின்ற சூழல் பொறுப்புக்கூறல் படிப்படியாக குறைந்து பேச்சுபொருளாக மாறிவிட்ட சூழல்.

போர்க்காலத்தில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பான முயற்சிகள் பூஜ்ஜியத்திற்கு வருகின்ற இடத்திற்கு படிப்படியாக குறைத்துக்கொண்டு வந்து விட்டினம்.

அதனை இன்று ஒரு பேச்சுப்பொருளாக கூட இல்லாத அளவிற்கு பலவீனப்படுத்தியுள்ளார்கள்.

கடந்த தீர்மானம் உள்ளக விசாரணையை வலியுறுத்துகின்றது அரசாங்கத்தை விசாரணைமுன்னெடுக்க சொல்லி செய்ய சொல்லி கேட்கின்றது.

அப்படிப்பட்ட ஒரு நிலையில் அதுவும் அந்த தீர்மானத்தை நீங்கள் பார்த்தீர்கள் என்றால் போரின்கடைசிக்கட்டத்தில், இடம்பெற்ற விடயங்களை விசாரணை செய்யவேண்டும் என்பதுதான் 2012 முதல் இந்த தீர்மானங்களின் குறிக்கோளாக உள்ளது.

செம்மணி போர்நடைபெற்ற காலத்தில்தான் இடம்பெற்றது. ஆனால் இந்த தீர்மானம் விரும்புகின்ற அந்த காலப்பகுதிக்கு வெளியே.

புது தீர்மானம் செப்டம்பரில் வருகின்றது, செம்மணி எப்போதோ மறைக்கப்பட்ட ஒரு விடயம், வெறுமனே 15 உடல்களை கண்டுபிடித்த இடத்தில் அதன் பின்னர் அரசாங்கம் விசாரணைக்கான எந்தவொரு முயற்சியையும் எடுக்கவில்லை.

வெளிவிவகார அமைச்சராக லக்ஸ்மன் கதிர்காமர் இருந்த வேளை இது ஒரு பொய், மனித புதைகுழிகள் இல்லை குற்றவாளியொருவர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட இடத்தில கோபத்தில எல்லா பழிகளையும் அரசாங்கத்தின் மீது போட விரும்பின நிலையில் தான் அந்த வாக்குமூலம் இருந்ததே தவிர வேறு எதுவும் இல்லை உண்மைதன்மையும் என தெரிவித்து முழுமையாக மூடினார்கள்.

அதனை கிடப்பில் போடுவதற்கு தான் அவர்களின் முழுமுயற்சியும் இருந்தது.

சந்திரிகாவின் அரசாங்கம் மாத்திரமல்ல அதற்கு பிறகு வந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் இவை எவற்றையும் எடுத்துப்பார்க்க விரும்பவில்லை, இவ்வாறான சூழ்நிலையில் மகிந்த அரசாங்கத்தை பற்றி நாங்கள் சொல்லவேண்டியதில்லை.

செம்மணி பொய் 600 உடல்களே கொல்லப்பட்டு புதைக்கப்படவில்லை என சொல்லப்பட்டு ஒரு முடிவாகயிருந்த நிலையில் தான், செம்மணியின் இந்த கண்டுபிடிப்பு இடம்பெற்றுள்ளது.

செம்மணி எங்களிற்கு இரண்டு சந்தர்ப்பங்களை தருகின்றது,

ஒன்று ஜெனீவாவில் இருக்கின்ற சமூகம் அதனை கொச்சைப்படுத்தி முடக்குகின்ற கடைசிகட்டத்தை மாத்திரம் விசாரிக்க சொல்கின்ற அந்த முயற்சியை கேள்விக்குட்படுத்தி, அது விரும்பியளவிற்கு பின்னிற்கு சென்று மக்களிற்கு நடந்திருக்ககூடிய அநியாயங்களை விசாரிக்ககூடிய காலவரையறையை நீடிக்க வேண்டும் என்ற நிலைமையை உயிர்கொடுக்கின்ற ஒரு சந்தர்ப்பமாகயிருக்கின்றது.

இரண்டாவது விடயம் செம்மணி இந்தளவிற்கு வந்திருப்பதன் உடன் வேறு வேறு இடங்களில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் இது இனப்படுகொலைக்கான சூழலை மீண்டும் திறக்கவைத்து விசாரணை செய்வதற்குரிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துகின்றது.

அதாவது நடந்தது இரண்டு தரப்புகளிற்கும் இடையிலான ஒரு போர் அல்ல, இதற்கு பின்னால் ஒரு சரித்திரம் உள்ளது, தமிழ் மக்களிற்கு நடந்த அநியாயங்களை சரியாக பார்த்தால் அது இறுதியில் தமிழ்மக்கள் தங்களை தாங்களே பாதுகாக்க ஆயத மேந்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்ற எல்லா விடயத்தையும் உள்வாங்கி யார் என்ன செய்தார்கள் என்பதை பார்ப்பதுதான் எங்களிற்கு கூட தேவைப்படுகின்றது.

அப்போதுதான் எங்களிற்கு உண்மையான நீதியும் நியாயமும் கிடைக்கும்.

இல்லாவிடில் ஒரு சரித்திரத்தை மாத்திரம் மூடிமறைத்துவிட்டு ஒரு பக்கத்தை மாத்திரம் படமெடுத்துவிட்டு நீங்கள் இதற்குரிய தீர்வை கொண்டுவாருங்கள் என கேட்பது நியாயத்தை கொண்டுவரப்போவதில்லை.

செம்மணி எங்களிற்கு அந்த கதவையும் திறக்கவைத்துள்ளது.

ஆகவே இன்று எங்களிற்கு உள்ள தேவை என்னவென்றால் இந்த முழு விடயத்தையும் ஒருங்கிணைந்த நிலைப்பாட்டை வலியுறுத்துவதே.

செம்மணியை பிரித்து போர்க்காலத்தில் இடம்பெற்ற விடயங்களை பிரித்துவைப்பது பாதிக்கப்பட்ட மக்களிற்கு மிகப்பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்.

இது ஒரு ஆபத்தானது, ஏனென்றால் இலங்கையில் சட்டமா அதிபர் திணைக்களம் அரசாங்கத்திற்கு உரிய சட்டத்தரணியாக செயற்படுகின்றது அரசாங்கத்திற்கு எதிராக எதுவும் வந்தாலும் அவர்கள்தான் போவார்கள், அதேவேளை அவர்கள் தான் குற்றவாளிகளிற்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்வார்கள். அரசதரப்பில் இருக்கின்ற பிழை செய்தவர்களிற்கு எதிராகவும் அவர்கள்தான் வழக்கை தாக்கல் செய்வார்கள்.

இதனை நிவர்த்தி செய்யவேண்டும் என்பது இலங்கையின் சட்டத்துறையின் ஒரு பொதுப்பிரச்சினை. அந்த பொதுப்பிரச்சினைக்குரிய தீர்வு ஒரு சுயாதீன வழக்குரைஞர் அலுவலகம்.

அதற்கும் இனப்பிரச்சினை காலத்தில் இலங்கையில் நடந்த அநியாயத்திற்கும் இடையில் எந்த தொடர்பும் இல்லை.

அவ்வாறான சுயாதீன அலுவலகம் உருவாக்கப்பட்டாலும் அதன் ஊடாக இனப்பிரச்சினை சார்ந்த விடயங்களிற்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை.

ஏனென்றால் இலங்கையில் இருக்ககூடிய இனப்பிரச்சினை இனங்களிற்கு இருக்ககூடிய பிரச்சினை, அந்த இனங்கள் என பார்க்கின்ற போது இலங்கை அரசு என்பது ஒரு இனத்தின் சொத்தாக மாறியுள்ளது.

ஏனைய இனங்களிற்கு எதிராக ஒட்டுமொத்த இலங்கை அரசின் கட்டமைப்பே மாறியிருக்கின்றது. என்ற கருத்தை சொல்லித்தான் முன்னாள் ஐநா மனித உரிமை ஆணையாளர் இளவரசர் செய்ட் அவர்கள் தெளிவாக சொல்லியிருந்தார் ஒரு உள்ளக விசாரணை இலங்கையிலே பொருத்தமே இல்லாதது என்று.

இலங்கைக்கு உள்ளே அந்த இனப்பிரச்சினையின் தாக்கம் ஒட்டுமொத்த அரச இயந்திரத்தையே நடுநிலைதன்மை இழக்க வைத்திருக்கின்றது என்பதும் அது ஒரு போதும் ஒரு உள்ளக விசாரணை ஊடாக இனப்பிரச்சினை சார்ந்த குற்றங்களிற்கு ஒரு தீர்வு கிடைக்காது.

ஆகவே ஆகக்குறைந்தது ஒரு கலப்புபொறிமுறையாவது உருவாக்கப்படவேண்டும், சர்வதேச விசாரணைதான் மிகப்பொருத்தம் ஆனால் ஆகக்குறைந்தது ஒரு கலப்புபொறிமுறையாவது உருவாக்கப்படவேண்டும் என சொன்னார்.

அதற்கு ஒரு விட்டுக்கொடுப்பாக நாங்கள் தமிழ் தரப்பு தெரிவித்தது இது தான் கலப்புபொறிமுறையின் முழு கட்டுப்பாடும் சர்வதேச தரப்பிடம் இருந்தால் தான் கலப்பு பொறிமுறையை நாங்கள் பரிசீலிப்போம். இதுதான் எங்களின் நிலைப்பாடாகயிருந்தது.

இன்றைக்கு திட்டமிட்ட வகையிலே சுயாதீன வழக்குரைஞர் அலுவலம் ஒன்று தேவை என்ற விடயத்தை வைத்துக் கொண்டு தமிழர்களுடைய விடயத்திற்கு தீர்வாக அதனை முன்னிறுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

# குர்திஷ்தான்:

## நிறைவேறாத கனவும் – முடிவுறாத வேட்கையும்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

15.07.2025

குர்திஷ் மக்களின் உரிமைகளுக்காக அமைதியான பாதையை நாடும் (PKK) பி.கே.கே அமைப்பு ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவித்துள்ளது.

குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி அல்லது பி.கே.கே, அதன் நிறுவன அமைப்பைக் கலைத்து, துருக்கிக்கு எதிரான பல தசாப்த கால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாக இவ்வருட ஆரம்பத்தில் அறிவித்தது.

குர்திஷ் போராளிகள் ஆயுதங்களை களைந்து சரணடையத் தொடங்கி விட்டனர். துருக்கியுடனான சமாதானத்தை நோக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க படி இது என்றும் அறிவித்துள்ளனர்.

### ஈராக்கில் அடையாள ஆயுத களைவு:

துருக்கிய அரசுக்கு எதிரான நாற்பது ஆண்டுகால ஆயுதப் போராட்டத்திற்குப் பிறகு, தடைசெய்யப்பட்ட குர்திஷ் அமைப்பான பி.கே.கே, ஆயுதக் குறைப்பின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் வெள்ளிக்கிழமை ஈராக்கின் சுலைமானியாவில் ஒரு அடையாள விழா நடந்துள்ளது.

துருக்கிய ஊடகங்களின்படி, கோடை காலம் முழுவதும் நீடிக்கும் இந்த செயல்முறை, கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் மற்றும் துருக்கியில் உள்ள குர்திஷ் ஆதரவு எதிர்க் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகங்களின் கண்காணிப்பின் கீழ் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டு மோதல் தொடங்கியதிலிருந்து, சுமார் 40,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். துருக்கி, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டனால் இந்த அமைப்பு PKK பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்த ஆயுதக் குறைப்பின் தாக்கம் துருக்கியின் எல்லைகளுக்கு அப்பால் - ஈராக், சிரியா மற்றும் ஈரானிலும் உணரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறையில் இருந்து ஒரு வீடியோ செய்தியில், PKK தலைவர் அப்துல்லா ஓஜலான், இது "ஆயுத மோதலில் இருந்து ஜனநாயக அரசியல் மற்றும் சட்டத்திற்கு தன்னார்வ மாற்றம்" என்று கூறியுள்ளார்.

இது முதல் சமாதான முயற்சி அல்ல என்பது அறியப்படுகிறது,



ஆனால் இது ஒரு மார்க்சிஸ்ட் சுதந்திர இயக்கமாகத் தொடங்கி பின்னர் துருக்கியின் மக்கள் தொகையில் சுமார் 20% ஆக இருக்கும் குர்துகளுக்கு சுயாட்சியைக் கோரிய மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மிகவும் யதார்த்தமான நம்பிக்கையாக இப்போது பார்க்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

துருக்கிய அரசாங்கம், PKK-ஐ முழுமையாக நிராயுதபாணியாக்காமல் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பப் போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. அதுவே இப்போது நடக்கவிருப்பதாகத் தெரிகிறது.

### வரலாற்று மாற்றமான நிகழ்வு:

பல்லாயிரக்கணக்கான மக்களின் மரணத்திற்கு வழிவகுத்த 40 ஆண்டுகளுக்கும் மேலான மோதலுக்குப் பிறகு ஒரு வரலாற்று மாற்றத்தைக் குறிக்கிறது.

இவ்வருட மே 12 அன்று அறிவிக்கப்பட்ட இந்த முடிவு, பிராந்தியத்தின் மிக நீண்ட மற்றும் கொடிய கிளர்ச்சிகளில் ஒன்றை

முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது. இப்போது குர்திஷ் பிரச்சினையை ஜனநாயக வழிமுறைகள் மூலம் தீர்க்க வேண்டும் என்று அழைப்பு

**குர்திஷ் போராளிகளின் ஆயுத களைவு அண்மையில் வட ஈராக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாற்பது வருட போராட்டத்தின் முடிவானது துருக்கியின் ஆதிக்க விஸ்தரிப்பினை மேலும் வலுவடையச் செய்துள்ளது.**

விடுத்துள்ளது.

வடக்கு ஈராக்கில் நடைபெற்ற இக்குழுவின் 12வது மாநாட்டின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது. மேலும் சிறையில் அடைக்கப்பட்ட அதன் தலைவர் அப்துல்லா ஓஜலனின் அழைப்புக்கு பதிலளிக்கும் விதமாக இது வந்துள்ளது.

12வது PKK காங்கிரஸ், அதன் நிறுவன அமைப்பைக் கலைத்து, அதன் ஆயுதப் போராட்ட முறையை முடிவுக்குக் கொண்டுவர முடிவு செய்துள்ளது என்று அந்தக் குழு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதன் விளைவாக, "PKK" என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் முறையாக நிறுத்தப்பட்டன.

### ஜனநாயக வழிமூலம் தீர்வு:

1999 முதல் இஸ்தான்புல்லுக்கு அருகிலுள்ள ஒரு தீவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஓஜலனால் ஆயுத கலைப்பு மற்றும் நிராயுதபாணியாக்கத்தின் நடைமுறை செயல்முறை நிர்வகிக்கப்பட்டு மேற்பார்வையிடப்படும் என்று பி.கே.கே தெரிவித்துள்ளது.

மாநாட்டு பிரகடனத்தின்படி, PKK இன் போராட்டம் ஜனநாயக அரசியல் மூலம் குர்திஷ் பிரச்சினையை தீர்க்கும் நிலைக்கு கொண்டு வந்தது, இதன் மூலம் அதன் வரலாற்று பணியை தொடர உள்ளது.

ஆனால் துருக்கியில் மக்கள் ஜனநாயகக் கட்சி (HDP) வடிவில் ஏற்கனவே ஒரு தீவிர குர்திஷ் ஆதரவுக் கட்சி இருப்பதால், PKK தளபதிகள் துருக்கிய அரசியலில் நுழைவது சாத்தியமில்லை என்றும் தெரிகிறது.

இப்போதிலிருந்து குர்திஷ் அரசியல் கொரில்லா போர் மூலம் அல்ல, சட்ட அரசியல் மற்றும் துருக்கிய பாராளுமன்றம் மூலம் நடத்தப்படும் என்று அவர்கள் அர்த்தப்படுத்துகிறார்கள்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை அறிவித்து, அமைதி மற்றும் ஜனநாயக சமுதாயத்திற்கு வழி வகுக்கும் என்று கூறியது. ஆனால் அமைதி பேச்சுவார்த்தைகளுக்கான சட்ட கட்டமைப்பை உருவாக்குவது உள்ளிட்ட நிபந்தனைகளை விதித்தது.

அந்தக் குழுவின் அறிக்கை, அதன் பணி நிறைவடைந்ததாகக் கூறியதுடன், குர்திஷ் அரசியல் கட்சிகள் குர்திஷ் ஜனநாயகத்தை வளர்ப்பதில் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றும் மற்றும் ஒரு குர்திஷ் ஜனநாயக தேசத்தை உருவாக்குவதை உறுதி செய்யும் என்று நம்பிக்கை தெரிவித்தது.

### பிளவுபட்ட குர்திஷ் குழுக்கள்:

பி.கே.கே தனது முடிவில் ஒற்றுமையாகத் தெரிந்தாலும், கடந்த காலங்களில் பிளவுபட்ட மற்றய குழுக்களுடன் அந்த அமைப்புக்கு பிரச்சினைகள் இருந்துள்ளன.

2004 ஆம் ஆண்டில் ஓஜலனின் தம்பி ஒஸ்மான் ஓஜலன் பிரிந்து சென்று தனது சொந்த அரசியல்-இராணுவக் குழுவை உருவாக்கினார்.

தற்போது ஈரான் போன்ற பிற நாடுகளில் உள்ள அமைப்பின் துணை நிறுவனங்கள் இந்த முடிவுக்குக் கட்டுப்படுமா அல்லது தங்கள் போராட்டத்தைத் தொடருமா என்பது ஒரு முக்கிய கேள்வியாகும்.

துருக்கியின் ஆளும் நீதி மற்றும் மேம்பாட்டுக் கட்சியின் (AKP) செய்தித் தொடர்பாளர் ஓமர் செலிக், PKK-வின் நிராயுதபாணியாக்கி கலைக்கும் முடிவு உறுதியாகவும் முழுமையாகவும் PKK-வின் அனைத்து கிளைகளையும் உள்ளடக்கிய முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அறிவித்துள்ளார்.

உலக வணிகம் ULAGA VANIKAM

2026



LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



உலக வணிகம் ULAGA VANIKAM

விளப்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

தொடர்புகளுக்கு 437.345.4203

# யாழ்ப்பாணமே நீ குடிப்பது நல்ல தண்ணியா?

19.07.2025

ஒரு காலம் சேவல் கூவி எமது இரவுகள் விடிந்தன. பிறகு ஒரு காலம் ஏறி கணைகளின் வெடித்துப் பகல் விடிந்தது. ஆய்த மோதல்களுக்குப் பின் பேக்கரி வாகனங்களின் இசையோடு பகல் விடிகிறது. ஆனால் அண்மை ஆண்டுகளாக பேக்கரி வாகனங்களோடு சேர்த்து மற்றொரு வாகனமும் ஊர் ஊராக வருகிறது. அதுதான் தண்ணீர் விற்கும் வாகனம். அதுவும் இசையோடுதான் வருகிறது.

அதாவது நீரை விலைக்கு வாங்கும் ஒரு சமூகமாக நாங்கள் எப்பொழுதோ மாறி விட்டோம். சில ஆண்டுகளுக்கு முன்பு கலாநிதி ஆறு.திருமுருகன் இதுதொடர்பாக பகிரங்கமாக பேசியிருந்தார். “ஆலயங்களில் காணப்படும் பொதுக் கிணறுகளில் உள்ள நீரை தீர்த்தம் என்று கூறி ஊர் முழுதும் அருந்தியது. ஆனால் இப்பொழுது பெரும்பாலானவர்கள் வடிக்கப்பட்ட நீரைக் குடிக்கிறார்கள்” என்ற பொருள்பட அவர் கவலைப்பட்டிருந்தார். அது மட்டுமல்ல. “கிணற்று நீரை குடிக்கலாமா இல்லையா என்பதனை இதுதொடர்பாக துறைசார் நிபுணர்கள் தெளிவுபடுத்த வேண்டும்” என்றும் அவர் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆனால் அந்த வேண்டுகோளுக்கு எனக்கு தெரிந்தவரை இன்றுவரையிலும் யாரும் உத்தியோக பூர்வமாக பதில் சொல்லவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன் சுன்னாகத்தில் நடந்த ஒரு சந்திப்பின்போது இது தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபடும் பேராசிரியர் சிறீஸ்கந்தராஜாவிடம் இந்த கேள்வியை நான் கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே சொன்னார்… ஒஸ்ரேலியாவில் தான் மேற்படிப்பு படிக்கும் பொழுது இந்த கேள்வியை ஒருவர் தமது விரிவுரையாளரிடம் கேட்டாராம். அதற்கு அந்த விரிவுரையாளர் சிரித்துக்கொண்டே சொன்னாராம், “யாழ்ப்பாணத்தவர்கள் கெட்டிக்காரர்கள் என்று கூறுகிறோம். அந்தக் கெட்டித்தனத்துக்கும் அவர்களுடைய கிணத்து நீருக்கும் தொடர்பு இருக்குமா ?” என்று.

ஆனால் நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால் அதாவது ஈழத் தமிழர்களின் சமூகப் பொருளாதார அரசியல் நடப்புகளைத் தொகுத்துப் பார்த்தால் ஈழத் தமிழர்கள் தங்களைக் கெட்டிக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியுமா என்ற கேள்வி பாரதூரமாக மேல் எழுகிறது.

சில மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் கொழும்புத் துறைப் பகுதியை சேர்ந்த ஒரு நாடகச் செயற்பாட்டாளரை ஒரு நீர் விற்கும் கடையில் கண்டேன். அவரிடம் கேட்டேன் “உங்களுடைய கிணற்று நீரை அருந்த முடியாதா?” என்று. அவர் சொன்னார் “எனது பகுதிகளில் நீர் பெருமளவுக்கு உவராகிக் கொண்டு வருகிறது” என்று. அவர் அப்படி கூறுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே யாழ் கடல் நீரேரியை அண்மித்திருக்கும் கோப்பாய் இருபாலை ஆகிய பகுதிகளில் நீர் உவராகி வருவதாக முறைப்பாடுகள் உண்டு.

ஆனால் இது இன்றைக்கு நேற்றைக்கு வந்த பிரச்சினை அல்ல. ஒரு நூற்றாண்டு கால பிரச்சனை. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் 1894 ஆம் ஆண்டு பொது வேலைகள் திணைக்களத்தின் (PWD) ஆணையாளருடைய அறிக்கையில் பின்வருமாறு கூறப்படுகிறது… “யாழ்ப்பாணத்துக்கான நீர் வழங்கல் குறுகிய காலத்தில் ஒரு மிக முக்கியமான பிரச்சினையாக உருவெடுக்கக்கூடும். யாழ்ப்பாணத்தில் உள்ள கிணறுகளில் பெரும்பாலானவை படிப்படியாக உவர்த்தன்மை கொண்டவையாக மாறிவருவது உண்மை. எடுத்துக்காட்டாக, பொது வேலைகள் பகுதியின் வளவுக்குள் இருக்கும் கிணறு 15 ஆண்டுகளுக்கு முன்னர் நல்ல தண்ணீரைக் கொண்டிருந்தது. அந்த வளவிலிருந்து நீர் பாய்ச்சி மிகச் சிறப்பான திராட்சைக் கொடிகளை வளர்த்தனர். ஆனால், இப்போது நீர் உவர்த்தன்மை கொண்டதாக மாறிவிட்டது. திராட்சைக் கொடிகளும் அழிந்துவிட்டன… கச்சேரி வளவுக்குள் உள்ள பெரும்பாலான கிணறுகளுக்கும் இதே நிலைதான். தற்போது முற்றவெளியில் உள்ள இரண்டு கிணறுகளும், சுண்டிக்குழிக் குருமனை வளவில் உள்ள ஒரு கிணறும் மட்டுமே நல்ல தண்ணீர்க் கிணறுகள். முற்றவெளிக் கிணறுகளிலிருந்து தொடர்ச்சியாக நீரை அள்ளுவதால், அவை நீண்டகாலம் தாக்குப் பிடிக்கும் என்பது ஐயத்துக்குரியது. இந்த நல்ல நீர்த் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏதாவது ஒரு வழியில் தயாராவதற்காகப் புத்தூர்க் கிணற்றுத் திட்டத்தைக் சுவனத்தில் எடுத்துள்ளோம்….”

மேற்படி தகவல்களை அண்மையில் வெளியிடப்பட்ட “யாழ்ப்பாண நகரத்தின் வரலாறு” என்ற நூலில் காணலாம். தமிழ் விக்கிபீடியாவை ஸ்தாபித்தவர்களில் ஒருவராகிய, கட்டடப்படக் கலைஞர் மயூரநாதன் அந்த நூலை எழுதியுள்ளார். ஆகவே இது ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே மேலெழுந்த ஒரு பிரச்சினை. அதுவும் குடித்தொகை பெருகாத, தொழில்நுட்பம் இப்போதிருக்கும் வளர்ச்சியை அடைந்திராத, ஒரு காலகட்டத்தில் உணரப்பட்ட ஒன்று. ஆனால் அதிலிருந்து ஒரு நூற்றாண்டுக்கு மேலான பின்னரும் இந்த விடயத்தில் தமிழ் மக்கள் விழிப்பில்லாமல் இருப்பதன் விளைவாகத்தான் குடிக்கும் நீரை விலைக்கு வாங்கும் ஒரு நிலை வளர்ந்து வருகிறதா?

இவ்வாறு தெருத்தெருவாக நீர் விற்கும் கடைகள் மற்றும் வாகனங்களில் எத்தனை அதற்குரிய பதிவுகளோடு இயங்குகின்றன? யாழ் மாநகர சபையில் மணிவண்ணன் மேயராக இருந்த காலத்தில் மாநகர சபை உறுப்பினரான பார்த்திபன் இது தொடர்பான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். தொடக்கத்தில் ஆறுக்கும் குறையாத நீர் விற்கும் கடைகள் இருந்தன. இக்கடைகள் எவையும் நீரை விற்பதற்கு அனுமதி பெற்றவை அல்ல. வியாபார அனுமதியை மட்டும் பெற்றவை. இதுதொடர்பாக பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் இல்லை என்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது. இக்கடைகளை விட முதலில் ஊர் ஊராக வாகனங்களில் நீர் விற்கப்படுவதை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு பார்த்திபன் மேற்படி தீர்மானத்தை கொண்டு வந்தார். எனினும் அந்த தீர்மானத்தை முழுமையாக அமல்படுத்துவதற்கு போலீசார் போதிய ஒத்துழைப்பை தரவில்லை என்று கூறப்படுகிறது. மாநகர சபை ஊழியர்கள் அந்த வாகனங்களை தடுத்து நிறுத்த முடியாதவர்களாகக் காணப்பட்டார்கள். இப்பொழுது கிடைக்கும் தகவல்களின்படி யாழ் நகரப் பகுதிக்குள் 30க்கும் குறையாத நீர் விற்கும் கடைகள் வந்துவிட்டன. தான்

ஆணையாளராக இருந்த காலகட்டத்தில் மொத்தம் ஆறு கடைகளில் இருந்ததாக முன்னாள் ஆணையாளர் ஜெயசீலன் தெரிவித்தார்.

இப்பொழுது புதிய மாநகர சபை நிர்வாகம் வந்துவிட்டது. யாழ்ப்பாணத்தின் குடிநீர் உவராகும் ஆபத்தைக் குறித்தும் யாழ்ப்பாணத்தின் நகரப் பகுதியில் உள்ள பெரும்பாலான கிராமங்கள் வடிக்கப்பட்ட நீரை விலைக்கு வாங்குவது தொடர்பாகவும் கவனம் செலுத்தவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் புதிய நிர்வாகத்துக்கு உண்டு.

யாழ் மாநகர சபைக்கு மட்டுமல்ல புதிதாக தெரிவு செய்யப்பட்ட எல்லா உள்ளூராட்சி சபைகளுக்கும் அந்த பொறுப்பு உண்டு. கிட்டத்தட்ட நூற்றாண்டு காலமாக ஒரு பிரச்சினை படிப்படியாக வளர்ந்து வந்து இப்பொழுது காசுக்கு நீர் வாங்கிக் குடிக்கும் ஒரு நிலைமை தோன்றி விட்டது. தமிழ்ச் சமூகம் தன்னை மெத்தப் படித்த சமூகம் என்று நம்புகின்றது. ஆனால் தன் சொந்தக் கிணத்து நீரை குடிக்கலாமா இல்லையா என்ற கேள்விக்கு விடை காண முன்னரே பல கிணறுகள் உவராகி வருகின்றன.

அண்மையில் ஐரோப்பிய நாடொன்றில் இருந்து வந்த ஒருவர் சொன்னார் யாழ்ப்பாணத்தில் விற்கப்படும் நீரைக் குடித்த பொழுது அது கனமில்லாமல் இருந்ததாக தான் உணர்ந்ததாக. லண்டனில் தான் குடித்த நீரோடு ஒப்பிடுகையில் இங்குள்ள வடித்த நீர் இலேசானதாக இருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

இவ்வாறு உடலுக்குத் தேவையான கனியுப்புக்கள் வடிக்கப்பட்ட நீரைக் குடிப்பதால் வரும் பாதகமான விளைவுகள் எவை ?

“யாழ்ப்பாணத்தின் ஆழக் கிணறுகளில் ஏடுக்கும் நீரில் படியும் கல்சியத்தை அந்நியப் பொருளாக யாழ்ப்பாணத்தவர்கள் பார்க்கத் தேவையில்லை. அது யாழ்ப்பாணத்துக்கு அந்நியமானது அல்ல. சுண்ணக் கற் பிரதேசத்தில் பிறந்தவர்களுக்கு கல்சியம் ஒரு புறத்திப் பொருள் அல்ல” என்று பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா கூறுகிறார்.

புதிய உள்ளூராட்சி சபைகள் இந்த விடயத்தின் மீது கவனத்தைக் குவிக்க வேண்டும். முதலில் வடித்து விற்கப்படும் நீரைக் குடிப்பதில் உள்ள நன்மை தீமைகளை ஆராய வேண்டும். இரண்டாவதாக தமிழ் மக்கள் நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டும்;பெருக்க வேண்டும். அதாவது உள்ளூராட்சி சபைகள் அதற்குப் பொருத்தமான பசுமைப் பொருளாதாரத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

இதுதொடர்பான துறைசார் ஆராய்ச்சிக்காக தாயகத்திலேயே வந்து தங்கி இருக்கின்ற பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா போன்றவர்களின் துறைசார் ஞானத்தை உள்ளூராட்சி சபைகள் பெற்றுக்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களில் பொறியியலாளர்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புடையவர்கள் பலர் உண்டு. எல்லாரையும் அழைத்து இது தொடர்பாக கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி தமிழ் மக்கள் தமது நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் பசுமைத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

சில கிழமைகளுக்கு முன்பு பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா தலைமையிலான ஒரு குழுவினர் வழுக்கை ஆற்றின் தடங்களைப் பின்தொடர்ந்து சென்று யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரை பாதுகாப்பது தொடர்பான கள ஆய்வுகளை மேற்கொண்டார்கள். வழுக்கையாறு ஓடியதாகக் கருதப்படும் தடங்களில் காணப்படும் குளங்களையும் நீர்நிலைகளையும், நீர் தேங்குமிடங்களையும், நீரோடும் வழிகளையும் பாதுகாப்பதன் மூலம் நிலத்தடி நீரைப் பாதுகாக்கலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். இது தொடர்பில் உள்ளூர் மக்களின் அனுபவத்தையும் ஆதரவையும் பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கான தொடர்ச்சியான ஆராய்ச்சிகளில் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

புதிய உள்ளூராட்சி சபைகளில் கட்சி முரண்பாடுகளும் மோதல்களும் நிறைய உண்டு. ஆனால் அவர்கள் போட்டிபோட வேண்டிய இடம் அதுவல்ல. தங்கள் உள்ளூராட்சிப் பிரதேசங்களை எப்படிப் பசுமைப் பிரதேசங்களாக மாற்றுவது என்பதில்தான் அவர்கள் போட்டி போட வேண்டும். ஒவ்வொரு உள்ளூராட்சி சபை உறுப்பினரும் தனது வட்டாரத்தைத் தூய்மையானதாக, குப்பையற்றதாக, பசுமை வட்டாரமாக மாற்றுவது என்று உறுதிபூண வேண்டும். அவருடைய பதவிக்காலம் முடியும் பொழுது அவர் நட்ட மரங்களும் அகழ்ந்த குளங்களும் தூர் வாரிய வாய்க்கால்களும் என்றென்றும் அவருடைய சந்ததிக்கு அவருடைய புகழைச் சொல்லும்.காதாரமும் உள்ளூராட்சி சபைகளிலிருந்து தொடங் கட்டும்.

நன்றி: நிலாந்தன்

# அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் செம்மணிக்கு சர்வதேச நீதி கோரி பேரணி!

நவீனன்

22.07.2025

செம்மணி புதைகுழிகளில் இருந்து ஆதாரங்கள் மீண்டும் வெளிவந்ததைத் தொடர்ந்து, ஈழத்தில் நடந்து வரும் இனப் படுகொலைக்கு சர்வதேச பொறுப்புக்கூறலைக் கோரி, அனைத்து ஈழத் தமிழ் அவுஸ்திரேலிய அமைப்புகளும் யூலை 21, 2025 மதியம் 12 மணிக்கு கன்பராவில் மாபெரும் கண்டன பேரணி நடத்தியுள்ளனர்.

இந்தப் பேரணியில் பெருமளவு தமிழர்கள் கலந்து கொண்டனர். இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திற்கு வெளியே தொடங்கிய பேரணி அவுஸ்திரேலியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகங்கள் உட்பட முக்கிய தூதரகங்களை நோக்கி நடைபெற்றது.

ஈழத் தமிழர்கள் மீது தொடர்ந்து வரும் இனவழிப்பின் அண்மைய சாட்சியாக செம்மணி மனிதப் புதைகுழியானது ஈழத் தமிழர்களின் மீது இலங்கை அரச பயங்கரவாதத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்ட மனிதப் பேரவலத்தின் சிறு சாட்சியம் மட்டுமே.

குறிப்பாக 1996 ஆம் ஆண்டில் சிறிலங்கா அரச படைகளால் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பதினாறு வயதுகளே நிரம்பிய பாடசாலை மாணவியின் விவகாரம் ஊடாகவே இவ்விடயம் வெளிச்சத்திற்கு வந்தது.

இப் படுகொலைக்கு முன்னராக 1995 ம் ஆண்டு யாழ்ப்பாணம் இடப்பெயர்வுக் காலங்களிலும் அதன் பின்னரான காலப் பகுதிகளிலும் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் உள்ளடங்களாகப் பல நூற்றுக் கணக்கானவர்கள் மிகக் கொடூரமாகப் படுகொலை செய்து புதைக்கப்பட்டார்கள் என்பதனை நிரூபிக்கும் வகையில் கிருசாந்தி படுகொலை வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட சிறீலங்கா அரச படைச் சிப்பாயின் பகிரங்க வாக்கு மூலத்தின் அடிப்படையில் 1999 ஆம் ஆண்டு இணங்காட்டப்பட்டு பதினைந்து மனித என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டன.

தமிழ் மக்களினதும் சர்வதேச சமூகத்தினரதும் தொடர்ச்சியான அழுத்தம் மூலமே இதுவரை பல எலும்புக்கூடுகள் மீட்கப் பட்டுள்ளன. இதுபற்றிய கவனயீர்ப்பு நிகழ்வு அணையா விளக்கு போராட்டமாக தாயகத்தில் மக்காளால் மேற்கொள்ளப் பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

அதன் தொடர்ச்சியாகவே 21.07.2025 திங்கட்கிழமை அன்று சர்வதேச கவனயீர்ப்பு பேரணியாக அவுஸ்திரேலியாவில் இயங்கும் அனைத்து தமிழ் அமைப்புகளும் இணைந்து தலைநகர் கான்பராவில் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் முன்பாக ஆரம்பமாகி நடைபெற்றது.

இப்பேரணியானது மதியம் 12 மணிக்கு சிறீலங்கா தூதுவரகத்துக்கு முன்பாக பாரிய கவனயீர்ப்பு போரட்டத்துடன், ஆரம்பித்து, பன்னாட்டு தூதுவரகங்கள் மற்றும் ஐநா தூதுவரகம் வழியாக சென்று அவுஸ்திரேலிய வெளி விவகார துறை அமைச்சு அலுவலகத்தில் முக்கிய கோரிக்கைகள் அடங்கிய மனு கையளிக்கப்பட்டது.

# மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

18.07.2025

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு
Commission For Justice & Peace of The Catholic Diocese of Jaffna

T. Phone No: 0778096144
E-mail : mangalarajah@gmail.com

P. O. Box : 02
Bishop's House,
Jaffna, Sri lanka.
....................20...........

நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாயின் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்டுள்ள குண்டுதாக்குதல்கள், புதைகுழிகள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலாவது சர்வதேச விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக "செம்மணி புதைகுழி கிளறிய சில சிந் தனைகள்" என குறிப்பிட்டு அவர்கள் வெளியீட்டுள்ள அறிக் கையில் இதனை தெரிவித்துள்ளார்கள். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது :

1996ம் ஆண்டு சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி பரீட்சை முடிந்து செம்மணியூடாக வீடு திரும்பும் போது செம்மணியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரால் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டமையும் அவரைத்தேடிச் சென்ற அவரது தாயும் உறவுகளும் படுகொலை செய்யப்பட்டு அங்கே புதைக்கப்பட்டதும் பின்னர் இந்நிகழ்வுகள் வெளிவந்து குற்றவாளிகள் கோர்ப்புரல் சோமரட்ண ராஜபக்ஷ ஆகியோர் குற்றவாளிகளாகக்காணப்பட்டு 1998 ஆண்டு ராஜபக்ஷவிற்கு மரண தண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டு பின்னர் 2015ம் ஆண்டுக்குப்பின் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டவை என்பன வரலாறுகள்.

கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கின் பிரதான குற்றவாளியாகிய சோமரட்ண ராஜபக்ஷ கொடுத்த வாக்குமூலத்தில் மேலும் சில தமிழ் மக்கள் செம்மணியில் கொல்லப்பட்டு அங்கு புதைக்கப்பட்டிருந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தும் அப்போது செம்மணிப்பகுதி ஒரு பாரிய மனிதப்புதைகுழியாக இருக்கலாம் என்ற சந்தேகம் இருந்தாலும் அதன்பின் அதுபற்றி எவரும் பெரிதாக பேசவில்லை.

ஆயினும் சில மாதங்களுக்குமுன் செம்மணிப்பகுதியில் ஒரு தகனமேடைக்கெனத் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது, மனித உடற் பாகங்கள் கண்டு பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

பின்னர் உத்தியோகபூர்வமாக அப்பகுதியில் நீதிமன்ற அனுசரணையுடன் தோண்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது மேலும் பல எலும்புத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இரண்டு கட்டங்களாக இடம் பெற்ற அகழ்வுப்பணிகள் தற்காலிகமாக 10.7.2025 நிறுத்திவைக்கப்பட்போது ஏறக்குறைய 65 மனித உடற்தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இவை இன்னும் பகுப்பாய்வு செய்யப்படவில்லையாயினும் மேலெழுந்தவாரியாக பார்க்கும் போது அதிர்ச்சியூட்டுபவையாகவுள்ளன.

அவற்றுள் சில சிறுவர்களுடையது. ஒரு இடத்தில் சிறுவர்களது விளையாட்டு பொம்மை, பாடசாலை புத்தகப்பை, சிறுமியின் உடை, சில வளையல்கள் போன்ற பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

15.7.2025 அன்று இவ்வழக்குக்குப் பொறுப்பான நீதிவான் அ. ஆனந்தராஜா முன்னிலையில் அகழ்வின் போது பிரசன்னமாயிருந்த தொல்லியல் பேராசிரிய ராஜ்சோம தேவாவும், சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் செல்லையா பிரணவனும் பிரசன்னமாயிருந்தனர்.

அப்போது தொல்லியல் பேராசிரியரும் சட்ட வைத்திய நிபுணரும் தமது இடைக்கால அறிக்கைகளில் இப்புதைகுழியில் உள்ள எலும்புக்கூடுகள் உள்ள இடம் ஒரு குற்றப்பிரதேசமாகவும், மனித உரிமை மீறல்கள் இடம் பெற்ற இடமாகவும் கருதப்படச்சான்றுகள் உள்ளன என்றும் குறிப்பாக 4-5 வயதுச் சிறுமியின் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது சடலம் மேலும் இக்காலகட்டத்தில் கிருஷாந்தி கொல்லப்பட்டதற்கு (1996க்கு) முந்திய பிந்திய காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக இராணுவ முகாம்களும் வீதிக்குவீதி சென்ற்றி போயின்ற்றுகளும் இருந்தன.

சர்வ சாதாரணமாக கைதுகளும், கைது செய்யப்பட்டவர்கள் காணாமல் போவதும் இடம்பெற்றுவந்தன. யாழ் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இது பற்றி பாராளுமன்றத்தில் 2025 ஆனி ஆடி இடம் பெற்ற பாராளுமன்ற அமர்வுகளில் குறிப்பிட்டிருந்தார்.

ஆங்கிலத்தில் 'Tip of the Iceberg' (நீரில் மிதக்கும் பனிப்பாறையின் வெளியே தெரியும் சிறிய பகுதி என்று ஒரு சொற்றொடர் உண்டு, பாரிய பனிப்பாறைகள் கடலில் மிதந்துவரும் போது வெளியே கண்ணுக்குத்தெரியும் சிறியதொரு பனிக்கட்டியை இது குறிக்கின்றது. ஆனால் அதைப்போல் ஏழு மடங்கு பெரிய பனிப்பாறை தண்ணிருக்குள் அமிழ்ந்திருப்பது வெளியே தெரியாது) இது போலத்தான் இதுவரை செம்மணி சிந்துபாத்திப்பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட 65 மனித எலும்புக்கூடுகள் (பாடசாலை சிறுமிகளது உட்பட) சோமரட்ண ராஜபக்சவின் சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும் போது இந்த எலும்புக்கூடுகள் இப்பகுதியில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட 600க்குக்குறையாத எலும்புக்கூடகளாயிலுக்கலாம் என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக இருக்க முடியாது என்ற முடிவுக்கு வரமுடியும்.

இதற்குமேலாக 2024ம் ஆண்டு குழாய்நீர் வசதி வழங்க சில அகழ்வு மேற்கொள்ளப்பட்ட கொக்கு தொடுவாயில் கண்டெடுக்கப்பட்ட சூட்டுக்காயங்களுடன் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட இறந்த இளைஞர், இளம் பெண்களுடைய எலும்புக்கூடுகள், மன்னார் பாலத்துக்கருகாமையில் 'சதோச' வளாகத்தில் கண்டெடுக்கப்பட்டு இதுவரை முடிவு வெளிவராத எலும்புகூட்டு விபரங்கள், திருக்கேதிஸ்வரத்தில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகள் எல்லாவற்றையும் செம்மணியில் கண்டெடுக்கப்பட்டதை பார்க்கும் போது எலும்பு கூடுகள் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டவர்களுள் வீதமானவர்களது எலும்புக்கூடுகள் என்ற முடிவுக்கு வரலாம்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழு கமிஷனர் வோக்கர் டக் இலங்கைக்கு வந்த போது யாழ்ப்பாணத்திற்கும் வந்திருந்தார். அப்போது அணையா விளக்கு' நிகழ்வும் சிவில் சமுகங்கள் செயற்பாட்டாளர்கள் சரியான நேரத்தில் செம்மணிப்பகுதியில் ஏற்பாடு செய்த 3 நாள் கவன ஈர்ப்பு நிகழ்விலும் கலந்து கொண்டது வரவேற்கத்தக்கது.

ஆயினும் இவரது கருத்துக்கள் விசாரணையில் சர்வதேச பங்களிப்பை சுட்டிக்காட்டாதிருப்பது பெரும் ஏமாற்றமே. 3000 நாட்களைக் கடந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் போரின் பின் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் எங்கே என்று கவனயீர்ப்பை நடத்திக் கொண்டிருந்தார்கள். இந்த 3000 நாட்களில் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்களுள் 200க்கு மேற்பட்டவர்கள் தமது உறவுகளைக் காணாது இறந்துவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பலவிதமான வாக்குறுதிகளுடன் பதவிக்கு வந்து தொடர்ந்தும் புதுப்பித்த வாக்குறுதிகளை வழங்கிக்கொண்டிருக்கும் தற்போதைய அரசின் செயற்பாடும் 'பேச்சு பல்லக்கு தம்பி கால் நடை' என்று தான் உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இந்த அரசின் செயற்பாடு ஒரு அங்குலம் தானும் முன்னேறவில்லை. நல்லிணக்கத்தைக்கொணர்வோம் என்று பதவிக்கு வந்த தற்போதைய அரசு தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினை சம்பந்தமாக அதன் செயற்பாடுகள் மந்த கதியிலேயே உள்ளன.

வீதிகள் திறக்கப்பட்டாலும் மறுபுறத்தில் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள சில வீதிகள் காணிகள் இன்னும் முறைப்படி விடுவிக்கப்படவில்லை. பாரம்பரியக்காணிகள் கிழக்கில் தமிழரது பெரும்பான்மையினருக்குத் தாரைவார்க்கப்படுகின்றன.

வெடுக்குநாறி, குருத்தூர், தையிட்டி ஆகிய இடங்களில் தமிழ் மக்களின் தொன்மை மிகு இடங்கள் பறிக்கப்பட்டமைக்கு தீர்வு காணப்படவில்லை. பயங்கரவாத தடைச்சட்டம் இன்னமும் நீக்கப்பட்டபாடில்லை.

2009 ம் ஆண்டு யுத்தம் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டு முடிவுக்கு வந்த பின் போர்க்குற்றங்கள் (சரணடைந்தவர்களைக் கொல்வது உதாரணம் : இசைப்பிரியா, பாலச்சந்திரன் போன்றவர்கள்) பற்றிய பொறுப்புக்கூறல் இதுவரை இடம் பெறவில்லை.

செம்மணி, கொக்குத்தொடுவாய், மன்னார் திருக்கேதிஸ்வரம் போன்ற இடங்களில் உள்ள புனித குழிகள் பற்றிய அகழ்வுக்கும் ஆய்வுக்கும் உள்நாட்டில் நிபுணத்துவம் இல்லையென்று தெரிந்தும் வெளிநாட்டு தலையீடுகளுக்கு அனுமதி மறுப்பு. போர்க்காலத்தில் இடம் பெற்ற படுகொலைகள் உதாரணம், நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் ஆலயக்குண்டு வீச்சு, நாகர்கோவில் குண்டுவீச்சு, புனித ஜேம்ஸ் ஆலய குண்டுவீச்சு, மடு தேவாலயத்தில் வீச்சு, மூதூர் வெளிநாட்டு தொண்டு நிறுவன ஊழியர் படுகொலை, திருகோணமலையில் பரீட்சை எழுதிமுடித்திருந்த 5 மாணவர் படுகொலை போன்றவை எவற்றிலும் உள்நாட்டுப் பொறிமுறையில் ஒரு அங்குலம் முதலாக முன்னேற்றம் இல்லை.

இதனால் தான் தமிழ் மக்கள் நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாயின் மேற்குறிப்பிட்ட சில விடயங்களிலாவது வெளிநாட்டு தலையீடு ஏற்பட்டிருக்க வேண்டும். சாத்வீரசேகர விமலவன்ச, விமல ரத்னதேரர் போன்றவர்களது இனவாத கருத்துக்களுக்கு இவ் அரசும் அடிபணிகிறது போலத் தென்படுகிறது.

2009ம் ஆண்டுக்குமுன் குறிப்பாக 30 ஆண்டுகாலம் நடந்த உக்கிரமான மோதல்களில் பல்லாயிரக்கணக்கில் பொதுமக்கள் விமானக்குண்டு வீச்சுக்கள் மூலமும் தரையில் கடத்தப்பட்டதும், கைது செய்யப்பட்டதும், சித்திரவதைக்குள்ளாகி, கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டு, கடலில் சாதாரண பயணிகள் கொல்லப்பட்டதாலும் (குமுதினி படுகொலை) ஆசியாவை இனப்படுகொலை அல்லது இனச்சுத்திகரிப்புக்களின் வெளிப்பாடுகளே.

அத்துடன் யாழ் நூலக எரிப்பு, பொதுமக்களின் காணிகள் ஆக்கிரமிப்பு, ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் பௌத்த விகாரைகள் நிர்மாணம் எல்லாம் இனஅழிப்பின் பல்வேறு பரிமாணங்களே. அத்துடன் ஒவ்வொரு வருடமும் 2009ம் ஆண்டுக்குப் பின் யுத்த வெற்றி நாள் கொண்டாடப்பட்டு கடற்படை, விமானப் படை, தரைப்படையினருக்கு யுத்தகால வீரதீரச்செயல்களுக்குப் பதவி உயர்வுகளும், பதக்கங்களும் வழங்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டவற்றுள் எந்த வீரதீரச்செயல்களுக்காக இப்பதக்கங்களும் பதவி உயர்வுகளும் வழங்கப்படுகின்றன? இது போன்ற துன்பியல் நிகழ்வுகள் இனி நிகழாது, நல்லிணக்கமே எமது குறிக்கோள் என்று பதவிக்கு வந்த இவ்வரசு இவ்வருட வெற்றி விழாவில் மேற்படி வீர தீரச்செயல்களுக்காக பதவி உயர்வுகளும் பதக்கங்களும் வழங்கியிருந்தது என்பது சுட்டிக் காட்டத்தக்கது என்றுள்ளது.

# கறுப்பு யூலையும்

# ஈழப்போர் இலக்கியமும்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

15.07.2025

போரின் கொடுமைகளும், தமிழரின் நீண்டகால துயரமும் அவலமும் துயரங்களும் அகதனுள்ளே வலிகள் நெருப்பாக இன்னும் நீண்டு கொள்கிறது. 1956 இல் தொடங்கிய தமிழர் இனவழிப்பு மே 2009 இல் முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் உச்சமாக நடைபெற்று, இன்னமும் தமிழர் மீதான அடக்கு முறைகள் தொடரும் நிலையில் இழந்துபோன ஓர் தேசத்தின் கனவுச் சிதறல்களாக பதிந்து நிற்கும் கவிதைகளும், ஆக்கங் களுமே ஈழப் போர் இலக்கியத்தில் முதன்மையாகிறது.

கறுப்பு யூலை நிகழ்வுகளே இலங்கை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப்படுகின்றது.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட கட்ட மைக்கப்பட்ட இனப்படுகொலை செயற்பாடாகவே நம்பப் படுகிறது.

பாறாங் கல்லெனவே தமிழர் நெஞ்சில் ஆறாமற் கிடக்கும் நினைவுகள் தற்போது எழுத்துருப் பெற்று வருகின்றன. அத னுள் கறுப்பு யூலை –ஆடிக்கலவரம் 1983 திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப் படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படுகொலை செய்ததுமான ஒரு துன்பவியல் நிகழ்வின் பதிவுகளே ஈழப்போர் இலக்கிய பிறப்பாக உருவகங் கொள் கின்றன.

1983 கறுப்பு யூலையினை "இனக்கலவரம்" என்ற போர்வைக் குள் நடைபெற்றது தமிழர் மீதான "இனப்படுகொலை" நிகழ் வாகும். உண்மையில் இக்கோர கறுப்பு யூலை நிகழ்வுகளே ஈழத்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராட தூண் டியது என்று கூறலாம்.

மூன்று தசாப்தகாலமாக நடைபெற்ற தமிழ் மக்களின் அகிம்சை போராட்டம் தோற்றுப் போக தமிழ் இளைஞர்கள் மத்தியில் புரட் சிகர ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கு தேவையான வலிமையை கறுப்பு யூலை வலிகளில் இருந்தே ஈழத்து தமிழ் மக்கள் பெற்றார்கள். இதன் மூலம் எழுந்த இந்த போராட்ட இலக் கியங்கள் வாழ்விடத்தை தொலைத்த அவலத்தையும், மக்கள் படும் துயரத்தையும் முன்னிறுத்தி இந்தப் படைப்புகள் உருவாகி வெளிவந்தன.

1958 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் நடந்த இனக்கலவரத் தின் பின்னணியை சித்திரிக் கும் நாவலாக மு. தளையசிங்கம் எழுதிய "ஒரு தனி வீடு" இலங் கையில் வெளிவந் தது. அவரது முதல் நாவ லான ஒரு தனி வீடு 1962 இல் எழுதப்பட்டு 1984 இல் அவர் இறந்து 22 வருடங்களுக்குப் பிறகு தான் வெளி வந்தது.

ஈழத்தமிழருக்கு தனி நாடுதான் அர்த்தமுள்ள தீர்வாக அமை யும் என்ற செய்தியைக் கூறும் படைப்பாகவும், இன ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடு முதலான மார்க்ஸீய – கம்யூனிஸ சுலோகங்களை விமர்சிக்கும் நாவலாகவும் ஒரு தனி வீடு அமைந்தது.

## கவிஞர்களின் மரணத்துள் வாழ்வோம்:

1985இல் 'மரணத்துள் வாழ்வோம்' என்ற பெயரில் உ.சேரன், அ.யேசு ராசா, இ.பத்மநாப ஐயர், மயிலங் கூடலூர் பி.நடராஜன் ஆகிய நால் வரும் தொகுத்து ஒரு போரியல் கவிதைத் தொகுதியை வெளியிட் டிருந்தார்கள். முதலில் யாழ்ப் பாணம் தமிழியல் வெளியீடாகவும், பின்னர் கோவை விடியல் பதிப் பகத்தின் வாயிலாக உப்பிலி பாளையத்திலிருந்து 2வது பதிப்பாக டிசம்பர் 1996 இலும் இந்த நூல் 170 பக்கங்களில் வெளிவந்திருந்தது.






ஈழத்தின் 31 இளம் கவிஞர்களின் 82 கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். ஈழத்து இனப் பிரச்சினையைப் பகைப்புலமாகக் கொண்ட இக் கவிதைத் தொகுப்பில் மூன்று பெண் கவிஞர் களின் பெண்நிலைப்பட்ட அநுபவங்கள் உயிர்த்துடிப்புடன் வந்துள்ளமையும் சிறப்பம்சமாகும்.

ஈழத்தின் போர்க்கால கவிதைத் துறையில் நினைவு கொள்ளத் தக்க மற்றொரு கவிஞர் மறைந்த கி.பி. அரவிந்தன் ஆவார். பிரான்ஸ் தேசத்தில் புலம் பெயர்ந்து, வாழ்ந்து காலமான இவர் ஈழப் போராட் டத்தில் விடுதலைப் போராளியாக இருந்தவர்.

இவரது படைப்புக்களில் ஈழ விடுதலைப் போராட்டமும், ஈழத் தமிழரின் புகலிட வாழ்வியலும் முனைப்புடன் காணப்படு கின்றன. மூன்று படைப்புக்களை தமிழகத்தி லிருந்து வெளியீடு செய்தவர் இவர். இனி ஒரு வைகறை அவர் எழுதிய முதலாவது கவிதைத் தொகுப்பாகும்.

1992 இல் வெளியான முகம கொள் கி.பி.அரவிந்தனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு ஆகும். கனவின் மீதி. இவரது மூன்றாவது கவிதைத் தொகுதியாகும். கி.பி.அரவிந் தனின் கவி தைகள் வரலாற்று அனு பவங்களில் தோய்ந்து எழுந் தவை மட்டுமல்ல, அவ்வனுபவங்கள் அலாதியான ஒரு கற்பனைத் திறத்தால் பளிங்கு போன்றதொரு தெளிவான மொழியால் சீரமைக்கப்பட்டு பண்படுத்தப்பட்டு கவிதைகளாக வார்த்தெடுக்கப் பட்டுள்ளன எனக்கூறலாம்.

## 1977 இனக்கலவர ஆவணம்:

1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இனக்கலவரத்தின் போது யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற அரச வன்முறைகள் பற்றி செங்கை ஆழியான் எழுதிய "24 மணி நேரம்"என்கிற நூல் முக்கிய மான வரலாற்று ஆவண மாகும். ஈழத்து போர்க்கால வர லாற்றினை சிறுகதை, நாவல் இலக்கியமாக எதிர்கால சந்ததிக்கு வெளிப்படுத்திய படைப் பாளுமை மிக்க செங்கை ஆழியானின் பணி ஈழ வரலாற்றில் என்றும் போற்றப்படும்.

செங்கை ஆழியானின் இலக்கியச் செயற்பாடுகளில் அவரது ஆவணப்படுத்தல் முயற்சி மிக முக்கியமானது ஆகும். மட்டக் களப்பில் ஏற்பட்ட சூறாவளியைப் பற்றி அவர் எழுதிய "12 மணி நேரம்" என்கிற நூல் இயற்கை இடரின் துயரத்தை வரலாற்று வரிகளாக்கிய நூலாகும். இந்த இரண்டு நூல்களையும் நீல வண்ணன் என்ற புனைபெயரில் எழுதியுள்ளார்.

## திட்டமிட்ட இனப் படுகொலைகள்:

சிங்கள அரசுகளால் 1977, 1983 ஆண்டுகளில் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்ட இனக்கலவர வன்முறைகளும் தமிழ் மக்களுக் கான சுயநிர்ணய உரிமைக்கான அவசியத்தையும் தனி நாடு ஒன்றிற்கான தேவையையும் வலியுறுத்தின. இந்த காலகட்ட போராட்ட வாழ்வே ஈழ இலக்கியப் படைப்புகளில் ஏற்பட்ட மாற்றம் என்றும் கருத இடமுண்டு.

1981இல் யாழ்ப்பாண மண்ணில் யாழ்ப்பாணப் பொது நூலகம், ஈழநாடு பத்திரிகை அலுவலகம், பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகிய தமிழரின் அறிவியல், ஊடகவியல் நிறுவனங்களை சிங்கள அரசின் கூலிப்படைகளால் பகிரங்கமாகத் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட சம்பவமானது, அதுவரை காலமும் கொரில்லாப்

போராட்டமுறைகளை இளைஞர்கள் மட்டுமே பங்கேற்றி வந்த சூழல் மாறி, அறிவுசார் புத்திஜீவிகளையும் விடுதலைப் போராட்டத்தின்பால் ஈர்த்தது.

ஈழத்தின் போரியல் வரலாற்றுக் காலகட்டத்தில் வெளியான அனைத்து இலக்கியப் படைப்புக்களும் போராட்டம் சார்ந்தவையல்ல. போராட்டத்தின் வலிகள், உடன்பிறப்புக்களின் இழப்புக்கள், கொடூர வன்மங்கள், உடமைகளின் அழிப்புக்கள், இடப்பெயர்வின் அவலங்கள், புலம்பெயர்ந்து சென்ற உறவுகளின் பிரிவுத் துயர், போராளிகளின் வீரதீரங்கள், மானிடத்தையும் பெண்மையையும் இழிவுபடுத்தும் சித்திரவதை என ஒரு போராட்ட வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் போரியல் இலக்கியங்கள் தொட்டுச் செல்கின்றன

## புதுவை இரத்தினதுரை கவியுகம்:

கவிஞர் புதுவை இரத்தினதுரை 'வியாசன்' என்ற புனைபெயரில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு "வியாசனின் உலைக்களம்" எனும் நூலாகும். போரியலையும் அது சார்ந்திருக்கும் அரசியலின் ஆழப்பாடுகளையும் சுழியோடி, நுகர்ந்து, மென்று விழுங்கி, அதை அக்கு வேறு ஆணி வேறாகத் தனது பேனா முனையால் உலைக்களத்தின் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளார்.

பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் என்ற புதுவை இரத்தினதுரையின் கவிதைத் தொகுப்பு யாழ்ப்பாணம் நங் கூரம் வெளியீடாக, பங்குனி 2005 இல் வெளியானது. இத் தொகுப்பில், வெளிச்சம் இதழில் கார்த்திகை 1993 இல் வெளி வந்த "தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே" என்ற கவிதையில் தொடங்கி, வெளிச்சம் சஞ்சிகையின் மாசி 2005இல் வெளியான "இருந்ததும் இல்லையென்றானதும்" என்ற கவிதை வரை 12 ஆண்டுகளில் கவிஞர் புதுவை இயற்றிய மொத்தம் 155 கவிதைகள் இடம் பிடித்திருக்கின்றன.

## 1981 யாழ் நூலகம் எரிப்பு :

ஈழ ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடியாக பல நூல்கள் ஆரம்பகாலத்தில் வெளிவந்திருந்தன. பண்டிதர் க.பொ.இரத்தினம், கவிஞர் காசி ஆனந்தன் போன்றேரின் விடுதலை உணர்ச்சிமிக்க படைப்புகளை சுதந்திரன், தீப்பொறி போன்ற அரசியல் ஏடுகள் எழுபதுகளில் தாங்கி வந்தன.

சிறீலங்கா அரசின் பாரிய வன்முறை கெடுபிடிகளுக்கு மத்தியில் ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பிரசுரங்களை தாயக மண்ணில் வெளிப்படையாக அச்சிட முடியாத நிலை அக்காலத்தில் காணப்பட்டது.

அத்துடன் ஆரம்பகால விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்வேறு போராட்ட அமைப்புக்களும் தமது தளங்களை தமிழகத்திலும் கொண்டியங்கியதால் அக்காலகட்ட வெளியீடுகள் அதிகளவில் தமிழகத்தில் அச்சிடப்பெற்று, தாயகத்துக்குக் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

அதேவேளை இனவிடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த துணிச்சலுடன் முன்வந்த பல ஈழத்துப் படைப்பாளிகளும் அந்நாட்களில் புனைபெயரினுள் மறைந்திருந்தே இத்தகைய இலக்கியங்களைப் படைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது என்பதும் உண்மையே.

## ஈழத்தின் போரியல் வரலாறு:

ஈழத்தின் போரியல் வரலாற்றுக் காலகட்டத்தில் வெளியான அனைத்து இலக்கியப் படைப்புக்களும் போராட்டம் சார்ந்தவையல்ல. போராட்டத்தின் வலிகள், உடன்பிறப்புக்களின் இழப்புக்கள், கொடூர வன்மங்கள், உடைமைகளின் அழிப்புக்கள், இடப்பெயர்வின் அவலங்கள், புலம்பெயர்ந்து சென்ற உறவுகளின் பிரிவுத் துயர், போராளிகளின் வீரதீரங்கள், மானிடத்தையும் பெண்மையையும் இழிவுபடுத்தும் சித்திரவதை என ஒரு போராட்ட வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் போரியல் இலக்கியங்கள் தொட்டுச் செல்கின்றன.

சர்வதேச வரலாற்றில் ஈழத்தமிழரின் தனித்துவமான இலக்கியமாக உலகளாவிய தமிழ் இலக்கியப் படைப்புக்களில், நின்று நிலைத்திருக்கப்போகும் வலிமைபெற்ற போரியல் இலக்கியத்தின் நீட்சி இன்னமும் தொடர்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு பிறகு இலங்கை சுதந்திரத்தின் பின்னர், சின்னஞ்சிறு மாங்காய்த் தீவில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த கால கட்டத்தின் தமிழர்களின் அடையாள அரசியல் என்பது இலக்கியம், கவிதைகளின் மூலம் தெறித்து வந்தது. மேலும் முற்போக்கு சார்ந்த இலக்கியங்கள் ஏராளமாக வரத்தொடங்கின. இந்த இலக்கியங்கள் சமுதாய மாற்றத்தை உள்ளடக்கியும் இருந்தன. இந்த காலகட்டத்தில் வந்த இலக்கிய படைப்புகள் இலங்கை தமிழ்ச் சூழலில் பெரிய வெளிச்சத்தை மக்களுக்கு ஏற்படுத்தின.

குறிப்பாக 1958 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் இலக்கிய போக்குகளில் பல மாற்றம் அடைந்திருக்கின்றன. தமிழரின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் சென்ற தமிழ் அரசியல்வாதிகள் சாத்விகப் போராட்டங்களின் வழியாக அடக்குமுறைகளுக்குத் தீர்வுகாண முயன்று தோல்வி கண்டமை இன்று வரலாறாகி விட்டது. இலங்கையில் தமிழரின் விடுதலைப் போராட்டம் சாத்வீகப் போராட்ட நிலையிலிருந்து ஆயுதப் போராட்ட முறைக்குப் பரிணாம வளர்ச்சி பெற்ற எழுபதுகளின் இறுதிப்பகுதிகளிலேயே போரியல் சார்ந்த நூல்கள் ஆங்காங்கே வெளிவர ஆரம்பித்து விட்டன.

இலங்கை அரசுகள் கொண்டு வரும் கொடூர சட்டங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும்போது இலக்கியத்தில் மாற்றங்கள் ஏற்பட்டது. 1980 ஆண்டுக்கு பிறகு போர் சூழல் குறித்த இலக்கியங்கள் ஏராளமாக வந்தன. போர் அவலம் என்பது 30 ஆண்டுகாலமாக தவிர்க்க முடியாததாக இருந்தது. இந்த கால கட்டத்தில் ஏராளமான ஆண், பெண் படைப்பாளர்கள் உருவாகி போர் சூழல், தமிழ் மக்களின் துயரம் குறித்த படைப்புகளை உருவாக்கினர். போரில் ஈடுபட்டவர்களும், போரை வெளியில் நின்று பார்த்தவர்களும் ஏராளமான புதிய படைப்புகளை உருவாக்கினர். போருக்குப் பிறகு இப்போது ஏராளமான புலம் பெயர் இலக்கியங்கள் உருவாகின.














# தமிழ் இனப்படுகொலையை இந்தியா அங்கீகரிக்க டெல்லி கருப்பு யூலை நினைவேந்தலில் கோரிக்கை!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

25.07.2025

1983 கருப்பு யூலை படுகொலையின் 42வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, புது தில்லியில் உள்ள சம்விதான் கிளப் ஆஃப் இந்தியாவில் இந்து சங்கர்ஷ் சமிதி ஒரு புனிதமான உணர்ச்சிபூர்வமான அஞ்சலி கூட்டத்தை வியாழக்கிழமை யூலை 24ம் நாள் ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையில் தமிழ் இந்துக்களுக்கு எதிராக இலக்கு வைக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறையை நினைவுகூரும் வகையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவும், இலங்கையில் இந்துக்களுக்கு எதிராக நடத்தப்படும் கலாச்சார மற்றும் இன அட்டூழியங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கையில் தமிழ் இந்துக்களின் மீதான இனப்படுகொலை மற்றும் இன அழிப்பு என்பது இந்த நிகழ்வின் கருப்பொருள்.

இலங்கையில் இந்துக்களுக்கு இழைக்கப்படும் மனிதாபிமானமற்ற தன்மை பற்றி மிகச் சிலரே அறிந்திருக்கிறார்கள். "தி காஷ்மீர் ஃபைல்ஸ்" திரைப்படம் காஷ்மீர் இந்துக்களின் துன்பத்தின் ஒரு பகுதியைக் காட்டியது போல, இலங்கை இந்துக்களின் உண்மையும் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். நாடு முழுவதும் இதுபோன்ற நினைவுக் கூட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என நொய்டா பிலிம் சிட்டி மற்றும் மார்வா ஸ்டுடியோஸ் நிறுவனர் ஸ்ரீ சந்தீப் மர்வா கூறினார்.

மூத்த பத்திரிகையாளரும் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான ஸ்ரீ தருண் விஜய் கூறுகையில், "இந்த துயர சம்பவத்தை ஒவ்வொரு ஆண்டும் நினைவுகூரும் இந்து சங்கர்ஷ் சமிதியின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கையில் இந்துக்களின் நிலைமை நீண்ட காலமாக கவலையளிக்கிறது. இந்தியா எந்த நாட்டின் நிலத்தையும் வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்ததில்லை.

மூத்த பத்திரிகையாளரும் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான ஸ்ரீ தருண் விஜய், "இந்த துயரத்தை ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூரும் இந்து சங்கர்ஷ் சமிதியின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கையில் உள்ள இந்துக்களின் நிலைமை நீண்ட காலமாக கவலைக்குரியதாக இருந்து வருகிறது. இந்தியா எந்த நாட்டின் நிலத்தையும் பலவந்தமாக ஆக்கிரமித்ததில்லை, ஆனால் உலகம் முழுவதும் இந்துக்கள் மீண்டும் மீண்டும் குறிவைக்கப்படுகிறார்கள். இது உலகளாவிய கவலைக்குரிய விஷயம் என்றார்.

இந்தியா வாழ்விட மையத்தின் இயக்குனர் ஸ்ரீ கே.ஜி. சுரேஷ், "இந்தியா எப்போதும் அனைத்து மதங்களுக்கும் சம மரியாதை மற்றும் வாய்ப்புகளை வழங்கி வருகிறது. ஆனால் இன்றும் பல நாடுகளில் இந்துக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவது கவலையளிக்கிறது. உலகின் எந்த மூலையிலும் ஒரு இந்து தாக்கப்பட்டால், அது இந்தியாவின் மீதான தாக்குதலாக கருதப்பட வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உணர்வை நாம் உள்வாங்காவிட்டால், உலகளாவிய இந்து சமூகம் ஒற்றுமையாகவும் பாதுகாப்பாகவும் இருக்க முடியாது" என்றார்.

"கருப்பு யூலை என்பது திடீர் வன்முறை அல்ல, மாறாக சிறீ

ல ங்

கா அரசால் ஆதரிக்கப்பட்ட இன அழிப்பு ஆகும். இதில் தமிழ் இந்துக்கள் திட்டமிட்டு குறிவைக்கப்பட்டனர். ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனே யூலை 28 ஆம் தேதி வரை பொது மக்களின் பார்வையில் இருந்து விலகி இருந்தார். பின்னர் வன்முறைக்கு தமிழ் பிரிவினைவாதிகள் மீது பழி சுமத்தினார்" என்று அகில இந்திய சிறுபான்மையினர் முன்னணியின் தேசியத் தலைவர் திருமதி லுப்னா ஆசிப் கூறினார்.

விஸ்வ இந்து பரிஷத் செய்தித் தொடர்பாளர் டாக்டர் பிரவேஷ் சவுத்ரி கூறுகையில், "பௌத்தம், சமணம் மற்றும் சனாதன மரபுகள் ஒரே கலாச்சார தோற்றத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பிரிக்கும் எந்தவொரு முயற்சியும் கண்டிக்கத்

தக்கது. இந்துவாக இருப்பது பெருமைக்குரிய விஷயம். மேலும் இந்தியாவில் மட்டுமல்ல, உலகளவில் அனைத்து வகையான ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக நாம் ஒன்றுபட வேண்டும்" எனக் கூறினார்.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் படுகொலையைக் கண்டித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, எல்லைகளுக்கு அப்பாலும் இந்து அடையாளத்தையும் கண்ணியத்தையும் பாதுகாப்பது அவசியம் என்பதை மீண்டும் வலியுறுத்தினர்.

இந்து சங்கர்ஷ் சமிதியின் தேசிய பொதுச் செயலாளர் ஸ்ரீ அனுப் பாண்டே கூறுகையில், "கருப்பு யூலை இலங்கையில் தமிழ் இந்துக்கள் மீது குறிவைக்கப்பட்ட படுகொலை மட்டுமல்ல, அவர்களின் கலாச்சார அடையாளத்தையும் அழிக்கும் முயற்சியாகும். ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் மூதாதையர் வீடுகளில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

அவர்கள் ஒருபோதும் திரும்பி வர முடியாது. இது ஒரு கலவரம் மட்டுமல்ல, திட்டமிட்ட இன அழிப்பு" என்று கூறினார்.

"பௌத்த, சமண மற்றும் சனாதன மரபுகள் அனைத்தும் இந்திய கலாச்சாரத்தின் வேர்கள், அவற்றை தனித்தனியாகப் பார்க்கக்கூடாது. 1984 ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்த நிகழ்வுகள் நம்மை எச்சரிப்பது போல, இலங்கையில் நடந்த இந்த துயரம் விழிப்புடனும் ஒற்றுமையுடனும் இருக்க கற்றுக்கொடுக்கிறது" என்று இந்து சங்கர்ஷ் சமிதியின் டெல்லி மாநில ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ மஞ்சீத் கூறினார்.

இன்றும் கூட இலங்கையில், இந்து மத இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதாகவும், அவர்களுக்கு பௌத்த அடையாளத்தை வழங்க முயற்சிகள் நடந்து வருவதாகவும் பேச்சாளர்கள் சுட்டிக்காட்டினர். இந்தப் பௌத்த பெரும்பான்மை மனப்பான்மை தமிழ் இந்து அடையாளம் மற்றும் கண்ணியத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

கறுப்பு யூலைக்குப் பிறகு, ஆயிரக்கணக்கான தமிழ் இந்துக்கள் - பல பிரபலங்கள், மரியாதைக்குரியவர்கள் மற்றும் படித்தவர்கள் உட்பட - தங்கள் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் அகதிகளாக குடியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது, ஆனால் அவர்களால் ஒருபோதும் தங்கள் தாயக வீடுகளுக்குத் திரும்ப முடியவில்லை.

இக் கூட்டத்தில் இந்திய அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இலங்கையில் தமிழ் இந்துக்களுக்கு எதிரான இனப்படுகொலையை "இனப்படுகொலை" என்று முறையாக அங்கீகரிக்கவும், எதிர்காலத்

दिल्ली और दिल्ली

ब्लैक जुलाई 1983 की 41वीं स्मृति में श्रद्धांजलि सभा का आयोजन

தில் இதுபோன்ற வகுப்புவாத வன்முறை மீண்டும் நிகழாமல் பார்த்துக் கொள்ளவும் இந்திய அரசாங்கத்தையும் சர்வதேச சமூகத்தையும் நிகழ்வில் பேசியவர்கள் வலியுறுத்தினர். மத மற்றும் இன சிறுபான்மையினரின் எதிர்காலத்தைப் பாதுகாக்க இராஜதந்திர தலையீடு மற்றும் உலகளாவிய அங்கீகாரம் அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டது.

# தமிழீழ விடுதலை வரலாற்றில் ஆகஸ்ட்

## குடியுரிமை பறிப்பு

தமிழர்கள் என்னும் காரணத்துக்காக குடியுரிமைச் சட்டம் என்னும் போர்வையின் கீழ் மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை 20.08.1948 அன்று சிங்களப் பேரினவாத ஆட்சிபீடத்தினால் பறிக்கப்பட்டது.

## தமிழர் மீதான இனப்படுகொலை 15-27.08.1977

தமிழருக்கெதிரான இனப்படுகொலை நடவடிக்கையான 1977 ஆவணிப்படுகொலை தொடங்கிய நாள் (15-27.08.1977). இனப்படுகொலையின் பின்னர்தான் நிராயுதபாணிகளாக நின்ற தமிழர்களை நோக்கி போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம் என்று கொக்கரித்தார் பேரினவாதி ஜெயவர்த்தனா. இவ் இனவெறியில் 400 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 10,000 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

## மன்னாரில் நிகழ்ந்த முதல் கண்ணிவெடித் தாக்குதல்

மன்னார் மாவட்டத்தில் முதல் கண்ணிவெடித்தாக்குதல் மன்னார் - பூநகரி வீதியில் நடந்த நாள் 11.08.1984.

## சுதுமலைப் பிரகடனம்

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் யாழ்ப்பாணம் சுதுமலை என்னும் இடத்தில் 04.08.1987 அன்று முதன்முதலில் தமிழீழ மக்கள் முன்தோன்றி உரையாற்றினார். இவ் உரையே வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதுமலைப் பிரகடனமாகும்.

“இந்திய - இலங்கை ஒப்பந்தமானது, எமது தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தராது” என்பதனை மிகத் தீர்க்கதரிசனமாக அவ் உரையில் கூறியிருந்தார் தலைவர் அவர்கள்.

## இந்தியப்படைகளால் இடம்பெற்ற வல்வெட்டித்துறைப் படுகொலை

1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2, 3. 4 ஆகிய திகதிகளில் யாழ். குடாவின் வல்வெட்டித்துறைப் பகுதியில் வீடுகளிலும், வீதிகளிலும் நின்ற மக்கள் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதேவேளை, இந்திய இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களும் அடித்துக் கொல்லப்பட்டனர். இப்படுகொலைச் சம்பவத்தில் சிறுவர், மாணவர், வயோதிபர், பெண்கள் உட்பட 64 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதோடு, சொத்துக்கள், உடமைகள் என்பனவும் பெருமளவில் நாசமாக்கப்பட்டன.



## வீரமுனைப் படுகொலை

அம்பாறை மாவட்டத்தில் 10.08.1990 அன்று கோயில் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த அப்பாவித் தமிழ் மக்கள் முஸ்லீம் காடையர்களால் வெட்டிக்கொல்லப்பட்டனர். 100 தமிழ் மக்கள் வரை கொல்லப்பட்ட இத்தாக்குதல், ஜனாதிபதி ஆர். பிரேமசாதா அவர்கள் ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்டது.

## ஆகாய கடல்வெளிச்சமர் முடிவு நாள் – 09.08.1991

போராட்ட வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக அமைந்த ஆனையிறவுச்சமர் (10.07.1991-09.08.1991) இலங்கைத்தீவில் இரண்டு இராணுவங்கள் என உலகம் வர்ணித்த இந்தச் சரித்திரச் சமரில் 608 மாவீரர்கள் வீரச்சாவடைந்தார்கள்.

## மணலாற்றில் சிறீலங்கா படையினரின் ஒப்பரேசன் மின்னல் இராணுவப் படையெடுப்பு

29.08.1991 அன்று ஆரம்பித்த ஒப்பரேசன் மின்னல் என்ற பாரிய படையெடுப்பு தமிழீழத் தாய கத்தை இரண்டாக பிளக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. 26 செப்டம்பர் வரையான 28 நாட்கள் நீடித்த இச்சமரில் எமது முதுநிலைத் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் ஜஸ்ரின் உட்பட 236 வீரர்கள் வீரச்சாவடைந்து தேசத்தை காத்தனர். 300 வரையான தமது சிப்பாய்களை இழந்து சிங்களப்படை தோல்வியைச் சந்தித்தது.

## அராலிக் கண்ணிவெடித் தாக்குதல்

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட சிங்களப்படைத்துறையின் வடபிராந்திய தலை மையை ஒரே தாக்குதலின் மூலம் இல்லாதொழித்தது விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதல். சிங்கள ஆட்சியாளர்களையும், படைத்தலைமையையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கிய இத்தாக்குதல் 09.08.1992 அன்று நிகழ்த்தப்பட்டது.

Lt. Gen. Denzil Kobbekaduwa

Major General Wijaya Wimalarathne

Rear Admiral Mohan Jayamaha | Lt Colonel YN Palipana | Lt Colonel HR Stephen | Lt Colonel GH Ariyarathne

Lt Commander CB Wijepura | Lt Commander Asanga Lankathilaka | Major Nalin de Alwis | Private WJ Wickremasinghe

www.sangathamil.ca

## மயிலந்தனைப் படுகொலை

மட்டக்களப்பு மயிலந்தனைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பிற்குப் பயந்து பதுங்கச்சென்றவேளை, அங்கு பதுங்கியிருந்த சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் அப் பொது மக்களை வெட்டியும், சுட்டும் படுகொலை செய்தனர். 09.08.1992 ஆம் திகதி நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் 50 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

## லெப். கேணல் இராஜன் வீரச்சாவு – 27.08.1992

புலிகளின் முதல் நிலைத் தளபதிகளுள் ஒருவரான லெப். கேணல் இராஜன் (சோமசுந்தரம் சற்குணம் - மாதகல், பிறப்பு: 11.02.1966) இராணுவ நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில் திறமை யாக செற்பட்டு, தலைவரின் பாராட்டைப் பெற்றவர்; சக போராளிகளுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்த இவர் மாதகல் பகுதியில் சிறீலங்கா இராணுவம் மீதான ஒரு தாக்குதலில் வீரச் சாவடைந்தார்.

## கிளாலி கடல் நீரேரியில் கரும்புலித் தாக்குதல் – 26.08.1993

யாழ். குடாநாடு மீதான முற்றுகை வலையின் பிரதான முடிச்சான கிளாலி நீரேரியில் சிங்கள தேசத்தின் கடற்படைப் படகான நீருந்து விசைப்படகுகள் இரண்டினை வெவ்வேறு கரும்புலித் தாக்குதல் மூலம் மேஜர் வரதன் (கந்தசாமி இராமச்சந்திரன் - மட்டக்களப்பு, பிறப்பு: 19.07.1974) மற்றும் கப்டன் மதன் (சீனிவாசன் சிவகுமார் - மட்டக்களப்பு, பிறப்பு: 07.09.1995) ஆகியயோர் மூழ்கடித்தனர். இவ் இரண்டு வீரர்களும் அடுத்தடுத்து நடாத்திய கடற்கரும்புலித் தாக்குதலால் கிளாலியின் மேலாதிக்கம் புலிகளின் கைகளில் வந்து வீழ்ந்தது.

## பருத்தித்துறை கடற்பரப்பில் கரும்புலித் தாக்குதல் – 29.08.1993

சிங்கள கடற்படையின் மிதக்கும் சுப்பர் டோரா படகுகள், இவை போராட்டத்திற்கும், மக்களுக்கும் செய்த இழப்புகள் கொஞ்சநஞ்சமல்ல. இத்தகைய ஒரு சுப்பர் டோராவை மேஜர் புகழரசன் (சுப்பிர மணியம் நாகநீதன் - அரியாலை, பிறப்பு: 15.11.1975), கப்டன் மணியரசன் (தேவநாயகம் இராஜ ரூபன் - குடத்தனை, பிறப்பு: 22.10.1977) இணைந்து கரும்புலித் தாக்குதல் மூலம் மூழ்கடித்தனர். இதன் மூலம் இரண்டு ஒலிகன் ரக நவீன இயந்திரத் துப்பாக்கிகள் புலிகளுக்குக் கிடைக்கப் பெற்றன.

## பலாலி சிறீலங்கா படைத்தள மையப்பகுதியின் மீதான கரும்புலித் தாக்குதல்

02.08.1994 அன்று சிங்களத்தின் மிக இறுக்கமான பலாலி பெருந்தளத்தின் மையத்தில் சிங் களத்தினை அதிரவைத்த பெரும் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் பெல். 212 ரக உலங்கு

வானூர்தி ஒன்றும் பவள் கவச வாகனம் ஒன்றும் தாக்கியழிக்கப்பட்டது. பலம் வாய்ந்த எந்த குகைக்குள்ளும் புலிகளால் புகமுடியும் என்பதை எதிரிக்குணர்த்திய தாக்குதலை நடாத்தி வீர காவியமான கரும்புலிகளான மேஜர் ஜெயம் (குணநாயகம் தேவராசா - திருகோணமலை, பிறப்பு:

05.03.1976), மேஜர் திலகன் (சுப்பையா ராஜ் - மட்டக்களப்பு, பிறப்பு: 20.06.1976), கப்டன் திரு (கோணமலை முகுந்தன் - அப்பாறை, பிறப்பு: 20.06.1975), கப்டன் நவரெட்ணம் (கிருஸ்தோகுலெம்பேட் அண்ணாதாஸ் - மடு, மன்னார், பிறப்பு: 22.09.1977), லெப். ரங்கன் (குணமாலை ரதிக்குமார் - வட்டக்கச்சி, பிறப்பு: 09.02.1976)ஆகிய கரும்புலிகள் அடங்குவர்.

## முதற் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி வீரச்சாவு – 16.08.1994

தலைவர் அவர்களோடு முதற் கடற் கரும்புலி அங்கயற்கண்ணி

காங்கேசன்துறை துறைமுகத்திற்குள் ஊடுருவி, அங்கு தரித்து நின்ற கண்காணிப்புக் கப்பலைத் தகர்த்த முதற் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி (புஸ்பகலா துரைசிங்கம் - மண்கும்பான், யாழ்., பிறப்பு: 10.05.1973) வீரச்சாவு.

## சண்டிலிப்பாய் படுகொலை

21.08.1995 அன்று “ரெகன் பயர்“ என்னும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட சிறீலங்கா படையினரின் எறிகணை வீச்சில் 12 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

## லெப். கேணல் தாட்சாயினி வீரச்சாவு – 03.08.1997

ஜெயசுக்குறுப் களத்தில் புலிகளின் பலமான எதிர்த்தாக்குதலுக்கு வலுச்சேர்க்கும் களச் செயற் பாட்டின் போது எதிர்பாராத வெடிவிபத்தில் லெப். கேணல் தாட்சாயினி (மனுவேற்பிள்ளை கிளாறின்பிளோறா – புலோப்பளை, யாழ்., பிறப்பு: 03.11.1965) வீரச்சாவடைந்தார்.

www.sangathamil.ca

## புல்மோட்டைக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படை மீது கரும்புலித் தாக்குதல்

16.08.1999 அன்று புல்மோட்டைக் கடற்பரப்பில் ரோந்து வந்த சிறீலங்காக் கடற்படையினர் மீது விடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கடற்படையினரின் சுப்பர் டோராப் படகு ஒன்றைத் தகர்த்து கடற் கரும்புலிகளான லெப். கேணல் நீதியப்பன் (வீரவாகு சிவனேஸ்வரன் - திருகோணமலை, பிறப்பு: 15.10.1977), மேஜர் எழில்வேந்தன் (அந்தமான்) (வடிவேல் செந்தில்குமார் - மட்டக்களப்பு, பிறப்பு: 17.07.1978) ஆகிய இருவரும் கடலில் காவிய மானார்கள்.

## கேணல் ராயு [குயிலன்] சுகயீனம் காரணமாக சாவு

தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வே. பிரபாரகன் அவர்களுடன் உடனிருந்து தலைவரின் போரியல் நுட்பங்களுக்கு செயல் வடிவம் கொடுத்தவர் கேணல் ராயு (அம்பலவாணர் நேமிநாதன் - ஏழாலை, யாழ்., பிறப்பு: 30.08.1961). முதலாவது சிறப்புக் கொமாண்டோ படையணிளை உரு வாக்கியவர். விடுதலைப் புலிகளின் பொறியியல் பிரிவின் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். விடுதலைப்போரின் முதலாவது கனரக ஆட்லறிப் பீரங்கிப் படையணியினர் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர் மாவீரன் கேணல் ராயு 25.08.2002 அன்று சுகயீனம் காரணமாக சாவைத் தழுவிக்கொண்டார்.

## செஞ்சோலை வளாகப் படுகொலை

முல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளிபுனம் பகுதியில் உள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் மீது சிறீலங்காவின் யுத்த விமானங்கள் மேற்கொண்ட கோரக் குண்டுத்தாகுதலில் 52 மாண வர்கள் உட்பட 62 பேர் கொல்லப்பட்டனர். நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலில் படுகாய மடைந்த மாணவி ஒருவர் சிங்கள தேசத்தில் சரியான முறையில் சிகிச்சை மேற்கொள்ளாதலால் 28.09.2006 அன்று மரணமானார்.

கால நதிக்கரையில் கழுவிச் சென்று விடாது
மிச்சமாய் கிடக்கிறது செம்மணிப் புதைகுழி

குழந்தைகளின் இதயங்களை பிடுங்கி எடுத்து வந்து
காயப் போட்டிருக்கிறார்கள்
இந்த பதைகுழியில்

அந்த ஏரியிலே நிறைந்து
வழிவது கூட
ஈர விழிகளில் விழுந்த கண்ணீர் துளிகள் தானே

இருந்த ஒரு மேய்ப்பனும் காணாது போனான்
ஓரத்தில்
நின்று வேடிக்கை பார்த்தவனிடம் தான் நீதி கேட்டு
மன்றாடும் நிலமை

உடைந்து கிடக்கின்ற குழந்தைகளின் எலும்புகளையும்
தெறித்துக்கிடக்கும் இரத்த துளிகளையும்
சேர்த்து வந்து கொடுத்தாலும்
பத்தாது ஆதாரம் என்கிறார்கள்

இறந்தவர்களை எழுப்பி வந்து பேசவைக்கவா முடியும்

ஆள்காட்டி
குருவி தவிர ஏதொன்றும்
உலா வராத வெளியிலே
உடைந்த நிலவா இறங்கி வந்து சாட்சி செல்லப்போகிறது

தண் நீருக்காக மண் தோண்டிய இடத்திலே
எலும்புகளை தேடிக்கொண்டிருக்கிகிறோம்

தங்கம் தேடி மண் தோண்டவில்லை
காணாது போன உயிர்களின்
அங்கங்களை தேடியபடி தோண்டுகிறோம்

நெஞ்சாங் கூட்டுக்குள்ளே நீங்கள் வைத்திருப்பது
இதயமா அல்லது உருக்கிப்போட்ட இரும்பா

கொன்றவன் மட்டும் எங்கோ
ஒரு மூலையிலே வாழ்ந்து கொண்டிருப்பான்
தன் குழந்தை குட்டிகளோடு மகிழ்வாக

நாங்கள் மட்டும்
சந்ததி சந்ததியாக தோண்டிக்கொண்டே இருக்கப் போகிறோம்
அங்குலம் அங்குலமாக...!

கவிஞர்
மட்டுவில் ஞானக்குமாரன்

# செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு செயன்முறையில் சர்வதேச கண்காணிப்பும், நிபுணத்துவமும் உள்வாங்கப்படுவது அவசியம்

–ICJ சர்வதேச நீதிபகள் ஆணைக்குழு–

27.07.2025

நீதியை நிலைநாட்டுவதில் உள்ளகப்பொறிமுறைகளின் நீண்டகாலத் தோல்வியைக் கருத்திற்கொண்டு நோக்குகையில், தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு செயன்முறையில் நிலையான சர்வதேச கண்காணிப்பு உள்வாங்கப்படவேண்டியது மிக அவசியமாகும்.

அதற்கமைய சுயாதீன சர்வதேச தடயவியல் நிபுணர்கள் மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும். அகழ்வு செயன்முறை தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் வெளிப்படைத்தன்மைவாய்ந்த முறையில் தெளிவுபடுத்த வேண்டும் என சர்வதேச நீதிபதிகள் ஆணைக் குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பான தீர்மானத்தைப் புதுப்பிக்கவேண்டும் எனவும் அந்த ஆணைக் குழு வேண்டுகோள்விடுத்துள்ளது.

யாழ் செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழி அகழ்வுபபணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், இதுகுறித்து சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக் கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழியில் ஞாயிற்றுக்கிழமை (27) வரையான காலப்பகுதியில் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்குச் சொந்தமானவை என சந்தேகிக்கப்படுபவை உள்ளடங்கலாக 101 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதை நோக்கிய பயணத்தில் இந்த மனிதப்புதைகுழி அகழ்வு மிகமுக்கியமான முதற்கட்ட செயன்முறையாகும்.

அதேவேளை இந்த அகழ்வுப்பணிகள் மற்றும் விசாரணை செயன்முறை என்பன சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். குறிப்பாக அவை உயிரிழந்தோரினதும், அவர்களது குடும்பத்தாரினதும் உரிமைகளையும் கௌரவத்தையும் உறுதிப்படுத்தும் வகையில் அமையவேண்டும்.

மனிதப்புதைகுழியில் கண்டறியப்படும் ஒவ்வொரு மனித எலும்புக்கூட்டின் பின்னணியிலும் நினைத்துப்பார்க்கமுடியாத துன்பத்துக்கு முகங்கொடுத்த ஒரு குடும்பம் இருக்கிறது. எனவே இந்த மனித எலும்புக்கூடுகள் தொடர்பான தடயவியல் விசாரணைகள் தனிமனித கௌரவத்துக்கான மரியாதையுடனும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் முழுமையான பங்கேற்புடனும் முன்னெடுக்கப்படவேண்டும்.

அதுமாத்திரமன்றி இக்குற்றங்களின் பாரதூரத்தன்மையைக் கருத்திற்கொண்டு நோக்குகையில், இச்செயன்முறையானது உச்சபட்ச நேர்த்தியுடனும், சட்ட நியமங்களுக்கு அமைவாகவும் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச மேற்பார்வை இன்றியமையாததாகும். செம்மிண மனிதப் புதைகுழி அகழ்வானது இலங்கையின் நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் மிகமுக்கியமானதொரு தருணத்தைப் பிரதிபலிக்கின்றது.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றவாளியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவினால் 1998 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வாக்கு மூலத்தை அடுத்து செம்மணி மனிதப்புதைகுழி தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அவதானம் பெற்றது.

அன்று முதல் இன்றுவரை இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளடங்கலாக மிகமோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களைப் பொறுத்தமட்டில் நீண்டகாலமாகத் தொடரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்குக்கான அழுத்தமானதும், வலிமிகுந்ததுமான அடையாளமாக அது திகழ்கின்றது.

சுமார் மூன்று தசாப்தங்களின் பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் செம்மணி - சித்துபாத்தியில் மனித எச்சங்கள் கண்டறியப்பட்டிருப்பதானது உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பன அடையப்படுவதற்கு வழிவகுக்கக்கூடியவகையில் பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய நம்பத்தகுந்த, வெளிப்படைத்தன்மை வாய்ந்த, உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடியவாறான விசாரணைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றது.

உலகளாவிய ரீதியில் அதிக எண்ணிக்கையான தீர்க்கப்படாத வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவான நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அங்கு 60,000 - 100,000 க்கு இடைப்பட்ட எண்ணிக்கையிலான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவாகியிருக்கக்கூடும் என மதிப்பிடப்பட்டிருப்பதுடன் அவற்றில் பெரும்பான்மையானவை 1983 - 2009 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான ஆயுதப்போராட்டகாலத்தில் பதிவானவையாகும்.

ஆயுதமோதல் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னர் போரின் பின்னரான கரிசனைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு ஆணைக்குழுக்கள் அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டன. இருப்பினும் அந்த ஆணைக் குழுக்கள் பெரும்பாலும் நல்லிணக்கம் தொடர்பில் கவனம் செலுத்தினவே தவிர, பொறுப்புக்கூறல் குறித்து போதுமானளவு அவதானம் செலுத்தவில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் மற்றும் சர்வதேச கட்டமைப்புக்களின் தொடர்ச்சியான வலியுறுத்தல்களுக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான உண்மையை அறியும் உரிமை, நீதி மற்றும் செயற்திறன்மிக்க இழப்பீடு என்பன தொடர்ந்து மறுக்கப்பட்டுவருகின்றன.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு மற்றும் சர்வதேசத்தின் பங்கேற்புடனான நீதிச்செயன்முறை உள்ளடங்கலாக நிலைமாறுகால நீதிப்பொறிமுறையை நிறுவுமாறு வலியுறுத்தி 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை இணையனுசரணை வழங்கியது. இருப்பினும் அத்தீர்மானத்தின் ஊடாக வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பாலானவை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் ஆராயும் நோக்கில் 2016 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் ஆரம்பத்தில் நேர்மறையானதொரு நகர்வாக நோக்கப்பட்டாலும், அரசியல்மயமாக்கல், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சுதந்திரம், மக்கள் மத்தியிலான நம்பிக்கையீனம் போன்றவற்றால் அக்கட்டமைப்பு நீண்டகாலமாக பின்னடைவை சந்தித்திருந்தது.

தற்போது காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகளைக் கண்காணித்து வரும் நிலையில், முன்னெப்போதையும் விட இப்போது அவ்வலு வலகம் தனது சுயாதீனத்துவத்தை உறுதிசெய்யவேண்டியது அவசியமாகும். அதுமாத்திரமன்றி அவ்வலுவலகம் பாதிக்கப் பட்ட தரப்பினர் மற்றும் அவர்களை சட்ட ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்துவோருடன் நெருங்கிய தொடர்புகளை பேணுவ துடன் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டும்.

நீதியை நிலைநாட்டுவதில் உள்ளகப் பொறிமுறைகளின் நீண்டகாலத் தோல்வியைக் கருத்திற்கொண்டு நோக்குகையில், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு செயன்முறையில் நிலையான சர்வதேச கண்காணிப்பு உள்வாங்கப்படவேண்டியது மிக அவசியமாகும்.

இம்மனிதப்புதைகுழி அகழ்வு வெறுமனே தடயவியல் நடவடிக்கையாக மாத்திரம் அமையக்கூடாது. மாறாக இது வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தல், பாதிக்கப்பட்ட தரப்பினரை அடையாளங்காணல், குற்றவாளிகளைத் தண்டித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உரியவாறான நிவாரணங்களை வழங்கல் என்பன தொடர்பில் உரிய சர்வதேச சட்டக்கடப்பாடுகளை இலங்கை அரசாங்கம் பின்பற்றியிருக்கிறது என்பதற்கான முன்னுதாரணமாக இவ்விடயம் அமையவேண்டும்.

மேலும் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு செயன்முறையில் சர்வதேச கண்காணிப்பு மற்றும் சர்வதேச தொழில்நுட்ப நிபுணத்துவம் என்பன உள்வாங்கப்படவேண்டும். அதற்கமைய சுயாதீன சர்வதேச தடயவியல் நிபுணர்கள் மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும். அகழ்வு செயன்முறை தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் வெளிப்படைத்தன்மைவாய்ந்த முறையில் தெளிவுபடுத்த வேண்டும். அடையாளம் காணப்படும் மனித எச்சங்கள் உள்ளிட்ட சான்றாதாரங்கள் உரியமுறையில் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும்.

# செஞ்சோலையில் உதிர்ந்த மலர்கள் நினைவில்....

## 19ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



14.08.2006 14.08.2025